செல்வம் என்று போற்று செந்தமிழ் சொல்லை

பாரதிதாசன் சனசமூக நிலையம்

பொன்விழா மலர்

(1964 - 2014)

வெளியீடு

பாரதிதாசன் சனசமூக நிலையம், அல்வாய்.

வணக்கம்

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண்ணே உன்
நலம் காணார் ஞாலம் காணார்.

– பாரதிதாசன்

நூலகத்திற்கான தூரநோக்கும் பணிக்கூற்றும்

மகுட வாசகம்

செல்வம் என்று போற்று செந்தமிழ்ச் சொல்லை.

தூரநோக்கு

நூலகம் மற்றும் தகவல் சேவைகளை வழங்குவதன் மூலம் தேசிய ரீதியில் அறிவு, திறன், மனப்பாங்கு மிக்க ஒரு சமூகத்தை உருவாக்குதல்.

பணிக்கூற்று

- எமது பிரதேசத்தின் பாரம்பரிய முதுசங்களையும் புலமைச் சொத்துக்களையும் ஆவணப்படுத்திப் பயன்படுத்துவதனூடாக அறிவு சார்ந்த ஒரு சமூகத்தை (Knowledge society) உருவாக்குதல்.

- வினைத்திறன் மிக்க நூலக சேவைகளினூடாக வாசிப்பு, ஆக்கத்திறன் மற்றும் பண்பாடுகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

அல்வாய்

பாரதிதாசன் சனசமூக நிலைய நூலகம்

பொன்விழா மலர்

(1964 - 2014)

மலராசிரியர்

திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா

முன்னாள் அதிபர், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

திரு. நடராசா தேவராசா

அதிபர், நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை

தலைப்பு : பாரதிதாசன் சனசமூக நிலைய
பொன்விழா மலர்

வெளியீடு : பாரதிதாசன் சனசமூக நிலையம்,
அல்வாய்.

பதிப்பு : 2014 புரட்டாதி

பக்கங்கள் : 212 + 40

அச்சிட்டோர் : தமிழ்ப்பூங்கா அச்சகம்,
நெல்லியடி.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும்
ஆசித்த நூல் தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதை உரைத்தும் நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீர் சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்.

- பாரதிதாசன்

மலரின் உள்ளே....

அ. வாழ்த்தியல்

மலர் சிறப்புற வாழ்த்தும் சான்றோர்கள்

ஆ. அறிமுகவியல்

இ. நூலகவியல்

ஈ. மாணவர் பயனியல் துறைசார்ந்த ஆய்வியலாளர்களின் கட்டுரைகள்

உ. கல்வியியலும் சமூகவியலும்

ஊ. பதிவியல்

எ. விளம்பரவியல்

தமிழ்த்தாய் வணக்கம்

(ப.ஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை

மலரும் மலரைப் பற்றி...

ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் அடிப்படைக் காரணிகளில் கல்வி முதன்மையானது. அக் கல்வியைப் பெறும் மாணவர்களாயினும் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களாயினும் அவர் தம் அறிவுத் தேடலுக்கு உதவுவது நூல் நிலையங்களே. வடமராட்சியில் தனிப் பெரும் நூலகமாக வளர்ந்து இன்று எமது நிலையம் பொன்விழாவை கொண்டாடுகின்றது. பாரதிதாசன் நூலக வளர்ச்சிக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் விழா அமைப்புக் குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் நூலகம் மகிழ்வுறுகின்றது.

இம் மலர் வெளியிடுவதற்கு இரு பெரிய நோக்குகள் பின்புலமாக இருந்தன.
ஒன்று : நூலக வளர்ச்சியின் வரலாற்றுப் பதிவுகளை ஓர் ஆவணமாகப் பதிவு செய்தல். தொடக்க காலத்திலிருந்து இற்றை வரை இந்நூலக வளர்ச்சியில் அயராது உழைத்தவர்களை வருங்கால சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொள்வதோடு மட்டும் நின்றுவிடாது எதிர்காலத்திற்கு இளைஞர்கள் உறுதுணையாகவும் இருத்தல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு இம்மலர் உருவாக்கப்பட்டது.
இரண்டு : மலரும் இம்மலரினூடாக மாணவர்களின் அறிவு தேடலுக்கு வழிகாட்டுதல். இவ்வுயர்ந்த நோக்கினை எய்தும் பொருட்டு துறை சார்ந்த அறிஞர்களின் கட்டுரைகளை இம்மலர் தாங்கி வருகின்றது. உயர்தர் வகுப்பு மாணவர்களின் கல்வித் தேவைக்கு ஏற்றவகையில் கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது ஓர் சிறப்பம்சமாகும்.

பொன்விழா மலர் ஒன்று வெளியிடவேண்டும் என மிக்க ஆவலோடு தொழிற்பட்டவர் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் திரு. ச. கிருஷ்ணசாமியே (புவி அண்ணா). அவரும் அவரது நண்பர்களினதும் முயற்சியினாலேயே இம்மலர் வெளிவருகின்றது. அவர்களுக்கு எமது நன்றிகள். இம்மலர் சிறப்புற அமைய வாழ்த்துச்செய்திகள் தந்து உதவியோர், கட்டுரைகள் வழங்கிய துறைசார்ந்த நிபுணர்கள், விளம்பரங்கள் தந்து உதவியோர் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

கி. நடராசா ***ந. தேவராசா***

'கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்'



வாழ்த்தியல்

மலர் சிறப்புற வாழ்த்தும்

சான்றோர்கள்

சுயசுத்துமை

மகுத்துமை ஞாபகார்த்த நிகழ்வு

நிகழ்ாவரிக்காக

தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

மகாகவி பாரதியார்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி

மானிடராக பிறந்த எமக்கு அறிவுக் கண்ணை திறப்பன அறிவு சார்ந்த நூல்களே. எந்த ஒரு மனிதன் அதிகளவிலான நூல்களை வாசிக்கின்றானோ அவன் ஓர் பூரண மனிதன் என்ற நிலையினை அடைகின்றான். இறைவன் அருளால் எமக்கு கிடைத்த இந்த அரிய மனித பிறவியை நாம் பயனுள்ளதாக மற்றவர்களால் மதிக்கப்படும் ஓர் நிலையினை எமக்கு வழங்குவது கல்வி. இதனையே வள்ளுவரும்

"கண்ணுடையர் என்போர் கற்றோர். முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" என கல்வியின் கட்டாய தேவையை எமக்கு உணர்த்தினார்.

இந்த வகையில் அல்வையூரில் ஓர் அறிவுப் பொக்கிஷமாக திகழ்வது பாரதிதாசன் நூலகமாகும். இது இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னதாக ஊரில் இருந்த துடிப்பு மிக்க இளைஞர் குழுவினரால் ஒரு சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு இன்று இரண்டு மாடி கொண்ட அழகிய கட்டடமாக காட்சி கொடுப்பது அல்வையூருக்கே பெருமை சேர்ப்பதாக உள்ளது. இத்தகைய பெரும் பேறு கொண்ட நூலகம் இந்த ஆண்டில் தனது பொன்விழாவினை கொண்டாடுவதனை இட்டு இவ்வூர் மக்களுடன் சேர்ந்து நானும் பேருவகை அடைகின்றேன். இத்தகைய உயர்ந்த பணியை இவ்வூர் இளைஞர்கள் அன்று தொடங்கியமை இன்று எத்தனையோ புத்திஜீவிகள் உருவாக எமக்கு வழிவகுத்து இருக்கும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை.

கல்வியே எங்கள் மூலதனம் தமிழே எங்கள் உயிர்மூச்சு. இந்தத் தமிழ் எமது உயிருக்கு நேரானது என பலரும் பேசுவதை பார்க்கின்றோம். அத்தகைய நிலையில் பெருமகனார் தமிழின் புரட்சிக்கவி என அழைக்கப்பட்ட பாரதிதாசன் என்ற அறிஞரின் பெயரை தாங்கி இருப்பது இன்னும் தமிழுக்கு பெருமை தருவதாக உள்ளது. இத்தகைய உயர்வு மிகு நூலகம் இரவல் வழங்கும் பகுதி, வாசிப்புப் பகுதி, கணினிப் பகுதி, பத்திரிகைப் பகுதி என இன்னோரன்ன சேவைகளை தன்னகத்தே கொண்டு, விளங்குவது பாராட்டுக்குரியது. இத்தகைய பணிகளை ஆற்றும் இந்நூல் நிலையத்தை இவ்வூர் இளையோர் இயன்றவரை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இன்று பல்வேறு தொடர்பு சாதனங்கள் இளையோரை மிகவும் கவலைக்கிடமான நடத்தைகளுக்கு இட்டுச் செல்கின்றன. எனவே அவற்றை விடுத்து

நல்வழி வாழ இந்த நூலகம் அவர்களுக்கு பேருதவியாக அமையும். எனவே அனைவரும் இதனை முழுமையாக பயன்படுத்த பெற்றோர் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இணைய தளங்கள், மின்னஞ்சல் மற்றும் நவீன சாதனங்கள் மூலமும் கற்பதற்கு இத்தகைய நூலகங்கள் வழி செய்யவேண்டும். எதிர்கால சந்ததி சர்வதேச மொழியை கற்பதற்கான வாய்ப்புக்களை இந்நூலகம் வழங்கலாம். கொடை வள்ளல்களின் உதவியுடன் வறுமையான பிள்ளைகள் கற்பதற்கான கற்றல் உதவிகளை ஊக்குவிக்கலாம். எனவே பொன்விழா காணும் பாரதிதாசன் நூலகம் இன்னும் பல சேவைகளை ஆற்றி இவ் அவனியில் உயர்வான ஒரு நிலையமாக அல்வையூரின் அறிவுக்கண்ணை திறக்க எல்லாம் வல்ல அல்வையூர் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் இந்நூலகம் சார்ந்த அனைவருக்கும் நல்லறிவையும் ஆயுள் ஆரோக்கியத்தையும் வழங்கி சைவத்தின் மேன்மையும் தமிழின் சிறப்பும் உயர்வுபெற உழைப்பதற்கு அருள்பாலிக்க வேண்டும் என வாழ்த்தி நல்லாசிகளை வழங்கி அமைகின்றேன்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சதாசிவ சிவகுமாரக் குருக்கள்

ஆலய பிரதம குரு,

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி

பாரதிதாசன் சனசமூக நிலையம் - அல்வாய் எனும் அறிவுக் கருவூலம் பொன்விழா ஆண்டில் காலடி பதிப்பதையிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 1964ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையம் இணையற்ற தமிழ்க் கவிஞர் பாரதிதாசனின் பெயர் இலங்கி நிற்பதைப் போன்று சுடர்விட்டுப் பயன் நல்குவதை பலர் ஊடாக அறிந்திருக்கின்றேன். புதினப் பத்திரிகைகளோடு ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையம் 1970 களின் பின்னர் நூலக சேவையை ஆரம்பித்து மாணவர்களுக்கும், அறிவுத் தேடல் உள்ளவர்களுக்கும் வாசிப்புக் களமாகத் திகழ்ந்து வருகிறது. ஊர்ப் பொதுமக்களதும், நிறுவனங்களினதும் நிதி உதவியோடு நூலகம் என்ற நிலையை இச் சனசமூக நிலையம் அடைந்திருக்கிறது. (7000) ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பயன்மிக்க நூல்களைத் தன்னகத்தே தாங்கி உயர்தர மாணவர்களுக்கும் பல்கலை மாணவர்களுக்கும் பயனாற்றி வருகின்றமை மெச்சத்தக்கது. 2002 ஆம் ஆண்டு 60 அடி நீளத்துடனும் 30 அடி அகல விஸ்தீரணத் துடனும் அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடம் இச் சனசமூக நிலையத்திற்கு பொலிவை யும் அழகையும் நல்கி நிற்பதைக் காணமுடிகின்றது. பல்வேறுபட்ட கலாசார மரபுகள் பண்பாட்டு விழுமியங்கள் பொருளாதார ஒத்துழைப்புக்கள் இச்சனசமூக நிலையம் ஊடாக மக்கள் மேம்பாடு கருதி முன்னெடுக்கப்பட்டு வருவதும் போற்றுதற்குரியது.

2004 ஆம் ஆண்டு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்பட்ட சனசமூக நிலையங்களிற்கிடையேயான சேவை மற்றும் முகாமைத்திறன் போட்டியில் பாரதிதாசன் சனசமூக நிலையம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பிரிவில் முதலாம் இடம் பெற்றமை பற்றிய செய்தியையும் என்னால் அறிய முடிகிறது. இத்தகைய ஒரு சனசமூக நிலையம் பொன்விழா கடந்து வைரவிழா, பவள விழா, அமுதவிழா, நூற்றாண்டு விழா என நீண்டோங்கி நிலைத்த பயனையும் வாசிப்பு நிலைக் களனையும் பொதுமக்களுக்குச் சேவை நல்கிட மனமார வாழ்த்துகின்றேன். மக்கள் கட்டமைப்புக்கள் மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் பெறும்போதே அபிவிருத்தியும் அமைதியும் நிலையுன்றும். இத்தகைய உன்னத நிலைக்காக உழைக்கின்ற பாரதிதாசன் சனசமூக நிலையை நிர்வாகிகளுக்கும், பொதுமக்களுக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்;
யாழ்ப்பாண மாவட்டம்.



வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வடமராட்சி அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையம் 50 ஆண்டுகள் சேவையினை நிறைவுசெய்து பொன் விழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் வெளியிடப்படும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இச்சனசமூக நிலையம் கடந்த காலங்களில் இப்பிரதேச மக்களுக்கும் குறிப்பாக கல்விச் சமூகத்திற்கும் நிறைவான சேவையினை வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இச்சனசமூக நிலையத்தினால் நிர்வகிக்கப்படும் பாரதிதாசன் நூலகம் மிகவும் பெறுமதி வாய்ந்த சமூகத்திற்கு பயன்படக்கூடிய பல்வேறு நூல்களைக் கொண்டுள்ளது. இந்நூலகத்தை இப்பிரதேசத்தின் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என பலரும் சிறந்த முறையில் பயன்படுத்தி நன்மையடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ள நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இச்சனசமூக நிலையமானது எதிர்காலத்தில் தனது வேலைத்திட்டங்களை மேலும் விரிவுபடுத்தி இப்பிரதேச மக்களுக்கும் மாணவர்களுக்கும் சிறப்பான சேவையினை வழங்க வேண்டி எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

சி. சத்தியசீலன்

செயலாளர்,

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.

வடமாகாணம்.

வடமாகாண போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

மாணவர்களினதும் மக்களினதும் அறிவுப் பசியைப் போக்குகின்ற சனசமூக நிலையங்களில் எமது ஊர் பாரதிதாசன் சனசமூக நிலையம் முதன்மை பெறுகின்றது. சிறுகச் சிறுக வளர்ந்து இன்று கம்பீரமிக்க கட்டடத்தில் பல்லாயிரம் புத்தகங்களை தன்வசம் கொண்டிருந்து பொன்விழா காணும் இந்நேரத்தில் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசிப்பதனால் மனிதன் பூரணமாகின்றான். இன்றைய இளம் சமுதாயத்தினர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்கின்றமை கவலையளிக்கின்றது. மாணவ சமுதாயம் பாடநூல்களுடன் அறிவுக்கு விருந்தாகும் நன் நூல்களையும் கற்று சமூகப் பயன்மிக்க பிரஜைகளாக மிளிர வேண்டும். இந்த வகையில் அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் சேவை மகத்தானது.

பாடசாலைப் பருவத்தில் எனது கற்றல் செயற்பாடுகளின் ஆர்வத்தினாலும் பொழுதுபோக்குக்காகவும் பாரதிதாசன் சனசமூக நிலையத்தினை நன்கு பயன்படுத்தியிருந்தேன். அன்று சில நூற்றுக்கணக்கான நூல்களே இருந்தன. இன்று ஒவ்வொரு தரத்திலுமுள்ள மாணவர்களுக்கும் மக்களுக்கும் பயன்படக்கூடிய ஏழாயிரம் நூல்களை இந்நிலையம் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

எமது பிரதேசத்தின் சனசமூக நிலையங்களுக்குள் சிறந்த சனசமூக நிலையமாக தெரிவுசெய்யப்பட்ட இந்நிலையம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து சிறந்த சமூக மாற்றத்திற்காக பாடுபடவேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

இ. வரதீஸ்வரன்

செயலாளர்,

போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு,

வடமாகாணம்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துரை

யாழ்ப்பாண மண்ணின் வடமராட்சி நிலப்பரப்பின் பூர்வீக கிராமங்களில் ஒன்றான அல்வாய் கிராமத்தின் எழுவான் திசையில் அமைந்துள்ளதும் 50 ஆண்டுகளைக் கடந்து பொதுமக்களுக்கான சமூகவியல் சார்ந்த சேவைகளையும் கல்வி சார் சேவைகளையும் வழங்கி வருகின்றதுமான "பாரதிதாசன் சனசமூக நிலையம்" ஆனது தன்னுடைய சேவை ஆற்றுதலின் பொன்விழா நிகழ்வினை சிறப்புற நடாத்துவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

01.05.1964 இல் பதிவு செய்யப்பட்டு கிராம முன்னேற்ற சங்க கொட்டகையில் இயங்கிய இச்சனசமூக நிலையம் ஆனது 1979 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கிராம மக்களினதும் நிதியுதவியுடன் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு வசதிகளை தன்னகத்தே உருவாக்கியது. ஐக்கிய நாணய சங்கம், முன்பள்ளி, விளையாட்டுக் கழகம் மற்றும் ஏறத்தாழ 900 நூல்களடங்கிய நூலகம் என்பவற்றுக்கான கட்டட வசதிகளை தன மேற்பார்வையின் கீழ் அமைத்துக் கொண்டதுடன், 1989 ஆம் ஆண்டளவில் தனது வளர்ச்சியின் வெள்ளிவிழாவினை பெருமையுடன் நினைவு கூர்ந்தது.

இச் சனசமூக நிலையம் ஆனது கிராம மக்களது உதவியுடன் புதிய இடத்தில் சொந்த காணி ஒன்றினை பெற்று கட்டடம் ஒன்றை அமைத்துள்ளதுடன் - தனது கல்வி சார் சேவைகளில் - பொது நூலக சேவையினை ஏறத்தாழ 8000 இற்கும் மேற்பட்ட பல்வகை நூல்களை உள்ளடக்கியதாகவும் வழங்கிவருகின்றமை இவ்விடத்தில் சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும். இவற்றுடன் இடம்பெயர்ந்தோருக்கு மற்றும் வறியவர்களுக்கு உதவுதல், வெள்ள வாய்க்கால் வெட்டுதல் மற்றும் பாதை செப்பனிடல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை காலத்தின் தேவை கருதிய செயற்பாடுகளாகும் என்றால் அது மிகையாகாது.

மேலும் இச் சனசமூக நிலையம் - தான் ஆற்றிவருகின்ற பணிகளுக்கு மெருகூட்டும் விதமாக தனது பொன்விழா நிகழ்வினை நடாத்துவதையிட்டு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்வதுடன் - இவ் விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் *(SLAS)*
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச சபை தவிசாளரின் வாழ்த்துச்செய்தி

வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவதில் மனிதனுக்கு ஏற்படும் பல்வகைப் போராட்டங்களினால் உலர்ந்து போகும் மனதை ஈரப்படுத்துவது நூலகமாகும்.

வற்றி வரண்டு போகும் இதயத்திற்கு அன்பு, கருணை, ஈகை போன்ற நல்லுணர்வுகளை மெல்லுணர்வாக மாற்றிக்கொடுப்பதும் நூலகங்களே. எல்லைகளையும் காலங்களையும் கடந்து இதயங்களை ஒன்றிணைக்கும் நட்புப் பாலமாக விளங்குவதும் நூலகங்களே.

எமது வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள் மிகச் சிறந்ததொரு சனசமூக நிலையமாக விளங்குவது பாரதிதாசன் சனசமூக நிலையமே என்பதில் சந்தேகமில்லை. இச் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் நூலகமானது நூலார்வம் கொண்ட தலைமைத்துவத்தினால் இயக்கப்படுவதனாலும் அர்ப்பணிப்புடன் இயங்கும் தொண்டர்களின் இயக்கவிசையினாலும் நிலையம் சிறப்புற இயங்குகின்றது. 2004ம் ஆண்டில் எமது பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடாத்திய சனசமூக நிலையங்களிற்கிடையிலான போட்டியில் பாரதிதாசன் சனசமூக நிலையமே முதலிடத்தை தட்டிச் சென்றது.

கல்விப் பணி மாத்திரமின்றி நிலையத்தின் சமூகப்பணிகளும் போற்றுதற்குரியது. அல்வையூர் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தை கொழும்பிலிருந்து பெற்றுக் கொடுத்தமையைக் குறிப்பிடலாம். இந்நிலையத்தின் பெயரில் நிலையத்தை தாய்ச் சங்கமாகக் கொண்டு அதன் கீழ் விளையாட்டுக் கழகம், முன்பள்ளி, ஐக்கியநாணய சங்கம் போன்றன இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

சிறு கொட்டகையில் தொடங்கி இன்று இரு மாடிக் கட்டடத்தில் சிறப்புற இயங்கும் பாரதிதாசன் நிலையத்தின் தொண்டு நீடித்து நிலைபெற வேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

திரு. பொ. வியாகேசு
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை
கரவெட்டி.

கரவெட்டி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

எமது அல்வாய் கிழக்கு பாரதிதாசன் சனசமூக நிலையம் தன் ஐம்பது ஆண்டு கால சனசமூக சேவைக்கு பொன்விழா காண்கின்றது. இதற்காக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேச சனசமூக நிலையங்களின் தோற்றம், வளர்ச்சி வரலாற்றைப் பார்க்கின்றபோது பொதுமக்களின் தேவைகளும் அரசாங்க உள்ளூராட்சி நிருவாகக் கட்டமைப்பும் சங்கமமாகின்ற ஒரு இடமாக சனசமூக நிலையங்கள் இருப்பதை அவதானிக்க முடியும். இப்பின்னணியிலேயே சனசமூக நிலையங்கள் பத்திரிகை, சஞ்சிகை, தொலைக்காட்சி முதலான பொழுதுபோக்கு அம்சங்களுடன் முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் முதலானவற்றின் நிலையமாகவும் தொழிற்பட்டு வருகின்றது.

பொதுவான சேவைகளுக்கு அப்பால் சமூகத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற அயராது பாடுபடும் ஓர் அமைப்பாகவும் பல சனசமூக நிலையங்கள் தொழிற்படுகின்றன. இந்தவகையில் பாரதிதாசன் சனசமூக நிலையம் தன் நூலக சேவையினை சிறப்பாக முன்னெடுத்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஒரு சனசமூக நிலைய நூலகத்தில் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட நூல்களும், சிறுவர் நூலகப் பகுதியும் இங்கிருப்பது இதற்கு சிறந்த எழுத்துக்காட்டாகவுள்ளது.

எனினும் அதிக நூல்களும் சிறந்த கட்டிட வசதியும் மாத்திரம் சனசமூக நிலையங்களின் இறுதி இலக்காக இருந்துவிட முடியாது என்பதால் மாறிவரும் சமூகத்திற்கும் புதிய தொழில்நுட்பங்களுக்கும் முகங்கொடுக்கக்கூடிய நவீன சமூகத்தை உருவாக்கி வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை சனசமூக நிலையங்கள் ஏற்க முன்வருதல் வேண்டும். அத்துடன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வருமானத்தை ஈட்டுகின்ற பொறிமுறையினையும் மேம்படுத்துதல் அவசியமாக கருதப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான பணிகளையாற்ற சனசமூக நிலையத்தினர் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் இப்பணியில் பங்கேற்ற அனைவரையும் மீண்டும் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

ச. சிவஸ்ரீ

பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம், கரவெட்டி.

அல்வையின் அறிவாலயமே நீடித்து நீ வாழி!

இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டுமென
இயம்பிட்ட தாசனது நாமந் தாங்கி
அல்வையிலே அவதரித்து அறிவுப்பசி போக்கும்
அறிவுக் களஞ்சியமே வாழி! வாழி!

மாலிசந்தியுறை வேழமுகனுனை வாழ்த்த
வேவிலந்தையுறை மாரியம்மன் அருளோடு
சீரியரை உருவாக்கிச் சிந்தை குளிர்வித்த
பாரதிதாசன் நூலகமே நீ வாழி!

மனிதரை மகான்களாக்கி மாண்புறு சேவையாற்றி
மனிதரை மகாத்மாவாக்கி நேரிய பாதைகாட்டி
மனிதரைப் புனிதராக்கி மனிதத்தை வளர்த்தெடுத்து
மாண்புறு சேவையீந்த மாதாவே நீடு வாழி!

ஐந்து தசாப்தங்கள் அரிய பணியாற்றி
அறிவுத் தேடலின் ஆத்மாவாய்ப் பணிசெய்து
பள்ளி மாணவர்க்கும் பண்பட்ட மாந்தர்க்கும்
எல்லையிலாப் பணிசெய்த அறிவகமே நீ வாழி!

நூலகத்துக் கிலக்கணமாய் மிளிர்ந்த தாயே
நூலறிவால் வாழ்வுயர வைத்த தேவே!
பாரறியச் சேவைசெய்த பொன்மகளே
பார் போற்ற நீ வாழி! பல்லாண்டு வாழி!

திரு. வ. செல்வராசா
ஓய்வுநிலை மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வட மாகாணம்.

வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

"செல்வம் என்று போற்று செந்தமிழ்ச் சொல்லை" என்ற மகுடவாசகத்துடன் அல்வாயூரில் அமைந்து அரும்பணியாற்றி வரும் "பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் 50 ஆண்டு கால அளப்பரிய சேவைக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1964ம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி அல்வாய் கிராமத்தில் சிறிய கொட்டிலிலே தனது சமூகப் பணியை ஆரம்பித்து இன்று விஸ்வரூபம் பெற்று வடமராட்சி பிரதேசத்தின் முதன்மை பெற்ற சன சமூக நிலையமாக உயர்ந்து நிற்பது பாராட்டுக்குரியது.

ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகை மட்டுமே வாசகர்களுக்கு கிடைத்திருந்த நிலையில் இன்று 7000க்கு மேற்பட்ட அறிவுசார் நூல்களுடனும் தேசிய, மாகாண பத்திரிகைகள், சஞ்சிகைகள் என பல்வேறுபட்ட வாசிப்பு ஊடகங்களையும் தன்னுள்ளடக்கி கல்விப் பணியையும், சமூகப்பணியையும், சமாந்தரமாக முன்னெடுத்து செல்கின்ற உன் பணிக்கு என் வாழ்த்துக்கள்.

சனசமூக நிலையம் ஒன்று ஆற்றவேண்டிய பணிகள் யாவற்றையும் ஒருங்கிணைத்து முன்பள்ளி, விளையாட்டு, கணனிப்பயிற்சி, சிறுவர் நூலகம், தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, அறிவுசார் நூல்கள்.... என சமூகத்தின் தேவைகளை முதன்மைப்படுத்தி சமூகத்தை தன்னோடு அரவணைத்து தொடர் பணியாற்றி வரும் நிலையத்திற்கு எனது பாராட்டுதல்கள்.

க.பொ.த.(சா.த/ உ.த) தொடக்கம் பட்டப்படிப்புக்கள் வரை அறிவுசார் நூல்களை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கி வருவதுடன் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள், செயலமர்வுகள் என்பவற்றை காலத்தின் தேவையோடு ஒருங்கிணைத்து கல்விப் பணியாற்றும் உனது சேவைக்கும் எனது நன்றிகள்.

உன் கல்விப்பணி, சமூகப்பணி, ஆன்மீகப்பணி, அறப்பணி.... தொடர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. சி. நந்தகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

அல்வாய் எனும் அழகிய கிராமத்தின் மத்தியில் பரிணமித்திருந்து தனது சிறந்த சேவையினை ஆற்றிவரும் ஒரு சமூக சேவகனான பாரதிதாசன் சனசமூக நிலையமானது மாணவச் செல்வங்களுக்கும் கல்விசார் ஆர்வலர்களிற்கும் ஒரு அறிவூற்றாகும். ஆரம்ப காலத்தில் குறைந்தளவு வசதிகளுடன் ஒரு சிறிய கட்டிடத்தில் தனது சேவையை தொடங்கிய போதே அதனுடன் உருவாக்கப்பட்ட சிறந்த நோக்கமானது பல்வேறு குறிக்கோள்களின் அடிப்படையாகக் கொண்டு ஒரு நிலைத்து நிற்கும் அபிவிருத்தியுடனான தனது செயற்பாடுகளினூடாக இன்று பல வளர்ச்சியினை தாண்டி பொன்விழாவினை கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. இச் சனசமூக நிலையத்தினூடாக எனது மாணவப் பருவத்திலேயே பல்வேறு அறிவுசார் மற்றும் ஏனைய பல நூல்களைப் படித்து அதனூடாகப் பயன் பெற்றுள்ளேன் என்பதனையும் இச் சமயத்தில் ஞாபகமூட்டி மகிழ்கிறேன். இச் சனசமூக நிலையமானது சிறந்த தலைமைத்துவத்தினூடாக பல்வேறுபட்ட சமூக நலன் விரும்பிகளினால் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இதனூடு முன்னின்று செயற்படும் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்தும் இச் சேவையானது பல்கிப் பெருகி இன்னும் பல பரிணாம வளர்ச்சி காண இறைவனையும் வேண்டி எனது அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்து பெருமகிழ்வடைகின்றேன்.

அன்புடன்

ஜெயராணி பரமோதயன்

பிரதேச செயலாளர்,
பச்சிலைப்பள்ளி.

பாரதிதாசன் படிப்பகம் - படிப்பகத்திற்கோர் முன்மாதிரி

அல்வாய் பாரதிதாசன் படிப்பகம் அதன் 50வது வருடத்தினை நிறைவுசெய்யும் பொருட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். அல்வாய் என்னும் பரந்து விரிந்த கிராமம் வடமராட்சியிலே கலை, கலாசாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் சமயம் முதலிய துறைகளில் தனிச்சிறப்புடன் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கிராமத்தில் தொலைநோக்குடன் செயற்பட்ட பலர் உருவாக்கிய சமூகநலத் திட்டங்களே இவ்வாறான சிறப்புகளுக்கு அடிகோலியிருந்தன என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

அறிவுக்கும் தேடலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இக்கிராமத்தில் பாரதிதாசன் படிப்பகம் முன்னுதாரணமாகத் திகழ்கிறது. சகல வயதுமட்டங்களிலுள்ள அனைவரையும் வாசிப்பின்பால் ஈர்ப்பதற்கு இந்நூலகம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் அளப்பரியன. இன்று அதன் விளைவுகளையும் அறுவடைசெய்து வருகிறது. இந்த நூலகத்திலே கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், சமயம், பொறியியல் மருத்துவம் முதலிய பலதுறைசார்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன. இதுவோர் அபரிமிதமான வளர்ச்சியாகும். நூலகத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் ஈடுபட்டுவரும் படிப்பக நிருவாகிகளுக்கும், மனமுவந்து நூல்களை நன்கொடையாக வழங்கும் நலன்விரும்பிகளுக்கும் அதனிலும் மேலாக நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களுக்கும் பராட்டுதல்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் பாடசாலை மாணவர்களாக இருந்த காலத்தில் பாரதிதாசன் படிப்பகத்தினால் நன்மைகளைப் பெற்றிருக்கின்றோம். அக்காலத்தில் எமது கல்லூரி நண்பராக இருந்த திரு ச.திரவியம் அவர்கள் எங்களை நூலகத்துக்கு அழைத்துச் செல்வதோடு, நூலகத்தில் இருந்து வாசிப்பதற்கு மட்டுமன்றி நூல்களை ஒருசில நாட்களுக்கு இரவல் தந்தும் உதவுவார். நெல்லியடி பட்டினசபை நூலகத்தை அடுத்து பெருந்தொகையான நூல்களையும் வசதிகளையும் கொண்டு இது விளங்கிவருவது பெருமைக்குரிய விடயமாகும். இங்கு ஏற்பட்டுள்ள விரிவாக்கம் அல்வாய்க் கிராமத்தவர்களுக்கு மட்டுமல்லாமல் சூழவுள்ள ஏனைய கிராமங்களுக்கும் வாய்ப்புகளை வழங்கிவருதல் மகிழ்ச்சிதருகிறது.

பாரதிதாசன் படிப்பகம் மேலும் பல சிறப்புகளைப் பெற்று, வளர்ச்சியுற்று எனைய நூலகங்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழவேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்.

நன்றி

பேராசிரியர் கலாநிதி மா. கருணாநிதி

கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக் கழகம்

முன்பள்ளியிலிருந்து என்னை வளர்த்த எம் அன்னையே வாழ்க

பாரம்பரியம், பண்பாடு, கல்வி, ஆன்மிகம் நிறைந்த ஊர் அல்வாய். மரபு வழி விழுமியங்களை எம் மக்கள் இன்றும் காத்து வருகின்றனர். எமது மக்களுக்கு கல்வி கலாசாரத்தின் ஆதாரமாக இன்றும் விளங்கி வருவது பாரதிதாசன் படிப்பகமே. வடமராட்சியில் மிகச் சிறந்த நூலகமாக எல்லோராலும் பாராட்டப்படுவதும் இதுவே. தடைகள் பல நேர்ந்தாலும் மிடுக்குடன் இன்றும் விளங்கி வருகின்றது. இந் நூலகத்தினால் ஊரவர் அனைவரும் பெருமைப்படுகின்றனர்.

இன்று நான் ஒரு வைத்திய கலாநிதியாக விளங்குவதற்குரிய அரிவரிப் பயணம் இங்குதான் ஆரம்பித்தது. பாரதிதாசன் நூலகம் பெற்றெடுத்த பாரதிதாசன் முன்பள்ளியில் எனது வாழ்க்கைப் பயணம் தொடங்கியது. படிப்படியாக எனது கல்வியை உயர்வடையச் செய்வதற்கு இந்நூலகமே செவிலித் தாயாக விளங்கியது. எனது பல்கலைக்கழக மருத்துவ பட்டப்படிப்பிற்கான சில நூல்களை இங்கிருந்தே இரவலாகப் பெற்றுக் கொண்டேன். கணனியின் ஆரம்ப அறிவையும் இங்கிருந்தே பெற்றுக் கொண்டேன். இவைகளோடு நல்ல தமிழ் அறிவையும் இந்நூலகத்தின் ஊடாகவே பெற்றுக்கொண்டேன்.

இன்று இந்நூலகம் பொன்விழாவினை கொண்டாடுகின்றது. 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்ற பாரதிப் புலவனின் கூற்றுக்கு இசைவாக அவனது அரிச்சுவடியில் வந்த பாரதிதாசன் நாமம் கொண்ட என் அருமைத்தாயே பல்லாண்டு வாழ்ந்து உன் கல்விப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

வைத்தியகலாநிதி திருமதி சூரிகா சத்தியரூபன்

பிரதேச வைத்தியசாலை,

புதுக்குடியிருப்பு.

என்னை வளர்த்த பாரதிதாசன்

வடமராட்சியில் பல நூல் நிலையங்கள் பரந்து கிடக்கின்றன. அவற்றுள் பாரதிதாசன் மிக சிறந்ததொரு நூல் நிலையமாகத் தடம் பதித்திருப்பது யாவரும் அறிந்ததே.

இன்றைய பாரதிதாசன் அன்று இல்லையேல் என் கல்வியும் பாதியில் நின்றிருக்கும். "கற்க கசடற" என்ற வள்ளுவரின் கூற்றிற்கு அமைய கசடறக்கற்க வழிசமைத்தது இந்த பாரதிதாசனே! அதாவது குறிப்பாக உயர்தர வகுப்பில் ஹாட்லிக் கல்லூரியில் வர்த்தக பிரிவில் கற்றுக் கொண்டிருந்த போது உயர்தர வகுப்பிற்குரிய பல வர்த்தக பாட நூல்களையும் பெற உதவியது இந்நூல் நிலையமே. அது மட்டுமன்றி கடந்த கால வினாவிடை பயிற்சி நூல்களையும் இந்நிலையத்திலிருந்தே பெற்றிருந்தேன். இதன் பயனாக A/L பரீட்சையில் A3B பெறுபேற்றை பெற்று பல்கலைக்கழகம் சென்றேன். பல்கலைக்கழகம் சென்ற பின்பும், பல அறிவு வளர்ச்சி விடயங்களின் பொருட்டும் இந் நூலகத்தை பயன்படுத்தினேன். எனது பல்கலைக்கழக கல்வியின் பின் நான் பல போட்டி பரீட்சைகளிற்கு தோற்றி சித்தியெய்வதற்கு பொது அறிவு, நுண்ணறிவு சார்ந்த புதிய நூல்களை பெற்றுக் கொள்ள கைகொடுத்ததும் இந் நிலையமே. மேலும் இன்று இலங்கை திட்டமிடல் சேவை உயர் பதவியாற்றுவதற்கும் எனது அறிவை வளர்ப்பதற்கும் இன்றும் நான் பயன்படுத்துவது அல்வாயூர் பாரதிதாசனையே. வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற வாக்கிற்கு அமைய இப்பாரதிதாசனை பயன்படுத்துவதற்கு வடமராட்சி இளைஞர், யுவதிகள் அனைவரிற்கும் ஓர் வரப்பிரசாத நிலையமாக இது திகழ்கிறது. பல நெருக்கடியான காலகட்டங்களிலும் எம் பாரதிதாசனை நிலைகுலையவிடாது பாதுகாத்த நிர்வாகத்தினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டாது விடுவது வரலாற்று தவறாகிவிடும். இன்று இந்தவகையில் பொன்விழாவை கொண்டாடுவது மட்டற்ற மகிழ்ச்சியான விடயமாகும்.

பாரதிதாசன் நூலகமே நீ வாழ்க! வாழ்க! சமுதாயத்தை வளர்க்க நீ வாழ்க!

செ. சுபச்செல்வன்

உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,

பிரதேச செயலகம்,

கரவெட்டி.

யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரின்

வாழ்த்துச்செய்தி

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையம் பொன்விழாக் கொண்டாடும் இத் தருணத்தில், இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பாரதிதாசன் சனசமூக நிலையம் 1964 இல் நிறுவப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஆற்றிய சேவைகளை நான் நன்கு அறிவேன். சமகாலத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அன்று கல்வி கற்றுக் கொண்டிருந்த எமக்கு மூத்தவரான திரு. ச. திரவியம் அவர்களின் தலைமையின் கீழ் பாரதிதாசன் சனசமூக நிலையம் நிறுவப்பட்டது. பாரதிதாசனின் புரட்சிகரமான சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் அவரின் பெயருடனேயே இந்த நிலையத்தை நிறுவிச் செயற்படத் தொடங்கினர். இன்று இத்தாய்ச் சங்கத்தின் குடை நிழலின் கீழ் பாரதிதாசன் படிப்பகம், பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம், பாரதிதாசன் முன்பள்ளி, விளையாட்டுக் கழகம் ஆகிய நான்கு அமைப்புகளும் சிறப்பாகத் தொழிற்பட்டு வருகின்றன.

இவ்வேளை, பாரதிதாசன் படிப்பகத்தின் நூலக சேவைகள் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். 1979ஆம் ஆண்டு நீளமான புதிய கட்டடமொன்று அமைக்கப்பட்டு, அக் கட்டடத்தில் நூலக சேவைகளை வழங்கிவந்த பாரதிதாசன் படிப்பகம், 2002 ஆம் ஆண்டில் புதிய பரிமாணத்தைப் பெற்றுக்கொண்டது. எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பயனாக, பெரும் நிதியீட்டத்துடன் புதிய மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அக் கட்டடத்திலேயே பாரதிதாசன் படிப்பகம் இயங்கத் தொடங்கியது. பெருந்தொகையான நூல்கள் சேகரிக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டு, வாசிப்புக்கென வழங்கப்பட்டன. இதனால் வடமராட்சியிலுள்ள நூலகங்களில் முன்னணி வகிக்கும் ஒன்றாக பாரதிதாசன் படிப்பகம் மதிக்கப்பட்டு வருகின்றது.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிப் பாதையில், உரமிட்டு ஊக்கம் தந்து அதன் சேவைகளை முன்னெடுத்துச் சென்றோர் அநேகர். அவர்களிற் பலர் இன்று வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு இந்நிலையத்தின் சேவைகளைக் கண்காணித்துக் கொண்டும் வருகின்றனர். பாரதிதாசன் சனசமூக நிலையம் இன்று பொன்விழாக் கொண்டாடும்வேளையில் இதன் வளர்ச்சிக்கென உழைத்தோர் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றது. இந் நிலையத்தில் மிக நீண்ட காலமாக - 27 ஆண்டுகள் - தலைவராக இருந்த, முன்னாள் அதிபரும் யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகக் கல்வித்துறை வருகை விரிவுரையாளருமான நண்பர் திரு. கி. நடராசா அவர்கள் தலைவராக இருக்கும் இவ்வாண்டிலேயே, பாரதிதாசன் சனசமூக நிலையம் பொன்விழாக் கொண்டாடுவது பொருத்தமானதும் இறை சித்தத்துக்கும் உரியது என்றும் கூறின் அது மிகையாகாது.

இவ்வேளை எனது கல்விக் காலத்தில் பாரதிதாசன் படிப்பகத்தின் பயனாளியாகவும் நான் இருந்துள்ளேன் என்பதை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

பாரதிதாசன் சனசமூக நிலையம் தனது சேவைகளை இடையறாது வழங்கி, மக்களை ஆற்றுப்படுத்தி மேலும் மேலும் வளர்ச்சி கண்டு இன்னும் பல நூறாண்டுகள் வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். கல்வியினாலும் கலைகளினாலும் சிறந்து விளங்கும் அல்வாய்க் கிராமத்தைச் சேர்ந்த பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன் விழாக் கொண்டாட்டம் அல்வாயூரிற் பிறந்த எமக்கு மகிழ்ச்சி தருகிறது.

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளரின் வாழ்த்துச்செய்தி

தற்போது பொன்விழாக் காணும் பாரதிதாசன் சனசமூக நிலையமானது 1964 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அன்று முதல் இன்று வரை தனது நோக்கத்தை நிறைவுறச் செய்து சிறந்த சமூகக் கட்டமைப்பை பேணுவதில் பெரும் பங்காற்றி வருகிறது என்பது மிகையாகாது. இதற்கு எமது சபையால் வழங்கப்பட்ட 2004 ஆம் ஆண்டில் சிறந்த சனசமூக நிலைய விருது சான்று பகர்கிறது. அத்துடன் வடமராட்சியின் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை மகிழ்வித்த பெருமை இந் நூலகத்திற்கேயுரித்தானது. அது மட்டுமன்றி இப்பிரதேச இளைஞர்களின் விளையாட்டுத்திறனை வளர்ப்பதிலும் அக்கறை செலுத்தி வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். இந்நிலையமானது மக்களுக்கு தன்னிகரில்லா சேவையை வழங்கி மேன்மேலும் வளர்ச்சி பெற்றிட உளமார வாழ்த்துத் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன்.

திரு. க. கனகதுரை
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

பாரதிதாசன் சனசமூக நிலையம்
அல்வாய்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் பல கவிதைகள் இயற்றி தமிழர் மனங்களைக் கவர்ந்த கவிஞர் பாரதிதாசனின் பெயரைக் கொண்டு இயங்கும் "பாரதிதாசன் சனசமூக நிலையம்" வடமராட்சி மண்ணிலே ஐம்பது ஆண்டு காலமாக பெருமையுடன் இயங்கி வருகின்றது. இன்று 50ஆம் ஆண்டு நிறைவு விழாவாகிய பொன்விழாவை கொண்டாடி புகழ்பூத்து நிற்கின்றது.

வடமராட்சியில் சிறந்த அதிக நூல்களைக் கொண்ட நூல் நிலையம் இது என்றால் மிகையாகாது. அறிவுத் தேவைக்கு வேண்டிய புத்தகங்களை வேண்டிய நேரத்தில் இங்கு பெற்று, வாசித்து பயன் பெறலாம். இவ்வாறு பயன்பெற்றவர்களின் தொகை எண்ணிலடங்காது. நூலகத்தை மட்டுமல்லாமல் பாலர் பாடசாலை, விளையாட்டுக் கழகம், ஐக்கிய நாணயசங்கம் போன்றவற்றையும் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

இந்நிலையில் நான் பல்கலைக்கழகம் செல்லும் காலம் வரை இந்த நூலகத்தில் பல நூல்களை பெற்று படித்தும் பயன்பெற்றிருக்கின்றேன். என்போன்று பயனடைந்தோர் பலர்.

தனது பொன்விழாவை இன்று கொண்டாடிக் கொண்டிருக்கும் பாரதிதாசன் சனசமூக நிலையமானது அறிவுப்பசி உடையவர்களுக்கு அறிவுப்பசி போக்கி, பன்னெடுங் காலம் இயங்கி பல விழாக்கள் காணவேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்க பாரதிதாசன் சனசமூக நிலையம்

பயனாளி

T. சாந்தாதேவி

பொறியியலாளர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்தி இணைப்பாளரின் வாழ்த்துச்செய்தி

பாரதிதாசன் சனசமூக நிலையம் தனது பொன்விழாவினை முன்னெடுக்கும் தருணத்தில் இவ் வாழ்த்துரை சமர்ப்பிக்க கிடைத்தது பெரும் பாக்கியம் என்றே கருதுகின்றேன்.

பாரதிதாசன் சனசமூகத்தினரோடு இணைந்து செயற்படும் சந்தர்ப்பம் எனக்கு 1992ம் ஆண்டு காலப்பகுதியிலே கிடைத்தது. யுத்தம் உக்கிரமான நேரம். பொருளாதார தடைகள், போக்குவரத்து பிரச்சனைகள், போர்ச்சூழல், இடம்பெயர்வு போன்ற பல புறக்காரணிகள் நிலவிய வேளையிலே போரூட் நிறுவன யாழ் கிழக்கு காரியாலயம் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவையினை வழங்கும் நேரத்தில் அல்வாய் கிழக்கு கிராமமும் அடையாளம் காணப்பட்டது. நாம் கிராமிய அமைப்புக்கள் ஊடாகவே பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். அந்தவகையில் பாரதிதாசன் சனசமூக நிலையம் எம்மோடு பங்காளியாக இணைந்து கொண்டது.

கிராமிய அமைப்புக்களை பலப்படுத்துதல் காலத்தின் தேவையாக காணப்பட்டாலும் பாரதிதாசன் சனசமூகத்தினரை நாம் ஒரு முன்னுதாரணமாகவே வைத்திருந்தோம். இச் சங்கத்தினரைக் காட்டி ஏனையோரை முன்னேற்றுவதற்கு முயற்சித்தோம். ஆகவே பாரதிதாசன் சனசமூக நிலையம் முன்னோடிகளுக்கு ஒரு முன்னோடியாக இருந்தது எனில் அது மிகையாகாது.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் பல கல்வியியலாளர்கள் மற்றும் ஆளுமை மிக்கவர்கள் பக்கபலமான அங்கத்தவர்களாக இருந்து அதனை மிக நேர்த்தியாக வழிநடத்தினர். அதனால் ஸ்தாபன ரீதியாக எமது பணி மிகவும் இலகுவானதாக இருந்தது.

போரூட் நிறுவன கோட்பாட்டின்படி தொடர்ச்சியாக கிராமங்களில் பணியாற்றுவதி லிருந்து படிப்படியாக விடுபடும் வேளையிலே "போரூட் நூலகத்தினை" ஒழுங்காக தொடர்ந்து பராமரிக்கக்கூடிய ஒரு சங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டி இருந்தது. அவ்வேளையிலே போட்டியின்றியே அப்பணியை பாரதிதாசன் சனசமூக நிலையத்திற்கு கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இன்றும் பாரதிதாசன் நூலகம் வடமராட்சி மக்களுக்கு அளப்பெரும் பொக்கிஷமாக இருப்பதனைக் காண்பதற்கு பெருமைப்படுகின்றோம்.

பாரதிதாசன் சனசமூக நிலையம் இப்பகுதி மக்களுக்கான பொதுச்சேவையினை தொடர்ந்தும் ஆற்றி மக்கள் மனதில் நீங்காத இடம் பிடிக்க வேண்டும் என வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நா. கோகுதாஸ்

(முன்னைநாள் திட்ட அலுவலர், போரூட்)

அபிவிருத்தி இணைப்பாளர்

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்ப்பாணம்

யாழ். இலங்கை மின்சார சபை திட்டமிடல் பொறியியலாளரின் வாழ்த்துச்செய்தி

வடமராட்சியின் அறிவுக்கண்ணை ஒளிரச் செய்யும் அல்வையூர் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன்விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

வாசிப்பே ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது. அந்த வகையில் பாரதிதாசன் அல்வையூரிற்கு மட்டுமன்றி முழு வடமராட்சிக்குமே ஒரு கல்விக் கருவூலமாக விளங்குகின்றது. கிடைத்தற்கரிய பல புத்தகங்களின், சஞ்சிகைகளின் களஞ்சியமாக பாரதிதாசன் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

பாரதிதாசனிற்கும் எமது குடும்பத்திற்குமான தொடர்பு 50 வருடங்கள் தொன்மையானது. அல்வாய்க் கிராமத்திற்கு ஒரு வாசிகசாலை அவசியம் என்பதை உணர்ந்த இளைஞர்கள் கூடி 1964 இல் உருவாக்கினர் பாரதிதாசனை. எனது தந்தை அமரர் க. தபேந்திரனும் பாரதிதாசனின் தோற்றத்திற்கு அளப்பெரும் பங்காற்றினார். பாரதிதாசனின் ஆரம்ப காலக் கதைகள் பலவற்றை நான் என் தந்தையிடமிருந்து அறிந்து கொண்டேன். அந்த வகையில் பாரதிதாசன் எம் பாசமிகு சோதரன். அத்துடன் தந்தை வழி முதிசமும் கூட. பாரதிதாசன் பொன்விழா காணும் இந்நாளில் எம் தந்தை அருகிலிருந்தால் இறுமாப்பு எய்தியிருப்பார் தம் சீரிய சாதனையை நினைத்து. அவர் வழியில், அவர்தம் பிள்ளைகளாகிய நாமும் பாரதிதாசனில் ஓர் அங்கம் என்பதையெண்ணி மன நிறைவும், புளகாங்கிதமும் அடைகின்றோம்.

எம் பாட்டனார் அமரர் கணிதமேதை E.A. கந்தையா அவர்களது காணியிலேயே இன்றைய பாரதிதாசன் நிமிர்ந்து நிற்கின்றான். இதுவும் E.A. கந்தையா வழிவந்த எமக்கு பெருமையே.

இன்று பாரதிதாசன் சனசமூக நிலையம் வடமராட்சி மக்களின் அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது. இதன் கல்விப்பணி மூலம் உயர்ந்தோர் பலர். நானும் எனது சோதரர்களும் எமது பாடசாலைக் காலங்களில் பாரதிதாசனால் உண்மையிலேயே முழுப் பயனைப் பெற்றோம். பல சனசமூக நிலையங்கள் இருந்து அறிவுப் பசி போக்கினாலும் ஒரு சில மட்டுமே என்றும் மாங்காப் புகழ் பெறும். அந்த வகையில் தனக்கென தனித்தடம் பதித்து, பெருமையுடனும், சாதனையுடனும் தனது அடுத்த தசாப்தத்தில் காலடி எடுத்து வைக்கும் பாரதிதாசன் சனசமூக நிலையத்தை என் தந்தை அமரர் கந்தையா தபேந்திரன் சார்பில் மனமுவந்து உவப்புடன் வாழ்த்துகின்றேன்.

திருமதி தனுஜா அரவிந்தநாத்

திட்டமிடல் பொறியியலாளர்,

இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்.

பயனாளி ஒருவரின் வாழ்த்துச்செய்தி

வாசிப்பை நேசிக்க, உதவிய பாரதிதாசனை பாராட்டுவதில் தான் எங்களுக்கு எத்தனை பெருமை.

சொந்த வீட்டுக்கு பிறகு, எங்களை வரவேற்ற ஒரே வீடு பாரதிதாசன்தான்.

புவியண்ணாவின் புன்னகை அழைப்புடன் புத்தகங்களை சுவாசித்த நாட்கள் அவை. எப்போதும் பாரதிதாசனை நாங்கள் வாசிகசாலையாக பார்த்ததில்லை. அவன் எப்போதும் எங்களுக்கு, இடம்தந்து கதை சொல்லும் நல்ல ஆசிரியன்.

எங்களுக்குப் படிக்க சொல்லித்தந்ததில் பாரதிதாசன் பெரும் பங்கு வகிப்பது, அவனுக்கும் எங்களுக்கும் தெரிந்த உண்மை.

எத்தனை நாவல்கள், வார இதழ்கள்.... வேதாளத்தை முருங்கை மரம் ஏற்றிய அம்புலிமாமா முதல், தொழில்நுட்பத்தை நுட்பமாக கதையில் புகுத்திய சுஜாதாவின் நாவல்கள் வரை அனைத்துமே சுவாரசியம்!

கல்கியின் பொன்னியின் செல்வன் கடைசிப் பாகம் காணாமல் முதல் பாகங்களை திரும்ப திரும்பப் படித்ததும் ஒரு காலம்.

கடந்துபோகும் ஒவ்வொரு முறையும், இவனும் என்னிடத்தில் படித்தவன் என்ற இறுமாப்பில் இன்னும் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

பக்கத்திலிருந்து பழக எங்களுக்கு வாய்ப்பில்லை. ஆனால் தூர நின்று பாரதிதாசனின் வளர்ச்சியை பார்ப்பதில்தான் எவ்வளவு சந்தோசம்.

பாரதிதாசனுக்கு பொறுப்புகள் அதிகம். இன்னும் ஆயிரம் ஆயிரம் தலைமுறையை வளர்க்க வாசல் திறந்து வரவேற்க காத்துக்கொண்டிருக்கிறது.

வருவோம் மீண்டும் உன் வாசல் தேடி. வளரட்டும் உன் பணி!

வாழ்த்துக்கள்

அன்னலிங்கம் பிரபாகர்

பொறியியலாளர்,

Engineering Program Manager
Hewlett - Packard Pvt Ltd.
Singapore.

பாரதிதாசன் சனசமூகநிலைய பொன்விழா மலருக்கான ஒரு வாசகனின் இதய வாழ்த்து

முடிசூடி என்றும் வாழ்க

பாவேந்தர் பாரதிதாசன்
பெயர் கொண்டாய்
படிப்பவர் மனதில்
தேடலின் முகவரியானாய்
இடையிலே
போரூட்டின்
அரவணைப்பையும் பெற்றாய்
ஊரார் உறவுகள்
வாசகர் ஆதரவால் இன்று
அல்வாயின் முதுசொத்தாய்
பொன்விழா கண்டு
உயர்கின்றாய்
எம் வாழ்விற்கு நல்
வழகாட்டிய
அறிவுக் கலங்கரை விளக்கமே
உன்னில் கரையும்
உறுப்பினரில்
ஒருவனாய்
உன்னில் தேடும்
வாசகரில் ஒருவனாய்
உளமார வாழ்த்துகிறேன்
பாவேந்தர் தம்
வரிகளிலேயே
சொல்வதென்றால்
"காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயிர்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்றுசேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற்
பிறந்த நூலகமே வாழ்க"
உன் சேவைக்கு அணியாய்
பல் விருதுகளும் வென்றாய்
உயர்தர மாணவர் மனதில்
உன் கல்விப் புத்தக சேவையதால்
உயர்விடம் பெற்றாய்
பத்திரிகைச் சேவையாலும்
பாமரர் மனதிலும் இடம் பிடித்தாய்
அன்று முதல் இன்றுவரை
உன்னில் பணிசெய்த
பலரை நாம் அறிந்தோம்
அவர்தம் சேவைக்கு
எம் நன்றி.
இன்னும் பற்பல
புதுப்பொலிவு கண்டு
நவீன வசதிகள் பெருக்கி
நமக்கான நூலகமாய் எழுக
அறிஞர் வாழும் அல்வாயில்
பாவேந்தர் பட்டுப்போல
பாரினில் என்றும்
அழியாது உன்புகழ்
ஆயிரமாய் வாசகர்நாம்
ஆண்டாண்டாய்
உனை வாழவைப்போம்
அறிவுப் பசிக்கு
விருந்து தந் தெம்மை
உயர வைத்த
ஏணிப் படியே
வாசிப்பையே சுவாசிப்பாய்
ஆக்கிய உன்பணிக்கு
எப்படி நன்றி சொல்வோம்
முழுநிறை மனிதனாக்கிய உன்
முகவரி காத்திடுவோம்
முடிசூடி என்றும் வாழ்க
பாவேந்தர் கவிதை போல.

கவிதையாக்கம்
நூலக வாசகர் புலோலியூர்
வேல்நந்தன்

காரிருள் அகத்தில் கதிரொளியே! வாழ்க

பள்ளிப் படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் எமது சகபாடியான திரு. ச. திரவியம் தலைமையில் தோன்றியதே பாரதிதாசன் நூலகம். என்னுடன் திரு. க. தபேந்திரன், திரு. ஆ. ஜெகநாதன், திரு. சி. சத்தியமூர்த்தி, திரு. ச. நவரத்தினசாமி போன்றோரும் இணைந்து திரவியத்திற்கு தோள் கொடுத்தோம். தற்காலிகமாக தலைவாசலுடன் கூடிய ஆறுதல் மடத்தில் நூலகம் இயங்கிக் கொண்டிருந்த பரிதாப நிலை கண்டு, அமரர் J.S. செல்லப்பா ஆசிரியர் மனமுவந்து தமது தலைமையில் இயங்கிய கிராம முன்னேற்றச் சங்க கொட்டகையை நூலகமாக இயக்குவதற்கு வழிசெய்தார்.

பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து வெளிநாடு வந்து சேர்ந்தாலும் நூலக வளர்ச்சியை நாம் மறந்துவிடவில்லை. திரு. ச. கிருஷ்ணசாமி (புவி) அவர்களின் கடும் பிரயத்தனத்தினால் நூலகம் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாய் வளர்வது கண்டு புளகாங்கிதம் அடைந்தேன். இன்று வடமராட்சியிலேயே மிகப் பெரியதொரு நூலகமாக வளர்ந்து கல்விப் பணி ஆற்றுவது கண்டு பெருமிதமடைகின்றேன்.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்"

என்ற பாரதியின் பாட்டு வரிகளை அல்வையூரில் பாரதிதாசன் நூலகம் மேற்கொண்டு வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது. காரிருள் அகத்தில் கதிரொளியாய் வாழும் நூலகமே நீ வாழ்க, வளம் பெறுக!

அ. ஈஸ்வரமோகன்
இலண்டன்

அறிவுலகின் பொக்கிசமே...!

அறுபத்துநான்கில் கால்பதித்து இற்றை நாளில்
பொன்விழாக் காணும் எம் அறிவுத் தாயே
பாரதிதாசன் தந்தான் எழுச்சிமிகு கவிவரிகள்
பாரதிதாசன் நூல்நிலையத்தின் வழி - நீ
தந்ததுவோ எழுச்சிமிகு அறிவொளிகள்.

எட்டுத் திக்குமிருந்து வரும் மாந்தர்தம்
உள்ளந்தனிலே நிறைந்திருந்த
இருளகற்றி அறிவொளி ஏற்றி
வாழ்வில் ஏற்றம் பெறச் செய்த
அறிவுலகின் பொக்கிசம் நீயம்மா.

இலக்கியம் தந்தாய் இலக்கணம் தந்தாய்
தத்துவத்தொடு தரணியில் நாம்மிளிர
அறிவியல் தந்தாய் நடப்பியல் உலகியலை
நாளிதழினூடு தந்தாய் அத்தனையும்
தந்தருளும் எம் தாயே.

நித்திலம் மீதினிலே நின் பணியால்
நிலையுயர்ந்தோர் பலபேருண்டு
இவ்வையகமுள்ளவரை உன் பணிசிறக்க
நீ வாழ்க! நின் பணி வாழ்க!

"ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம்
புத்தகங்களும் வாசிப்புக்களும்"

கே. எம். செல்வதாஸ்
ஆசிரியர்
யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்

வாழ்த்துச்செய்தி

அல்வையூர் மக்களின் அரும்பெரும் சொத்தான பாரதிதாசன் படிப்பகம், பல சிரமங்களுக்கு மத்தியில் அளப்பரிய அபிவிருத்தி களை மேற்கொண்டு தனது ஐம்பதாவது ஆண்டைப் பூர்த்திசெய்து கொண்டமை, அவ்வூர் மக்களான எமக்கெல்லாம் அளவிறந்த பூரிப்பையும் பெருமையையும் அளிக்கின்றது. 1964ஆம் ஆண்டு திரு. சரவணமுத்து திரவியம் அவர்களால் தூரதிருஷ்டியுடன் துவக்கி வைக்கப்பட்டு இன்று கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இரு மாடிக் கட்டடம் இப் படிப்பகத்தின் சாதனைகளின் ஓர் அடையாளச் சின்னம். அன்னாரின் கனவைக் கட்டிக்காப்பது அல்வையூர் மக்களான எங்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். மேலும் இவ்வரிய பொக்கிஷத்தின் அடியாதாரங்களான நூல்களைப் பேணிப் பாதுகாத்து பலரும் படித்துப் பயன்பெறத் துணையாயிருந்த ஒவ்வொருவருக்கும் நாம் நன்றிகூறக் கடமைப் பட்டவர்களாவோம்.

பிரசித்தி பெற்ற கணித மேதைகள், விஞ்ஞானிகள், வழக்கறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், எழுத்தாளர்கள், வைத்திய நிபுணர்கள், கலைஞர்கள், கல்வியாளர்களை உருவாக்கியது அல்வை மண். இப்பாரம்பரியத்தை அடியொற்றி கனடாவாழ் அல்வையூர் மக்களும் கல்வி, பொருளாதாரம், கலை, பண்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் பரிணமித்து வருகின்றனர். இவற்றிற்கெல்லாம் ஆதார சுருதியாக அமைந்திருப்பது பாரதிதாசன் படிப்பகமே.

இத்தகைய சிறப்புக்கள் மிக்க பாரதிதாசன் படிப்பகம் சிரஞ்சீவியாக நீடித்து நிலைத்து நின்று தனது கடமைகளையும் சேவைகளையும் தங்குதடையேதுமின்றி தொடர்ந்து ஆற்றவேண்டுமென வாழ்த்துகிறோம். அதற்கான ஆதரவையும் ஆசியையும் வழங்குமாறு ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

சி. சிவகுமார்

கனடாவில் வாழும் அல்வையூர் மக்கள் சார்பாக.

அகவை ஐம்பது காணும் பாரதிதாசனை அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்....

"மனிதன் எவ்வளவு வாசிக்கின்றானோ அவ்வளவிற்கு பூரணத்துவமடைகின்றான்" எனும் கவிஞர் பாரதிதாசன் சொல்லுக்கிணங்க எம் அல்வையூர் இளைஞர்கள் அவர் மீதுள்ள பற்றினால் 1964ம் ஆண்டு பாரதிதாசன் எனும் பெயரை சூட்டி படிப்பகத்தை "சிறுகக்கட்டி பெருக வாழ்க" எனும் முதுமொழிக்கிணங்க ஆரம்பித்தார்கள். இன்று இந்நிலையம் கல்வி, செல்வம், வீரம் எனும் மூன்று செல்வங்களில் சிறந்து விளங்கி, 50வது அகவையைக் கடந்து தலைநிமிர்ந்து நிற்கின்றது. இந்நிலையத்தின் வளர்ச்சிக்கு செயலாற்றிய இளைஞர்களுக்கும், வழி நடத்தியவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியும் வாழ்த்துக்களும்.

இன்றுபோல் என்றும் இந்நிலையம் எதிர்கால சமூகத்திற்கு இன்னும் பல நன்மைகளை செய்து எதிர்கால சந்ததியினரை நற்பிரசையாக்க வேண்டும் என எல்லாம் வல்ல குமிழடி விநாயகப் பெருமானின் பாதங்களை பணிந்து நிற்கின்றேன்.

வைத்திய சிரோண்மணி சி. சி. வேலும்மயிலும்

வாழ்த்துச்செய்தி

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்ற தேன் சுவை சொட்டும் பாடல் வரிக்கு சொந்தக் காரர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். பெரும்புகழ் படைத்த பாவலரான பாரதிதாசனின் பெயரைத் தாங்கிய நம் அல்வையூர் பாரதிதாசன் சனசமூக நிலையத்திற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாரதிதாசன் சனசமூக நிலையமானது 1964ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அன்றிலிருந்து இன்றுவரை தனது மகத்தான சேவையினை ஆற்றி வருகின்றது. இன்று பாரதிதாசன் சனசமூக நிலையம் தனது 50வது அகவையில் கால்பதிக்கின்றது. இதன் பெருமை கனடாவாழ் அல்வையூர் பெற்றெடுத்த திரு. சதாசிவம் கிருஷ்ணசாமி (புவி அண்ணா) அவர்களையே சாரும். அவரின் இடைவிடாத முயற்சியினால் இன்று இந்த விழா மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தினால் பயனுற்றோர் எண்ணற்றோர். ஆதலால் இச் சனசமூக நிலையம் அல்வையூரிற்கு பெருமை சேர்க்கிறது என்றே கூறலாம்.

பாரதிதாசன் சனசமூக நிலையமானது சிக்கனக் கூட்டுறவுச் சங்கம், முன்பள்ளி, விளையாட்டுக் கழகம் என்பவற்றைத் தனது அங்கங்களாகக் கொண்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களிலும், இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளிலும் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு புனர்வாழ்வினையும் சமூக சேவைகளையும் வழங்கியிருந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எரிபொருள் நிவாரணம் பெற்றுக் கொடுத்தது மட்டுமல்லாது போரினால் பாதிக்கப்பட்ட நம்மூர் ஆலயங்கள், வீதிகள் என்பவற்றையும் சிரமதான முறையில் சீர் செய்தும் கொடுத்துள்ளது.

இது மட்டுமல்லாது பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் மூலம் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், மின்னொளியில் கரப்பந்தாட்டம், சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள், கல்விமான்களுக்கான கௌரவிப்புக்கள் என பலதரப்பட்ட செயற்பாடுகளைச் செய்து இன்று 50வது ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்றது.

இப் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் மூலம் வாசகர்கள், பயனாளிகள் மேலும் பல நன்மைகளை அடையவும் பாரதிதாசன் சனசமூக நிலையம் மேலும் பல வளர்ச்சிகளைப் பெற்று நூற்றாண்டு காலம் நிலைத்து நிற்கவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சி. சிறீகாந்தன்

முகாமையாளர்,
இலங்கை வங்கி, கரணவாய்.

புலம்பெயர்ந்த உறுப்பினர்களின் வாழ்த்துச்செய்தி



'எண்ணிய முடிதல் வேண்டும் - நல்லவே
எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் - தெளிந்த
நல்லறிவு வேண்டும்.

நாம் நல்ல செயலை எண்ணிச் செயற்பட்டோம்; நல்லனவாகவே முடித்து வைத்தோம்; அதற்கு எம்மிடம் மனவலிமை இருந்தது. தெளிவான சிந்தனையும் இருந்தது. எமது பணி தொடர பாரதிதாசன் நூலகம் எதிர்காலத்தில் வளம் பெற்று நற்பணி ஆற்ற வேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

க. சச்சிதானந்தம் *ச. கிருஷ்ணசாமி*

அறிமுகவியல்

அல்வாய் என்ற எங்கள் உயரிய கிராமம்

திரு. செ. சுபச்செல்வன்
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

இலங்கை வரலாற்றில் வடமராட்சி மண்ணுக்கு என்றுமே அழிக்க முடியாத இடம் உண்டு. அந்தளவுக்கு பொருளாதார ரீதியிலும் சமூகவியல் ரீதியிலும் கலை, பண்பாட்டு, அரசியல், தொல்லியல் படிமங்களின் ஆதாரமாக நிமிர்ந்து நிற்கிறது வடமராட்சி மண். அந்த மண்ணின் புவியியல் ரீதியில் மத்தியிலே அமைந்திருந்து தன் சார்ந்த சிறப்பியல்புகளை கொண்டு நிமிர்ந்து நிற்கிறது அல்வாய் எனும் கிராமம். இலங்கையின் வரலாற்றியல் சார்பான ஆய்வுகளுக்கு அதிகம் தோள்கொடுப்பது அல்வாயே. அருகில் தேவரையாளிப் பதியும் மறுபக்கத்தில் வதிரி என பல சிறப்புமிகு ஊர்களை தன் சுற்றுப்புறங்களாக கொண்டு தொல்லியல் கலாசார பண்பாடு நாகரிக சமய சமூக மூலாதாரங்களை இது வெளிப்படுத்திக் கொண்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றது. இந்த ஊரின் சிறப்பியல்புகளை பல்வேறு பகுதிகளாக பகுத்து நோக்கமுடியும். அந்தவகையில் முதலாவதாக தொல்லியல் ரீதியில் இந்த ஊரின் சிறப்பியல்புகளை கொண்டு நோக்கலாம்.

தொல்லியல் என்றவுடன் அதிகம் சிந்தனைக்குள் வருவது அல்வாய் மாயக்கை பதியே. மாயக்கை என்பது காயக்குகை என்று இருந்ததாகவும் பின் மாயக்கை என மருவியதாகவும் வரலாறு கூறுகிறது. நீண்ட வரலாற்றைக் கொண்டு மனித இனத்தின் தொன்மை பற்றிய ஆய்வுக்கு இந்த மாயக்குகை தோள் கொடுப்பதாக வரலாறு கூறுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்று ஆய்வுத்துறை இங்கு கண்டு பிடிக்கப்பட்ட படிமங்கள் ஊடாக அல்லது தொல்லியல் சான்றாதாரங்கள் ஊடாக மனித இனம் சுமார் 7 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்திருக்கலாம் என்பது ஆய்வியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட உலோகம் ஒன்றிலான ஆதிகால மனித பயன்பாட்டு பொருட்கள் இந்த உண்மையை வெளிப்படுத்தியதாக கூறியிருக்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறை பேராசிரியர் செ. கிருஸ்ணராஜா. அந்தளவுக்கு அல்வாய் தொன்மையும் சிறப்பும் மிகுந்த கிராமமாக அமைந்திருப்பது இங்கு வெளிப்படுத்தப்படுகிறது. மறுபக்கத்தில் இலக்கியங்கள், வாய்மொழிக் கதைகள் மூலமாக வெளிப்படுத்தப்படும் இவ்வூரின் தொன்மைச் சிறப்பு இன்னும் விதந்துரைக்கப்பட வேண்டியது. அந்த வகையில் மாயக்கையின் தொன்மையே வெளிப்படுத்தும் கதைகளை பல இலக்கியம் ஆன்மிகம் சார் நூல்களிலே அதிகம் தரிசிக்க முடிகிறது.

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மாலைசந்தைப் பிள்ளையார் கோயிலின் வடக்குக் குடியிருப்புக்கும்

அல்வாய் - தம்பசிட்டி வீதிக்கும் இடையில் காணப்படும் இக்குகையானது இவ்வூர் வரலாற்றுடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட வேண்டியது.

முன்னொரு காலத்தில் நெல் விளையும் பூமியாக விளங்கிய இப்பூமியின் பிரதான தொழிலாக ஆதிகாலத்தில் மந்தை மேய்த்தல் இருந்தது. ஆடுகளையும் மாடுகளையும் அதிகமாக கொண்டிருந்தமை யினால் இப் பிரதேசத்திலுள்ள நெல் வயல்கள் அடிக்கடி அழிவுக்குட்பட்டு வந்தது. இதனால் அந்தக் கால மரபை ஒத்த பரண் அமைத்து காவல் செய்யும் வழக்கம் அக்காலத்தில் இருந்து வந்தது. இந்நிலையில் ஒரு நாள் ஒரு வயற்காரன் மாடுகள் குகை ஒன்றுக்குள் இருந்து வெளிப்பட்டு தன் வயல் கதிர்களை மேய்வதை அவதானித்தான். அவன் அந்த மாடுகளை துரத்திச் செல்லும்போது நீண்டிருந்த கற்பாறை தொடரின் குகைக்குள் மாடுகள் ஓடத் தொடங்கின. விடாது துரத்திச் சென்றபோதும் திடீரென அந்த மாடுகள் மறைந்து விட்டதாகவும் அக்குகைக்குள் ஆதி கால மக்களான 'இயக்கர்' அக்காலத்தில் வாழ்ந்ததாகவும் அவர்கள் அவனை எச்சரித்து அனுப்பியதாகவும் வரலாறு கூறுகிறது. அங்கு இரத்தினக்கற்களைப் போன்ற விலை மதிப்பற்ற பொருட்களை அவன் கண்டதாகவும் ஐதீகக் கதைகள் கூறுகின்றன.

மறுபக்கத்தில் ஆன்மிக ரீதியினும் பல கதைகளை இவ்வூர் வரலாற்றியல் ரீதியாக கொண்டிருக்கிறது. இந்த மாயக்கை நிலப்பரப்பின் வயலை அண்மித்த பகுதியில் காணப்படும் சின்னக்கந்தன் எனும் தோட்டக் கிணறும் சிறப்பியல்புடையதாக கூறப்படு கின்றது. அக்கிணற்றில் ஒரு துவாரம் உண்டு. அதிகரித்த வெள்ளம் அக் கிணற்றில் பாய்ந்து துவாரத்தின் ஊடாக தரைக்கீழாக கடலை அடைகின்றது என்றும் கூறப்படுகின்றது. இதை வாய்மொழியாக கேட்டு வந்த சிலர் பொருட்களை அக் கிணற்றுக்குள் போட்டதாகவும் அது நெடிய காடு கடற்கரையில் வந்து சேர்ந்ததைக் கண்டதாகவும் கூறப்படுகின்றது. அத்துடன் மாயக்கை முன்னொரு காலத்தில் இராச தானியாக இருந்ததாகவும் அந்த ராசதானி யை குற்றங்கை எனும் மன்னன் ஆண்ட தாகவும் அவன் பெண்கள் குளிப்பதற்காக குளம் ஒன்றை வெட்டியதாகவும் அக்குளமே இப்போது மாயக்கை குளமாக காணப்படுவ தாகவும் வரலாறு கூறுகிறது.

மறுபக்கத்தில் ஆன்மிக ரீதியில் நோக்கும் போது அல்வாய் மிகவும் முக்கியம் பெறும் பகுதியாகவே காணப்படுகின்றது. இந்துப் பாரம்பரியத்தில் தொன்மையும் சிறப்புகளைக் கொண்ட இக்கிராமம் பெண் தெய்வ வழிபாட்டு மரபுகளுக்கு முக்கியம் பெறும் பகுதியாகவே காணப்படுகின்றது. பக்கத்து ஊரான தேவரையாளியில் மனித நிலையில் இருந்து தெய்வநிலைக்கு சென்ற கண்ணகாதெய்வம் நேரடியாக வந்து கோயில் கொண்டருளியதாகவும் சான்றா தாரங்கள் குறிப்பிடுகின்றன. நிர்வாகக் கட்டமைப்பில் வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலயமும் அல்வாய்க் குள்ளேயே அடங்குகின்றது. அந்தவகை யில் அல்வாயும் கண்ணகை தெய்வ வழிபாட்டு மரபுகளில் முக்கிய இடத்தை பெறுகிறது. மறு பக்கத்தில் வேம்பும் இலந்தையும் ஒன்றாக சேர்ந்த தல விருட்சத்தை தன்னகத்தே கொண்ட அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயமும் ஆன்மீக ரீதியிலும், தொல்லியல்

ரீதியிலும் முக்கியமான இடத்தை பெறுகிறது. முத்துமாரியம்மன் மூதாட்டி வடிவில் காட்சியளித்து பின் கோயில் கொண்டு அருளியதாகவும் பல்வேறு அற்புதங்களை நடத்தி தனது தெய்வீகச் சிறப்பை நிரூபித்த இடமாகவும் அல்வாய் வேவிலந்தைப் பதி விளங்குகின்றது. இக்கோயில் இன்றுவரை அம்மன் வழிபாட்டுக்கு முக்கியம் பெறும் இடமாகவே அமைகின்றது. அல்வாய் சாமணந்துறை ஆலடிப்பிள்ளையார் கோவில், வதிரி பூவற்கரை பிள்ளையார் கோயில் என பிள்ளையார் வழிபாட்டிலும் இவ்விடம் முக்கியம் பெறுகின்றது. மறு பக்கத்தில் கிராமிய காவல் தெய்வ வழிபாட்டு மரபில் வைரவர் வழிபாட்டிலும் இப்பகுதி சிறப்புமிகு இடத்தைக் கொண்டது. அல்வாய் கிழக்கு சிட்டி வைரவர், பத்தனை ஞான வைரவர், அல்வாய் கந்தையடி வைரவர் என வைரவர் வழிபாட்டிலும் இவ்வூர் சிறப்புப் பெறுகிறது.

இவ்வாறு இங்கு சமய ஆன்மிக வளர்ச்சியிலும் சமய கலாசார ரீதியிலும் இவ்வூரின் சிறப்பு மேலும் மேலும் நோக்கிக் கொண்டே போவதற்குரிய தனிச் சிறப்பு களைக் கொண்டமைந்திருக்கிறது.

நிர்வாக கட்டமைப்பில் ரீதியாக நோக்குகையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாகவும் அதேநேரம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக நிர்வாகப் பகுதிக்குள் உள்ளடங்கும் பகுதியாகவும் எல்லைப் பகுதியாகவும் அமைந்திருக்கிறது. J/378, J/379, J/380 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கி இக்கிராமம் கொண்டிருக்கிறது.

பொருளாதார ரீதியில் இக்கிராமத்தை நோக்குகையில் விவசாயத்தையும் விவசாய கூலித் தொழில்களையும் தங்களுடைய ஜீவனோபாய தொழிலாக கொண்டு செல்வச் செழிப்பு மிகுந்த கிராமமாக இக்கிராமம் விளங்குகின்றது. வயல் நிலங்கள், தோட்ட நிலங்கள், மேய்ச்சல் தரவைகள் போன்ற வற்றை இக்கிராமம் கொண்டிருப்பதால் தன்னிறைவு பொருளாதார அடைவு களையும் இக்கிராமம் கொண்டிருப்பது இக் கிராமத்தின் இன்னொரு சிறப்பாகும். அத்துடன் இக் கிராமத்தில் அமைந்துள்ள தோற்பொருள்கள் நாட்டின் பல பாகங் களுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் பொருளாக அமைகிறது. பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் பாரம்பரிய கைத்தொழில் களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்ட இத் தோல் பொருள் உற்பத்திச்சாலை ஊழியர் பலத்துடன் இயங்கி இக்கிராமத்தின் அபிவிருத்திக்கு வலுச் சேர்க்கிறது.

அரசியல் ரீதியிலும் இப்பிரதேசம் பல தலைவர்களை தமிழ் மக்களுக்கு அளித் திருக்கிறது. அப்போதைய அரசியல் தலைவர் களில் ஒருவரான ஜீ. ஜீ. பொன்னம்பலம் இக் கிராமத்தையே பிறப்பிடமாக கொண்டவர். மிகச்சிறந்த சட்டவாதியான இவர் 1901 ஆம் ஆண்டு பெப்ரவரி 09ஆம் திகதி இக் கிராமத்திலேயே பிறந்தார். சிறந்த குற்ற வியல் வழக்குரைஞராக சர்வ தேசிய ரீதியில் அறியப்பட்ட இவர் பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு சுமார் ஐந்தாண்டு காலம் அமைச்சர் பதவியிலும் நாடாளு மன்று உறுப்பினர் பதவியையும் வகித்தார். தமிழர் அரசியலில் மிக முக்கிய கட்சியாக ஒரு

காலத்தில் பரிணமித்திருந்த அகில இலங்கை தமிழர் காங்கிரஸையும் ஸ்தாபித்து தமிழர் தம் அரசியலுக்கு வலுச்சேர்த்தார். காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையும் பரந்தன் இரசாயன தொழிற்சாலையும் வாழைச் சேனை காகித ஆலையும் அவர் அமைச்சராக இருந்தபோது ஸ்தாபிக்கப்பட்டன. சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் சிறுபான்மை இனத்தவரின் பாதுகாப்புக்காக சமபல பிரதிநிதித்துவ முறை ஸ்தாபிக்க வேண்டும் எனவும் வாதிட்டார். 1947ஆம் ஆண்டு இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது நாடாளு மன்றத்திலும் அங்கத்துவம் வகித்தார். அந்தவகையில் பல்வேறு அறிஞர்களை இவ்வாறு கூறிச்செல்லலாம்.

கவிஞர் மு. செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், சுகனா (கணபதிப்பிள்ளை), சின்னத்தம்பி உபாத்தியர், ராஜஸ்ரீ காந்தன் என பல எழுத்தாளர்களை சட்ட அரசியல் மேதைகளை இவ்வூர் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் முன்னணி கழகங்களாக அல்வாய் மனோகரா கழகமும் வதிரி டயமன்ஸ் கழகமும் பாரதிதாசன் விளையாட்டுக் கழகமும் இப்பகுதியிலேயே அமைந்திருக்கின்றன. சனசமூக நிலையங்கள் வரிசையில் பாரதிதாசன் சனசமூக நிலையம், இளம்பிறை சனசமூக நிலையம், மனோகரா சனசமூக நிலையம், மகாத்மா சனசமூக நிலையம், இளங்கோ சனசமூக நிலையம் என பல சனசமூக நிலையங்களை கொண்டு சமூகவியல் ரீதியிலும் கலை பண்பாட்டு ரீதியிலும் மிக முக்கிய இடத்தை இப்பகுதி கொண்டிருக்கிறது.

இப்பகுதியில் அமைந்திருந்து கல்விப் பணி வழங்கும் பாடசாலைகளாக அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாலயம், சின்னத்தம்பி வித்தியாலயம், மாயக்கை அ.த.க.பாடசாலை என பல பாடசாலைகளை கொண்டு கல்வியிலும் மறுமலர்ச்சியிலும் அல்வாய் நிமிர்ந்து நிற்கின்றது.

வேலும்மயிலும், சச்சிதானந்தம் என்ற பரம்பரை வைத்தியர்கள் இம் மண்ணுக்குப் பெருமை சேர்க்கிறார்கள். உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்கு அறியப்பெற்ற வைத்தியர்களாய் இவர்கள் விளங்குகின்றார்கள்.

எனவே தொகுத்து நோக்கின் சமூக, கலை, கலாசார, அறிவியல், அரசியல், பண்பாட்டியல், ஆன்மீக ரீதியில் வடமராட்சி மண்ணுக்குரிய தனிச் சிறப்பை அல்வாய் வெளிப்படுத்தியபடி பயணித்து கொண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

தமிழர் பெருமை

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும்
மாங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம்.

பாரதிதாசன் - ஓர் சிறுகுறிப்பு

கி. நடராசா
தலைவர், பாரதிதாசன் சனசமூக நிலையம்

எடுப்பான தோற்றம், மிடுக்கான நடை, பரந்த முகம், விரிந்த நெற்றி, அடர்ந்தெழுந்த மீசை, அகன்ற கண்கள், குறுகுறுத்த பார்வை, முகத்திற்கு பொலிவூட்டும் மூக்கு, மூக்கின் மேலே கண்ணாடி, மடித்துக் கட்டப்பட்ட வேட்டி, நீண்டு தொங்கும் முழுக்கை சட்டை, மார்பிலே குறுக்கே போர்த்தப்பட்ட பொடிநிறப் போர்வை என அவரின் தோற்றத்தை காலஞ் சென்ற முன்னாள் தமிழக கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிடுகின்றார்.

சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்திலே தோன்றி, இருபதாம் நூற்றாண்டில் ஈடும் எடுப்புமற்ற ஒரு பெரும் புரட்சிக் கவிஞராக திகழ்ந்தவர். தமிழால் அவர் புகழ் பெற்றார். அவரால் தமிழ் பொலிவு பெற்றது. புதுவையில் பெரு வணிகராக விளங்கிய திரு. கனகசபைக்கும் மகாலக்ஷ்மி அம்மையாருக்கும் 1891ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் மகனாகப் பிறந்தவர். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம் ஆகும். ஆரம்பக் கல்வியை புதுவையில் உள்ள பிரெஞ்சு மொழிப் பள்ளியில் கற்றுக் கொண்டார். இளமை யிலேயே தமிழார்வமும், தமிழ் மொழியி னிடத்து நீங்காப் பற்றும் கொண்ட சுப்புரத்தினம் 1908ம் ஆண்டில் புதுவையில் உள்ள கல்வே கல்லூரியில் புலவர் பரீட்சையில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றார். புதுவையை ஆண்டு வந்த பிரெஞ்சு அரசு அவருக்கு தமிழாசிரியர் வேலை கொடுத்து காரைக்காலுக்கு அருகில் உள்ள நிரவி என்ற ஊருக்கு அனுப்பியது. நாளடைவில் கல்வே கல்லூரியின் தமிழ் பேராசிரியராகவும் உயர்ந்தார்.

பாரதியார் புதுவையை புகலிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு சுப்புரத்தினத்திற்கு ஏற்பட்டது. பாரதியின் தேசியப் பாடல்களினாலும் சமூக சீர்திருத்த கருத்துக்களினாலும் சுப்புரத்தினம் நன்கு கவரப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. புதுவையில் நண்பர் ஒருவரின் திருமண வீட்டிற்கு சென்று பகல் விருந்து முடிந்தவுடன் நண்பர்கள் புடைசூழ பாரதியின் நாட்டியல் பாடல் ஒன்றை வீரம் கலந்த எடுப்பான இசையில் பாடிக்கொண்டிருந்தார். அத் திருமணவீட்டிற்கு பாரதியாரும் வந்திருந்தார். அவர் தாம் பாரதியார் என்பதை சுப்புரத்தினம் அறியார். ஆனால் பாரதியோ இவர் பாடும் பாடலை கேட்டு தாளம் போட்டுக் கொண்டு, சுவைத்து மகிழ்ந்து கொண்டேயிருந்தார். அன்றே இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமாயினர்.

ஒரு பொழுது பாரதியாருடன் உரை யாடிக் கொண்டிருந்த நண்பர்கள் சுப்புரத்தினத்தின் புலமை பற்றி ஐயப்பாடு கொண்டு உரையாடிக் கொண்டிருந்த வேளையில் கோபம் கொண்ட பாரதி சுப்புரத்தினத்தை அழைத்து பாடு ஒரு பாட்டு என்றார். உடனே சுப்புரத்தினம், 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று தொடங்கும்

பாட்டை இரண்டடி பதினாறு வரிகளாகப் பாடிக் காட்டினார். பாரதியார் முன்னிலையில் சுப்புரத்தினம் பாடிய அந்தக் கவிதையை பாரதியாரே தன் கையால் எழுதி சுதேச மித்திரன் செய்தி தாளுக்கு அனுப்பியவர். சுப்புரத்தினம் பாரதி மீது கொண்ட அளவு கடந்த அன்பினாலே தன் பெயரையே பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

பாரதி புகழ் பாடல் :

பாரதிதாசன் பாடல்களில் பாரதியாரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் தனிரகமானவை. அவர் மீது கொண்டிருந்த பேரன்பும் பெரு மதிப்பும் வெளிப்பட நன்றியுணர்வோடு பாடுவார்.

'தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கையில் இலகு பாரதிப் புவன் தோன்றினான்'

என தமிழையும் பாரதியையும் இணைத்து அழகுற மொழிவார். பாரதி யாரைப் பற்றி பாரதிதாசன் பாடியிருப்பது போல வேறு எவரும் பாடியிருக்கவில்லை. பாரதிதாசன் உள்ளத்தில் பாரதி எத்தகைய இடத்தை பெற்றிருந்தார் என்பதை,

"பைந்தமிழ் தேர்ப்பாகன்; அவனொரு
செந்தமிழ் தேனீ; சிந்துக்கு தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்; இந்நாட்டினை
கவிழ்க்கும் பகையை கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா
காடு கமழும் கற்பகச் சொற்கோ'

என பாடல் வரிகள் நீண்டுகொண்டே செல்கின்றன.

புரட்சிக்கவிஞர் எனப் பெயர் வரக் காரணம்

தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றிப் பகுத்தறிவு நெறிக் கருத்துக்கள் பரவத் தொடங்கிய காலத்தில் பாரதிதாசனின் உள்ளம் அக் கருத்துக்களினால் ஆழப் பதிந்தது. சமூகத்தில் நிலவி வந்த குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்கவழக்கங் களையும் அழுத்தம் திருத்தமாக கண்டித் தார். பகுத்தறிவு கருத்துக்களை தீவிரமாக பரப்பினார். அரசியலில் விடுதலை வேண்டும். சமூகவியலிலே சமத்துவம் வேண்டும். பொருளியலிலே சமதர்மம் வேண்டும். கைம்மை நோன்பு நீங்க வேண்டும். இவ்வாறு புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்தமையினால் தான் அவர் புரட்சிக் கவிஞரானார்.

தமிழ் பற்றிய பாடல் :

தமிழ்மொழிக்கு முதன்மையளித்துப் பாடும் தலைக்கேறிய தமிழ் மயக்க முடையவர். 'தனது நல்லுயிரும் உடம்பும் செந்தமிழும் மூன்றுமாக வடிவெடுத் திருப்பவனே நான்" என்று கூறுவார். தமிழின் பெருமை பற்றி கூறும் போது தமிழ்மொழிக்கு பல அடைமொழிகளைக் குறிப்பிடுகின்றார். பைந்தமிழ், குளிர்தமிழ், உயர் தமிழ், தெள்ளு தமிழ், அமுது ஒத்த தமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் பெருமைப்படுத்துவார். உலகெலாம் தமிழ்மொழியின் சிறப்பு பரவ வேண்டும் என்ற உயரிய சிந்தனையைக் காணலாம். தேமதுர தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்பது பாரதியின் சிந்தனை. ஆனால் பாரதிதாசன்,

தாயெழிற் றமிழை என்றன்
தமிழரின் கவிதை தன்னை
ஆயிரம் மொழியிற் காண
இப்புவி அவாவிற்றென்ற
தோயுறும் மதுவின் ஆறு
தொடர்ந்தென் செவியில் வந்து
பாயு நாள் எந்நாளோ
ஆரிதைப் பகர்வார் இங்கே"

என ஆர்வலுறுகின்றார். இவையெல்லா வற்றையும் விட,

'மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்' என்ற வரிகள் உணர்ச்சிக் கொந்தளிப்பின் வெளிப்பாடாகும். இனிய செந்தமிழ் மணம் வீட்டிலும், நாட்டிலும், ஏட்டிலும், பள்ளியின் பயிற்சித் துறையிலும், அறிவியல் துறையிலும் செந்தமிழ் ஏற்றம் பெற வேண்டு மென்றார். அவரது சிந்தை சொல், செயல் எல்லாமே தமிழ்தான். தனக்கும் தமிழுக்கும் உள்ள உறவு முறை பற்றி குறிப்பிடும் கவிஞரின்,

"வெண்ணிலாவும் வானும் போல
வீரனும் கூர் வாளும் போல
வண்ணப்பூவும் மணமும் போல
மகர யாழும் இசையும் போல
கண்ணும் ஒளியும் போல
கன்னல் தமிழும் நானும் அல்லவோ"

என்ற இந்தப்பாடல் இசையோடு வருமாயின் அது நம் செவிகளை குளிர்விக்கும்.

பெண்கள் பற்றிய பாடல்கள்

பெண்ணியம் தொடர்பான கருத்துக் களை வெளியிடுவதிலும் பாரதிதாசன் ஒரு தீவிரவாதியாகவே காணப்பட்டார். பெண் உலகத்தில் மண்டிக் கிடந்த அறியாமை யினையும் அடிமை நிலையினையும் சாடமுற்படும் கவிஞன் அதற்கும் அப்பால் சென்று கைம்மைத் துயரினையும் குழந்தை மணக் கொடுமையினையும் சாடுகின்றான். "மகளிர்க்கு நீதி வழங்காத மனித உள்ளத்தை சுக்கல் சுக்கலாக வெடிக்கச் செய்யும் வெடி மருந்துகள் தான் பெண்களைப் பற்றி இவர் பாடிய பாடல்கள் என மு. கோவிந்தசாமி (பாரதிதாசன் கவிதைத் திறன்) குறிப்பிடுகின்றார். கணவனையிழந்த பெண்கள் மீண்டும் திருமணம் செய்யக்கூடாது. வெள்ளாடை அணிந்து வீட்டில் முடங்கிக் கிடப்பதைக் கண்டிக்கின்றார்.

'கோரிக்கையற்று கிடக்குதண்ணே
வேரிற் பழுத்தபலா
கொடிய தென்றிடப்பட்ட
தண்ணே குளிர் வடிக்கின்ற வட்ட நிலா'

என்ற பாடல் வரிகள் சிந்திக்கத்தக்கது.

சாதிய எதிர்ப்பு :

திராவிட இயக்கங்கள் சாதியம் என்பது பிராமணியத்தின் தாக்கத்தினால் உண்டா னதே என்று கூறும். உதாரணமாக,

'மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை,
[தமிழர்க்கில்லை
பொய்க்கூற்றே சாதியெனல் ஆரியச் சொல்
புறநஞ்சு பொன் விலங்கு பகையின் ஈட்டி'

எனக் குறிப்பிடும் வரிகள் சாதியம் ஆரியத் தினால் தான் வந்தது என நிறுவுகின்றார்.

இத்தன்மையான சிறப்புக்களை கொண்டிருந்தமையினால் நம் இளைஞர் களும் நமது நூலகத்திற்கு அவர் நாமத்தைச் சூட்டிக் கொண்டனர்.

பொன்விழா பற்றிய அறிமுகம்

நிர்வாக குழுவினர்

அண்மைக் காலங்களில் கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், சமூக அரச நிறுவனங்கள் பலவற்றில் வெள்ளி விழா, பொன் விழா, மணிவிழா என்றெல்லாம் கொண்டாடுகின்றனர். அவை தொடர்பாக துறை சார்ந்த அறிஞர்களின் கட்டுரைகள் அடங்கிய மலரும் வெளியிடுகின்றனர். ஆனால் ஒரு மலரிலும் விழாக்கள் பற்றிய விவரணங்கள் எழுதப்படாமலே வெளிவந்துள்ளன. இக் குறைபாட்டை நீக்கும் வகையில் மலரும் இந்த மலரில் பொன்விழா பற்றிய சிறிய விளக்கத்தை தர முன்வந்துள்ளோம்.

பொன்விழா பற்றி அறிந்துகொள்வதன் முன் ஆண்டு நிறைவு விழாக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன என்பதை முதலில் சிந்திப்போம்.

முதலாம் ஆண்டு - காகித விழா
ஐந்தாம் ஆண்டு - மர விழா
பத்தாம் ஆண்டு - தகரவிழா
பதினைந்தாம் ஆண்டு - படிக விழா
இருபதாம் ஆண்டு - பீங்கான் விழா
இருபத்தைந்தாம் ஆண்டு - வெள்ளி விழா
முப்பதாம் ஆண்டு - முத்து விழா
நாற்பதாம் ஆண்டு - மாணிக்க விழா
ஐம்பதாம் ஆண்டு - பொன்விழா
அறுபதாம் ஆண்டு - வைர / மணிவிழா
எழுபத்தைந்தாம் ஆண்டு - பவள விழா
எண்பதாம் ஆண்டு - அமுத விழா
நூறாவது ஆண்டு - நூற்றாண்டு விழா

மேற் குறிப்பிட்ட விழாக்கள் பற்றிய விபரம் எமது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. எமது முன்னோர்கள் சாஸ்த்திர சம்பிரதாயங்களில் அக்கறை கொண்டிருந்தமையால் திதிக்குத் தான் முன்னுரிமை கொடுத்திருந்தனர். மேலைத் தேச நாகரிகத்தினதும் ஆங்கிலக் கல்வியினதும் விளைவாகவே இது பற்றி நாம் அறிந்துகொண்டோம்.

அதன் பிரகாரம் பொன்விழா என்பது ஆங்கிலத்தில் Golden Jubilee என அழைக்கப்படுகின்றது. ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் Jubilee என்பது ஒரு நிகழ்ச்சியினது விசேடமான வைபவம் எனப் பொருள் தருகின்றது. ஐம்பது ஆண்டு காலம் ஒரு தனிமனிதனோ ஒரு நிறுவனமோ தடைகள் பலவற்றை தாண்டி செயற்பட்டால் அதனை Golden Jubilee என அழைப்பர். ஆங்கிலத்தில் A golden Jubilee is a celebration held to mark a 50th anniversary என்று கூறலாம்.

ஐம்பது வருடங்கள் தொடர்ந்து ஆட்சி புரிந்த விக்டோரியா மகாராணியார்தான் இத்தகைய பொன்விழாவை முதலில் கொண்டாடியதாக (1887ம் வருடம்) நாம் அறிகின்றோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சராசரி ஒரு மனிதனது ஆயுட் காலம் ஐம்பது வருடங்களாக இருக்கும்போது மகாராணியின் ஆட்சிக் காலமே ஐம்பது வருடங்களாக இருந்தமையால் உயர்ந்த மதிப்புள்ள பொருளான பொன்னை விழாவிற்கு அடைமொழியாக கொடுத்தனர். அவரது நிகழ்வு உலகம்

முழுதும் கொண்டாடப்பட்டது. இதற்காக விடேச பொன் நாணயங்களும் வெளியிடப் பட்டன. ஐந்து பவுண் நாணயம் 36 mm விட்ட வடிவில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த மரபை பின்பற்றியே தமிழர் களாகிய நாமும் ஐம்பதாவது ஆண்டு நிறைவை பொன் விழாவாக கொண்டாடு கின்றோம். ஒரு தனி மனிதனோ நிறுவனமோ பல தடைகளைத் தாண்டி வளர்ச்சி பெறும் உயர்ந்த நிலையை வெளிப்படுத்த உயர்ந்த பொருளாகிய பொன்னை விழாவிற்கு அடையாக கொடுத்ததில் தவறில்லை. வரலாற்று சிறப்புமிக்க காலங்களை வரலாற்று ஆசிரியர்கள் பொற்காலம் என்று குறிப்பிடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பொன் புனிதத்தன்மை வாய்ந்தது. சிறந்த முதலீட்டுப் பொருள், உறவுகளை நெருங்கி வைக்க உதவும் பொருள், ஒருவரது அந்தஸ்த்தை வெளிப்படுத்துவது போன்ற பல்வேறு சிறப்புக்கள் இருப்பதனால் ஐம்பதாவது ஆண்டு நிறைவை பொன் விழாவாக கொண்டாடுவது பொருத்தமாக அமையலாம்.

எமது நிலையமும் 1964ம் ஆண்டு தொடங்கப்பெற்று இவ்வருடம் ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்வதால் நாமும் பொன்விழாவாக கொண்டாடுகின்றோம்.

குறிப்பு : சிந்தனைக்குரிய விடயம்

பாரதிதாசன் ஓர் புரட்சிக்கவிஞன். அவர் பெயர் தாங்கிய பாரதிதாசன் சனசமூக நிலையமும் தமிழியல் ஆய்வறிவாளர்களிடம் சில கருத்துக்களை பொன்விழா தொடர்பாக முன்வைக்க விரும்புகின்றது. Jubilee என்ற ஆங்கிலப் பதத்திற்கு விழா என்பது சரியான மொழிபெயர்ப்பா?

விழா என்பது எமது தமிழ் மரபின்படி தெய்வத்திற்கு மட்டுமே உரியது. அதனை ஒரு தனி மனிதனோ, நிறுவனமோ பொன்விழா என்ற பெயரில் கொண்டாட லாமோ?

சிறப்பொடு பூசனை செல்லாது; வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

வள்ளுவர் (வான் சிறப்பு)

நூலகவியல்

வரலாறும் நோக்கும்

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

நிர்வாக சபையினர் சார்பில்
ந. தேவராசா, க. புலேந்திரன், ஆ. குலநாதன்

ஒரு சமூகத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் எந்தளவிற்கு பேணப்பட்டு அவை அடுத்த தலைமுறைக்கு சிறப்பாக கையளிக்கப்படுகிறதோ அப்போது தான் அது ஓர் நிலையான சொத்தாக உயர் சிந்தனை கொண்ட ஒன்றாக மாட்சிமை பெறும். இத்தகைய நிலைக்கு கல்வி என்பது பெரும் பங்காற்றுகின்றது. கல்வி என்ற வித்தைக்கு அடித்தளமானது வாசிப்பு. ஒருவர் பாடசாலைக் கல்வி அறிவோடு பல் வேறுபட்ட விடயங்களையும் அறியும்போது தான் அறிவு பூரணப்படுத்தப்படுகின்றது. வாசிப்பதால் ஒருவன் பூரணமடைகின்றான். இதனை அனைவரும் அறிவர். இதுவே ஒரு நூலகத்தின் பிரதான அம்சமாகும்.

அன்றைய துடிப்புமிக்க இளம் தலை முறையினர் எமக்கு ஆக்கி அளித்த அறிவுப் பொக்கிஷமே "பாரதிதாசன் நூலகம்" என்றால் அது மிகையாகாது. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அவர்களது உள்ளத் தில் உதித்த நற்சிந்தனை இன்று மிகப் பெரும் சொத்தாக எமக்கு கிடைத்துள்ளது. அல்வாய் சமூகம் என்றால் அது பாரதிதாசன் சமூகம் என்பதை பறைசாற்றி நிற்கின்றது. அன்று இச் சிந்தனையோடு இதனை தோற்றுவித்த பெருமை திரு. சரவணமுத்து திரவியம் (ஓய்வு நிலை முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்களையும் அவர் சகபாடி களான அமரர் திரு. க. தபேந்திரன் (ஓய்வு நிலை நிதி உதவியாளர்), திரு. ஆ. ஜெகநாதன் (ஓய்வு நிலை அதிபர்), திரு. சி. பொன்னம்பலம் (ஓய்வு நிலை உத்தியோ கத்தர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்), திரு. சி. சத்தியமூர்த்தி (பொறியியலாளர், கனடா), திரு. ச. நவரத்தினசாமி (ஓய்வு நிலை நில அளவை உத்தியோகத்தர்), திரு. செ. செல்வராசா (தம்பி, பொறியியலாளர், அவுஸ்திரேலியா), திரு. அ. ஈஸ்வரமோகன் (தொழிலதிபர், இலண்டன்) போன்றோரைச் சாரும்.

"அறிஞர்தம் இதயவோடை ஆழநீர் தன்னை
[மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட
[ஊற்றி வளர்ப்போம்"

என்ற பாரதிதாசனின் கவிதை வரிகளை மனத்திற்கொண்டு இவர்களால் "கந்தம்மான் வாத்தியார்" என அழைக்கப்பட்ட கணித மேதை அமரர் ஈ. ஏ. கந்தையா அவர்களின் நான்கு தூண்களோடு அமைந்த தலைவாச லுடன் கூடிய ஆறுதல் மடத்தில் 1964ம் ஆண்டில் "பாரதிதாசன் படிப்பகம்" உதயமானது. அங்கு பத்திரிகை வைப்பதற்கு மேசையோ இருப்பதற்கு வாங்கில்களோ இருக்கவில்லை. பத்திரிகை கள் சஞ்சிகைகள் என்பன கயிறுகட்டி தொங்க விடப்பட்டன. அந்த இளைப்பாறும் மண்டப திண்ணையிலிருந்துதான் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசிக்கப்பட்டன. இதிலுள்ள வசதியீனங்களை கண்ணுற்ற அப்போதைய கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் அமரர் திரு. ஜே. எஸ். செல்லப்பா ஆசிரியர் தமது கிராம அபிவிருத்திச் சங்கம் இயங்கிய

கட்டடத்திற்கு இதனை இடம் மாற்றி இயங்க வழிசமைத்தார். இதனை திரு. ச. திரவியம் அவர்கள் எமது நிலைய வெள்ளிவிழா மலரிலே தனது ஆசிச்செய்தியில் "சின்னஞ் சிறுசுகளின் சிற்றில் குழந்தை போலத்தான் நீ பிறந்தாய். பிறந்த உனக்கு ஒரு துளி யேனும் காட்டும் தயவில்லாது உன்னவர்கள் தவித்தபோது உனக்கென ஓர் இடத்தை இனங்காட்டியளித்த மக்கள் தொண்டன் திரு. ஜே. எஸ். செல்லப்பா ஆசிரியர் அவர்கள் என்றென்றும் உன் நன்றிக்குரியவர். மறந்து விடாதே" என குறிப்பிடுகிறார். நெசவு சாலையாகவிருந்த திரு. அமரர் கந்தப்பர் சதாசிவம் அவர்களின் காணியிலிருந்த இக் கட்டடம் அது செயலற்றுப் போக கிராம முன்னேற்ற சங்க நடவடிக்கைக்காக கையேற்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. இதன் ஆரம்ப தோற்றம் பற்றி திரு. ச. திரவியம் அவர்கள் இம்மலரிலே நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகி... என்ற கட்டுரையில் விரிவாக குறிப்பிடுகிறார்.

இவ் வேளையில் இவர்களுடன் தொடர்ந்து திரு. ச. தவராசா, திரு. தி. விக்கினேஸ்வரதாசன், திரு.க.மோகனதாஸ், திரு. ந. மகேசன், திரு. க. அருளானந்தம், திரு. ச. தவரட்ணம், திரு. சி. சிவகுமாரன் (காந்தி) அமரர்களான திரு. ம. அம்பிகை பாலன், திரு. ச. குருபரன் (கடவுள்) ஆகிய துடிப்பு மிக்கோர் இணைந்து உழைத்தமை யால் படிப்பகம் தளர்வின்றி வளர்ந்தது. இக் கால கட்டத்தில் அரசாங்க சட்ட வரையறைக்குள் அமைய வேண்டிய காரணத்தால் 1969ம் ஆண்டு பாரதிதாசன் சனசமூக நிலையம் என பெயர் மாற்றம் பெற்று (J/VC/13/CC/335) எனும் இலக்கத் தில் உள்ளூராட்சி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

காலவோட்டத்தில் நிர்வாகத்தில் இருந்த பெரும்பான்மையோர் பட்டப் படிப்புக்கள், வேலை வாய்ப்புக்கள், திருமணங்கள் போன்ற காரணங்களால் நிர்வாகத்திலிருந்து விலக திரு. க. சச்சிதானந்தம் தலைமையிலான குழுவினர் நிலைய நிர்வாகத்தை பொறுப்பேற்றனர். இதில் திரு. ச. கிருஸ்ணசாமி (புவி அண்ணா), அமரர் திரு. ஜே. எஸ். நல்லதம்பி ஆசிரியர், திரு. க. சிவபாதசுந்தரம் (தம்பி), திரு. ந. நாவழகன், திரு. க. புலேந்திரன் (கலைமகள் சவுண்ட்), அமரர் திரு. த. பேரானந்தம், திரு. அ. குகேஸ்வரன் ஆகியோர் இணைந்து இயங்க, நிலையம் வீறுநடை போட்டது. இவர்களில் நிலைய செயலாளர் திரு. ஜே. எஸ் நல்லதம்பி ஆசிரியர் அவர்களை தவிர மிகுதி அனைவரும் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களது காலம் (1975 - 1985) நிலையத்தின் "பொற்காலம்" என வர்ணிக்கப்படுகின்றது. இக் காலத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் மேலதிக வருகையால் புதிய மேசை, வாங்கில்கள் வாங்கப்பட்டன. இதனால் வாசகர் கூட்டம் அதிகரித்தது. வெண்மணல் பரப்பப்பட்ட இம் மண்டபத்தில் சுவரில் சாய்ந்து, வசதியாக அமர்ந்து, பத்திரிகை வாசிப்பதில் சில வாசகர்கள் சுகம் கண்டனர். நிலையத்தில் வெளியாகவிருந்த யன்னல் பகுதி பனஞ் சிலாகைகள் மூலம் அடைத்து அறுக்கை ஆக்கப்பட்டு பனஞ் சிலாகை மூலம் வாசற் கதவும் போடப்பட்டு ஒழுங்காக நேர காலத்திற்கு திறந்து மூடும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. பாரதிதாசனின் இளைஞர்களின் உணர்ச்சியும் வளர்ச்சியும் எழுச்சியும் அப்போதிலிருந்த எமது பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. க. துரைரத்தினம் அவர்களை கவர்ந்ததன்

பயனாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட மூலம் எமது நிலைய அபிவிருத்திக்கு ரூபா இருபத்து ஏழாயிரம் ஒதுக்கப்பட்டது. இந் நிதியை மூலாதாரமாகக் கொண்டு நிலைய கட்டடத்தை புனரமைக்க அன்றைய நிர்வாகம் திடசங்கற்பம் பூண்டது. இதற்காக திட்டங்கள் போடப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது பெறப்பட்ட நிதி போதாமையினால் நிர்வாகத்தினராலும் ஏனைய இளைஞர்களினதும், பொது மக்களினதும் பங்களிப்பு, ஒத்துழைப்பு, உடல் உழைப்பு என்பவற்றின் மூலம் அனைவராலும் பாராட்டத்தக்க அழகான கட்டடமாக உருவாக்கப்பட்டது. கட்டட அமைப்பின்போது ஆரம்ப முதல் வேலைகளில் பங்கெடுத்ததுடன் வேலையாட்களை மேற்பார்வை செய்து நேர காலம் பாராது தனது உழைப்பை தந்த கிளாக்கர் என அழைக்கப்படும் திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்களது சிறப்பான பங்கு மறக்கமுடியாது. அத்தோடு அக் காலத்தில் தேவையேற்படுமிடத்து தேநீர் போன்ற உபசரிப்பு சேவைகளை வழங்கி உதவி புரிந்த நிலையத்தின் முன்பாக வாழ்ந்த கவிமாமணி பண்டிதர் ஞானப்பிரகாசம் குடும்பத்தினரையும் அதே போல் நிலைய கட்டடப் பொருட்கள் களஞ்சியமாகவும், தற்காலிக படிப்பகமாகவும் நிலையத்தின் பின்னால் வசிக்கும் திரு. கணபதிப்பிள்ளை மகேந்திரநாயகம் அவர்களது வீடு பயன்படுத்தப்பட்டதுடன் சிறிது காலம் முன்பள்ளியாகவும் பயன்படுத்த தந்து உதவி புரிந்ததை நினைவிற் கொள்கின்றோம். இந்நிலைய கட்டடம் அமைந்த நிலம் சொந்தமாக இல்லாதிருந்தபடியால் சில நிர்வாகச் சிக்கல்கள் தோன்றின. இதனை கருத்திற்கொண்டு நிலச் சொந்தக்காரர் அமரர் திரு. கந்தப்பர் சதாசிவம் அவர்களுடன் இது பற்றி ஆலோசிக்கப்பட்டது. மேலும் எம் ஊர் வைத்தியர் திரு. சி. வேலும்மயிலும் அவர்கள் காணி உரிமையாளருக்கு இது பற்றிய அறிவுரைகளை வழங்கியதன் மூலமும் அவரது மதிப்பின் மூலம் அமரர் திரு. க. சதாசிவம் அவர்கள் தமது பொருளாதார வளநிலையை கருத்திற் கொண்டு ஐயாயிரம் (5000.00) ரூபாவை நிலையத்திடமிருந்து பெற்றுக்கொண்டு நன்கொடையாக கிராம முன்னேற்ற சங்கத்தின் பெயருக்கு எழுதித் தந்தார். இதனால் சொந்த நிலத்தில் நிலையம் தன் திறப்பு விழாவைக் கண்டு புதுப்பொலிவு பெற்றது. இக்கட்டட திறப்புவிழாவை முன்னிட்டு கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளும் மெய்வன்மைப் போட்டிகளும் நடாத்தப்பட்டு திறப்புவிழா எழுச்சிகரமாக அமைந்தது. இதனுடன் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு கழகம் பற்றிய வரலாற்று கண்ணோட்டத்தில் திரு. க. புலேந்திரன் அவர்கள் கட்டுரையில் விரிவாக குறிப்பிடுகிறார்.

திறப்பு விழாவினைத் தொடர்ந்து பல சேவைகளும், அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் வழியில் நூலக இரவல் வழங்கும் சேவை விஸ்தரிக்கப்பட்டது. அமரர் திரு. த. பேரானந்தம் அவர்களின் உதவியுடன் வானொலி செய்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இலண்டனில் வாழ்ந்த அமரர் A.T.S. இரத்தினசிங்கம் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய கறுப்பு வெள்ளை தொலைக்காட்சி மூலம் தொலைக்காட்சி சேவை வழங்கப்பட்டது. இக் காலத்தில் ஊரில் தொலைக்காட்சி பாவனை மிகக் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டமையினால் நிலையம் இரவு 8.00 மணிவரை வாசகர் பாவனைக்கு விடப்பட்டது. இச் சேவைகளை வழங்க திரு. ந. தங்கராசா அவர்கள் நியமிக்கப்பட்டு ஒழுங்காக நடைபெற்றது. இவரைத்

தொடர்ந்து யா/ இந்துக் கல்லூரியில் தற்காலிக விடுதி மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வந்த திரு. ஆ. குலநாதனை நூலக சேவைக்கு அமர்த்தினர். இவர் ஐக்கிய நாணய சங்கத்தின் வங்கியாளராகக் கடமையாற்றினார். ஆரம்பத்தில் சிறு தொகை பணமே ஊதியமாக வழங்கப் பட்டது. இன்று அவ்வூதியம் கூட இன்றி தன் பணியை நூல் நிலையத்திற்காக ஆற்றி வருகின்றார். அவருக்கு பாரதிதாசன் சமூகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. இக் காலத்தில் பெண்களுக்கான வாசிப்பு நேரம் ஒதுக்கப்பட்டு பெண்களும் நிலையத்தை பயன்படுத்த வாய்ப்பு வழங்கப் பட்டது. இதுவே இக் காலத்தில் சம நேரத்தில் பெண்களும் நிலையத்தை பயன்படுத்த வித்திட்டது. அத்தோடு நிலைய பணிகளோடு சமூகப் பணிகளாக வெள்ள வாய்க்கால் திருத்தம், வீதி திருத்தம், போர்க்காலத்தில் இடம்பெயர்ந்தோருக்கான உணவு, உலர் உணவு மற்றும் நிதி போன்ற உதவிகளும் நிவாரணங்கள் பெறுவதற்கான சேவை களும் வழங்கப்பட்டன. இச் சேவைத் திட்டத்தில் நிலையத்தினரோடு ஊர்மக்களும் முன்வந்து இணைந்து செயலாற்றியமை பாரதிதாசனுக்கு பெருமையைத் தேடித் தந்தது. போர்க்காலத்தில் ஏற்பட்ட பொருளா தார தடையின்போது அரச சார்பற்ற நிறுவனங்களுடனும், அரச நிறுவனங் களுடனும் தொடர்பு கொண்டு மக்களுக் கான உலர்உணவுகளும், விவசாயிகளுக்கு தேவையான நீர் இறைக்கும் இயந்திரங் களும் பெற்று வழங்கப்பட்டன. நிலையத்திற் கான சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்ப வற்றை அன்பளிப்பாகவும், இதர தேவை களுக்கான நிதி உதவிகள் பொதுமக்களிடம் பெறப்பட்டதோடு ஒப்பந்த வேலைகள், திரைப்படக் காட்சி, நலன்விரும்பிகள் நன்கொடை மூலம் பெறப்பட்டன. வாசகரின் தொகை அதிகரித்தபோது பத்திரிகை வாசிப்பதற்கு தளபாட பற்றாக்குறையிருந்த போது அமரர் திரு. அ. யோ. மயில்வாகனம் ஞாபகார்த்தமாக அவரது மகன் அமரர் திரு. அ. யோ. ம. இராஜரத்தினம் அவர்கள் பத்திரிகை வாசிப்பதற்காக பாரிய மேசை ஒன்றை வழங்கி அன்றைய தளபாட குறையை நிவர்த்திசெய்து பாரிய உதவி புரிந்தார். நிலையம் முன்னின்று சேகரிக்கும் எந்தவொரு நிதி பங்களிப்பிற்கும் அன்றைய காலத்தில் முதன்மைப்படுத்தி முதலாவதாக போவது "தங்கப்பா" என அழைக்கப்படும் சிங்கப்பூர் பெஞ்சனியர் அமரர் திரு. த. தங்கராசா அவர்களிடமே! நாம் அவரிடம் செல்லும்போது அவர் எமது எதிர்பார்ப்பிற் கமைய பெருநிதி தந்து அந்நிதிச் சேகரிப்பை ஆரம்பித்து வைப்பார். அத்தோடு அவரது மக்களும் நிலைய வளர்ச்சியில் பங்காற்றி யதை நிலையம் நினைவு கூருகின்றது. நாட்டு சூழ்நிலை காரணமாக அன்றைய நிர்வாக இளைஞர்கள் வெளிநாடும் வெளியூரும் செல்லவேண்டிய கட்டாயங்கள் ஏற்பட்டமையினால் நிலையத்தை பிரதான பதவிகள் ஏதுமில்லாது இயக்கிவந்த புவியண்ணா அவர்கள், எவர் ஊரைவிட்டு சென்றாலும் தொடர்ந்து நூலகம் இயங்க வேண்டும் என்ற தூரநோக்கு சிந்தனையில் இந்நிலையத்தை பொது நூலகமாக ஆக்க வேண்டும் என்பதற்காக பாரிய முயற்சிகளில் ஈடுபட்டபோதும் அது அவ்வேளையில் கை கூடாமல் போய்விட்டது. என்றாலும் மனம் தளராது பாரதிதாசன் மற்றைய நிலையங் களுக்கு முன்னோடியாகவும் முதன்மை யாகவும் செயற்படவேண்டும் என்ற அவாவில் நிலையத்தின் வெள்ளிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதோடு மலர் ஒன்றையும் வெளியிட வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது. இதனை முன்னிட்டு மாணவர் களிடையே தமிழ்த் தின போட்டிகள்

நடாத்தப்பட்டதோடு மெய்வல்லுநர்கள் போட்டிகள், கரப்பந்தாட்ட போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு வெள்ளிவிழா நிலைய தலைவர் திரு. கி. நடராசா அவர்கள் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட அன்றைய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் தனது உரையில் "சனசமூக நிலையங்கள் கிராமிய பொருளாதாரத்தின் அலகு என்பதற்கு எடுத்துக்காட்டாக பாரதிதாசன் சனசமூக நிலையம் இயங்குகின்றது" என கூறியிருந் தமை குறிப்பிடத்தக்கது. பொது நூலகம் ஆக்கவேண்டும் என்ற சிந்தனையில் அரச அதிகாரிகள் சமூகஆர்வலர்கள் ஆகியோரை சந்தித்தவேளை அவர்களது சமூக ஆர்வத்தைக் கண்டு சமூகத்திற்கு சேவை ஆற்றக்கூடிய ஐக்கிய நாணய சங்கம் ஒன்றை ஆரம்பித்து உங்கள் சேவையை இன்னும் விஸ்தரிக்குமாறு சந்தித்த அதிகாரி ஒருவர் கூறியதற்கமைய பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம் 1986ல் திரு. நா. சந்திரசேகரம் அவர்கள் தலைவராகவும் அமரர் திரு. பெ. கனகசபாபதி அவர்கள் செயலாளராகவும், திரு. வ. பொன்னம்பலம் பொருளாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது. இச் சங்கம் போரூட் நிறுவனத்துடன் இணைந்து பல சேவைகளை மக்களுக்கு ஆற்றி வந்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. இப்படியாக 1975 - 1993 வரை நடைபெற்ற செயற்பாடுகளின் தீவிர முன்னேற்றத்திற்கு வித்திட்ட சமூக அர்ப்பணிப்பாளரும், பதவிகளை விரும்பாத செயல் வீரரும், சிறந்த தலைமைத்துவ மிக்கவரும், சிறந்த ஒருங்கிணைப்பாளரும், சிறந்த தொடர்பாளரும் என பல்வேறு திறமைகளை கொண்ட இவர் இன்று வெளிநாடு சென்றாலும், எம் ஊர்மக்களில் பெரியோர் புவி எனவும் இளையோர் புவியண்ணா என அழைக்கப்படும் திரு. ச. கிருஸ்ணசாமி ஆவார். அவர்களை பாரதிதாசன் சமூகம் இத்தருணத்தில் நினைவுகூர மறப்பது வரலாற்று தவறு என்பதனை இதில் சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம். இவரது செயற்பாட்டிற்கு மறுப்பேதுமில்லாது வலதுகரமாக நின்ற திரு. வி. விக்கினேஸ்வரராஜா, திரு. மா. தயாளன் என்பவரோடு திரு. திருமதி மாணிக்கவாசகர் குடும்பத்தினரையும் தனது வாகனத்தை நிலையத்தின் தேவை ஏற்படும் போதெல்லாம் போக்குவரத்திற்காக தந்து உதவியதுடன் நிதி மற்றும் இதர உதவி களையும் முன்னின்று செய்த தம்பி என அழைக்கப்படும் திரு. க. சிவபாதசுந்தரம் ஆகியோரையும் பாரதிதாசன் பொன்விழா நாளில் பாராட்டி வாழ்த்துகின்றது.

போரூட் நிறுவனம் ஐக்கிய நாணய சங்கத்துடன் தனது திட்டங்களை செயற் படுத்தி வந்த காலத்தில் பாரதிதாசன் தனது செயற்பாடுகளை சிறப்பாகவும் நேர்த்தி யாகவும் செய்ததன் மூலம் ஓர் நன்மதிப்பை பெற்றிருந்தது. அந் நிறுவனத்தின் செயற் பாடுகளில் ஒன்றான கல்வி அபிவிருத்தி திட்டத்தில் நூலகம் ஒன்றை வடமராட்சி பிரதேச மக்கள் பயன்பெற நடாத்தி வந்தது. அவர்களது கொள்கைப் பிரகாரம் அதனை பயனாளிகளே பராமரிப்பதற்கிணங்க அந்த பயனாளிகள் அமைப்பை தேர்வு செய்வதில் இறங்கியபோது எமது பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கத்திற்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அந்த வேளையிலும் பாரதி தாசன் என்ற பெயரிலும் நிலைய நடை முறையிலும் மாற்றம் கொள்ளமுடியாத நிபந்தனைகளையும் ஏற்று இவர்கள் தொடர்ந்து இதனை செயற்படுத்தும் ஆற்றலும் திறனும் உள்ளவர்கள் என நம்பி

அவர்கள் நடாத்திய நூலகத்தில் இருந்த 6000 வரையிலான நூல்களையும் தளபாடங்களையும் தந்ததால் பாரதிதாசன் நூலகம் என்ற பெயரோடு 1998 இல் விருட்சம் கண்டது. இந் நூலகத்தை போரூட் நிறுவனத்தினரிடம் பெற்று அதனை எமது நூலகத்திற்கு கொண்டு வரும் அன்றைய ஊர் இளைஞர்களின் பங்களிப்பும், உற்சாகமும் ஊரையும் நிர்வாகத்தையும் திகைப்படைய வைத்ததுடன் அச் செயற்பாட்டால் அனைவரும் பெருமிதம் கொள்ளக் கூடியதாகவிருந்தது. இதனை எமது ஊருக்கு கிடைக்க வாய்ப்பளித்த அன்றைய போரூட் திட்ட இணைப்பாளர் திரு. நா. கோகுலதாஸ் அவர்களுக்கும் இணைந்த போரூட் உத்தியோகத்தர்களுக்கும் பாரதிதாசன் சமூகம் சார்பில் நன்றிகள். இதனை பொறுப்பேற்று நடாத்துகின்ற வேளையிலும் எமக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வந்ததோடு 2002ல் கணினித் தொகுதி ஒன்றையும் அன்பளிப்பு செய்து எமது வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டினர். அத்தோடு நின்றுவிடாது பாரதிதாசன் நூலக செயற்பாட்டை விஸ்தரிக்கும் நோக்கில் நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு ரூபா 850000.00 தந்து உதவியதன் மூலம் போரூட் நிறுவனம் நிரந்தர கட்டடத்திற்கு வித்திட்டது எனலாம். இவ் வேளை எமக்கு அதனை அமைப்பதற்கு காணி ஒன்று தேவைப்பட்டபோது பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்க தலைவர் திரு. நா. சந்திரசேகரம் அவர்களின் முயற்சியால் அமரர் திரு. க. தபேந்திரன் அவர்களிடமிருந்து 01 பரப்பு காணியை ரூபா 50000.00 க்கு கொள்வனவு செய்யப்பட்டது. அப்போதைய அக் காணியின் பெறுமதி ரூபா 200000.00 வரையாகும். அவர் மனமுவந்து காணியை தந்ததன் பிரகாரம் இந்நூலகத்தை அமைப்பதற்காக படம் போட்டபோது காணியின் அளவைக் கருத்திற் கொண்டு இரு மாடியாகவே இதனை அமைக்கத் திட்டம் வரைந்தார்கள். ஆனால் போரூட் நிதி இதற்கு போதாது என்று தெரிந்த போதும் ஊரவர்கள் வெளியூர் அன்பர்களின் உதவியோடு இதனை செய்யலாம் என கூறப்பட்டது. வராத நிதியை நம்பி கட்டடம் தொடங்கினால் இரண்டும் கெட்ட நிலைமை என்ற கருத்து பிரஸ்தாபிக்கப்பட்டபோது நிலைய நிர்வாகிகளான தம்பியண்ணா என அழைக்கப்படும் திரு. க. சிவபாதசுந்தரம் அவர்களும் அப்பண்ணா என அழைக்கப்படும் திரு. க. புவனேந்திரன் அவர்களும் மற்றைய நிதி கிடைக்காத போது தாங்கள் இந்நிதியை தந்து கட்டடத்தை பூரணமாக்குவோம் என்று நம்பிக்கையூட்டியதன் மூலம் தான், போரூட் நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டு நிர்வாகம் நூலக கட்டட வேலையை ஆரம்பித்தது. அத்துடன் இலண்டன், கனடா வாழ் அன்பர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி இது பற்றி பிரஸ்தாபித்தபோது கனடாவில் புவியண்ணாவோடு காந்தி என அழைக்கப்படும் திரு. சி. சிவகுமாரன் அவர்களும் இலண்டனின் திரு. அ. ஈஸ்வரமோகன், திரு. செ. செல்வரஞ்சன், திரு. அ. குகேஸ்வரன், திரு. வ. ஜெயானந்தம், திரு. அ. உதயகுமார், திரு. சி. சிவனேசன் குடும்பம் ஆகியோரும் முன்னின்று அல்வையூர் அன்பர்களிடமும் கனடாவில் கட்டட நிதிக்காக படக்காட்சி காண்பித்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். அத்தோடு ஊரவர்கள் பங்களிப்புடனும் கட்டடத்தின் கீழ்த்தளம் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டதுடன் மேல் தளம் கூரை போடப்பட்டு ஓரளவு வேலை நிறைவு கண்டு பாரதிதாசன் நூலகம் புதுப்பொலிவுடன் 2003.12.12 இல் போரூட் திட்ட அலுவலர் திரு. நா. கோகுலதாஸ் அவர்களால் திறந்து

வைக்கப்பட்டதுடன் புதிய கட்டடத் திறப்பு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டதோடு கலை நிகழ்வுகளுடன் திறப்பு விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

நூலக வளர்ச்சியில் நூலகத்தில் பத்திரிகைப் பகுதி, சிறுவர் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் வழங்கும் பிரிவு, தொலைக்காட்சி பகுதி என்னும் பிரிவுகளை உள்ளடக்கி சேவை புரிகின்றது. வடமராட்சிப் பகுதி வாழ் அனைவரும் அங்கத்துவமாக இணையும் வாய்ப்புடன் திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நூலக சேவைக்காகவும், பத்திரிகைப் பகுதி தினசரி காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பத்திரிகை வாசகர்களுக்காகவும் நூலகம் தனது சேவையை ஆற்றி வருகின்றது. இந் நூலக சேவையில் குறைந்த ஊக்குவிப்புடன் சேவைபுரிந்த செல்வி வே. கோசலை, செல்வி ச. பவானி, செல்வி த. மீனா, செல்வி ம. திருமகள், செல்வி ச. பாமினி, செல்வி ந. விஜிதா, செல்வி த. சுபாசினி, செல்வி இ. சுஜித்தா, செல்வி அ. சுபாசினி அவர்களுக்கும் இன்று சேவைபுரிந்து கொண்டிருக்கும் செல்வி க. சிந்துஜா, செல்வி செ. பிருந்தா அவர்களுக்கு நிலையத்தின் பாராட்டுக்கள். இதேவேளை செல்வி ச. பவானி நூலகராக பணியாற்றியபோது தம் பணியை மிகவும் நேர்த்தியாக வாசகர்களை நூலகத்தின்பால் ஈர்த்து பாரதிதாசன் நூலகத்தின் பணியை மிகவும் கச்சிதமாக ஆற்றியமை இன்றும் எம் மனக் கண்முன் தெரிகிறது. தொடர்ந்து செல்வி ந. விஜிதாவும் செல்வி த. சுபாசினியும் நூலகராகவும் உதவி நூலகராகவும் இருந்த காலத்தில் இப்பணியை மேலும் மெருகூட்டியதுடன் கணனி பதிப்பு மிகவும் சிறப்பாக செல்வி ந. விஜிதா அவர்களால் மேற்கொள்ளப்பட்டு கணனி ஊடாக நிலையத்திற்கு கணிசமான வருமானம் கூட கிடைத்தது. அவர்களது பெரும் முயற்சி மாத்திரமன்றி தம்மையும் கணினித் துறையில் வளர்த்துக் கொண்டனர். ந. விஜிதா விலகிக்கொள்ள தொடர்ந்து செல்வி த. சுபாசினியும் சிறப்பாக நிர்வகித்தார். நூலகம் இத்துடன் கதிரை வாடகை, தொலைபேசிச் சேவை, கணனிப் பதிப்பு, தமிழ் தட்டச்சு பதிப்பு ஆகிய சேவைகளையும் ஆற்றியுள்ளது. புதிய கட்டடத்தில் நூலகம் புகுவிழா செய்தபோது வர்ண தொலைக்காட்சி ஒன்றை திரு. அ. குகேஸ்வரன் (இலண்டன்) அவர்கள் அன்பளிப்பு செய்துள்ளார். இதற்கான சனல் சேவையினை இலவசமாக அன்ரியப்பா என அழைக்கப்படும் அமரர் திரு. தபேந்திரநாதன் வழங்கி வந்தார். இவரது இச்சேவை கைமாறியபோது அதன் உரிமம் பெற்ற திரு. ச. தயானந்தன் அவர்கள் இன்று வரை அச் சேவையை இலவசமாக வழங்கி வருகின்றார்.

நூலகம் போரூட் அனுசரணையுடன் விஸ்தரிக்கப்பட்டபோது ஒழுங்கான சிறப்பான நூலகமாக அமைய அமரர் திரு. அருளானந்தம் ஆசிரியர் அவர்கள் நூல்களை பகுப்பாய்வு செய்து ஒழுங்கமைத்து நூலக முறைமையில் செயற்பட உதவி புரிந்தார். அவர்களை இந்நாட்களில் நினைவு கூருகின்றோம். அவரோடு இணைந்து இன்றுவரை பாரதிதாசன் அனைத்து நிகழ்வுகளில் பங்கெடுத்து உதவி புரிந்துவரும் திரு. பு. கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களையும், அவர்களோடு இணைந்து பங்கெடுத்து நூலக ஒழுங்கமைப்பிற்கு உதவி புரிந்த ஊர் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளின் சேவை மகத்தானது. நூலக சேவையோடு கணனி சேவையையும் வழங்குவதற்காக

(குறிப்பாக சிறுவர்கள் கணனி அறிவை கற்றுக் கொள்வதற்காக) திரு. செ. செல்வநேசன் (கனடா) அவர்கள் கணனி, பிறிண்டர் ஆகியவற்றை அன்பளிப்பு செய்து கணனிச் சேவை ஒன்றை வழங்கி பயன் பெற உதவி புரிந்தார். இதனை மேலும் விஸ்தரித்து அச் சேவையை வழங்க திரு. செ. ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா) அவர்களும் கணினி ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார். இதேவேளை அமரர் திருமதி மீனாட்சியம்மா சந்திரசேகரம் அவர்களது நினைவாக அவரது குடும்பத்தினர் சார்பாக கணவர் திரு. நா. சந்திரசேகரம் அவர்கள் 50000 ரூபா பெறுமதியான நூல்களையும் அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

நூல்களை பராமரிப்பதற்கு அலுமாரிகளை தந்துதவிய திரு. சி. சிவகுமாரன் (காந்தி), திருமதி தங்கமணி முத்துக் கிருஸ்ணன், தளபாடங்களை தந்துதவிய திரு. செ. ஜெயானந்தம் அவர்களுக்கும் வறிய மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர திரு. அ. பிரபாகர் அவர்கள் ரூபா 50000.00 நிதி உதவியும், திரு. ஆ. சீவரத்தினம் அவர்கள் ரூப 115000.00 நிதி உதவியுடன் புதிய கட்டடம் ஆரம்பித்த போது வெளிநாட்டில் வசித்து இன்று அமரரான திரு. அ. யோ. ம. இராஜரத்தினம் அவர்கள் 500 அமெரிக்க டொலர்களை தந்து நிதி சேகரிப்பை ஆரம்பித்து வைத்தார். அவர்களை நிலையம் பாராட்டி வாழ்த்துவதோடு பல சமூகப் பற்றுக் கொண்டு நிதி மற்றும் பல இதர சேவைகளை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் பாரதிதாசன் சனசமூக நிலைய பயனாளிகளின் வாழ்த்துக்கள். இன்றும் நூலகத்தில் பத்திரிகைகளை ஊர் இளைஞர்கள் எடுத்துவந்து போடும் பணியை ஆற்றுகின்றனர். அந்தவகையில் எதுவித ஊதியமும் இன்றி அப்பணியை ஆற்றும் திரு. இ. ஸ்ரீ குறிப்பிடக்கூடியவர். அத்துடன் கலைமகள் சவுண்ட் சேவிஸ் தனது ஒலி அமைப்பினையும் வழங்கி வருவதுடன் இன்றும் தம்பியண்ணா, அப்பண்ணா, குணம் அண்ணா (சற்குணராசா) அவர்கள் தமது வாகன சேவைகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் ஓர் கல்விச் செயற்பாடாக போரூட் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட பாரதிதாசன் முன்பள்ளி பாலகர்களுக்கான கல்வியை சிறப்பாக நடாத்தி வருகின்றது. அதனை இன்று தலைமை ஏற்று வருகின்ற திரு. ந. தேவராசா அதிபர் அவர்கள் முன்பள்ளியின் வரலாறு பற்றிய கட்டுரையில் விபரமாக எடுத்துக் கூடியுள்ளார். நிலையை தொடர் வளர்ச்சியில் தலைவர்களாக திரு. க. சச்சிதானந்தம் (கனடா), திரு. கி. நடராசா அவர்களும், செயலாளராக அமரர் திரு. ஜே. எஸ். நல்லதம்பி, திரு. க. இராஜேஸ்வரன், திரு. சி. அருணாசலம் (கனடா), திரு. ம. கனகரத்தினம் என்பவர்களோடு திரு. ஆ. குலநாதன், திரு. க. சிவபாதசுந்தரம், திரு. க. புவனேந்திரன், திரு. ச. நவரத்தினசாமி, திரு. சி. சிறிகாந்தன், திரு. க. மாணிக்க வாசகர், திரு. க. புலேந்திரன், திரு. ந. தேவராசா செயலாற்றி இன்றும் அதனை இயக்குகின்றனர். இவர்களுடன் தன்னார்வம் கொண்டு நிலைய வளர்ச்சியில் திரு. சி. சுகந்தன், திரு. க. கபிலன், திரு. வி. தனுசன் (இலண்டன்), திரு. சி. செந்தூரன் போன்றவர்களோடு நிலைய பற்றோடு செயற்பட்ட இளைஞர்களும் பங்கு கொண்டார்கள். இத்தருணத்தில் திரு. சிவசுப்பிரமணியம், திருமதி ம. சிவசுப்பிரமணியம் (பேபி) அவர்கள்

பாரதிதாசனது அனைத்து நிகழ்வுகளிலும் பங்குகொண்டு ஆற்றிய பணி மகத்தானது. ஆனால் திருமதி ம. சிவசுப்பிரமணியம் (பேபி) அமரத்துவமடைந்தமை பாரதி தாசனுக்கு பேரிழப்பாகும்.

சிறியதொரு படிப்பகமாகத் தொடங்கி 2003 இல் தனியான இரு மாடிக் கட்டடத்தையும் அதிகளவான புத்தகங்கள் மற்றும் கணனிப் பதிப்புகள், தொலைபேசி சேவை என உன்னதமான பணிகளை ஆற்றி உயர்வு பெற்ற நூலகம் 2004 ஆம் ஆண்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடாத்திய நூலகங்களுக்கிடையிலான தர நிர்ணய போட்டியில் எமது நிலையம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பாரதிதாசன் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் 1993 இல் ஆரம்பமான பாரதிதாசன் முன்பள்ளி, பாரதிதாசன் விளையாட்டு கழகம் என்பன தொடர்ச்சியாக ஒன்றிணைந்த ஓர் கூட்டு அமைப்பாக தொழிற்பட்டுக் கொண்டிருப்பதுடன் பிள்ளை களுக்கான புலமை பரிசில் நிதியத்தினையும் நடாத்தி வருகின்றது.

இத்தகைய உயர்வான சேவைகள் பலவற்றை வழங்கி பொன்விழாவினை கொண்டாடும் பாரதிதாசன் நூலகத்தின் இன்றைய நிலை என்ன, ஊழியர்களுக் கான ஊதியம் வழங்க வழியின்றி தள்ளாடு கின்றது. அனைவருக்கும் தொலைபேசிகள் கிடைத்தமையால் தொலைபேசி சேவையில் வருமானம் கிடைப்பதில்லை. கணனி தெரிந்த நூலகர்கள் இன்மையால் கணினி கள் யாவும் செயலிழந்துவிட்டன. ஆக இருக்கின்ற நூல்களை இரவல் வழங்கு வதும் வாசிப்புக்காக குறிப்பிட்ட நேரம் திறக்கப்படுவதும் இரவில் 8 மணிவரை தொலைக்காட்சி ஒலிபரப்பு திரு. ஆனந்தியின் உதவியுடன் பல T.V. சனல்கள் பார்க்க முடிவதும் மாத்திரமே நடைபெறுகின்றன. எனவே எதிர்காலத்தில் பல குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இன்றைய இளைய தலைமுறை இதில் ஈடுபாடு கொள்ள வேண்டும். சேவை மனப்பாங்கு கொண்ட இளையோர் இதில் ஈடுபட்டு தங்கள் திறமைகளை வளர்க்க முன்வர வேண்டும். ஊழியர்களுக்கான வேதனத் திற்கு தனித்து கனடா, லண்டன் வாழ் உறவுகளை நம்பியிராது மாற்று வழிகள் காணப்படவேண்டும். நூலக கட்டடத்தின் மேற்தள வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும். புதிய புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். கணினிகள் இணையம் போன்ற சேவைகள் வழங்கப்பட வேண்டும். அறிவு தேடலுக்காக போட்டிகள் நடாத்தப்பட வேண்டும். விளையாட்டு கழகம் வினைத்திறன் மிக்கதாக மாற வேண்டும். முன்பள்ளி நவீன கற்றல் கற்பித்தல் மாற்றங்களுக்கு ஏற்ப ஈடுகொடுக்க வேண்டும். யாவும் சொல்லிக் கொள்ளலாம். அவற்றுக்கு அதிகளவு முயற்சிகளும் செயல் படிவங்களும் வழங்கப்படவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. உலகில் என்றுமே நிலையானது "மாற்றமே". மாற்றத்திற்கேற்ப நாமும் மாறி அன்று எம் மக்களால் தேடிய அரும்பெரும் சொத்து பேணப்படவேண்டும். அதன் புனித பணியை சுருக்காது இன்னும் பெருக்கிக் கொண்டு செல்ல வேண்டும். "இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்" என்பதனை கருத்திற் கொண்டு இளையோர் தொழிற்பட்டு பாரதிதாசன் அமைப்புக்களை நலிவடைய விடாது வளர்ப்பது அனைவரது கைகளிலும் உள்ளது என்பதனை பொன் விழா நாளில் மனதில் எடுத்து செயற் பாட்டிற்கு அதிக இடம்கொடுத்து ஒன்றுபட்டு உழைப்போம்.

நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகி ...

சரவணமுத்து திரவியம்
தாபகர், பாரதிதாசன் படிப்பகம்.

இக் கட்டுரையை எழுத முற்பட்டதன் நோக்கம் இன்று சனசமூக நிலையத்துடன் இணைந்து இயங்கும் பாரதிதாசன் நூலகத்தின் மேன்மைகள் பற்றி நோக்கிப் பார்ப்பதன்று. அதன் மேன்மைகள் பற்றி இன்றுள்ள இளைய தலைமுறை நன்கறியுமாதலால் அவை பற்றி விபரிக்கும் அவசியம் இன்றெமக்கு இல்லை. ஆனால் இவ் அமைப்பின் தோற்றுவாய், தோன்றிய காலத்தில் நிலவிய ஊரகப் பகைப்புலத்தின் நிலைமை என்பன பற்றி இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையிலான விபரங்களை விபரிப்பது இன்றைய தேவையாக உள்ளது. இவை பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரை எழுதப்படுவதன் நோக்கமேயன்றி எவர்க்கும் பிரசித்தி தேடுவது அல்ல.

இங்கு எடுத்தியம்பப்படவிருப்பவை படிப்பகத் தோற்றம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளாதலால் எவரது பெயர்களோ இடங்களின் பெயர்களோ சுட்டி உரைக்கப் படுவதை எவர்க்கோ எதற்கோ பிரசித்தி தேடும் முயற்சி எனக் கொள்ளலாகாது. எனவே சுட்டி எவரும், எதுவும் பெயர் கொளப்படுவது இங்கு தவிர்க்கவோ தள்ளவோ முடியாதவை. அத்துடன் படிப்பகத்தின் அமைவிடம் சூழலை நன்கு அறிந்தவர்களுக்கு இக் கட்டுரையை அநுபவித்துச் சுவைப்பது எளிதாயமையும் என்பது என் நம்பிக்கை.

படிப்பகம் என்பதும் வாசிப்பு என்பதும் பிரித்து நோக்க முடியாதவை; இரண்டறக் கலந்தவை. மனித அறிவைப் பூரணமாக்குவது வாசிக்கும் பழக்கம் என்பது பட்டறிவு வழி யாம் காணும் உண்மை. பாடசாலைப் படிப்பிற்கும் பொது வாசிப்பிற்கும் சற்று வேறுபாடுண்டு. பாடசாலைக் கல்வி கட்டுக்குள் அடங்கி விடும். ஆனால் வாசிப்பால் வளரும் அறிவு எல்லைகள் அற்றது; பரந்துபட்டது.

அன்று இச்சூழலில் வாழ்ந்த மாணவச் சிறார்களுக்கு வாசிப்பிலே தாகம் ஏற்பட்டது எவ்வாறு என்பதை அறிய முற்படின், அன்றிருந்த கணித மேதை அமரர் ஈ. ஏ. கந்தையா மாஸ்டரின் வீட்டுச் சூழலுட் புகவேண்டும். இன்று பாழடைந்த நிலையில் பரிதாபத் தோற்றத்துடனுள்ள அந்த எச்சம் அன்று மாஞ்சோலையின் மத்தியில் ஒரு மாளிகையாகப் பொலிவு பெற்றிருந்தது. அந்த நாட்களை நினைவு கூரும் வேளை அங்குதான் படிப்பகம் ஒன்றினைத் தொடங்க வேண்டிய ஆசையும் ஆர்வமும் முகிழ்த்து முளை விட்டது என்பதாக எனக்கு ஞாபகம். ஆயின் அதற்கான தளம் எவ்வாறு உருவாயிற்று என்பதையும் நினைவிலே மீட்க முற்படுகின்றேன் முடியவில்லை. எனினும் முயற்சிக் கின்றேன். எதனையும் தவறவிடின் அது எனது முதுமையின் தள்ளாமை அல்லது இயலாமை எனக் கொள்க.

நினைத்துப் பார்க்கின்றேன்; இதம் காண்கிறேன் இதயத்தில். அந்த நாட்கள் அற்புதம் மிக்க தினங்கள். மாசற்ற மாணவப் பருவம், எதற்கும் பெற்றோரின் அரவணைப்பு, ஆதரிப்பு, அனுசரிப்பு, சுமையேதும் சுமக்கும் தேவையில்லை; அறிவைத்தேடல் ஒன்று தவிர.

சமகால மாணவர் குழாம் சற்று வேறுபட்டதும், வினைத்திறன் மிக்கதும்; அறிவுத் தீனி வழங்கும் அருமைமிகு ஆசான்கள். அப்போது பாடசாலையில் எமக்குத் தேடற் தாகத்தை எடுக்க வைத்தோருள் பண்டிதர்கள் குமாரசாமியும் க.வீ.யும் மறக்கமுடியாதவர்கள். பாடசாலையில் மட்டுமன்றி எமது ஊரிலும் வசித்ததால் அல்லும் பகலும் அனவரதமும் எமக்கு அறிவித் தீனியை வழங்கும் வாய்ப்புடையவரான பேறும் பெருமையும் மிக்கவர் எமது நல்லாசான் 'சுகணா' அவர்கள். அவர் எழுதி வெளியிட்ட சீதை சிறையிருப்பு, கம்பராமாயணத்தின் காட்சிப் படலம் அவர் ஆர்வமுடன் தொடர்ந்து வெளியிட முனைந்த கண்கள் என்ற மாத சஞ்சிகையும் அவரது இயற்பெயரை சு. கணபதிப்பிள்ளை என்பதற்கு மேலாக 'சுகணா' என அறிவுலகில் அவரை இனங்காண வைத்தன. பாடசாலையில் மாணவச் செல்வங்களின் அறிவுக் கண்களைத் திறக்க அரும்பாடுபட்ட ஆசிரியர் தமது ஊரின் மாணவச் செல்வங்களை மறந்தாரில்லை. ஆசிரியப் பணிக்கு ஊதியம் பாடசாலையால். ஆயின் ஊதியமேதும் கருதாமலே தனது ஊரின் மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறக்க முற்பட்ட தன்நலன் கருதாச் சேவையை அவர் செய்ய முற்பட்டமைக்கு அல்வாயூர் தலைதாழ்த்தி வணங்கத் தவறுமேயாயின் அது ஒரு வரலாற்றுத் தவறாகிவிடும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை எமக்கு. இதனைப் படிக்கும் வேளை, இங்கு எழுத முற்பட்ட கருப் பொருள் சுகணாவா அல்லது பாரதிதாசன் படிப்பகமா என்ற மயக்கம் எவர்க்கும் ஏற்படின் அதுவே இக் கட்டுரையின் கனதி. ஏனெனில் படிப்பகத்தின் தோற்றத்தின் தோற்றுவாய் அவர்தான். அறிவுத்தேடல் என்ற விதையை அன்று உருவாகிவந்த மாணவரிடையே விதைத்தவர் அவர் தான். அதன் விளைவுதான் பாரதிதாசன் படிப்பகம் என உங்கள் முன் இரட்டை மாடிக் கட்டடமாகக் காட்சி தரும் இந்தப் படிப்பகம்.

தொடர்ந்து நான் எழுதுவது கதைபோல இருக்கலாம். எனினும் பொறுமையுடன் வாசிப்பின் இந்தப் படிப்பகத்தின் பிறப்பின் பகைப்புலத்திற்கு ரியனவாயிருந்த வலிகளையும் வேதனை களையும் நீங்கள் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

அன்றிருந்த பகைப்புலத்தில் அல்வாயூருக்கென வாய்த்த ஆறுமுகம் ஐயாவின் புல்லாங்குழல் வாசிப்பின் காலைப் பூபாளத்தின் இதமான ஓசையை அயலவர் அறிவார்கள். அவர் அதிகாலை யிற் பயில வைத்த யோகாசனப் பயிற்சிகளும் கற்பித்தலிற் கண்டிப்பும் இன்றும் நினைவிலுண்டு. அவரிடம் பயிற்சி பெற்ற அவரது மகன் உட்பட நான் உள்ளடங்கலாக. சீடர்கள் எண்ணிக்கை ஐந்துக்குள் அடங்கிவிடும். ஆனால் அருகிலிருந்த கணித மேதையின் பொலிந்து மிளிரும் இல்லம் குருகுலம் போலத் திகழ்ந்தது. கட்டைவேலிக்

கோயிற்பற்றுக்குள் அடங்கும் தொலை தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து நடந்தும் துவிச்சக்கரவண்டிகளிலும் கணிதம் கற்க வரும் மாணவர் தொகை மிகுதி. பல்வேறு தர மட்டங்களிற் பயிலும் மாணவர்கள் இதிலடங்கும். அவர்களுள் குறிப்பாக நடராஜா, செல்வராஜா ஆகியோர் எமது குழாத்தைவிட வயதிலே மூத்தவர்கள். உயர் வகுப்பிலே பயில்பவர்கள். கணிதம் பயில்வதுடன் ஆசானுக்காக கல்கியும், 'டெயிலிமிரரும்' வாங்கி வருவது அவர்களுக்குரிய பணி. வாசிப்பிலே ஆர்வமுடையவர்களாதலால் தத்தமது வீட்டுக்கு வாங்கப்படும் கல்கி, குமுதம், விகடன் போன்ற சஞ்சிகைகளில் வந்த தொடர் நாவல்களைப் பிரித்தெடுத்துக் கட்டி அவற்றை குருகுலத்திற்கு எடுத்து வருவது வழக்கம். அவற்றை படித்து முடிப்பதில் ஆசானின் புதல்வி தபேந்திரா அக்கா, அண்ணா தபேந்திரன், பத்தண்ணா இவர்களுடன் நானும் போட்டியிடுவோம். இது தவிர நானும் அண்ணாவும் எமக்கென வாங்கும் அம்புலி மாமாவும் கண்ணனும் ஆசான் வாங்கும் கல்கியும் எமது வாசிப்பின் தீவனமாயின. அடுத்த வீட்டுச் செல்லக்கிளி அக்காவின் வீட்டுக்குக் கலைமகளும் கலைக்கதிரும் வரத்தவறா. அவர்களின் வீட்டுக்கு மாதந்தோறும் சென்று அவற்றைப் படிக்கத் தவறுவதில்லை. இவை தவிர குருகுலத்திற்குப் பயிலவரும் ஈ.ஸ்வரதாசன், கணேசானந்தன், புஷ்பானந்தன் ஆகியோர் மலிவு விலையில் வரும் துப்பறியும் நாவல்களை மறைவாக எடுத்துவந்து எமது வாசகர் வட்டத்தின் சுற்றுக்காக விடுவார்கள். ஒரே மூச்சிலே அவை வாசித்து முடிக்கப்படும்.

இவை தவிர வாசிப்பிற்கு இடமளித்த பெருமை வேவிலந்தையில் உள்ள இந்து வாலிபர் சங்கக் கட்டிடத்திலமைந்த நூலகத்திற்குரியது. அப்போது அது ஆறு இரும்புத் தூண்கள் தாங்கும் ஓட்டுக் கட்டடமாக இருந்தது. உறுதியான விசாலமான அகலமான சுவர்களைக் கொண்ட அருமையான கட்டிடம். தரைக்கு வெண்மணல், நடுவிலே நீண்ட மேசை, இரண்டு வாங்குகள். இடம் தட்டுப்பாடாயின் பக்கச் சுவர்களிலும் ஏறியிருந்து படிக்கலாம். அங்கு ஒரு சில நாளேடுகள் மட்டும் இருக்கும். சோவியத் நாடு சஞ்சிகையும், நவசீனம் என்ற சஞ்சிகையும் இடம்பெறத் தவறுவதில்லை. அருகிலே விளையாட்டுத்திடல், அதிலே தினமும் பந்தடி நடக்கும். இளைஞர்கள் விளையாடுவார்கள். இடையிடை சுற்றுப் போட்டிகளும் இடம்பெறும். வருடாந்தம் ஆசான் சுகணாவினால் முன்னெடுக்கப் பட்டு வந்த திருவள்ளுவர் விழா நடை பெறுவதும், அவ்வப்போது கண்ணன் அண்ணாவின் நாடகங்கள் அரங்கேற்றப் படுவதும், இராசரத்தினம் மாஸ்டர் இந்தியாவிற் பயின்றுவந்த சாகச விளையாட்டுக்கள் காட்சிப்படுத்தப்படுவதும் இந்த விளையாட்டுத் திடலிலேதான். மண்டபத்தின் உள்ளே வார இறுதி வகுப்புக்களாக ஆசான் சுகணாவினால் திருக்குறள் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வள்ளுவர் விழாவன்று மாணவர்கள் பரிசளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவார்கள்.

அம்மன் கோவில் கொடியேறி விட்டால் எமக்குக் கொண்டாட்டம்தான். சிரமதானம் செய்வதற்குக் காத்திருப்போம். தேர்த் திருவிழாவன்று இரவு இடம்பெறும் கூத்துப் பார்ப்பதில் எமக்கு அலாதிப் பிரியம்.

நாம் ஊடாடிய காலத்தில் இந்து வாலிபர் சங்க நூலகம் உறங்கு நிலையிலிருப்பதாக உணரமுடிந்தது. அதற்குரிய வரலாறு அறிய முற்பட்ட வேளை சோமு மாஸ்டர் காலத்தில் அது சிறப்பாக இயங்கியமையை அறிய முடிந்தது. அழகிய ஆஜானுபாகுவான தோற்றப்பொலிவு, எப்போதும் ஒரு தோளில் தொங்கும் துணிப்பையுடன் கதருடையிற் காட்சிதரும் அவர் ஒரு காந்தியவாதி. பழகுதற்கு இனியவர், மென்மையானதும் இரக்கமானதுமான வெள்ளை மனம் அவருக்கு. அன்று அவர் பாடிக் காட்டிய பச்சைக்கிளியே வா வா என்ற வரிகள் இன்றும் எனக்கு நினைவிலுண்டு. அல்வாயூரின் அவப்பேறோ என்னவோ அறியோம். இயேசுவைப் போல, பாரதி போல அவரும் அகவை முப்பதிலே மறைந்துவிட்டார். இருந்திருப்பின் அல்வையூருக்கு அதிகம் செய்திருப்பார். அவரது மறைவுடன் சங்க நிர்வாகத்திலே சிக்கல்கள், அதிகாரப் போட்டிகள், கோஷ்டி மோதல்கள் என சங்கம் சரிவடையலாயிற்று. பெயருக்கு மட்டும் படிப்பகம் இயங்கி வந்தது.

அங்கு போகும்போதெல்லாம் இதனை நாம் பொறுப்பேற்று நடத்தினால் என்ன என்ற சிந்தனை எழுவதுண்டு. சிறுவர் எம்மை 'வெள்ளாமைக்கு' விடுவார்களா என்று உள்ளுர அச்சம். இருந்தும் ஒரு நாள் துணிந்து ஆசானிடம் நமது எண்ணத்தை வெளியிட்டோம். அவர் அதனை ஊக்குவிக்க விரும்பாததால் எண்ணத்தைக் கைவிட்டோம். எனினும் உருப்படியான ஒரு நூலகத்திற்கு அடி கோல வேண்டுமென்ற ஆர்வம் சற்றும் குறையவில்லை. விடயமறிந்து நக்கலடித்தோரும் கேலி செய்தோரும் இருக்கவே செய்தனர். நாம் கருமமே கண்ணாயினோம்.

இக்கட்டத்தில் இதுவரை வீட்டுக்கு வெளிப்படாதிருந்த நண்பர் சத்திய மூர்த்தியும் எம்முடன் இணைந்து கொண்டார். இதுவரை அடுப்புக்கால்கள் போல இருந்த நாம் பந்தற்கால்கள் போல ஆகிவிட்டோம்; ஜெகநாதன், தபேந்திரன், சத்தியம், திரவியம். நூலகம் தொடங்குவதென முடிவாயிற்று. முதற் கட்டமாக இயன்றவரை நாவல், கதை, கட்டுரை, கவிதை நூல்களைச் சேகரிப்பதென முடிவு செய்து, சேகரித்தோம். கிடைத்த கிழிந்த நூல்களை ஒட்டியும் கட்டியும் செப்பனிட்டோம். தபேந்திரன் வீட்டின் ஓர் ஓர அறையிற் கூடியிருந்து இவற்றைச் செய்தோம். பலர் தம்மிடமிருந்த நூல்களை அன்பளித்தார்கள். அவர்களுடன் இலகடித் தபாலதிபரின் மகன் அமரர் விநாயகமூர்த்தி உவந்தளித்த நூல்களுள் பாரதிதாசனின் ஆக்கங்களே மிகுதி. உண்மையில் அவர் பாரதிதாசனின் தீவிரதாசன். பின்வந்த நட்களில் நூலகத்திற்குப் பெயர் சூட்ட வேண்டிய கட்டத்தில் பாரதிதாசன் உள்ளிட்ட சில பெயர்கள் முன்மொழியப்பட்ட வேளை பாரதிதாசன் படிப்பகம் என்றுதான் வைக்கவேண்டும் எனத் தீவிரம் காட்டினார் அவர். இப்போது நாம் தேடிப்பெற்ற நூல்களின் எண்ணிக்கை நூற்றைத் தாண்டிவிட்டது. அடுத்த கட்டம் உறுப்பினர்களைச் சேர்ப்பது, நாளிதழ் உதவக்கூடியோரை அணுகுவது, உறுப்பினர் மாதாந்த சந்தாப் பணம் 25 சதம், கதை கட்டுரை நூல்கள் இரவல் வழங்கக் கட்டணம் 10 சதம். இப்போது

எமக்கு முன் எழுந்து நிற்கும் வினா நூலகத்திற்கான அமைவிடமொன்றைத் தேடுவது எப்படி? கணிதமேதையின் வீட்டுக்கு முன்பிருந்த இரும்புக் கதவின் மேற் பாதுகாப்பு நாடி அமைக்கப்பட்டிருந்த கொட்டகைக்கு வீதிக்கு அப்பால் எதிரிலிருந்த பற்றைக்காடு கவனத்திற்கு வந்தது. அவ்விடத்தில் ஒரு நேரான விளாமரம் தவிர இருந்தவையெல்லாம் காரை முட் பற்றைகளே. அதனைத் துப்பரவு செய்து தற்காலிகமாக கொட்டில் அமைக்கும் எண்ணம். அது சாத்தியப் படும் போலத் தென்படாததால் தற்போது கணிதமேதையின் காணியில் வீதிக் கரையில் சிதிலமடைந்த தோற்றத்துடன் இருந்த கேற்றுக் கொட்டகையைச் செப்பனிட்டு நூலகத்தைத் தொடங்கும் எண்ணம். அதற்காக ஆசிரியரின் ஒப்புதலும் பெற்று சிதிலமடைந்திருந்த கண்டகற்களாலமைந்த நான்கு தூண் களைக் களிமண் அப்பி செப்பனிட முற்பட்டு வேலை தொடங்கிவிட்டோம். மேலே ஓட்டுக்கூரை இருந்ததால் வாய்ப்பாகப் போயிற்று. பூச்சுவேலை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு வந்த ஆசிரியரும் சிறந்த சமூக சேவையாளருமான திரு. ஜே. எஸ் செல்லப்பா அவர்கள் "தம்பிமார் என்ன நடக்கிறது இங்கே?" என வினவ விபரம் கூறினோம். பதிலாக சற்று நகைச்சுவை யுடன் ஆண்டவருக்கு மாட்டுக் கொட்டில் போல உங்களுக்குக் கேற்றுக் கொட்டிலா கிடைத்தது எனக் கூறியவர் திரும்பிச் செல்ல முற்பட்டவர், தம்பிமார் உங்களுக்கு என்ன விசரா? விசர் வேலை பார்க்க வேண்டாம். எங்கள் ஆர்.டீ.எஸ். கட்டிடத்தில் நூலகத்தை நடாத்தும்படி பச்சைக்கொடி காட்டிவிட்டார். எமக்கு மட்டிலா மகிழ்ச்சி. களிமண் கையைக் கழுவிவிட்டு காரியத்தில் இறங்கினோம். இது நிகழ்ந்தது 1964 மே மாதம் முதலாம் வாரத்தில். தலைவர் பணித்துரைத்தபடி கட்டிடத்தின் அறைத் திறப்பினை அண்ணர் அமரர் சதாசிவத்தாரிடம் பொறுப்பேற்று அடுத்த வாரமே நூலகம் உருப்படியான கட்டிடத்திலே ஆர்ப்பாட்ட மேதுமின்றி ஆரம்பிக்கப்பட்டது. ஈழநாடு தினசரியையும் ஆசிரியர் வழங்க முன்வந்தார். புதிய மண்டபத்தில் மேசை வாங்கு என்பன இருந்தன. எனவே அவற்றைத் தேடும் தேவையிருக்க வில்லை. எம்மிடமும் நிதி வளம் ஏதும் இருக்கவில்லை. அனைவருமே பள்ளி செல்லும் மாணவராயிருந்தோம். மண்டபத்தின் தரைக்கு வெண்மணல் பரப்பினோம். அறைக்கு மட்டும் கதவுண்டு. மண்டபத்திற்கு இல்லை. பூச்சுப் பூசாத 4 அங்குலக் கற்சுவர் இரு பக்கமும். அருகிலே விளையாட மைதானம். தினமும் இடம்பெறும் பந்தடியைப் பார்க்கும்போது மனதில் ஒருவகைப் பெருமிதம். சேகரித்து வைத்திருந்த நூற்றொகுதி 'சன்லைட்' பெட்டியில் அடிக்கப்பட்ட சிறு அலுமாரியுள் அறையில் அடக்கம். விளையாடப் பாவித்த மைதானத்திற்கு ஒரு கட்டத்தில் வில்லங்கம் வந்ததால் புதிய திட லொன்றைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம். வழி தெரியவில்லை மண்டபத்திற்குப் பின்புறம் வசித்த கணபதிப்பிள்ளை ஆசிரியர் கைகொடுத்தார். தமது வீட்டிற்குப் பின்புறமிருந்த திடலில் விளையாட அநுமதித்தார். ஆயின் அதுவோ ஆளை நெருஞ்சி முட்கள் நிறைந்த இடம். மத்தியில் ஒரு சேலம் மாமரம். சளைக்க வில்லை எமது குழாம். வாழைக்

குற்றிகளை தரையிலே உருட்டி முட்களை அகற்ற முற்பட்டும் முழுமையான இலக்கினை எய்த முடியவில்லை. நல்ல காலமாக மீண்டும் பழைய திடலில் விளையாடக்கூடிய நிலைமை கிட்டியது நிம்மதியளித்தது. மண்டபத்தில் சரஸ்வதி பூசை சிறப்பாகக் கொண்டாடப்படும். அயலவர் துணைபுரிவர். சிவராத்திரி விழிப்பு உற்சாகமாக இருக்கும். ஊஞ்சல் கட்டி ஆடப்படும். அவ்வப்போது நிர்வாகக் குழுக் கூட்டங்கள் இடம்பெறும். தலைவர்களாக திரு. ச. தவராசா, திரு.சி. பொன்னம்பலம் ஆகியோர் நிர்வகித்தமை நினைவிலுண்டு. நாடகங்களை நடாத்து வதில் திரு. சி. சந்திரானந்தன் ஆர்வம் கொண்டிருந்தபோதும் 'தோழர்' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட அவரது ஆசை நிறைவேறவேயில்லை. இடையிலே ஊரைவிட்டுப் போய்விட்டார். எம்மிலும் பல மாணவர்கள் அடுத்த வருடம் க.பொ.த. சாதாரணத் தேர்வு எழுதும் தேடலுடன் இருந்தனர். முன்பெல்லாம் பட்டம் விடுவதிலே பைத்தியமாக இருந்த சிலர் படிப்பகத்தின் தோற்றத்துடன் பராக்கு மாறியவர்களாயினர். தேர்வுக்குத் தோற்ற இருந்த மாணவர்கள் இரவிலே கூடிப் படிக்க வசதி வழங்கியது தற்போது படிப்பகம் அமைந்துள்ள வளவில் இருந்த நெசவுசாலை என்பதை மறக்கமுடியாது.

இடைக்காலத்தில் தலைவர் தவராசா வினால் வாலிப முன்னணி என்ற அமைப்பைத் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பில் 'முன்னணிக் குரல்' என்ற கையெழுத்துப் பிரதியும் உருவானது. இம் முயற்சிகள் உருப்பட முடியவில்லை. முனைந்தவரும் முல்லைத்தீவில் முடங்கிவிட்டார். 1968ம் ஆண்டு பிற்கூற்றில் நானும் கொழும்பு செல்ல நேர்ந்தது. உடனுழைத்த சிலரும் படிப்படியாக உயர்கல்விக்கெனவும் தொழில் நாடியும் ஊருக்குத் தூரமாயினர். இப்போது படிப்பக வரலாற்றின் இரண்டாம் கட்டம் தொடங்குகின்றது. இதுவரை ஓடியவர்கள் தமக்கு இளைய தலைமுறை யினரிடம் ஓட்டக்கோலைக் கையளிக்கும் காலம் வந்தது. அவர்களும் உவப்புடன் பொறுப்பேற்று அர்ப்பணிப்புடன் அற்புத மாக உழைத்தனர். உழைப்பிற்குக் கிடைத்த அறுவடை அருமையானது. இந்த விபரமனைத்தும் இன்றுள்ள தலைமுறையினர் நன்கு அறிந்தவை களே. உண்மையில் அவர்களது காலம் பொற்காலமே. மாணவர்களாக இருந்த முதற்றலைமுறையினருக்கு வாய்க்காத நிதிவள வாய்ப்பைத் தேடிக் கொள்ளும் வல்லமை இளையவர்க்குக் கிட்டவும் படிப்பகத்தைக் கட்டவும் முடிந்தமைக்குக் காரணம் அவர்தம் அயரா உழைப்பும் அர்ப்பணிப்பு ஆர்வமுமே எனக் கூறுவது மிகையாகாது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் 1987 நடுப்பகுதியில் ஊர் வந்த வேளை படிப்பகம் நடாத்தப்பட்ட ஆர். டி. எஸ். மண்டபம் புதுப்பொலிவு பெற்றிருந்தமை கண்டு அகமகிழ்ந்தேன். அதனைவிட 2003.12.12 இல் புதிய கட்டிடப் புகுவிழாவிற்கு வந்திருந்தவேளை பிரமிப்பும் பேருவகையும் பெற்றேன். இப்போது பொன்விழா நிகழவிருப்பது அறிந்து இருந்த நிலையையும் இருக்கும் நிலையையும் நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகி நிற்பதில் வியப்பேது மில்லைத்தானே!



பாரதிதாசன் விளையாட்டுக்கழகம்
ஒரு வரலாற்று நோக்கு

திரு. க. புலேந்திரன்

பாரதிதாசன் சனசமூக நிலையம் ஓர் ஆல விருட்சம். பாரதிதாசன் எனப் பெயர் கொண்டு விளங்கும் விளையாட்டுக் கழகம், முன்பள்ளி, ஐக்கிய நாணய சங்கம் என்பன அவ் விருட்சத்தின் விழுதுகளாகும்.

ஒரு சமூகக் கட்டுமான அம்சங்களில் கல்வியோடு விளையாட்டுத் துறையும் ஓர் முக்கிய கட்டுமான விடயமாகக் கருதப் படுகிறது. அறிவுத் தேடல் மூலம் அறியாமை எனும் இருள் எவ்வாறு அகற்றப்படுகிறதோ, அதேபோல விளையாட்டினூடே நடைபெறும் உடற்பயிற்சி உடம்புக்கு உரமூட்டுவதாய் அமைகிறது. இவ்விளையாட்டின் மீது ஏற்படுகின்ற ஆர்வங்கள் விருப்பபங்களுடாக கிடைக்கின்ற மேன்னிலை அது சார்ந்த அமைப்பையோ பிரதேசத்தையோ ஒருன்னத மான நிலைக்கு கொண்டு செல்கிறது. இவ்வுன்னத நிலையை இலக்காகக் கொண்டதே எமது விளையாட்டுக்கழகம்.

இலங்கையின் தேசிய விளையாட்டாக விளங்குவது 'கரப்பந்தாட்டம்' ஆகும். கரப்பந் தாட்டத்திற்கும் அல்வாய் மண்ணுக்கும் பாரம்பரியத் தொடர்புள்ளது. அகில இலங்கை ரீதியாக புகழ்பெற்ற கரப்பந்தாட்டக் கழகம் ஒன்று எம் மண்ணில் இருந்தது. அது ஒரே குடும்பத்தவரைச் சேர்ந்த அமரர் திரு. பொ. தியாகராசா ஆசிரியரை வழிப்படுத்துனராகக் கொண்ட "நடா பிறதேஸ்" என்ற விளையாட்டுக் கழகமாகும். பின்னர் அது கிராமத்தில் வேறு வீரர்களையும் இணைந்து "அல்வாய் யூனியன்" எனப் பெயர் மாற்றம் பெற்று சாதனைகள் பல படைத்தது. இதில் திரு. பொ. தியாகராசா, திரு. செ. நடராசா, திரு. செ. துரைராசா, திரு. செ. செல்வராசா, திரு. வ. சி. மயில்வாகனம் (டாசர் மயிலம்மான்), திரு. பொ. கிருஷ்ணபிள்ளை ஆகிய ஒரே குடும்பத் தவருடன் க. கனகரத்தினம் (முத்துமாரி அம்மன் கோயிலடி), திரு. வ. ஜெயராஜா (CTB) அல்வாய், திரு. சி. நடராசா (அத்தாய்), திரு. குலசிங்கம் (குணம், உடுப்பிட்டி), திரு. அமரசிங்கம் (பருத்தித்துறை) ஆகியோர் இணைந்து விளையாடினர்.

அக் காலத்தில் அல்வாய் "இந்து வாலிபர் சங்கம்" வருடந்தோறும் நடாத்திய கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியின் ரசிகத் தன்மையின் ஆர்வ மேலீடு எமது நிலையத்திலும் ஓர் கரப்பந்தாட்ட மைதானத்தை அமைக்கத் தூண்டியது. அதில் ஆர்வம் கொண்ட திரு. சி. சத்தியமூர்த்தி, திரு. ம. அம்பிகைபாலன், திரு. ச. திரவியம், திரு. ஆ. ஜெகநாதன், திரு. ச. பத்மநாதன் (ஆனந்தம்), திரு. சி. சிவகுமார் (காந்தி) போன்றோர் இம் மைதானத்தை அமைத்து விளையாடி வந்தனர். இளையோர் ஆகிய என் போன்றோர் வெளியிற் செல்லும் பந்துகளை எடுத்துக்கொடுத்து, விளையாட்டிற் கான ஆரம்ப பயிற்சியைப் பெற்றோம். மேற் குறிப்பிட்டோர் உயர்கல்வி, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, திருமணங்கள் போன்ற காரணிகளால் ஊரை விட்டு வெளியேற மைதானம் சோர்ந்துபோனது.

திரு. க. சச்சிதானந்தம் தலைமை யிலான புதிய நிர்வாகம் நிலையத்தைப் பொறுப்பேற்றபின் மைதானம் மீண்டும்

உயிர்பெறத் தொடங்கியது. 1978, 1979 காலப் பகுதியில் நிலையக் கட்டிடத்தை புனரமைக் கும் பணி இந்நிர்வாக காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இப்புதிய கட்டிடத் (தற்போதைய முன்பள்ளி) திறப்பு விழாவை முன்னிட்டு பெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்தி திறப்பு விழாவை ஓர் எழுச்சி மிக்க நிகழ்வாக ஆக்கவேண்டுமென எமது நிர்வாகம் தீர்மானித்தது.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு செயல் வடிவம் கொடுக்க பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் என்ற பெயரில் ஓர் செயற்குழு அமைக்கப்பட்டது. இதில் நான் செயலாளராக நியமிக்கப்பட்டேன். இதுவே பாரதிதாசன் விளையாட்டுக் கழகத்தின் தோற்றக் காலமாகும்.

விளையாட்டுப் போட்டிக்கான செயற் திட்டத்தில் போட்டிகளை கீழ்க்காணும் ஒழுங்கில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

1. நான்கு பேர் கொண்ட மரபு வழியான கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்)
2. ஆறு பேர் கொண்ட மரபு வழியான கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்)
3. சர்வதேச விதிமுறைகளுக்கான கரப் பந்தாட்டம் (ஓவர் கேம்)
4. சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி
5. மெய்வல்லுனர் போட்டியாக மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கிறீஸ் கம்பம் ஏறுதல் போன்ற போட்டிகளை நடாத்துதல்.

இக் காலப்பகுதியில் நிலையத்திற்கான கட்டிட வேலையை குறிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியிருந்தது. பகலில் நாம் கட்டிட வேலைப்பழுவில் இருந்தமையால் கரப்பந் தாட்டத்தை இரவில் மின்னொளியில் நடாத்துவது என்று தீர்மானித்தோம். இதில் புகழ்பெற்ற கழகங்களை இடம்பெறச் செய்வதில் மிக ஆர்வமாக இருந்தோம். இவ் விடயத்தில் தலைவர் திரு. க. சச்சிதானந்தம் அவர்கள் மிகத் தனது ஒத்துழைப்பையும் முயற்சியையும் வழங்கியிருந்தார். இதன் ஓர் அம்சமாக பருத்தித்துறை சிவன் கோவில் சந்தியில் நடு வெயிலில் தலைக்குத் தொப்பியோ காலுக்குச் செருப்போ இன்றி ஓர் சுற்றுப் போட்டியின் விளம்பரத்திலிருந்து கழகங்களின் பெயர்களை அவர் வாசிக்க நான் எழுதியது இன்றும் பசுமையாக என் நெஞ்சிலுள்ளது.

கால நேரத்தைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு விளையாட்டுக் கழகத்திற்கும் விண்ணப்பங்கள் நேரடியாக அனுப்பிப் பெறப்பட்டன. இப் போட்டிக்கான நேர கால அட்டவணையைத் தயாரிப்பதில் திரு. செ. செல்வராசா ஆசிரியர் அவர்கள் எமக்கு உதவி, பெரும் பங்காற்றினார். மைதான அமைப் புடன் தொடர்புடைய வேலைகள் யாவும், எமக்கு இளையோரான தலைவரின் சகோதரர் களான க. கருணானந்தம், க. அருளானந்தம், க. புஸ்பானந்தம் ஆகியோருடன் இ. இளங்கோ, வே. திவ்வியநேசன், ம. மகேந்திரன், ஆ. குலநாதன் போன்றோராலும் பொது மக்களாலும் செய்யப்பட்டன.

மின்னொளிக்கான மின்குமிழ்கள் போன்ற உபகரணங்கள் எமது நிதியில் இருந்து நிலையத்திற்குச் சொந்தமாகக் கொள்வனவு செய்யப்பட்டது. மேலதிக மின் உபகரண உதவிகளை "ராணி மின்சார தீபம்". இ. இராசையா (மயிலண்ணை) அவர்கள் தந்துதவினார். கரப்பந்தாட்டப் போட்டிகளுக் கான மத்தியஸ்த கடமையை எமது நிர்வாக உறுப்பினராகவிருந்த அமரர் பெ. கனகசபாபதி அவர்கள் பொறுப்பேற்று கழகங்களும், பார்வையாளர்களும், நாமும் மெச்சத்தக்க வகையில் செயற்பட்டார். போட்டிகளின் நேரடி வர்ணனைகளை "டாசர் மயிலம்மான்" என அழைக்கப்படும் திரு. வ. சி. மயில்வாகனம்

ஆசிரியரும் எமது நிலையச் செயலாளர் திரு. J. S. நல்லதம்பி ஆசிரியர் அவர்களும் வழங்கி பார்வையாளர்களையும், வீரர்களையும் ஊக்கப் படுத்தி போட்டிகளை ஆரவாரப்படுத்தினர்.

ஒரு மாத காலமாக தெரிவுப் போட்டிகள் இடம்பெற்றன. ஒவ்வொரு இரவும் பாரதி தாசன் சூழல், பார்வையாளர்களாலும் வீரர் களாலும் நிரம்பி வழிந்தது. வரும் துவிச்சக்கர வண்டிகளின் பாதுகாப்பு அமரர் திரு. ச. குருபரன் (கடவுள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. சிற்றுண்டி தேநீர்ச்சாலை திரு. ந. நாவழகன் தலைமையில் அமைக்கப் பட்டது. இவற்றின் வருமானம் எமது செலவின் ஒரு பங்கை ஈடுசெய்தது. பார்வையாளர் கட்டணம் எதுவும் அறவிடப்படாமை இதில் ஓர் சிறப்பம்சமாகும். நிலையத் திறப்பு விழாவுக்கு முதல் நாள் மெய்வல்லுனர் போட்டிகளும், கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளும் நடை பெற்றன. திறப்பு விழாவன்று நிலையத்துக்கு அருகில் மேடையமைத்து சொற்பொழிவு களும், பரிசில் வழங்கலும், கலை நிகழ்ச்சி களும் இடம்பெற்றன. வெற்றியாளர்களுக் கான பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் ஊர் மக்களாலும் வர்த்தகர்களாலும் வழங்கப் பட்டன.

இந் நிகழ்வுகளுக்கான வாகன உதவி களை திரு. த. சிவபாதசுந்தரம் (தம்பி), திரு. சி. கணேசமூர்த்தி ஆகியோர் வழங்கி யிருந்தனர். கழகங்களுக்கு நாம் வழங்கிய ஆதரவும், மதிப்பும், அரவணைப்பும் பெறுமதிமிக்க பரிசில்களும் போட்டிகட்கு நாம் வழங்கிய சிறந்த மின்னொளியமைப்பும் பங்குபற்றிய கழகங்களை மிகவும் மின்னொளி யமைப்பும் பங்குபற்றிய கழகங்களை மிகவும் மகிழ்வித்தன. பங்கு பற்றிய ஒவ்வொரு கழகத்திலிருந்தும் சிறந்த ஓர் வீரனைத் தெரிவுசெய்து அவருக்கு பரிசில் வழங்கப் பட்டது. இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெறாத கழகம் எதுவுமே இருக்கவில்லை.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் என்பன காலை வேளை நடைபெற்றபோது சைக்கிள் ஓட்ட வீரர்களின் பின்னே பார்வையாளர்கள் ஒரு உழவுயந்திரப் பெட்டியில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது உழவு யந்திரப் பெட்டி கழன்று விபத்துக்குள்ளாகியது. இதில் பலர் காயமுற்று மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அன்று மருத்துவமனை அல்வையூர் மக்க ளால் நிரம்பி வழிந்தது. கண்ணூறு பட்டதென நாம் ஆறுதலடைந்தோம்.

இவ் விளையாட்டுப் போட்டிகள் நாட்டின் அசாதாரண நிலை ஏற்படும் வரை வருடந் தோறும் நடைபெற்றன.

இத்தகைய விழாக்களாலும் பொதுப் பணிகளாலும் நமது இளைஞர், அல்வையூர் மக்களின் நெஞ்சங்களில் உறைவிடமாயினர். இதற்கோர் சான்றாக கட்டைவேலி - நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க, அல்வாய் தெற்கு மத்தி கிளைக் குழுத் தேர்வாளர் போட்டியில் ஊரில் மிகப் பிரபலம் வாய்ந்தோரைத் தோற்கடித்து எமது இளைஞர் குழு அனைவரையுமே அல்வாயூர் மக்கள் தெரிவு செய்தமையைக் குறிப்பிடலாம்.

தொடர்ந்து ஒரு போட்டிக்குத் தயார்ப் படுத்தாத, பொழுதுபோக்காக எமது மைதானத் தில் கரப்பந்தாட்ட விளையாட்டுகள் நடை பெற்றன. ஒரு போட்டியில் பங்குபற்றக் கூடிய அளவிற்கு எம்முள் ஒரு வீரர் இருக்கவில்லை. உருவாகவில்லை. இதனால் நான் வதிரி சனசமூக நிலைய மைதானத்தில் அனுபவம் மிக்கோருடன் விளையாடிப் பயிற்சி பெற்று வந்தேன்.

அங்கு என்னுடன் விளையாடிய சில இளைஞர்களையும் அல்வாய் யூனியனில் விளையாடிய சிலரையும் இணைத்து எமது நிலையப் பெயரில் பல சுற்றுப் போட்டிகளில்

பங்குபற்றி வந்தேன். எமது நிலையைச் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களை கௌரவிப்பதே அதன் முக்கிய நோக்காக இருந்தது. ஆனாலும் சில சுற்றுப் போட்டிகளில் காலிறுதி வரை வெற்றிபெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்கது. இது இலங்கை வானொலியில் பாரதிதாசன் சனசமூக நிலைய விளையாட்டுக்கழகப் பெயரை இடம்பெற வைததது. இதில் அல்வாய் யூனியனைச் சேர்ந்த திரு.க. கனகரத்தினம் (முத்துமாரி அம்மன் கோயிலடி), திரு. செ. துரைராசா ஆசிரியர் (அல்வாய்), திரு. வ. ஜெயராசா (C.T.B. சாரதி, அல்வாய்), திரு. சி. நடராசா (அத்தாய்) ஆகியோருடன் என் சக வீரர்களான சின்னராசா (வதிரி), மணி சுந்தரம் ஆசிரியர் (அல்வாய்), மஞ்சுநாதன் (ஓடை), ஆனந்தன் (மாலிசந்தி) ஆகியோரும் பங்குகொண்டு எமது பாரதிதாசன் விளையாட்டுக் கழத்திற்காக விளையாடி உதவி புரிந்தனர். இதற்காக எமது சனசமூக நிலையப் பெயருடன் சீருடையும் தயாரித்து வைத்திருந்தேன்.

எமது சனசமூக வரலாற்றில் ஆரம்ப நிலை, இடை நிலை, அண்மைய நிலை எனப் பிரிக்கும்போது இடைக்காலப் பிற் பகுதியில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக கைவிடப்பட்ட விளையாட்டுகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. குறிப்பாகக் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிளித்தட்டு, துடுப்பாட்டம் போன்றவற்றில் எமது இளைஞர் ஆர்வம் கொண்டும் ஒரு சொந்த விளையாட்டு மைதானமின்மையால் அதற்கான பயிற்சிபெற பல சிரமங்களுக்கு உட்பட்டனர். இது தொடர்பாக பல நிர்வாக, பொதுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன. எமது இளைஞர்கள் ஆர்வ மேலீட்டால் எமது நிலையத்திற்கு குறுந் தூரத்திலுள்ள மாயக்கைப் பகுதியில் இதற்கான பயிற்சிகளெடுத்து போட்டிகளிலும் பங்குபற்றி சிறப்பான ஓர் விளையாட்டுக் கழகம் எனப் பெயர் பெற்றனர். இப்போது நிலையத்திற்கு அண்மையில் வாய்மூல ஒப்பந்தமுடன் ஓர் காணிக்குள் கரப்பந்தாட்ட மைதான மமைத்து விளையாடி வருகின்றனர்.

விளையாட்டுத்துறையின் ஓரங்கமாக பழு தூக்கும் பயிற்சியும் முன்பள்ளிக் கட்டிடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான உபகரணங்கள் விளையாட்டு அங்கத்தவர்களினால் கொள்வனவு செய்யப்பட்டன. 2012ம் ஆண்டு கரப்பந்தாட்டச் சுற்றுப் பேட்டி ஒன்றும் கழகத்தால் நடாத்தப்பட்டது.

சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் தற்போதைய இளைஞர்களிடமும் உள்ளது. ஆனால் நிலையத்திற்குப் பொருத்தமான, சொந்த விளையாட்டு மைதானம் இன்மையும், சில இளைஞர்களின் புறச் செயற்பாடுகள் சிலவும் இதற்கு தடையாக அமைந்துள்ளன.

எமது இளைஞர்களுக்கான விளையாட்டுகளுக்கு மட்டுமல்லாது எமது முன்பள்ளி மாணவர்களுக்கான பயிற்சிகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளுக்கும் கூட ஓர் சொந்த மைதானமின்மை மனவேதனை தரும் ஓர் விடயமாயுள்ளது. முன்பள்ளிக்கான விளையாட்டுப் போட்டி கூட ஒவ்வொரு வருடமும் வெவ்வேறு காணிகளுக்குள் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. நூலகம் அமைந்தது போல் விளையாட்டு மைதானமும் சொந்த நிலத்தில் அமைய அரசிலிருப்போரும், கொடையாளிகளும், பொதுமக்களும், வசதி படைத்தோரும், வெளிநாட்டவரும், நிலவளமுடையோரும் உதவ பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகம் வேண்டி நிற்கிறது.

நன்றி

பாரதிதாசன் அமைப்புக்களின் தோற்றமும் வளர்ச்சியும்

நா. சந்திரசேகரம்
தலைவர்,
பாரதிதாசன் சி. க. கூ. சங்கம்

பாரதிதாசன் அவர்களின் பகுத்தறிவு, சீர்திருத்தம், மொழிப்பற்று, இன உணர்வு ஆகியவற்றிற் பற்றுக்கொண்டு அப்புரட்சிப் பாவலனின் கவிதை உணர்வுகளால் ஆகர்சிக்கப்பட்டு நின்ற இளைய தலைமுறையினர் சிலர் ஒன்றிணைந்து பெயர் சூடிய ஸ்தாபனந்தான் மேற்படி நிலையம்.

அன்றைய அல்வாய் தெற்கு J/ 133, தற்போதைய அல்வாய் J/ 378, அல்வாய் தெற்கு J/ 379, அல்வாய் கிழக்கு J/ 380, அத்தாய் J/ 381 ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாய் இருந்தது. அன்றைய அல்வாய் தெற்கு கிராம முன்னேற்ற சங்கம், அல்வாய் தெற்கு சனசமூக நிலையம், அல்வாய் தெற்கு மாதர் சங்கக் கட்டிடங்கள் இன்று அல்வாய் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் அடங்குகின்றன.

1986ல் பாரதிதாசன் சனசமூக நிலைய இளைஞர்களின் முயற்சியினால் பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம் உருவானது. அப்போது என்னை மேற்படி சங்கத் தலைவராகவும் வருமான வரி கணக்காய் வாளரான திரு. வ. பொன்னம்பலம் அவர்களை பொருளாளராகவும் பிரதேசசபை செயலாளரான பெ. கனகசபாபதி அவர்களை செயலாளராகவும் பாரதிதாசன் நிறுவனங் களை முன்னின்று நடாத்தி வரும் திரு. ஆ. குலநாதன் அவர்களை வங்கியாளராகவும் தெரிவுசெய்தனர். ஆரம்பத்தில் நம் சங்கத்தில் பற்றுறுதி கொண்டு பலர் உறுப்பினராயினர். வங்கிக் கடன் பெற்று குறைந்த வட்டியுடன் நாணயமானவர்கட்கு விவசாயக் கடன், சிறுதொழில்கட்கான கடனென கடன் வழங்கி உதவினோம். இதனால் நூற்றுக் கணக்கானவர்கள் உறுப்பினராகச் சேர முண்டியடித்துக் கொண்டு வரலாயினர். வருவாய் பெருகவே முன்பள்ளியையும் அரவணைத்தோம். அப்போது நம் ஐக்கிய நாணய சங்கம் அல்வாய் பாரதிதாசன் ஐ.நா.ச. சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கமென பெயர் மாற்றம் பெற்றது. சங்கத்தில் இணைந்தவர் கள் கடன் பெற்று தம் தொழில்களை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்தி சிறப்பாக வாழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

நாணயமான உறுப்பினரின் வளர்ச்சி யை அவதானித்த போரூட் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மதிப்புக்குரிய திரு. நா. கோகுலதாஸ் அவர்கள் நம் சி. க. கூ. சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் பேருதவி புரிந்தார்கள்.

இதனால் நம் சங்கம் 'கோகுலதாஸ் சி.க.கூ.சங்கம்' என பலராலும் அழைக்கப் பட்டதிலிருந்து அன்னார் நம் சங்கத்துடன் கொண்ட ஈடுபாட்டை உணரக்கூடியதா யுள்ளது.

போரூட் நூலகம், சிலகாலம் சுப்பர்மடம், கதிரைவேற்பிள்ளை சி. க. கூ. சங்கங்களால் நடாத்தப்பட்டுவந்தது. தொடர்ந்து மேற்படி நூலகத்தை நடாத்த எவரும் முன்வராத போது பாரதிதாசனால் அது முடியும் என்ற நம்பிக்கையோடு பெருமகன் திரு. நா. கோகுலதாஸ் அவர்கள் ஐயாயிரம் வரை யான பலதிறப்பட்ட நூல்களையும் தளபாடங் களையும் தந்து பாரதிதாசன் நூலகம் எனும் நாமத்துடன் இயங்க வழிசமைத்தார்கள். நூலக உறுப்பினர் பெருகினர். நூலகம் வாசகர்களால் நிறைந்து வழிந்தது. இதய சுத்தியுள்ள நிர்வாக உறுப்பினரின் பணி மேன்மையுற்றது.

நூலகத்தின் பெற்றோராக சி.க.கூ.சங்க நிர்வாகிகளும் ச.ச.நிலைய நிர்வாகிகளும் இருந்த காரணத்தால் சி.க.கூ.சங்க தலைமை சனசமூக நிலையத்திற்கு மாற்றப்பட்டது. இரு நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து நூலகத்தை வளர்க்கலாயினர்.

பாரதிதாசன் நிறுவனங்களின் வளர்ச்சியில் அன்றுதொட்டு இன்றுவரை பற்றுறுதி கொண்டவர்களில் முன்னிலை வகிப்பவர்கள் "புவி", த. இராஜேஸ்வரன், ஆ. குலநாதன் ஆகியோராவர். அமரர் அருளானந்தம் ஆசிரியர் நூலக வழி காட்டலை பாரதிதாசன் என்றும் நினைவு கூர்கின்றது.

இன்று பாரதிதாசன் சற்று சோர்வடைந் துள்ளதாக பேசப்படுகின்றது. காரணம், நாணயமானவர்கள் நாணயமிழந்துள்ள னர். இதனால் முன்பள்ளியும் வலுவிழந் துள்ளது. நூலக உறுப்பினர் தொகையில் முன்னேற்றமில்லை. இதனால் புதிய நூல்கள் அதிகரிக்கப்படவில்லை. வாசகர் தொகை குறைந்து செல்கின்றது. நூலகர் சோர்வை தடுக்க வேதன உயர்வு அவசியம். இதற்கு முதியவர்களாகிய நாம் இளைஞர் க்கு நிர்வாகத்தில் பங்கு கொடுத்து அவர் களின் செயற்பாட்டிற்கு ஊக்கமளிப்போமாக.

பாரதிதாசன் நூலகம் தனது பொன் விழாவைக் காண்பதையிட்டு மன நிறைவு கொள்வதோடு பாரதிதாசன் நிறுவனங்கள் வளம்பெற்று உயர்வடைய வாழ்த்துகிறேன்.

புதிய உலகம்

தூய உண்மை அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றேயென்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாமே.

பாரதிதாசன் முன்பள்ளி பற்றிய பார்வை....

திரு. ந. தேவராசா
தலைவர்,
பாரதிதாசன் முன்பள்ளி

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர் தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்.
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணிய கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

- மகாகவி பாரதியார்

என்ற வாக்கிற்கு அமைய கிராமங்கள் தோறும் அன்றுதொட்டு குருகுலங்கள் அமைத்து கல்வியை போதித்தனர். காலப் போக்கில் பாடசாலை என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டபோது குருகுலக் கல்வி முறை அருகத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து பாடசாலை செல்லும் வயது தீர்மானிக்கப்பட்டு பாடசாலையில் அரிவரி என்ற வகுப்பு தொடங்கப்பட்டது. இன்று அது தரம் 1 என்றும் இடைக் காலத்தில் அது ஆண்டு 1 என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட வகுப்பிற்கு முன்னாயத்தம் செய்யும் பாடசாலையாக முன்பள்ளிகள் தொடக்கப்பட்டன. ஊரில் உள்ள பெரியோர்களின் உதவியுடன் அங்கு ஆசிரியர்கள் குறிப்பாக பெண்ணாசிரியர்கள் நியமிக்கப்பட்டு கல்வி போதிக்கப்பட்டது. இதற்கு எமது ஊரும் விதிவிலக்கு அல்ல. தொடக்க காலத்தில் சர்வோதயம், மாதர் சங்கம் என்பவற்றின் உதவியுடன் முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அது நடைபெற்று வந்தது. இவ்வாறு நடைபெற்று வந்த முன்பள்ளியை 1993 ஆம் ஆண்டில் பாரதிதாசன் சனசமூக நிலையம் பொறுப் பேற்றுக் கொண்டது.

பாரதிதாசன் பொறுப்பேற்றுக்கொண்டால் சொல்லவும் வேண்டுமா? பாரதிதாசன் முன்பள்ளி ஆரம்பத்தில் திரு. மகேந்திர நாயகம் வீட்டில் இயங்கியது. பின்னர் அன்று இருந்த மாதர் சங்க கட்டடத்தில் சிறப்பாக இயங்கத் தொடங்கியது. இதனை அல்வையூர் பாரதிதாசன் சனசமூக நிர்வாகம் சிறப்பாக நடாத்தியது. ஆசிரியர் களுக்கான வேதனம் பெருமளவில் வழங்கப்படவில்லை. பெற்றோர்களின் அன்பளிப்பால் கிடைக்கும் நிதியே ஆசிரியர் வேதனமாக வழங்கப்பட்டு வந்தது. தொடர்ந்து பாரதிதாசன் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் சிறப்பாக தொழிற்பட்டமை யினால் ஆசிரியர் வேதனத்தில் ஒரு பகுதியை அதனூடாக வழங்கியது. இது அவ் ஆசிரியர்களுக்கு பேருதவியாக அமைந்தது.

ஒவ்வொரு ஆண்டும் 50 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் இம் முன்பள்ளியில் கல்வி கற்றனர். தொடக்க கால ஆசிரியர் களாக திருமதி இந்திராணி ஆசிரியையும் திருமதி பி. சுசீலகுமாரியும் இணைந்து சிறப்பாக நடாத்தினர். இவ்வாறு இயங்கும் காலத்தில் செல்வி க. ரஜனியும் பின் தே. உதேனி ஆசிரியரும் இணைந்து சிறப்பாக இயக்கினர். தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும்

பரிசளிப்பு விழாவும் விளையாட்டு போட்டியும் மிகவும் சிறப்பாக கோலாகலமாக நடைபெறுவது வழமையாக இருந்தது. இவ்வாறு இயங்கிய காலத்தில் திருமதி இந்திராணி ஆசிரியர் அவர்கள் விலக சுசீலகுமாரி ஆசிரியையும் திருமதி உதேனி ஆசிரியையும் இயககினர். பெற்றோர் ஆதரவு நன்றாக கிடைத்தமையினால் அது சிறப்படைந்து காணப்பட்டது. தொடர்ந்து முன்பள்ளிக்கு இடமாற்றம் பெற்று செல்ல செல்வி க. வசந்தமலர் ஆசிரியை பொறுப் பேற்றுக் கொண்டார். திருமதி தே. உதேனி, செல்வி க. வசந்தமலர் ஆசிரியையும் தொடர்ந்து சிறப்பாக இயக்கினர். விளையாட்டு போட்டிகள் கலைவிழா ஆசிரியர் தினம் என்பன சிறப்பாக கொண்டாடப்பட்டன. கோட்ட. வலய மட்ட போட்டிகளிலும் வெற்றி ஈட்டியது.

மேலும் வசந்தமலர் ஆசிரியை இடைக் காலத்தில் விலகிய போது சரசாலையில் இருந்து இடம்பெயர்ந்து வந்திருந்த செல்வி க. சுபத்திரா ஆசிரியை பொறுப்பேற்று முன்பள்ளியை இயக்கினர். தொடர்ந்து 2002 அளவில் திருமதி தே. உதேனி அவர்கள் குடும்பநிலை காரணமாக விலகிக் கொள்ள மீண்டும் செல்வி க. வசந்தமலர், செல்வி க. சுபத்திரா ஆசிரியர்கள் சிறப்பாக இயக்கினர். இவ்வாறு இயங்கிய காலத்தில் செல்வி க. சுபத்திரா ஆசிரியை திருமணமாகி கொழும்பு சென்றமையால் செல்வி சுயாத்தா ஆசிரியை அவர்கள் இணைந்து கொண்டார். இருவரும் சிறப்பாக இயக்கினர்.

இவ்வேளை செல்வி க. வசந்தமலர் திருமணமாகி சென்றமையால் செல்வி சுயாத்தா ஆசிரியருடன் செல்வி வானதி ஆசிரியை இணைந்து கொண்டார். இவர் களது காலத்திலும் முன்பள்ளி சிறப்பாக இயங்கியது. ஆயினும் பெற்றோர்களில் ஆதரவு வீழ்ச்சி கண்டதும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையும் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று. தொடர்ந்து வானதி ஆசிரியை விலக்கிக்கொள்ள செல்வி சி. ஷாமினி ஆசிரியர் இணைந்து சிறப்பாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். எனவே முன்பு இருந்தளவிற்கு இல்லாவிடினும் சிறப்பாக இயங்கிவருகின்றது. பிரதேச சபையினது முன்பள்ளியும் சமாந்தரமாக இயங்கி வருகின்றமையால் பிள்ளைகளின் தொகையில் குறைவு ஏற்படத்தொடங்கியது.

பாரதிதாசன் முன்பள்ளி அனைத்து செயற்பாடுகளிலும் மிகவும் உன்னதமான முன்பள்ளியாக மிளிர்ந்தது. பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம் இதற்கு வேதன அனுசரணை வழங்கியபோது ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட வேதனத்தைப் பெற்று திருப்தி கண்டனர். ஆனால் மேற்படி சங்கம் இதனை நிறுத்தியதன் பின் ஆசிரியர் வேதனத்தில் சற்று தொய்வு ஏற்பட்டுள்ளது. இன்று முன்பள்ளி புனரமைக்கப்பட வேண்டும், வர்ணம் பூச வேண்டுமென இன்றுள்ள நிர்வாகம் வீடுவீடாக சிறுதொகை பணம் திரட்டியவேளை 25000/= சேர்ந்தது. மிகுதிப் பணத்தினை இந்த ஆண்டு விளையாட்டு விழாவின் பிரதம விருந்தின ராக கலந்து சிறப்பித்த கரணவாய் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி. சிறீகாந்தன் அவர்கள் 20000/= ரூபா வழங்கி அதனை வலுப்படுத்தி உள்ளார். எனவே அவருக்கு இந்தவேளை எமது நன்றிகள். எனவே முன்பள்ளி தொடர்ந்து இயங்கவேண்டும். நவீன கற்றல் கற்பித்தலுக்கு ஈடுகொடுக்க வேண்டுமாயின் அது பெற்றோர் நலன் விரும்பிகள் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதனை இவ் வேளையில் கூறிவைக்க விரும்புகிறேன்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

ஆறுமுகம் ஜெகநாதன்
முன்னாள் அதிபர்,
புலோலி வேலாயுத மகா வித்தியாலயம்

அல்வையூரில் வாழ்ந்த கணித மேதை கந்தையா என்றால் யாரும் தெரியாதவர்களில்லை. அவருடைய வீட்டுக்கு பலர் கணித பாடத்தைக் கற்க வருவார்கள். கற்க வருபவர்களுக்கு அவருடைய வீட்டு மேசையில் பரவிக் கிடக்கும் குமுதம், கல்கி, ஆனந்த விகடன் போன்ற வாராந்த சஞ்சிகைகளை எடுத்து வாசிக்க வேண்டும் என்ற அவா ஏற்படும். நாளடைவில் தொடர் கதைகளுக்காக சஞ்சிகைகளின் வரவை ஏற்கி நிற்போர் பலர். இந்த நிலை பலரை வாசிப்புப் பழக்கத்துக்கு தூண்டிவிட்டது. நண்பன் திரவியத்தின் வாயால் ஒரு நூலகம் ஆரம்பிப்போமா? என்ற வார்த்தைகள் வெளி வந்தன. கட்டிடத்துக்கு எங்கே போவோம்? நிதியை யார் தருவார்? எங்கள் அவா வளர்கிறது. ஆசைகளோ முடிவுறாது நீள்கிறது. நாங்கள் யாவரும் அப்போது பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் பருவமடையாத சிறுவர்கள். உதவிக் கரம் தர யாருமே முன்வரவில்லை.

அன்றைய நாட்களில் சுகணா என்ற புனை பெயரால் அழைக்கப்பட்ட எமது ஆசான் கணபதிப்பிள்ளை அவரும் அல்வையூரைச் சேர்ந்தவரே. தமிழில் அளவிலாத பற்றும் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர். நாம் கல்வி கற்ற பாடசாலையில் எமது வகுப்பாசிரியர். எமது தமிழ் ஆசான். எமது ஊரில் வருடந்தோறும் வள்ளுவனுக்கு விழா எடுக்கும் பெருந்தகை. இந்த விழாவுக்கு முன்னோடியாக ஒரு திருக்குறள் வகுப்பை எமது ஊர் மாணவர்களுக்கு நடாத்தினார். வகுப்பில் பங்குபற்றுவதற்காக ஓர் இடத்திற்கு வரவழைக்கப்பட்டோம். அது வேறு எங்கும் அல்ல. அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் கோபுர வாசலை அணுக முன் தெருவோரப் பாதையின் தெற்குப் புறத்தில் நிமிர்ந்து நிற்கும் ஓர் அழகான கட்டிடம். மிகவும் பருத்த அந்தக் கட்டிடத்தின் நெற்றியில் பட்டை தீட்டியது போல ஒரு வாசகம் "அல்வை இந்து வாலிபர் சங்கம்". இங்கு தான் எமது திருக்குறள் வகுப்புகள் நடைபெறும். இது ஒரு நூலகம் என்பதை நாம் உய்த்துணர்ந் தோம். ஒரு மேசை இரண்டு வாங்குகள். சில புதினத் தாள்கள். மூர்ச்சை அற்றுக் கிடந்த அந்த நூலகத்திற்கு உணர்வு ஊட்ட வேண்டும் என்ற அவா எம்மைப் பிடர் பிடித்து உந்த எம்மூர் பெரியோர்களை அணுகி வினயத்துடன் வினாவினோம். அவர்கள் எம்மை எள்ளி நகையாடி சிவப்புக் கொடி காட்டினார்கள்.

இறுதியில் தற்போது நூலகம் அமைந்துள்ள காணிக்கு அருகாக அமைந்துள்ள தெற்குப்புற வெட்டைக் காணியின் தெருவோரப்பக்கமாக பழங்கால, பாவனையில் இல்லாத, பாழடைந்த நான்கு தூண்களைக் கொண்ட ஒரு நுழைவாயில், கூரையிலோ சில ஓடுகள் மாத்திரமே. சுண்ணாம்புத் தூண்கள் யாவும் உடைந்து

இடிந்து பொந்துகள் நிறைந்த ஒரு ஞாபகார்த்த சின்னமாகக் காட்சியளித்தது. அயற் காணியில் செம்மண்ணை வெட்டிச் சுமந்து தூண்களுக்கு அப்பினோம். கயிற்றைக் கட்டி சஞ்சிகைகளைத் தொங்க விட்டோம். எமது நூலக ஆசை இவ்வாறு தான் உதயமானது.

நாட்கள் அதிகம் நகரவில்லை. எமது அவல நிலையைக் கண்ட அயலில் இருந்த செல்லப்பா வாத்தியார் தானே முன்வந்து கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத்தை எமக்கு தந்து இது இப்பொழுது இயங்கா திருக்கிறது. நீங்கள் உங்கள் வாசிகசாலை யை நடத்தலாம் என்று கூறி தான் வாசித்த தினசரி, ஈழநாட்டுப் பத்திரிகையையும் எமக்குத் தந்து உற்சாகம் ஊட்டி எமக்கு உதவினார்.

நடேசப்பா என்ற பெரியார் தான் வாசித்த வீரகேசரி என்ற பத்திரிகையை எமக்குத் தந்து உதவினார். கணித மேதை கந்தையா வீட்டு கல்கி, குமுதம், ஆனந்த விகடன் என்பனவும் அன்பளிப்பாகத் தரப்பட்டன. நண்பன் திரவியம் முன்னின்று இழுக்க விரல்விட்டு எண்ணக்கூடிய நண்பர்கள் நாம் பின்னின்று தள்ள "பாரதிதாசன் படிப்பகம்" என்ற பெயரில் உதயமானதே இன்றைய பொன்விழாக் காணும் நூலகம். அல்வாய் தெற்கிலிருந்த (தற்போது அல்வாய் கிழக்கு) பல நல்ல இளைஞர்கள் ஒன்றிணைய நூலகம் வீறு நடை போட்டது.

எமது ஊரிலுள்ள பெரியவர்களோ புத்திஜீவிகளோ எவர் ஒருவரும் எமக்கு வழிகாட்டவோ வழிநடத்தவோ முன்வர வில்லை. சிலர் எமக்கு சோதனைகளையும் வேதனைகளையும் தந்து பின்னடைவு களை ஏற்படுத்தினார்கள். எம்மோடு இணைந்து செயற்படாத சில இளைஞர் களின் சவால்களையும் நாம் எதிர்நோக்க நேர்ந்தது. ஆனால் எமது இலட்சியத்தை தவறவிடாது காலை முன்வைத்து நகர்ந்தோம். இவை எமக்கு வாழ்க்கையில் சமூக அனுபவங்களாக அமைந்தன.

நாம், பலர் ஒன்றுகூடிச் செய்த சிரமதானச் சேவைகள், புதிய பலரின் ஒன்றிணைவு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் தன்மை, நூலகத்துக்கு வரும் நாளாந்த புதினத்தாள்கள், மாத வார சஞ்சிகைகள் இவற்றை வாசிக்கும் பழக்கம், நூலக நூல்களைப் பயன்படுத்தும் பழக்கம், பொது விடயங்களை அறியும் தன்மை போன்ற அறிவுசார் நிகழ்வுகள், பிற்பகலில் ஒன்றுகூடி விளையாடும் தாச்சி, கிளித்தட்டு, கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற உடல் ரீதியான உடல் உள நலப் பயிற்சிகள், சமூக நல சேவைகள், நீச்சல் பயிற்சிகள், யோகாசனம், கூட்டுப் பிரார்த்தனை போன்ற ஆன்மீக விடயங்கள், க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு நூலகத்தில் இரவு தங்கி ஒன்றாகக் கற்று ஒருவருக்கொருவர் உதவும் கல்விப் பணிகள், எவ்விதமான புகைத்தல் பழக்கமோ குடிப் பழக்கங்களுக்கோ அடிமையாகாமல் நற்பண்புகளோடு நல்ல நண்பர்களாக ஊரில் எவரும் புறங் கூறா நிலையில் வாழ்ந்த இளைஞர் படையணி இவைதான் "பாரதிதாசன் படிப்பகம்" எமது சொந்த வாழ்வு முழுமை பெறத் தந்த பெரும் பரிசு.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் சமூகத்திலிருந்தே பலவற்றை பெற்றுக் கொள்கிறான், கற்றுக்

கொள்கிறான். மக்கள் சேவையே மகேஸ்வரன் பூசை என்று குறிப்பிடப் படுகிறது. சமூக மனப்பாங்குகளை வளர்த்தெடுத்து தனி மனித ஆளுமையை தலைமைத்துவப் பண்பை வளர்ப்பதில் ஒரு கிராமத்தில் உள்ள நூலகம் எந்தளவில் பங்களிப்பை நல்க முடிகிறது முடிந்தது என்பதை இன்று பொன்விழாக் காணும் நூலகம் ஒரு சான்று என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

எமக்குப் பின்னே வந்த இளைஞர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து இன்றும் இந்த ஊரை விட்டு வெளிநாடு களுக்கு சென்று வாழ்ந்தாலும் நூலகத்தின் எண்ணமாகவே அன்றும் இன்றும் செயற்பட்டு வருகின்றார்கள். அவர் களுடைய இந்த தொய்வில்லாத சேவை தான் இன்று கம்பீரமாக உயர்ந்து நின்று மக்கள் பணி பல செய்து பொன் விழாக் காணும் இந்த நூலகம் இதற்கு உறு துணையாக இருந்து செயற்படும் இன்றைய இளைஞர்கள். இவை யாவற்றையும் என் அகத்திலே நிறுத்தி நெஞ்சம் நிறைந்து வாழ்க வாழ்க வளர்கவே என்று வாழ்த்து வதில் உள நிறைவு கொள்கின்றேன்.

எழுச்சியுற்ற பெண்கள்

பெருங்கல்விப் பண்டிதனே! உனக்கோர் கேள்வி
பெண்களுக்கு சுதந்திரம் தான் உண்டோ? என்றாள்
தரும்போது கொள்வதுதான் தருமம் என்றான்.
தராவிடில் நான் மேற்கொண்டால் என்னவென்றாள்
திருமணமாகாதவள் தன் பெற்றோரின்றி
செயல் ஒன்று தான் செய்தல் அதர்மம் என்றான்
மருவ அழைக்கின்றாயே நானும் என்றன்
மாதா பிதாவின்றி விடை சொல்வேனோ.

பாரதிதாசன் சனசமூக நிலைய வளர்ச்சியில் புவி அண்ணா - ஓர் குறும் பார்வை

சின்னத்தம்பி சத்தியமூர்த்தி
பொறியியலாளர், கனடா.

எனக்கு பதின் மூன்று வயது என நினைக்கின்றேன். அக்காலத்தில் நல்ல உள்ளங்கள் படைத்த ஒரு சிலரின் உதவி யுடன் ஓரிரு பத்திரிகைகளுடன் ஆரம்பிக்கப் பட்டதுதான் பாரதிதாசன் சனசமூகநிலையம். அது பல்வேறு தடை தாண்டி படிப்படியாக வளர்ந்து வடமராட்சியில் மிகப்பெரிய நூலகம் என்று பேசப்படும் நிலைக்கு உயர்ந்தது. எங்கள் குடும்பம் சிங்கப்பூருக்குச் சென்று, பின்னர் கனடாவுக்கு குடிபெயர்ந்த பின்னர் இந்நிலைய வளர்ச்சியில் பல தொண்டர்கள் முன்னின்று உழைத்ததாக அறிகின்றேன். அவர்களில் சாதனை படைத்த தொண்டன் திரு. ச. கிருஷ்ணசாமியே (புவி அண்ணா) ஆவார்.

இவரது முயற்சியின் காரணமாகவே நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி கந்தப்பர் சதாசிவத்திடம் நன்கொடையாகப் பெறப்பட்டது.

பலநூல்களைப் பலரும் வாசிக்கும் வகையில் சிறந்த நூலகமாக வளர்ச்சி யடையச் செய்தவரும் இவரே. சனசமூக நிலையத்தின் பெயரால் கணினிக் கல்வியை அல்வையூர் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்.

மாணவர், வளர்ந்தோர்களின் உடல், உள வளர்ச்சியை கருத்திற் கொண்டு விளை யாட்டுக் கழகம் ஒன்றை ஆரம்பித்தமை. மின்னொளியில் கரப்பந்தாட்டப் போட்டியின் அமைப்பாளராக விளங்கியவரும் இவரே.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தி னூடாக அல்வையூர் வறிய மக்களுக்கு நிதி உதவி பெற்றுக்கொடுக்க சனசமூக நிலையத்தை ஒரு கருவியாக பயன்படுத்தி யவர். மிகக் கஷ்டமான சூழ்நிலையில் அல்வையூர் விவசாயிகளுக்கு கொழும்பி லிருந்து நீர் இறைக்கும் யந்திரங்களை வரவழைத்துக் கொடுத்தவர்.

அல்வையூர் மக்களின் நலனுக்காக தொண்டர்களின் உதவிகளைப் பெற்று பல சிரமதானப் பணிகளை முன்னெடுத்துச் சென்றவர். உதாரணமாக வெள்ள வாய்க்கால் வெட்டுதல், போக்குவரத்து பாதை செப்பனிடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம். மேலும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் உரையாடி சுயதொழில் உதவிக்கடனும் சனசமூக நிலையத்தினூடாக பெற்றுக் கொடுத்தவர். இவையெல்லாவற்றிற்கும் மேலாக சரஸ்வதி பூசை போன்ற நிகழ்வு களையும் முன்னின்று நடாத்தியவர். இவை யெல்லாவற்றுக்கும் மேலாக போரூட் நிறுவனத்தின் நூலகத்தை அல்வையூருக்கு கொண்டு வருவதிலும் பெரும் பங்காற்றியவர்.

பாரதிதாசன் சனசமூக நிலையை கனடாக் கிளையும் புவி அண்ணாவும் :

கனடாவில் பாரதிதாசன் சனசமூக நிலையத்திற்கென ஒரு கிளையினை தொடக்கி பல ஆண்டுகளாக அதனைச் செயற்படுத்தி வரும் பெருமைக்குரியவர் புவி அண்ணா. ஆண்டுதோறும் ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடாத்தி நூலக வளர்ச்சிக்காக அன்பளிப்புச் செய்து கொண்டிருக்கின்றார். புதிய இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கான நிதியும் அவரின் முயற்சியினால் தேடப்பட்டது. புவி அண்ணாவிற்கு உதவியாக பல இளைஞர்கள் கனடாவிலும் உறுதுணையாக இருந்து வந்துள்ளனர்.

கனடாக் கிளையினர் இப்போது வருடாவருடம் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றனர். இந்நிகழ்ச்சியின் மூலம் புலம்பெயர்ந்த அல்வை மக்களின் பிள்ளைகள் எங்கள் கலை கலாசாரத்தை பேணி வளர்க்கும் வாய்ப்பினை பெற்றுள்ளனர். எல்லோராலும் புவி அண்ணா என அழைக்கப்படுபவர் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் நம்பிக்கை சொத்து எனக் கூறலாம்.

"எண் என்ப ஏனை எழுத்து என்ப
[இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"

என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கு இணங்க எண்ணையும் எழுத்தையும் எம் மக்களுக்கு அளித்து வரும் பாரதிதாசன் சனசமூக நிலையம் மேன்மேலும் வளர்ந்து பல்லாண்டு காலம் சேவையாற்ற வேண்டும் என வாழ்த்தி இதற்காக உழைத்து வரும் நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இச் சந்தர்ப்பத்தில் என்னுடைய பெற்றோர்களான இளைப்பாறிய ஆசிரியர் அமரர் க. மு. சின்னத்தம்பி, இளைப்பாறிய ஆசிரியை அமரர் சரஸ்வதி சின்னத்தம்பி ஆகிய இருவரையும் நினைவுகூர்ந்து விரைவில் நிலையத்தை பார்க்கக்கூடிய வாய்ப்பு கிடைக்க வேண்டி விடை பெறுகின்றேன்.

பிற்குறிப்பு :

இக் கட்டுரையாசிரியர் நூலக வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்கள், நிர்வாகத்தைக் கொண்டு நடத்தியவர்கள் என தான் அறிந்து வைத்துள்ள நலன் விரும்பிகளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

திரு. ச. திரவியம்
திரு. ஆ. ஜெகநாதன்
திரு. அ. தயேந்திரன் (அமரர்)
திரு. க. பாக்கியநாதன் (அமரர்)
திரு. க. நவரத்தினசாமி
திரு. ச. பத்மநாதன்
திரு. க. சச்சிதானந்தம்
திரு. ஐ. அரியம்
திரு. சி. விவேகானந்தன்
திரு. அ. ஈஸ்வரமோகன்
திரு. சி. சிவகுமார்
திரு. ச. தவராசா
திரு. செ. செல்வராசா
திரு. J.S. நல்லதம்பி (அமரர்)
திரு. சி. தர்மகுலசிங்கம்
திரு. கி. பொன்னம்பலம்
திரு. ந. மகேஸ்வரன்
திரு. வே. சுரேந்திரன் (அமரர்)
திரு. தி. விக்னேஸ்வரன்
திரு. தி. அம்பிகைதாசன் (அமரர்)
திரு. க. புலேந்திரன்

திரு. ஆ. குலநாதன்
திரு. ச. குருபரன்
திரு. சிவமோகன்
திரு. க. சிவபாதசுந்தரம்
திரு. ஞா. அருள்சூசைதாசன்
திரு. சி. சிவகுரு
திரு. ந. நாவழகன்
திரு. க. புவனேந்திரன்
திரு. ம. கனகரத்தினம்
திரு. க. கருணானந்தம்
திரு. வே. திவ்வியநேசன்
திரு. து. ஜெயசிங்கம்
திரு. வி. விக்னேஸ்வரராசா
திரு. வே. கிருஷ்ணமூர்த்தி
திரு. அ. குகேஷ்வரன்
திரு. அ. கோகிலேஷ்வரன்
திரு. த. பேரானந்தம் (அமரர்)
திரு. த. இராஜேஸ்வரன்
திரு. K.S. இரவீந்திரன்

திரு. க. தங்கராசா
திரு. ஆ. கணநாதன்
திரு. மு. கனகசபாபதி
திரு. பெ. கனகசபாபதி (அமரர்)
திரு. சி. சிறீகாந்தன்
திரு. சு. மகாதேவா
திரு. ம. அம்பிகைபாலன் (அமரர்)
திரு. ம. ஈஸ்வரதேவன்
திரு. க. மகேந்திரநாயகம்
திரு. வே. பரமேஸ்வரன்
திரு. செ. சிவசுப்பிரமணியம்
திரு. க. மாணிக்கவாசகர்
திரு. மா. தயாபரன்
திரு. க. தபேந்திரராசா
திரு. க. தங்கராசா
திரு. சு. சற்குணராசா
திரு. க. புஸ்பானந்தம்
திரு. க. இராஜேஸ்வரன்
திரு. மு. கோபாலகிருஷ்ணன்

நூலகம்

மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றென உணர்வதற்கு நூலகங்கள் வேண்டும்.

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புத்திறன் விருத்தி

நகரபிதா நடராஜா அனந்தராஜ்
முன்னாள் அதிபர் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

வளர்ந்து வரும் உலகின் மாற்றங்களுக்கேற்ப எங்களுடைய மாணவர்களும் தமது சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் மாற்றிக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு உலகின் மாற்றங்களுக்கேற்ப மாற்றங்களைக் காட்டாவிட்டால் கால ஓட்டத்தில் எங்களுடைய தனித்துவமும் அழிந்துவிடும். ஆனால் இன்று எமது மாணவர்களிடையே நூல்களை வாசிக்கும் ஆற்றல் குறைந்து வருவதன் காரணமாக மற்றைய மாகாணங்களின் மாணவர்களுடன் மொழித்திறன் விருத்தியில் ஈடுகொடுக்க முடியாமல் போவதால், எமது மாணவர்களிடையே செயற்றிறன் குறைந்ததும், தூரநோக்கற்றதுமான சிந்தனை வளர்ந்து வருவதை இன்று காண்கின்றோம்.

நாங்கள் ஒவ்வொருவரும் செல்லும் பாதைகளைச் சரியாகத் திட்டமிடுவோமாக இருந்தால், நாங்கள் அடையும் பாதையும் சரியானதாக இருக்கும். அவ்வாறு நாங்கள் போகவேண்டிய இடத்தைச் சரியாக அறிந்திருக்காவிட்டால், நாங்கள் போன பாதை வழியாக மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பி வரவேண்டிய நிலையும் ஏற்படலாம். எனவே நீங்கள் செல்லும் வழி சரிதானா....? என்பதை ஆரம்பத்திலேயே தீர்மானிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தாங்கள் சென்றடையவேண்டிய இலக்கு எது என்பதைச் சரியாக அறிந்திருக்கவேண்டும். இதனையே கலாநிதி றொபேட் மேகர் (Dr.Robert Merger) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்தை நன்றாக அறியாவிட்டால், நீங்கள் வேறு இடத்தைச் சென்றடைய நேரிடலாம். அது மட்டுமன்றி நீங்கள் வேறு இடத்தை அடைந்து விட்டீர்கள் என்பதையே அறியாமலும் இருக்கக்கூடும்"

- "கலாநிதி றொபேட் மேகர்"

எமது குழந்தைகளிடையே கற்றல் செயற்பாடு ஆரம்பிக்கப்படும் பொழுதே, அந்தப் பிள்ளைகளுக்கான சரியான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். சிறுவர்களின் ஆரம்பக் கல்வியில் நூல்களின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களைச் சிறந்த வாசிப்பாளர்களாக உருவாக்கிவிட்டால், அவர்கள் செல்லும் பாதையும், சென்றடைய வேண்டிய இடமும் சரியானதாகவே இருக்கும். ஆனால் அண்மைக் காலமாக எமது மாணவர்களிடையே நூல்களை வாசிக்கும் பழக்கமும், அவற்றைக் கிரகித்து வெளிப்படுத்தும் ஆற்றலும் குறைந்து வருகின்ற நிலையில், அவசரமாக அவர்களது நடத்தையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான செயல்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவேண்டும்.

எமது மாணவர்களிடையே வாசிப்புத்திறன் குறைந்தமைக்கான காரணங்கள் :

- மாணவர்களும், பெற்றோரும் வேறு பொழுதுபோக்குகளில் அதிகளவு நேரத்தைச் செலவிடுதல்.
- நேரமின்மையை ஒரு வழமையான காரணமாகச் சொல்லிக்கொள்வது.
- வாசிப்பை ஒரு பழக்கமாக அல்லது நாளாந்த நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொள்ளாமையும் வீட்டில் உள்ள பெரியவர்கள் தமது பிள்ளைகளுடன் குறிப்பிட்டளவு நேரத்திற்காவது உரையாடலை மேற்கொள்ளாது விடுவதாலும் பிள்ளைகளிடையே சொற்களைப் பயன்படுத்தும் தன்மையும் வேறுபடுவதாக Hart and Risley (1996) ஆகிய மொழியியலாளர்கள் குறிப்பிட்டுள்ளமையானது, ஒவ்வொரு பெற்றாரையும் சிந்திக்கத் தூண்டும்.
- இலத்திரனியல் சாதனங்களான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தல், செல்லிடத் தொலைபேசிப் பாவனை போன்றவற்றால் ஏற்படும் நேர விரயம்.
- மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் நீண்ட நேரத்தைச் செலவிடல்.
- நல்ல நூல்கள் கிடைக்காமையும், அவற்றை உசாவுதல் செய்யாமையும்.
- பாடசாலை நூலகங்களுக்கு நூல் கொள்வனவின் பொழுது உசாத்துணை நூல்களுக்கு ஒதுக்கும் பணத்திலும் பார்க்க பயிற்சி நூல்களுக்கும், வினா விடைப் புத்தகங்களுக்கும் அதிகளவிலான பணம் ஒதுக்கப்பட்டு நூலக அலுமாரிகளை நிரப்புவதால் மாணவர்களின் தேடலுக்கான சந்தரப்பம் குறைகின்றது.
- வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் வாசகர் வட்டம், நூல் விமர்சனங்கள் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதில்லை.
- பாடசாலைகளின் நூலகங்கள் ஒரு காட்சிப் பொருளாக மட்டும் இருத்தல். பல பாடசாலைகளில் பெறுமதியான நூல்கள் அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளமை யைக் காணலாம்.
- நவீன கற்றல் கற்பித்தல் கோட்பாடுகளுக்கு அமைவாக மாணவர் மையக் கற்றலுக்கு இடம்கொடுக்காது, ஆசிரியர்கள் போதனா முறைக் கற்பித்தலில் கவனம் செலுத்துவதால், மாணவர்களின் தேடலுக்கு வழி காட்டுவதில்லை.
- அதிபர்களால் நூலகத்திற்கான நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படாததால் மாணவர்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல்.
- பாடசாலை நூலகங்கள் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படல். குறிப்பாக, விருந்தினர்களுக்குத் தேனீர் சிற்றுண்டி உபசாரம் ஆகியவற்றிற்கு ஒதுக்குதல், வசதியான அறையாக இருப்பதால் சில அதிபர்களினால் அவை அலுவலகமாகப் பயன்படுத்தப்படுதல், ஆசிரியர் ஓய்வு அறையாகப் பயன்படுத்துதல் மற்றும் பாடசாலைப் பரீட்சை நேரங்களில் பரீட்சைத் தேவைக்காகப் பயன்படுத்துதல்.
- பல்வேறு வகையான நூல்களை வாசிக்கும் பழக்கம் அருகி வருவதால், மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகள் குறைவாக இருப்பதால் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட முடியாதிருத்தலுடன், விவாத ஆற்றல், நல்வாழ்க்கைப் பழக்கவழக்கங்கள் என்பனவும் குறைவடைந்து செல்கின்றன.

- இவற்றின் பாதிப்புக்களை தமிழ் மொழி நாள் போட்டிகள், கல்லூரியில் நடைபெறுகின்ற பல்வேறு மன்ற நிகழ்ச்சிகள், கல்லூரியின் ஆண்டு மலர்கள் மற்றும் சஞ்சிகை போன்றவற்றில் மாணவர்களின் பங்குபற்றுதல்கள் மிகக் குறைவாகக் காணப்படுவதன் மூலம் காணலாம். ஏனெனில் அகில இலங்கைத் தமிழ்மொழிப் போட்டிகளில் எழுத்தாக்கத் திறன் போட்டிகளைவிட தமிழ் மாணவர்கள் அதிகளவில் கலைத்திறன் போட்டிகளிலேயே பரிசுகளைப் பெற்று வருவதைக் காணலாம்.
- மாணவர்களும் அவர்களது பெற்றார்களும் ஒன்றாக அமர்ந்திருந்து கூடியளவு நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நேரத்தைக் கழிப்பதால், நூல்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பதில் நாட்டமற்றுக் காணப்படுதல்.
- நிகழ்கால வரலாற்றுச் சமபவங்களை எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கக் கூடிய வகையில் ஆவணப்படுத்த (Documentation) முடியாது இருத்தல்.
- ஆக்க இலக்கியங்களை நயக்கும் தன்மை குறைவாக இருத்தல்.
- மாணவர்களின் தேடல் குறைவாக இருப்பதால் கற்றல் செயற்பாட்டில் ஆசிரியர் களிலேயே முழுமையாகத் தங்கி இருப்பதால், தமது கற்றலுக்குத் தேவையான மேலதிக விடயங்களைத் தேடி அறியவேண்டுமென்ற ஆர்வம் இல்லாது இருத்தல்.
- பலருக்கு வாசிப்பில் இடர்ப்பாடுகள் இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. குறிப்பாக ல.ழ.ர.ற போன்ற எழுத்துக்களைக் கொண்ட சொற்களை வாசிப்பதிலும் பேசுவதிலும் இடர்ப்பாடு அடைவதை மாணவர்களிடம் மட்டுமல்லாது வளர்ந்தவர்களிடையேயும் அவதானிக்கமுடிகினறது. வாசிப்பு என்பது மூளையில் நடைபெறும் தொடர்ச்சியான ஒரு படிமுறையாக இருப்பதால், பயிற்சியினூடாகவே வாசிப்பின் வீதத்தை உயர்த்திக் கொள்ளமுடியும்.

இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாது இருக்கும் வகையில் மாணவர்களிடையே வாசிப்புத் திறன் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ளவேண்டும். பெரும்பாலான பாடசாலைகளில் நவீன வசதிகளைக் கொண்ட நூலகங்கள் காணப்பட்டுள்ளபோதும், இன்றும் பல பாடசாலைகளில் நூலகக் கட்டடங்கள் அமைக்கப்படாததால், பாடசாலை அதிபர்கள் ஏதோ ஒரு வகையிலாவது நூலகக் கலாசாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், நூல்களின் பாவனையை அதிகரித்தக் கொள்ளமுடியும். நூலகம் என்பதற்குச் சரியான விளக்கத்தை நூலகச் சங்கம் வெளியிட்ட வரைவிலக்கணம் மூலம் புரிந்து கொள்ளலாம் :

"பாடசாலை நூலக வளநிலையம் என்பது பல்வேறு வகையான ஊடகங்களைச் சேமித்து வைக்கும் ஒரு பௌதீக வெளி அல்ல. அது பாடசாலையின் பண்பாட்டுச் சின்னங்கள், மற்றும் பெறுமானங்களை வெளிப்படுத்தும் நிறுவனமாகவும் இயங்குகின்ற ஒரு அமைப்பாகும். அவற்றின் அணுகுமுறைகள் குழந்தைகளின் நன்நடத்தை, ஆன்மீக மேம்பாடு, மற்றும் அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் சம வாய்ப்புக்களை பெறுவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றது. உலகின் புதிய இலக்கியங்களுக்கும், தகவல்களுக்கும், இளைஞர்களை அறிமுகப்படுத்தும் உள்ளார்ந்த சக்தி மிக்க நிறுவனமாகவும்

இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து நற்பண்புள்ள மனிதர்களாக உயர்த்தும் நிறுவனமாகவும் பாடசாலை நூலகங்கள் விளங்குகின்றன."

- நூலகச் சங்கம்

பாடசாலை நூலகங்களுக்கான பணிக்கூற்று :

"பாடசாலைச் சமூகத்திற்குத் தேவையான கற்றலுக்கான சேவைகள், நூல்கள் மற்றும் ஏனைய வளங்களை வழங்குவதனூடாக ஆழ்ந்து சிந்திக்கக் கூடியவர்களாகவும், எவ்வகையான ஊடகங்களையும் வினைத்திறனுடையதாகப் பயன்படுத்தித் தகவல்களைப் பெற்று, மகிழ்ச்சிகரமான நிறைவான வாழ்வுக்குரிய நற்பிரஜைகளை உருவாக்கும் கற்றல் வளநிலையமாதல்"

பாடசாலை நூலகங்களின் நோக்கங்கள், குறிக்கோள்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

- ☐ செயற்பாட்டு அடிப்படையிலான பாடவிதானத்தைப் பேணுதல்.
- ☐ பாடசாலைச் சமூகத்தின் வசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துதல்.
- ☐ பாடசாலை முகாமைத்துவக் குழுவை வலுவூட்டுவதுடன், தொழில் வாண்மை விருத்தியை விரிவாக்குதல்.
- ☐ போதுமான அளவு நூலகப் புத்தகங்களையும், தளபாடங்களையும் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரிய நூலகர்களையும் வழங்குதல்.
- ☐ மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல்களை, கற்றல் வளநிலையங்களில் இருந்து தேடிப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ☐ வாசிப்புப் பழக்கத்தின் மூலம் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- ☐ மாணவர்களின் மொழித்திறன் மற்றும் சொற் களஞ்சியத்தை மேம்படுத்துதல்.
- ☐ மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கத்திறன் செயற்பாடுகளை வளர்த்தல்.
- ☐ கற்றல்திறன் மற்றும் ஆய்வுத்திறன்களை மேம்படுத்துதல்.
- ☐ ஓய்வு நேரத்தை வினைத்திறன் மிக்கதாகக் கழிப்பதற்கும், மகிழ்வுடன் இருப்பதற்கும் வாசிப்புக் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல்

பாடசாலைகள் மற்றும் அந்தந்தக் கிராம மட்டங்களில் இருக்கும் சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கலாசார அமைப்புக்கள் என்பன மாணவர்களினதும், பெற்றோர்களினதும் வாசிப்புத்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். குறிப்பாக பாடசாலைகளே சிறுவர்களில் வாசிப்புத் திறன் விருத்தியை ஏற்படுத்தக்கூடிய அடிப்படை அலகாகக் காணப்படுவதால், பின்வருவன எல்லாவற்றையுமோ அல்லது சிலவற்றையோ நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்:

1. வாசிப்பு மற்றும் எழுத்தாக்க முகாம்களை (Reading & writing camp) நடத்தி மாணவர்களிடையே வாசிப்புக் கலாசாரத்தை உருவாக்குதல் : மாணவர் குழுக்களைச் சமமான தொகையில் 5 குழுக்களாகப் பிரித்தல். 5 இடங்களில் ஒன்றையொன்று பாதிக்காத வகையில் ஒழுங்குசெய்து ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு வகையான

செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல். உ-ம் : படத்தில் காட்டியது போன்று குழு - 1 இல் பெரிய படங்களுடன் கூடிய கதை நூல்களைத் தெரிவு செய்தல். அதனை பகிர்ந்து வாசித்தல். பின்னர் நாடகமாக நடித்தல். குறு வினாக்களுக்கு விடை அளித்தல் போன்ற செயற்பாடுகளை குழு - 1 இல் மேற்கொள்ளலாம். இதேபோன்று ஏனைய குழுக்களுக்கான முகாம்களிலும் பல்வேறு வகையான செயற்பாடுகளை ஒழுங்கு செய்தலினூடாக மாணவர்கள் விரும்பக்கூடிய வகையில் வாசிப்புத்திறன் பயிற்சியை அறிமுகம் செய்யலாம்.

வாசிப்பு முகாமை நடத்துவதற்குத் திட்டமிடும் பொழுது பின்வரும் மகிழ்வூட்டக்கூடிய சில செயற்பாடுகளையும் உள்ளடக்கலாம் :

- சிறுவர்கள் விரும்பி வாசிக்கக்கூடிய கதை நூல்களைத் தெரிவு செய்தல் (தேவதைக் கதைகள். மாயாஜாலக் கதைகள். மர்மக்கதைகள்....) அதனைப் பகிர்ந்து வாசித்தபின் அவற்றை நாடகமாக நடித்தல்.
- நாட்டார் பாடல்கள் மற்றும் தமிழிசைப்பாடல்களை முதலில் தனித்தனியாக வாசித்தபின், தனித்தும், குழுவாகவும் பாடுதல்
- குறு வினாவிடைப் போட்டிகள்
- இலக்கிய நாடகங்களை நடித்தல்
- கதையில் உள்ள விடயங்களை வாசித்து அதில் உள்ள படங்களைப் பார்த்து வரைந்து, அவற்றிற்கு பொருத்தமான தலைப்பிடுதல் (Cutlines)
- மௌன வாசிப்புக்கான நூல்களைத் தெரிவுசெய்து வாசிப்பின் நுட்பங்களை மேலும் விரிவாக்குதல்

வாசிப்பு அல்லது எழுத்தாக்க முகாமின் மாதிரி அமைப்பு :



''வாசிப்பு மற்றும் எழுத்தாக்கத் திறன் ஊக்குவிப்பு முகாமைத்'' திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும் :-

- வகுப்பில் உள்ள 40 மாணவர்களையும் அவர்களது பெற்றார்களையும் சமமான எண்ணிக்கையில் வரக்கூடிய வகையில் 5 குழுக்களாக்குதல்.
- ஒவ்வொரு முகாமிலும் 8 மாணவர்களும், 8 பெற்றார் பிரதிநிதிகளும் பங்குபற்றும் வகையில் குழுக்களை ஒழுங்குசெய்தல் வேண்டும்.
- 5 குழுக்களுக்குமான இடத்தைத் தெரிவு செய்து ஒவ்வொரு முகாமுக்கும் ஏதாவது பெயர்களைச் சூட்டுதல்.
- ஒவ்வொரு முகாமிலும் வெவ்வேறு வகையான நூல்களைத் தெரிவு செய்து, பல்வேறு விதமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். ஒவ்வொரு தடவையும் முகாம் செயற்பாடுகள் நிறைவடையும்போது, ஒவ்வொரு மாணவர்களும் குறைந்தது 5 நூல்களையாவது வாசித்து முடித்ததுடன், பல்வேறு செயற்பாடுகளையும் செய்து முடிப்பர்.
- ஒவ்வொரு குழுவிலும் வழிகாட்டல் மற்றும் வசதிப்படுத்துனராக பாடசாலையின் ஏனைய ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் உதவிகளைப் பெற்று அவர்களை வளவாளராகச் செயற்பட வைத்தல்.
- தேவையேற்படும் நேரங்களில் குழுவில் இருக்கும் பெற்றார் பிரதிநிதிகள் அல்லது பழைய மாணவிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதுடன், அவர்களுக்குத் தேவையான அறிவூட்டலையும் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் 30 நிமிட இடைவெளியில் இடம் இருந்து வலமாக அசைதல்.
- நேரத்தைக் கணிப்பிடவும், ஒழுங்கமைக்கவும் ஒரு இணைப்பாளர் செயற்படுவார். இதற்கு பழைய மாணவிகள் அல்லது பெற்றார் ஒருவரை அமர்த்துதல்.
- வாசிப்புத் திறன் முகாமில் பல்வேறு திறன்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுவதால், ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான, பின்வரும் வளங்களை (உள்ளீடுகள்) முதல்நாளிலேயே சேகரித்து ஆயத்தப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.
  - ஒவ்வொரு முகாமிலும் பயன்படுத்தப்பட வேண்டிய நூல்கள், மாணவர்களின் நிலை,நோக்கம் ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்து அதன் அடிப்படையில் நூல்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
  - தேவையான அளவு பிறிஸ்ரல் மட்டைகள், பல்வேறு வர்ண பெல்ற் பேனைகள (Felt Pen), கிறேயன் சோக்
  - A – 4 வெள்ளைத் தாள்கள்
  - வெள்ளை டிமை தாள்கள்
  - அடி மட்டம், பேனைகள், ஸ்ரப்பிளர்கள், கத்தரிக்கோல்கள்

இதனைத் திறந்தவெளியில் அல்லது மர நிழல்களின் கீழ் ஒழுங்குசெய்யும் பொழுது மாணவர்கள் ஆர்வத்துடன பங்குபற்றுவது மட்டுமல்லாது, ஏனைய வகுப்பு மாணவர்களுக்கு இடையூறுகள் இல்லாமலும் இருக்கும்.

2. காலத்திற்குக் காலம் நூல் கண்காட்சிகளை ஒழுங்கு செய்து மாணவர்களையும் பெற்றார்களையும் பார்வையிடச் செய்தல். இதனால், அழகிய வர்ணப்படங்கள் கொண்ட பல்வேறு நூல்களைப் பார்வையிடுவதால், நூல்களின் மீது விருப்பம் ஏற்படுவதால் அவற்றைத் தட்டிப்பார்த்து வாசிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும்.

3. நூல் அறிவுப் போட்டிகளை ஒழுங்கு செய்தல். இவ்வாறான போட்டிகளை ஒழுங்கு செய்யும் பொழுது குறித்த பெயர் குறிப்பிட்ட நூல் ஒன்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்து, அதில் இருந்து நூல் அறிவுப் போட்டி நடாத்துவதற்கான கால அவகாசத்தை மாணவர்களுக்கு வழங்குதல். இதனால் இந்த நூலை மாணவர்கள் ஆர்வத்துடன் வாசித்துத் தாமாகவே குறிப்புக்களையும் எடுத்துப் போட்டிகளுக்குத் தயாராவார்கள்.

4. வகுப்பறை மட்டத்தில் சிறிய நூலகங்களை உருவாக்குதல். இதனால் மாணவர்களின் நூலகப் பாவனை மேம்படுத்தப்படுவதுடன், அவர்களின் தேடலுக்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இச் செயல் திட்டத்தை நான்காம் வகுப்பில் இருந்தே நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதில் அந்தந்த வகுப்பு மாணவர்களின்

பெற்றோர்களையும் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். வகுப்பறையின் ஒரு மூலையுடன், பலகைகளால் ஆன புத்தக ராக்கைகளை அமைத்து அவற்றில் அந்தந்த வகுப்பு மாணவர்களுக்கு ஏற்ற வகையிலான நூல்களை வைத்து எந்த நேரமும் அவர்கள் அதனைக் கையாளக்கூடியவாறு சுதந்திரமாக விடுதல். இத்தகைய இராக்கைகளை பலகையினால் அமைத்து வகுப்புச் சுவர்களில் நிரந்தரமாக வைக்கக்கூடியவாறு ஆணிகளினால் இறுக்கமாக அறைந்து விடுதல். இவ்வாவாறான நடைமுறைகளை வகுப்பறை மட்டத்தில் அறிமுகப்படுத்தம் பொழுது, மாணவர்களுக்கு நூல்களின் மீதான விருப்பம் அதிகரிப்பதுடன் நூல்களைப் பராமரிப்பது தொடர்பான பொறுப்புணர்வும், கூட்டுப் பொறுப்பும் அதிகரிக்கும்.



ஒரு பாடசாலையில் 6 ஆம் வகுப்பு மாணவர்களாலும், பெற்றோர் களினாலும் அமைக்கப்பட்ட மூடப்படாத நூல் இராக்கையும், அதனுள் திறந்த நிலையில் வைக்கப்பட்ட நூல்களும்

5. வகுப்பு மாணவர்களின் தரம், ஆற்றல்களுக்கு ஏற்ற வகையில், பொருத்தமான நூல்களைக் கொண்டதாக நூல் பெட்டிமுறைகளை (Book Box) அல்லது நூற்பைகளை (Book Bags) அறிமுகப்படுத்துதல். ஒவ்வொரு வகையான நூல்களையும் வைப்பதற்கு, வெவ்வேறு வர்ணக் கூடைகளைப் பயன்படுத்தலாம். இன்னும் சிக்கனமான வழிகளைக் கையாள வேண்டுமாயின், பெண்களால் பயன்படுத்தமுடியாது எனக் கழித்துவிடப்பட்ட கைப்பைகளைக் கூட நூல்களைத் தரம் பிரித்து வைப்பதற்குப் பயன்படுத்தலாம்.



இத்தகைய செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது பின்வரும் குறிக்கோள்கள் எய்தப்படுகின்றன :

- ஒரு குறித்த வகுப்பில் கற்கும் சகல மாணவர்களும் வாசிப்புத் திறன் விருத்தி மற்றும், ஆக்கத்திறன் விருத்தி என்பவற்றில் உயர்ந்த மட்டத்தை அடைந்து கொள்வர்.
- பெற்றாரிடையே நூலகத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதால், அதனூடாக தமது வீடுகளிலும் சிறிய அளவிலான வீட்டு நூலகங்களை அபிவிருத்தி செய்தல் பற்றிய விழிப்புணர்வை பெற்றோரும் மாணவர்களும் அடைந்து கொள்வர்.
- குறித்த வகுப்பில் கற்கும் மாணவர்களினதும், கற்பிக்கும் ஆசிரியர்களினதும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நூல்களையும், வாசிப்புக்குத் தேவையான ஏனைய சாதனங்களையும் இனங்கண்டு பெற்றுக்கொள்வர்.
- வாசிப்புக் கலாசாரத்தின் மூலம், "அபிவிருத்திக்கான அறிவு" **(K4D- Knowledge for Development)** என்ற சர்வதேச நூலகச் சங்கத்தின் 21 ஆம் நூற்றாண்டு பிரகடனத்திற்கு அமைவாக தம்மை வளர்த்துக்கொள்வர்.
- மாணவர்கள் நூலகக் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதன் மூலம், வகுப்பறை நூலகச் சூழலை மேம்படுத்திக் கொள்வர்.
- வாழ்நாள் நீடித்த கல்வியைப் (Life Long Education) பெறுவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வர்.
- மாணவர்கள் வாசிப்பு மீது ஆர்வத்தை அதிகரித்துக் கொள்வர். வாசிப்பின் மீதான ஆர்வத்தை மேம்படுத்துவதற்கான உரிய செயற்பாடுகளையும் நுட்பங்களையும் அடையாளம் காண்பர்.
- அச்சு ஊடகங்களான செய்தித்தாள்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், மற்றும் ஆண்டு மலர்கள், அறிக்கைகள் மீதான மாணவரின் பிணைப்பை மேம்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துவர்.
- மாணவர்கள் கூட்டாகச் செயற்படும் தன்மையும், நற்பண்புகளும் உடையவராதல்
- சொற்களஞ்சிய விருத்தியைப் பெருக்கிக் கொள்வர்.

கல்விச் செயற்பாட்டின் ஒரு பகுதியாகவே சொற்களஞ்சியப் பெருக்க அறிவு இருப்பதால், மாணவர்கள் முடிந்தவரை தமது வயதுக்கு ஏற்ற அளவிலான சொற்களையாவது அறிந்து வைத்துக்கொள்ள ஆசிரியர்களும் பெற்றார்களும் உரிய வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். இதற்கு வாசிப்பில் ஓரளவு தேர்ச்சி அடைந்தவர்களை மௌன வாசிப்பில் பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு வயதுப் பிள்ளைகளிடமும் வாசிக்கும் வீதம் என்பது அவர்களது வகுப்புக்கு ஏற்றவாறு மாற்றமடைந்து செல்லும் என்ற அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது. அதற்கமைவாக தரம் 1 இல் இருந்து தரம் 12 வரையான மாணவர்களின் வாசிப்பு வீதம் ஒரு நிமிடத்திற்கு எத்தனை சொற்கள் என்ற வகையில் கணிப்பிடப்பட்டு பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவுக்கு அமைவாக ஆறாம் வகுப்பு மாணவர்களின் சொற்களஞ்சிய விருத்தியானது நிமிடத்திற்கு குறைந்தது 195 – 220 வரையானதாக ஆவது இருத்தல் வேண்டும் என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும்

Silent Reading Rates

Grade 1	**60-90**
Grade 2	**85-120**
Grade 3	**115-140**
Grade 4	**140-170**
Grade 5	**170-195**
Grade 6	**195-220**
Grade 7	**215-245**
Grade 8	**235-270**
Grade 9	**250-270**
Grade 12	**250-300**

"பல்வகைத் தன்மையான கற்றல் மற்றும் குறைவான சொற்களஞ்சிய விருத்தி ஆகியவற்றைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு வலுவான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விச் செயற்பாட்டினூடாக அவர்களை வெற்றிபெற்ற சுயாதீனமாகச் சொற்களைக் கற்போராக உருவாக்கலாம்". (Baker,Simmons,Akmeenui-1995)

எழுத்தாக்கத் திறன் மற்றும் வாசிப்பு முகாம்களினூடக மாணவர்கள் அடைந்து கொள்ளும் தேர்ச்சிகள் :

- **சொற்களஞ்சிய விருத்தியைப் பெருக்கிக் கொள்வர். (Vocabulary) :**

அதிக அளவிலான நூல்களை வாசிப்பதன் மூலம் புதியபுதிய சொற்களை அறிந்து கொள்ளும் ஆற்றலை அடைந்துகொள்வர். இதன்மூலம் சொற்களஞ்சிய விருத்தி அதிகரிப்பதால், நினைத்தவுடன் எதையும் பேசவோ அல்லது எழுதவோ ஒருவரால் முடியும். அதிகளவிலான வாசிப்பு ஆற்றல் உள்ளவர்களிடமே ஆழ்ந்த அறிவும், புலமையும் இருக்கும்.

சொற் களஞ்சிய அறிவை உய்ர்த்துவதற்குப் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம் :

1. மாணவர்களை உரத்து வாசிக்கச் செய்தல்.
2. அதன் பின்னர் வாசிக்கப்பட்ட விடயங்களை மனதில் நிலை நிறுத்தவதற்கு, மௌன வாசிப்புக்கான நேரத்தை ஒதுக்கிக் கொடுத்தல்.
3. வாசித்தவற்றைப் பின்னர் தாமாகவே எழுதக்கூடிய வகையிலான சந்தர்ப்பத்தை வழங்குதல்
4. நூலின் அல்லது ஒரு பக்கத்தின் பகுதிகளை திரும்பத்திரும்ப வாசிப்பதன் மூலமும், வாசிப்பவற்றைச் செவிமடுத்தல் மூலமும், மனதில் ஆழப் பதித்தல் (Stahl and Fairbanks 1986)
5. மாணவர்களின் முன்னறிவுடனான தொடர்புகளை ஏற்படுத்தி வாசிப்பிலான தொடர்ச்சியை நிலைநாட்டுதல். (Johnson 1981)
6. ஒத்த ஓசைகளை உடைய மற்றைய சொற்களைத் தொடர்புபடுத்தி வாசித்தல் (Johnson et al. 1986)

- **பல்வேறு நோக்கங்களை நிறைவுசெய்யும் வகையில் வெவ்வேறு வகையான நூல்களை வாசிக்கும் திறனைப் பெற்றுக்கொள்வர் :**

ஒவ்வொருவரின் இரசனையும், தேவைகளும் ஆளுக்கு ஆள் வேறுபடும். வாசிப்புத் திறனில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒருவராலேயே தனது இரசனை அல்லது தேவைக்கு ஏற்ற நூல்களையும் தெரிவுசெய்ய முடியும். இத்தகைய முகாம் செயற்பாடுகளினூடாக ஒரு மாணவன் தன்னிடம் உள்ள ஆற்றலுக்கு ஏற்றவகையிலான செயற்பாடுகளைத் தெரிவு செய்வதுடன், அந்த ஆற்றலை விருத்தி செய்வதற்கு உதவக்கூடிய உசாத்துணை நூல்களையும் பெற்றுக்கொள்வார்.

- **நினைவாற்றலை வளர்த்துக் கொள்வர் (Memory Power) -**

அதிகளவிலான நூல்களை வாசிப்பதன் மூலமும் அவற்றைக் கிரகித்து உள்வாங்கிக் கொள்வதன் மூலமும் ஒருவரின் நினைவாற்றல் அதிகரிப்பதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே சிறுவர்களிடம் நூல்களின் மீது ஆசையையும், படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தையும் ஏற்படுத்தும்பொழுது, அவர்களின் கற்கும் ஆற்றல் அதிகரிப்பதுடன் நினைவாற்றலும் அதிகரிப்பதாக ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

- **படைப்பாற்றலில் விருத்தியடைந்து கொள்வர் (Creative writing) :**

வாசிப்புத் திறன் அதிகரிக்க பிழையற எழுதக்கூடிய எழுத்தாற்றல் அதிகரிக்கும். (Reading Improves Writing Skills) ஒருவரிடம் வாசிப்புத் திறனும் எழுத்தாற்றலும் அதிகளவில் இருக்கும்பொழுது சொற்களஞ்சியப் பெருக்கம் அதிகரிக்கும். அதனூடாகவே ஒருவரின் படைப்பாற்றல் விருத்தி செய்யப்படும். இதன்மூலம் சிறுகதை ஆக்கம், கவிதை, கட்டுரை, நாடக எழுத்துரு ஆக்கம் போன்ற புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடமுடியும்.

- **வினைத்திறன் மிக்க தொடர்பாடலை விருத்தி செய்வர். (Effective Communication)**

நல்ல நூல்களை வாசிக்கும் பொழுதும், அவற்றைக் கிரகிக்கும் பொழுதும் பண்பான வார்த்தைகளைப் பேசவும் கற்றுக் கொள்வர். மிகச் சிறந்த தொடர்பாடலின் மூலம் மிகச்சிறந்த மாணவன் என்ற பாராட்டுக்களையும் பெற்றுக் கொள்ளலாம். வாழ்க்கையில் வெற்றிபெற்ற பலருடைய வாழ்க்கையைப் பார்த்தால் அவர் மிகச்சிறந்த தொடர்பாடல் திறன் உள்ளவராக இருப்பதைக் காணலாம்.

- **பிரச்சினைகளுக்கான சரியான தீர்வை அடையக்கூடிய வகையில் பொருத்தமான தீர்மானம் எடுக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர் (Decision Making):**

அதிகளவிலான நூல்களை வாசித்து அவற்றைக் கிரகித்துப் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வர். இதனால் அத்தகைய நூலறிவு வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களைப் பகுத்தாராயும் தன்மையைக் கொடுக்கும். இதனால் நூலறிவு குறைந்தவர்களை விட இவர்களால் இலகுவில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் காணமுடியும்.

- **பகிர்ந்து வாசித்தல், உரத்து வாசித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் மூலம் மொழி விருத்தியில் உயர்ந்த அடைவு மட்டத்தைப் பெற்றுக் கொள்வர் (Language Ability)**

பகிர்ந்து வாசித்தல் என்பது ஆசிரியர் அல்லது ஒரு மாணவன் நூலின் பகுதிகளை மேலோட்டமாகக் காட்டி, அவை தொடர்பாக நூலின் முழுப்பகுதியையும் கலந்துரையாடிய பின்னர் நூலின் பகுதிகளை வாசித்தல். பின்னர் இரண்டாவது தடவையாக நூலை வாசிக்கத் தொடங்கும்பொழுது, அதே நேரத்தில் சமாந்தரமாக ஏனைய மாணவர்களும் சேர்ந்து வாசித்தலைக் குறிக்கும். இம் முயற்சியில் நன்கு பழக்கப்பட்ட மாணவர்கள் பின்னர், உரத்து வாசித்தல் (Loud Reading) பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

உரத்து வாசித்தல் பயிற்சியின் அனுகூலங்கள்

- குரல் நாண் விரிவடையும்.
- மனதை ஒருமுகப்படுத்துதல்.
- எழுத்துக்களைச் சரியான முறையில் இனங்காணல்.
- சொற்களின் உச்சரிப்புக்கள் தெளிவாக இருக்கும்.

- **அதிகளவிலான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் (More opportunities) :**

உயர்ந்த வாசிப்பு மட்டத்தையும், எழுத்தாக்கத் திறனையும் கொண்டவர்கள், இத் திறன்களை விருத்தி செய்யாத ஏனையவர்களை விட பாடசாலைகளிலோ அல்லது பணியிடங்களிலோ அதிக அளவிலான வாய்ப்புக்களை உடையவர்களாகக் காணப்படுவதாக வாசிப்பு மேம்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன.

- **நுணுக்கமாகச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றலைக் கொண்டிருப்பர் (Critical Thinking)**

சிறுவர்களுக்கான டிஜிற்றல் மீடியா நிறுவனத்தின் பணிப்பாளராக இருக்கும் பேராசிரியர் பற்றீசியா கிறீன்பீல்ட் அவர்கள். (Professor Patricia Greenfield, director of the Children's Digital Media Center at UCLA)

"டிஜிற்றல் ஊடகத்துறையின் வளர்ச்சியானது, சிறுவர்களின் நுணுக்கமாகவும் கருத்தூண்றியும் சிந்தித்து மதிப்பிடக்கூடிய அனைத்துத் தகவல் மூலங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றல்களைக் குறைத்துவிடுகின்றன. நுணுக்கமாகச் சிந்திக்கும் ஆற்றலானது எந்த ஒரு விடயத்தையும் விரைவாக விளங்கிக் கொள்ளவும், சொந்த அபிப்பிராயத்தை எடுத்துக் கூறவும் உதவும். எவ்வளவுக்குக் குழந்தைகளிடம் வாசிப்புத் திறனை அதிகரிக்கின்றோமோ, அந்த அளவுக்கு அவர்களின் விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் அதிகரிக்கும்" என்று குறிப்பிட்டமை, சிறுவர்களிடையே சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டுமானால், அவர்களிடையே வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

- **கூட்டாகச் செயற்படும் தன்மையை வளர்த்துக் கொள்வர்.**

பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும்பொழுதும், ஆக்க முயற்சிகளில் ஈடுபடும் பொழுதும் குழுவாகச் சேர்ந்து இயங்குவதால், ஒருவருக்கொருவர் கூட்டாகச் சேர்ந்து இயங்கும் தன்மையை வளர்த்துக்கொள்வர்.

- **வாசிப்பு மற்றும் படைப்பிலக்கியம் என்பவற்றில் மாணவர்களும், பெற்றார்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் பயனுள்ள பொழுதுபோக்குகளில் நேரத்தைக் கழிப்பர்.**

வாசிப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் ஒருவர் எப்பொழுதும் புத்தகங்களுடன் இருப்பதால், அவர் தனிமையாக இருப்பதாகக் கருதமாட்டார். பல்வேறு விடயங்களை வாசிப்பின் மூலமும், எழுதுவதன் மூலமும் பெற்றுக் கொள்வதால், அவருடைய ஒவ்வொரு நிமிடமும் பயனுள்ள பொழுதாகக் கழியும்.

- **சமூகத்தில் நன்மதிப்புடன் வாழும் நிலையை அடைந்து கொள்வர் :**

சமூகத்தில் இடம்பெறும் பொதுநிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்கள், கருத்தரங்குகளில் கற்றவர் அல்லது வாசித்தலினூடாகத் தனது அறிவை வளர்த்துக் கொண்டவர்களை சமூகம் எப்பொழுதும் கௌரவிக்க முன்வரும். இது அவருக்குச் சமூகத்தில் இருக்கும் நன்மதிப்பையும் கௌரவத்தையும் காட்டுகின்றது.

- **ஒருவரின் தர்க்கிக்கும் ஆற்றலையும், நியாயப்படுத்தும் தன்மையையும் மேம்படுத்தல்:**

பல்வேறு வகையான நூல்களை வாசிக்கும் ஒருவரிடம் மற்றையவர்களை விட, ஒவ்வொரு துறை சார்ந்த விடயம் தொடர்பாக தர்க்கிக்கும் திறனும், நியாயப்படுத்தும் தன்மையும் அதிகளவில் காணப்படும்.

- **வாசிப்புக்கள் மன அழுத்தத்தைக் குறைக்கும் :**

நூல்களை வாசிப்பவர்களிடம் மன அழுத்தத்தைக் (Tension) குறைக்கும் சக்தி இயல்பாகவே காணப்படும். அலுவலகத்தில் இருந்தோ அல்லது பாடசாலையில் இருந்தோ வீட்டிற்கு வந்தவுடன் சிலர் தொலைக்காட்சி அலைவரிசைகளைப் போட்டுப் பார்த்தபடி அன்றைய வேலைகளில் ஈடுபடுவர். வேலைத்தளங்களில் அல்லது பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களில் இருந்தும் விடைபெற்று வந்து அதைவிட மிகக் கொடூரமான மன அழுத்தத்திற்குள் தாமாகவே தள்ளப்படுகின்றனர். தொலைக்காட்சிகள் சில நேரங்களில் மனதுக்கு ஒரு ஓய்வை ஏற்படுத்துகின்றன என்றாலும் அவற்றில் ஒளிபரப்பாகும் சில நிகழ்ச்சிகள் குறிப்பாக சில வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகள் மற்றும் நீண்ட தொடர் நாடகங்கள். (Mega series) வன்முறைகளைத் தூண்டும் காட்சிகள் ஆகியவை மேலும் மேலும் மன அழுத்தத்தை அதிகரிப்பதுடன், மனதில் குரூரத் தன்மையையுமல்லவா ஏற்படுத்துகின்றன. உண்மையாகவே மன ஆறுதலை வேண்டி நிற்கும் ஒருவரை தொலைக்காட்சியை நிறுத்தி நல்ல நூலை வாசிப்பதற்கு வழிப்படுத்தும் பொழுது சுகமான அனுபவத்தை நூல்களுடன் பகிர்ந்து கொள்வார்.

இந்தக் கட்டுரை மூலம் மாணவர்களிடையே வாசிப்புத் திறன் விருத்தியை மேம்படுத்துவதற்கான பல்வேறு நுட்பங்கள் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டபோதும், அவற்றை விரிவாக மாணவர்களிடையே கொண்டு செல்லக்கூடிய வகையில், பெற்றோர்களும், ஆசிரியர்களும், சனசமூக நிலையங்களும் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

உறுதி

வாழ்விற் செம்மை அடைதல் வேண்டும் நாமேதம்மில்
வஞ்சம் காட்டி சிலரைத் தாழ்த்தல் தீமை - புவியில்
வாழ்வோர் எல்லாம் சமதர்மத்தால் வாழ்வோர் - மற்றும்
வரிதிற் றாழ்வோர் பேதத்தாளே தாழ்வோர் (உறுதி)

தகவற் சமூகம்
மீண்டும் ஒரு மீள் வாசிப்பு

பேராசிரியர் சபா ஜெயராசா

தொடர்பாடல் நிலையில் சமகாலத்தைய சமூகம் "தகவற் சமூகம்" என்று பெயரிடப்படுகின்றது. இத்துறையில் பல எண்ணக்கருக்கள் எடுத்தாளப்படுகின்றன. தகவலியல், தகவற் கோட்பாடு, தகவற் கொள்கை, தகவல் முகாமை, தகவல் மேலாதிக்கம் என்பவை ஆய்வு நோக்கில் அவ்வப்போது எடுத்தாளப்படுகின்றன.

தகவல் என்பது ஒரு 'கட்டுமை' (Construct). அதாவது, சமூகத்தாலும், ஆக்குவோராலும் கட்டி உருவாக்கப்படுகின்றது. தகவலைக் கட்டுமை செய்வதற்கு அறிவு வேண்டும். அறிவு கல்விச் செயல் முறையோடும் சமூகச் செயல்முறையோடும் இணைந்து நிற்கின்றது.

பொருண்மிய நிலையில் தகவல் ஒரு விற்பனைப் பண்டமாக மாறிவருகின்றது. அந் நிலையில் சந்தை நிலவரங்கள், இலாப நோக்கு முதலியவை அதனுடன் இணைந்து கொள்கின்றன. தகவலின் உற்பத்தி, அதன் விநியோகம், தகவலைக் கையாளல், தகவற் பொதிகள், வன்கலங்கள், மென்கலங்கள், ஆக்கத்துக்குப் பக்கபலமாக இருக்கும் செயற்பாடுகள் என்ற நிலைகளில் பொருண்மியக் கண்ணோட்டம் விரிவடைந்து செல்கின்றது. அவற்றுக்குரிய முதலீடுகளும் இலாபமீட்டலும் பற்றிப் பொருண்மியக் கண்ணோட்டம் கவனத்தைக் கொள்கின்றது.

சமூக வரலாறும் தகவல் வரலாறும் ஒன்றிணைந்தவை. தகவலுக்குத் தனியான வரலாறு உண்டென்பதை நிலைநிறுத்துவோர் அதனை உருவாக்கும் சமூகத்தின் இயல்பை ஆழ்ந்து தரிசிக்கத் தவறி விடுகின்றனர்.

மேற்கூறியவற்றின் எழுபுலத்திலே தகவற் புரட்சியானது சமூகப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதா என்ற வினா எழுப்பப்படுகின்றது. தகவற்புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கும் சமகாலத்தில் எதிர் மறையான சமூக அவலங்களும் வளரத் தொடங்கியுள்ளன. தகவலின் பிரயோகமும் கணினிகளின் ஆட்சியும் பொருள்களின் உற்பத்திச் செலவைக் குறைக்கவில்லை. மாறாகப் பொருள்களின் விலை அதிகரிப்பே உலகெங்கும் நிகழ்ந்து வருகின்றது. அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் உற்பத்திச் செலவும் விலைகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றன. அதிக தொழில்நுட்பச் செயற்பாடுகளுக்கும் கணனி மயப்படுத்தலுக்கும் உட்பட்ட ஆக்கம் பெற்ற மருந்துப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றன.

தகவற் புரட்சியும் தொழில் நுட்பப் புரட்சியும் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமகாலத்தில் உலகில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அந்நிலையில் அவற்றின் பின்னாலுள்ள மேலாதிக்க விசைகளும் சுரண்டற் கோலங்களும் சமூகவியலாளரின் கவன ஈர்ப்பைப் பெறத் தொடங்கியுள்ளன.

அதேவேளை உலகில் "எடுத்துரைக்க முடியாத வறுமை" என்ற பிறிதொரு நிலையும் தோற்றம் பெற்றுள்ளது. வறுமை நிலையிலுள்ளோர் தமது வறுமையை எடுத்துரைக்க முடியாது பெருமளவில் மௌனித்துள்ளனர். அத்துடன் எத்தகைய அழுத்தங்களையும் வெளியே சொல்ல முடியாத "மௌனப் பண்பாடு" என்பதும் பொது மக்களிடத்துப் பரவி வருகின்றது.

"மௌனப் பண்பாடு" என்ற கருத்து வடிவத்தை பிரேசில் நாட்டின் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைச் சூழலை அடியொற்றி போலோ பிரேரி என்பவர் முன்வைத்தார். மூன்றாம் உலக நாடுகளில் மௌனப் பண்பாடு என்பது தொடர்ந்து வளர்ந்த வண்ணமுள்ளது. அனைத்து அழுத்தங் களையும் தாங்கிக் கொண்டு வெளிச் சொல்ல முடியாது வாழும் இயல்பினை தகவல் பரிமாற்றம் உடைத்து வருவதில் எத்துணை வெற்றிப்பேறுகள் நிகழ்த்தியுள்ளது என்பது கேள்விக்குரியதாகின்றது.

தகவற் புரட்சியினை நாடுகளுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதா அல்லது உடைமையாளருடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதா என்ற வினாவும் உண்டு. எந்த நாடு அதிக அளவு தகவல்களைக் களஞ்சியப் படுத்தியும் விநியோகித்தும் வருகின்றதோ அதுவே செல்வந்தநாடு என்ற அடையாளப் படுத்தலும் முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறு அடையாளப்படுத்தும் பொழுது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்ற கண்டறி வினாவும் எழுப்பப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது நாடுகளின் எல்லைகளைத் தகர்த்து வருகின்றது. கோள மயமாக்கல் விரைந்து பரவலுற்றுவரும் நிலையில் சமூகத்தின் அடுக்கமைவில் "நிலை குலைதல்" ஏற்படவில்லை. சமூக அடுக்கமைவு தகவலின் மீப் பெருக்கநிலையில் மேலும் பராமரிக்கப்பட்டும் வலிமையாக்கப்பட்டும் வருகின்றது. கல்விச் செயற்பாடுகளும் தகவற் செயற்பாடுகளும் சமூக அடுக்கமை வை மீளமீள உருவாக்கும் வகையில் இயங்கிய வண்ணமுள்ளன. சமூக ஏற்றத் தாழ்வுகள் மீண்டெழும் வகையில் அவை செயற்படுகின்றன.

முன்னர் ஒஸ்கார் வைல்டு அவர்கள் கூறிய கருத்து மீள எடுத்தாளப்படுகின்றது. "எல்லா விதமான தகவல்களும் எங்களிடம் உண்டு. ஆனால் நாங்கள் தெரிந்து வைத்திருப்பது பொருளற்ற செய்திகளே" தகவற் சமூகம் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என்பதை மேற் கூறிய கூற்று முன்னெடுக்கின்றது.

தகவற் சமூகத்தோடு இணைந்த ஓர் எண்ணக்கருவாக இணைப்பியம் (Connectivity) அமைகின்றது. தகவல் இணைப்பு கள் நீர்ம்மைப் பண்புடன் பரந்து செல்வதற்கு இணைப்பு ஏற்பாடுகள் துணை செய் கின்றன. மனித நடத்தைகள் "இணைப்பு களுடன் இணைந்தவையாக" மாற்றமடை வதற்குத் தகவல் தொழில்நுட்பம் தீவிர பங்களிப்பைச் செய்யத் தொடங்கியுள்ளது. அந்நிலையில் ஏற்கனவே கட்டமைப்புச்

செய்யப்பட்ட நடத்தை வாத உளவியலை மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மேலைப்புல ஆய்வாளர் "தகவல் எழுத்தறிவு" என்ற கருத்தாக்கத்தையும் முன் வைக்கின்றனர். தகவற் சமூகத்தோடு இணைந்து இயங்கிச் செல்வதற்கு உரிய ஆற்றலை அது விளக்குகின்றது. கோட்பாட்டு நிலையிலும் செயல்நிலைகளிலும் தகவற் சமூகத்தின் இயல்புக்கேற்றவாறு இயங்குதலும் துலங்குதலும் தகவல் எழுத்தறிவாகின்றது.

பின்வருவன தகவல் எழுத்தறிவில் உள்ளடக்கப்படுகின்றன.

அ) நூலக எழுத்தறிவு
ஆ) ஊடக எழுத்தறிவு
இ) கணினி எழுத்தறிவு
ஈ) எண்மத் (Digital) தகவல் எழுத்தறிவு
உ) இணைய எழுத்தறிவு
ஊ) சமூக எழுத்தறிவு
எ) திறனாய்வு எழுத்தறிவு

மேற்கூறியவற்றை உள்ளடக்கும் பொழுது, தகவல் எழுத்தறிவு பயனுள்ள தாகவும் அனைத்தையும் உள்ளடக்கிய பண்பு கொண்டதாகவும் அமையும். தகவலைக் கையாளும் திறன்கள் மட்டுமிருந்தால் போதுமானதன்று. சமூக அவலங்களையும் ஒடுக்குமுறைகளையும் ஒழிப்பதற்குரியவாறு துலங்குதல், சமூக நோக்குடைய தகவல் எழுத்தறிவின் சிறப்புப் பரிமாணமாகின்றது.

அந்த எண்ணக்கருவிலே தனியொரு வருக்குரிய திறன்கள் மட்டும் வலியுறுத்தப் படவில்லை. தேடலும், அறிவு மீட்டலும், ஞானச்சுவையும் வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுக்கும் மேலாகச் சுரண்டலற்ற சமூக நீதியை முன்னெடுத்தலும் வலியுறுத்தப் படுகின்றது.

தகவல் என்பது அளவு நிலையில் மட்டுமன்றி, பண்பு நிலையிலும் மேலோங்கியதாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு நிலையிலிருந்து சமூக நீதியைப் பராமரிக்கும் செயற்பாட்டுக்கு நகருதல் வேண்டும். சமூக நீதிக்கு ஊறு விளைவிப்பது "எதிர்மறைத் தகவல்" எனப்படும்.

திட்டமிட்டு எதிர்மறைத் தகவல்களைப் பரப்பும் செயற்பாடுகள் மேலாதிக்க நோக்கிலும் சுரண்டல் நோக்கிலும் மேற் கொள்ளப்படுகின்றன. அந்நிலையில் தகவல் எழுத்தறிவை விளங்கிக் கொள்வதற்கு அதன் பின்புலத்திலமையும் கருத்தியலை யும் கருத்து வினைப்பாட்டினையும் (Discourse) தெரிந்து கொள்ளல் வேண்டும்.

அவற்றை முன்னெடுக்கும் வகையில் தகவல் எழுத்தறிவு இன்னமும் சரியாக விளக்கங் கொள்ளப்படாத நிலையில் இயங்கிக் கொண்டிருத்தலை அத்துறையில் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்ட ஸ்டீபன்ரவுண் குறிப்பிட்டுள்ளார்.

தகவற் சமூகம் பல்வேறு முரண்பாடு களையும் இயக்க நிலை அதிர்வுகளையும் உள்ளடக்கிய சமூகமாகின்றது. பாரிய பொருண்மிய அடிக் கட்டுமானத்தின் வெளிக் கிளம்பலாகவே அச் சமூகம் இயங்கிய வண்ணமுள்ளது என்ற நடப்பியல் மேலும் துலக்கமடைகின்றது.

நவீன சூழலில் தகவற் சமூகமும் அறிவுப் பொருளாதாரமும் தொடர்பான கருத்துக்கள் மேலும் முன்வைக்கப்படு கின்றன. அறிவும், தகவலும் பொருளீட்டும் பண்டங்களாக மேலெழுந்துள்ளன. அந்நிலையில் கல்வி நிறுவனங்களும் நூலகங்களும் தகவல் மற்றும் அறிவின் இருப்புக்களும் அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. நூற் பண்பாடும் நூலகப் பண்பாடும் எழுச்சி கொள்ளத் தொடங்கி யுள்ளன.

நூலகப் பண்பாடு நூல்கள் பற்றிய தகவல்களுடன் இணைந்தது. அறிவிலும் தகவலிலும் இடம்பெற்று வரும் இடைவெளி களைக் கண்டறிதலும் அவற்றை நிறைவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளலும் நூலகப் பயிற்சிகளாக மாறுகின்றன. அந்நிலையில் சரியானதும் பொருத்தமானதுமான அறிவு மூலகங்களின் தேடல் முக்கியத்துவம் பெறத் தொடங்கு கின்றது.

தகவலில் இருந்து அறிவு மேலெழுத லால் மாறுபட்ட தகவல்களின் ஒப்பு நோக்கல் தேவை வளர்ச்சியடைகின்றது. சமூக உறுப்பினர் மாறுபட்ட தகவல்களை ஒப்பு நோக்கல் செய்வோராக மாற்றமடைந்த வண்ணமுள்ளனர்.

தகவலை ஒப்பீடு செய்தல், ஒழுங்கமைத்தல், வழுக்களை நீக்குதல், பகுத்தமைத்தல், தொகுத்தல் முதலான செயற்பாடுகள் வழியாகத் தகவல் தளத்திலிருந்து அறிவுத் தளத்தை நோக்கி மேலெழமுடியும். தகவல் என்பது அறிவுப் பயணத்தின் அடிப்படையேயன்றி அது மட்டும் அறிவாகாது. அறிவுத் தளத்திலிருந்து மேலும் நகருதல் வேண்டும். அத்தகைய நகர்ச்சியே மேலான விளைவுகளை ஏற்படுத்த வல்லது. அந்த நிலை மேலான அறிவு என்றும் ஞானம் என்றும் குறிப்பிடப்படும்.

தகவல் மற்றும் அறிவுச் சமூகம் பொய்ம்மைகளைக் கண்டறிதலை முன்னெடுக்கின்றது. பொய்ம்மையாக்கமும் பொய்ம்மைகளைக் கண்டறிதலும் தொடர்ச்சியாக நிகழ்கின்றன. நூலியங்கள் (Texts) கட்டுமானக் குலைப்புக்கு உட்படுத்தப்படுதல் கோட்பாட்டு நிலையிலே வற்புறுத்தப்படுகின்றது. மேலும் கட்டுமானக் குலைப்பு என்ற பின் நவீனத்துவக் கருத்தியல் தீவிர திறனாய்வுக்குரியது.

அதீத தனி மனித வாதத்தை அடியொற்றிய முன்மொழிவுகளே "தகர்ப்பு" அல்லது "கட்டுமானக் குலைப்பு" என்ற கருத்தியல் வழியாகப் பின் நவீனத்துவத் தால் முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் பெரும் தத்துவங்களையும் கோட்பாடுகளை யும் அவர்கள் "பெரும் பெரும் கதையாடல்களாக" (Meta Narratives) வலியுறுத்துதலிலும் உள்நோக்கம் உண்டு.

கருத்தியல் நிலையிலே நூலியங்களை வாசிக்கும் பொழுதும், தகவல்களின் மெய்ம்மையைத் தேடும் பொழுதும் சுரண்டலுக்கு உட்படுவோரிடத்துப் பொதுவான புலக்காட்சியே தோற்றம் பெறும். பொதுக் கருத்துக்களின் அடிப்படையிலே அவர்கள் ஒன்று சேர்வதைச் சிதைத்து சின்னாபின்னமாக்குதல் பின் நவீனத்துவத் தின் உட்பொருளாகின்றது.

தகவற் சமூகமும் வாசிப்பும் தொடர்பான ஆய்வுகளில் மீநூலியம் (Hypertext) மற்றும் மீஊடகம் (Hyper Media) முதலான கருத்து வடிவங்கள் பயன் படுத்தப்படுகின்றன. நூலியங்களுக் கிடையே ஊடு தொடர்புகளையும் பல நிலை இணைப்புக்களையும் ஏற்படுத்தி மீநூலியம் உருவாக்கப்படுகின்றது. அதாவது மரபு வழியாக உருவாக்கப்பட்ட எல்லைகள் தகர்த்து விடப்பட்டுள்ளன.

எழுந்தமானமான தொடர்புகளுக்கும் இணைப்புகளுக்கும் இடமளிக்கும் நெகிழ்ச்சியும் முயற்சியும் கட்டற்ற வகையில் திறந்து விடப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்ச்சியாக தகவலின் அளவும் அசைவும் பெருக்கெடுக்கச் செய்யப்பட்டுள்ளன. கட்டற்ற வகையிலே பிரதியாக்கங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. வலைத்தள ஆக்கங்களும் தொடர்புகளும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பிரவாக மெடுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. மரபு வழியான தொடர்பு இடைவெளிகளும் தடைகளும் அழித்து நீக்கப்பட்டுவருகின்றன.

பிறிதொரு வளர்ச்சியாகத் தகவலுடன் இணைந்த கொள்கையாக்கங்களும் இடம் பெற்று வருகின்றன. மரபுரிமை, பதிப்புரிமை, நுண்மதி உரிமை தொடர்பான கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன. பெரும்பாலான கொள்கையாக்கங்கள் தனிச் சொத்துரிமைக்குப் பலம் சேர்க்கும் வகையிலேதான் உருவாக்கப்பட்டு வருகின்றன. தகவல்களைத் திரட்டுதல், பராமரித்தல், பரப்புதல், வழங்குதல் என்ற செயற்பாடுகளிலே தனி நபர் நலன்களும் சமூக நலன்களும் மோதுகின்றன. அதே வேளை இணக்கப்பாடும் கொள்கின்றன.

மேற் கூறியவற்றைத் தொகுத்து நோக்கும் பொழுது தகவற் சமூகம் பற்றிய ஆய்வும் தேடலும் சமூக வெளியில் மேலும் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகளாக இருத்தல் எழுகோலம் பெறுகின்றன.

ஆண் குழந்தை தாலாட்டு

ஆசை தவிர்க்க வந்த ஆணழகே சித்திரமே
ஓசை யளித்து மலர் உண்ணுகின்ற தேன்வண்டே
உள்ளம் எதிர்பார்த்த ஓவியமே என் மடியில்
பிள்ளையாய் வந்து பிறந்த பெரும் பேறே.

மாணவர் பயனியல்

துறைசார்ந்த ஆய்வியலாளரின்

கட்டுரைகள்

சர்வதேச வர்த்தகமும் றிக்காடோவின் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடும் : ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கம்

த. இராஜேஸ்வரன்
முதுநிலை விரிவுரையாளர், பொருளியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

நாடுகளுக்கிடையில் இடம்பெறும் வர்த்தகம் சர்வதேச வர்த்தகம் எனப்படும். சர்வதேச வர்த்தகம் பல வகைப்படும். ஒன்று, இருபக்க வர்த்தகம். இது இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந்த அடிப்படையில் இடம்பெறும் வர்த்தகத்தினைக் குறிக்கின்றது. இரண்டாவது, பிராந்திய வர்த்தகம். இது ஒரு பிராந்தியத்திற்குள் இருக்கும் நாடுகள் தமக்கிடையே வர்த்தகக் கூட்டுக்களை அமைத்து மேற்கொள்ளும் வர்த்தகத்தினைக் குறிக்கின்றது. மூன்றாவது பல்பக்க வர்த்தகம். இது ஒரு நாட்டிற்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தகத்தினைக் குறிக்கின்றது. இவ்வர்த்தகங்கள் யாவற்றிற்கும் ஒப்பீட்டு நயமே அடிப்படையாக இருப்பதினைக் காண முடிகின்றது.

சர்வதேச வர்த்தகமானது ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்தி மட்டம், வேலை மட்டம், நுகர்வு மட்டம், விலை மட்டம், வர்த்தகக் கட்டமைப்பு, உற்பத்திக் காரணிகளின் வருமானம், தனியார் மற்றும் தேசிய நலன் என்பவற்றில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள் இவற்றிற்கான விளக்கத்தினை அளிக்கின்ற கோட்பாடுகளாகக் காணப்படுகின்றன.

வர்த்தகக் கோட்பாடுகள் சர்வதேச வர்த்தகத்திற்கான அடிப்படையினைக் கூறுகின்றன. சர்வதேச வர்த்தகத்திற்கான அடிப்படையானது நாடுகள் ஏன் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன, ஒரு நாடு என்ன பொருளை ஏற்றுமதி செய்யலாம், எப்பொருளை இறக்குமதி செய்ய வேண்டும், வர்த்தகத்தால் நாடுகள் எத்தகைய நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம் போன்ற அம்சங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. அடம்சிமித் முழுநயமே சர்வதேச வர்த்தகத்திற்கான அடிப்படை எனக் கூற, றிக்காடோ ஒப்பீட்டு நயமே சர்வதேச வர்த்தகத்திற்கான அடிப்படை எனக் கூறுகின்றார். பின்பழம் பொருளியலாளர்கள், ஹெக்ஸர் - ஒலின், பொஸ்னர், வேர்னன் ஆகியோர் முறையே அமையச் செலவு, காரணி அளிப்பு வேறுபாடு, தொழில்நுட்ப மாற்றம், பொருள் வட்டம் ஆகிய எண்ணக்கருக்களில் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தினை விளக்கிய போதிலும் இவர்களும் ஒப்பீட்டு நயமே சர்வதேச வர்த்தகத்திற்கான அடிப்படை என்பதினை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சர்வதேச வர்த்தகம் குறித்த முறையான கோட்பாடு முதன்முதலில் அடம்சிமித்

தினாலேயே முன்வைக்கப்பட்டது. அடம்சிமித் முழு நயத்தினை பின்வருமாறு வரையறுக்கின்றார். குறிப்பிட்ட பொருளை எந்த நாடு அதிகமாக உற்பத்தி செய்கின்றதோ அல்லது குறிப்பிட்ட பொருளில் எந்த நாடு வினைத்திறனைக் கொண்டிருக் கின்றதோ அந்த நாடு அப்பொருளில் முழு நயத்தினை அனுபவிக்கின்றது என்பதாகும். அடம்சிமித் தனது விளக்கத்தில் நாடு களுக்கிடையே வர்த்தகம் ஏற்பட வேண்டு மாயின் ஒரு நாடு தான் உற்பத்தி செய்யும் ஒரு பொருளில் முழு நயத்தினையும் மற்றைய பொருளில் முழு நயமின்மை யினையும் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். இவரது கருத்தின்படி, ஒரு நாடு தான் உற்பத்தி செய்யும் இரு பொருட்களிலும் முழு நயத்தினைக் கொண்டிருந்தால் அல்லது முழு நயமின்மை யினைக் கொண்டிருந்தால் நாடுகளுக் கிடையே சர்வதேச வர்த்தகம் ஏற்பட முடியாது.

றிக்காடோவின் ஒப்பீட்டு நயக் கோட்பாடானது அடம்சிமித்தின் முழு நயக் கோட்பாட்டில் இருந்து முற்றிலும் மாறுபட்ட கோட்பாடாகக் காணப்படுகின்றது. றிக்காடோவின் ஒப்பீட்டு நயக் கோட்பாடானது ஒரு நாடு தான் உற்பத்தி செய்யும் இரு பொருளிலும் முழு நயத்தினைக் கொண்டி ருந்தாலும் அல்லது முழு நயமின்மை யினைக் கொண்டிருந்தாலும் ஒப்பீட்டு நயத்தின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முடியும் எனக் கூறுவதுடன் சர்வதேச வர்த்தகத்தினால் அந்நாடுகள் நன்மையினையும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கூறுகின்றது. இந்த வகையில் தாம் உற்பத்தி செய்யும் எப்பொருளிலும் முழு நயத்தினைக் கொண்டிருக்காத அனேக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தினை விளக்குவதற்கு இக் கோட்பாடு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை இரு வேறு அடிப்படையில் விளக்கலாம். ஒன்று, றிக்காடோவின் விளக்கத்தின் அடிப்படையில். இரண்டாவது, அமைச்செலவின் அடிப்படை யில். றிக்காடோவின் விளக்கத்தின் அடிப்படையில் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை விளக்குவதற்கு முதலில் இரு நாடுகளிலும் குறிப்பிட்ட பொருளுக்கான செலவு வீதத்தினைக் கணிப்பிட வேண்டும். அதன் பின்னர் குறிப்பிட்ட நாட்டில் இரு பொருட்களுக்குமான செலவு வீதங்களை ஒப்பிட வேண்டும். இங்கு குறித்த நாடு எப்பொருளை குறைந்த செலவு வீதத்தில் உற்பத்தி செய்கின்றதோ அந்நாடு அப்பொருளில் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிப்பதாகக் கருதப்படும். அமையச் செலவின் வடிவில் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை விளக்குவதற்கு முதலில் குறிப்பிட்ட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கான அமையச் செலவினைக் கணிப்பிட வேண்டும். அதன் பின்னர் குறிப்பிட்ட பொருளுக்கான அமையச் செலவினை இரு நாடுகளிலும் ஒப்பிட வேண்டும். இங்கு குறிப்பிட்ட பொருளை எந்த நாடு குறைந்த அமையச் செலவில் உற்பத்தி செய்கின்றதோ அந்த நாடு அப்பொருளில் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிப்பதாகக் கருதப்படும். இக்கட்டுரை றிக்காடோவின் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டுடன் தொடர்புடையதாக

இருப்பதனால் றிக்காடோவின் விளக்கத்தின் அடிப்படையிலே இக்கோட்பாடு குறித்து விரிவாக நோக்கப்படுகின்றது.

றிக்காடோ தனது ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை விளக்குவதற்கு பல எடுகோள்களைக் கையாளுகின்றார். அவையாவன : உலகில் இரு நாடுகள் மட்டுமே காணப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் இரு பொருட்களை மட்டும் உற்பத்தி செய்கின்றது. உற்பத்திக்கு ஊழியம் / உழைப்பு என்ற உற்பத்திக் காரணி மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. ஊழியம் இரு நாடுகளிலும் ஒரே தன்மை வாய்ந்தது. ஊழியத்தின் நிரம்பல் நிலையானது. ஊழியம் நாட்டிற்குள் அசையும் நாடுகளுக் கிடையில் அசையமாட்டாது. பொருளின் பெறுமதியானது உழைப்புச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. உற்பத்தியில் மாறா அளவுத்திட்ட விளைவு விதி செயற்படுகின்றது. தொழில்நுட்பம் நிலையானது. வர்த்தகத் தடையில்லை. பொருளாதாரத்தில் நிறை தொழில் மட்டம் காணப்படுகின்றது. பொருட் சந்தையிலும் காரணிச் சந்தையிலும் நிறை போட்டி காணப்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்தின் போது போக்குவரத்துச் செலவு ஏற்படுவதில்லை. வர்த்தகம் பண்டமாற்று முறையின் அடிப்படையிலேயே இடம் பெறுகின்றது.

றிக்காடோ தனது ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினை பின்வரும் எண்கணித உதாரணத்தினைப் பயன்படுத்தி விளக்கு கின்றார். இங்கு ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு அலகு பொருளினை உற்பத்தி செய்வதற்கு ஏற்படும் செலவானது ஊழியத்தின் உழைப்பு மணித்தியாலங் களின் அடிப்படையில் தரப்படுகின்றது.

அட்டவணை 1 : றிக்காட்டோவின் எண் கணித உதாரணம்

நாடுகள்	பொருட்கள்	
	வைன்	துணி
போர்த்துக்கல்	80	90
இங்கிலாந்து	120	100

அட்டவணை 1 இன்படி போர்த்துக்கல் ஒரு அலகு வைனினை உற்பத்தி செய்ய 80 உழைப்பு மணித்தியாலங்களையும் ஒரு அலகு துணியினை உற்பத்தி செய்ய 90 உழைப்பு மணித்தியாலங்களையும் பயன்படுத்துகின்றது. இங்கிலாந்து ஒரு அலகு வைனினை உற்பத்தி செய்ய 120 உழைப்பு மணித்தியாலங்களையும் ஒரு அலகு துணியினை உற்பத்தி செய்ய 100 அலகு உழைப்பு மணித்தியாலங்களையும் பயன்படுத்துகின்றது. எனவே இவ் அட்ட வணையின்படி போர்த்துக்கல் வைனினை யும் துணியினையும் இங்கிலாந்திலும் பார்க்க குறைந்த செலவில் உற்பத்தி செய்கின்றது அல்லது அவ் இரு பொருட் களின் உற்பத்தியில் வினைத்திறனை அனுபவிக்கின்றது. ஆகவே போர்த்துக்கல் தான் உற்பத்தி செய்யும் இரு பொருளிலும் முழு நயத்தினை அனுபவிக்க, இங்கிலாந்து தான் உற்பத்தி செய்யும் இரு பொருளிலும் முழுநயமின்மையினை அனுபவிக்கின்றது எனக் கூறலாம்.

ஏலவே குறிப்பிட்டது போன்று றிக்காடோவின் ஒப்பீட்டு நயக் கோட் பாட்டினை விளக்குவதற்கு முதலில் இரு நாடுகளிலும் குறிப்பிட்ட பொருளுக்கான

செலவு வீதத்தினைக் கணிப்பிட வேண்டும். இச் செலவு வீதங்களாவன பின்வருமாறு கணிப்பிடப்படும். போர்த்துக்கலில் வைனுக்கான செலவு வீதமானது 80 / 120 ஆகும். இங்கிலாந்தில் வைனுக்கான செலவு வீதமானது 120/ 80 ஆகும். அதே போன்று போர்த்துக்கலில் துணிக்கான செலவு வீதமானது 90/ 100 ஆகும். இங்கிலாந்தில் துணிக்கான செலவு வீதமானது 100/ 90 ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட பொருள்கான செலவு வீதங்களின் கணிப்பிடப்பட்ட பெறுமதிகளை கீழ் வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை 2 : கணிப்பிடப்பட்ட செலவு வீதங்கள்

நாடுகள்	பொருட்கள்	
	வைன்	துணி
போர்த்துக்கல்	.67	.90
இங்கிலாந்து	1.50	1.10

இவ் அட்டவணையின்படி போர்த்துக்கல் ஒரு அலகு வைனை இங்கிலாந்தில் வைனின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்களின் .67 சதவீதத்தினைக் கொண்டு உற்பத்தி செய்ய முடியும். இங்கிலாந்து ஒரு அலகு வைனை போர்த்துக்கல் வைனின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்களின் 1.50 சதவீதத்தினைக் கொண்டு உற்பத்தி செய்ய முடியும். அதே போன்று போர்த்துக்கல் ஒரு அலகு துணியை இங்கிலாந்தில் துணியின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்களின் .9 சதவீதத்தினைக் கொண்டு உற்பத்தி செய்ய முடியும். இங்கிலாந்து ஒரு அலகு துணியினை போர்த்துக்கலில் துணியின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்களின் 1.10 சதவீதத்தினைக் கொண்டு உற்பத்தி செய்ய முடியும்.

செலவு வீதங்களைக் கணிப்பிட்டதன் பின் ஒப்பீட்டு நயத்தினை விளக்குவதற்கு குறிப்பிட்ட நாட்டின் இரு பொருட்களுக்கு மான செலவு வீதங்களை ஒப்பிட வேண்டும். அட்டவணை 2 இன்படி போர்த்துக்கல் துணியுடன் ஒப்பிடும்போது வைனையும் இங்கிலாந்து வைனுடன் ஒப்பிடும்போது துணியையும் குறைந்த செலவு வீதத்தில் உற்பத்தி செய்கின்றன. எனவே போர்த்துக்கல் வைனிலும் இங்கிலாந்து துணியிலும் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிக்கின்றன எனக் கூறலாம்.

றிக்காடோவின் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின்படி நாடுகளுக்கிடையே சர்வதேச வர்த்தகம் ஏற்பட வேண்டுமாயின் ஒரு நாடு தான் உற்பத்தி செய்யும் இரு பொருட்களில் எந்தவொரு பொருளின் உற்பத்தியில் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிக்கின்றதோ அப்பொருளின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அதனை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும். அதேவேளை எந்தவொரு பொருளின் உற்பத்தியில் ஒப்பீட்டு நயமின்னையினைக் கொண்டிருக்கின்றதோ அப்பொருளை மற்றைய நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். இந்த வகையில் போர்த்துக்கல் வைன் உற்பத்தியிலும் இங்கிலாந்து துணி உற்பத்தியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்று அவற்றினை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலமும் போர்த்துக்கல் துணியையும் இங்கிலாந்து வைனையும்

இறக்குமதி செய்வதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தால் நன்மையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பீட்டு நயத்தின் அடிப்படையில் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளை இரு வகைப்படுத்தலாம். ஒன்று சிறப்புத் தேர்ச்சியால் கிடைக்கும் நன்மை. மற்றையது பரிமாற்றத்தால் கிடைக்கும் நன்மை. றிக்காடோவின் எண்கணித உதாரணத்தினைப் பயன்படுத்தி சிறப்புத் தேர்ச்சியால் கிடைக்கும் நன்மையினைப் பின்வருமாறு காட்டலாம். றிக்காடோவின் எண்கணித உதாரணத்தின்படி சர்வதேச வர்த்தகத்திற்கு முன்பு ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு அலகினை மட்டும் உற்பத்தி செய்கின்றன. இதனை அட்டவணை வாயிலாக பின்வருமாறு காட்டலாம்.

அட்டவணை 3 : வர்த்தகத்திற்கு முன் உள்நாட்டு மற்றும் உலக உற்பத்தி

நாடுகள்	பொருட்கள்	
	வைன்	துணி
போர்த்துக்கல்	01	01
இங்கிலாந்து	01	01
உலக உற்பத்தி	02	02

சர்வதேச வர்த்தகத்திற்கு முன்பு போர்த்துக்கல் ஒரு அலகு வைனையும் ஒரு அலகு துணியையும் உற்பத்தி செய்தது. அதே போன்று இங்கிலாந்தும் ஒரு அலகு வைனையும் ஒரு அலகு துணியையும் உற்பத்தி செய்தது. இப்பொழுது போர்த்துக்கல் வைனிலும் இங்கிலாந்து துணியிலும் ஒப்பீட்டு நயத்தினை அனுபவிப்பதால் அந்நாடுகள் வர்த்தகத்திற்குப் பின்பு அப்பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்யும். இதன்போது ஒவ்வொரு நாடும் மற்றைய பொருளின் உற்பத்திக்கு பயன்படுத்திய உற்பத்திக் காரணிகளை ஒப்பீட்டு நயத்தினை அனுபவிக்கும் பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தும். இதனையே இங்கு சிறப்புத் தேர்ச்சி என்றபதம் குறிக்கின்றது. வர்த்தகத்திற்குப் பின்பு சிறப்புத் தேர்ச்சியால் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பினை பின்வரும் அட்டவணையில் காட்டலாம்.

அட்டவணை 4 : வர்த்தகத்திற்கு பின் உள் நாட்டு மற்றும் உலக உற்பத்தி

நாடுகள்	பொருட்கள்	
	வைன்	துணி
போர்த்துக்கல்	2.125	00
இங்கிலாந்து	00	2.2
உலக உற்பத்தி	2.125	2.2

இப்பொழுது போர்த்துக்கல் துணி உற்பத்திக்கு பயன்படுத்திய உழைப்பு மணித்தியாலங்களை வைன் உற்பத்திக்குப் பயன்படுத்தின் மொத்தமாக வைன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்கள் (80 + 90) 170 ஆகும். போர்த்துக்கலில் ஒரு அலகு வைன் உற்பத்திக்கு தேவைப்படும் உழைப்பு மணித்தியாலங்கள் 80 அலகுகளாகும். எனவே 170 உழைப்பு மணித்தியாலங்களைக் கொண்டு போர்த்துக்கல் தற்போது 2.125 அலகு வைனினை உற்பத்தி செய்ய முடியும். இதே போன்று இங்கிலாந்து வைன் உற்பத்திக்கு பயன்படுத்திய உழைப்பு மணித்தியாலங்களை துணி உற்பத்திக்குப் பயன்படுத்தின் மொத்தமாக துணி

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உழைப்பு மணித்தியாலங்கள் (100 + 120) 220 ஆகும். இங்கிலாந்தில் ஒரு அலகு துணி உற்பத்திக்கு தேவைப்படும் உழைப்பு மணித்தியாலங்கள் 100 அலகுகளாகும். எனவே 220 உழைப்பு மணித்தியாலங் களைக் கொண்டு இங்கிலாந்து 2.2 அலகு துணியினை உற்பத்தி செய்யும்.

வர்த்தகத்திற்கு முன்பு வைனின் உலக உற்பத்தியானது 2 அலகாகக் காணப்பட்டது. வர்த்தகத்தின் பின்பு இது 2.125 ஆகக் காணப்படுகின்றது. வர்த்தகத்திற்கு முன்பு துணியின் உலக உற்பத்தியானது 2 அலகாகக் காணப்பட்டது. வர்த்தகத்தின் பின்பு இது 2.2 ஆகக் காணப்படுகின்றது. இங்கு வர்த்தகத்திற்கு பின்பு வைனின் உற்பத்தியும் துணியின் உற்பத்தியும் முறையே .125, .2 அலகால் மேலதிகமாக அதிகரித்திருப்பதினைக் காணமுடிகின்றது. எனவே ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின்படி சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் நாடுகளுக்கிடையில் சர்வதேச வர்த்தகம் இடம் பெறுமாயின் அது அந்நாடுகள் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் உலக உற்பத்தியினை அதிகரிக்கும் என்பதனை மேல் உள்ள அட்டவணை காட்டுகின்றது.

அடுத்து பரிமாற்றத்தினால் கிடைக்கும் நன்மையினை நோக்குவோம். வர்த்தகம் இல்லாத நிலையில் உள்நாட்டுப் பரிமாற்ற வீதத்தினை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

அட்டவணை 5 : உள்நாட்டுப் பரிமாற்று வீதம்

போர்த்துக்கல்		இங்கிலாந்து	
வைன்	துணி	வைன்	துணி
1	0.89	1	1.125
1.125	1	0.83	1

வர்த்தகம் இல்லாதபோது போர்த்துக்கலில் உள்நாட்டு பரிமாற்று வீதம் ஒரு அலகு வைனுக்கு 0.89 அலகு துணியாகக் (80/90 = 80/90 = 0.89) காணப்படுகின்றது. அதேவேளை ஒரு அலகு துணிக்கான வைனின் பரிமாற்று வீதம் 1.13 (90 : 80 = 90/ 80 = 1.125) அலகாகக் காணப்படுகின்றது. வர்த்தகம் இல்லாதபோது இங்கிலாந்தில் உள்நாட்டுப் பரிமாற்று வீதம் ஒரு அலகு வைனுக்கு 1:12 அலகு துணியாகக் (120 : 100 = 1200/ 100 = 1.12) காணப்படுகின்றது. அதேவேளை ஒரு அலகு துணிக்கான வைனின் பரிமாற்று வீதம் 0.83 அலகாகக் (100/ 120 = 100/ 120 = 0.83) காணப்படுகின்றது. வர்த்தகத்தின் பின் போர்த்துக்கல் வைனையும் இங்கிலாந்து துணியையும் மட்டும் உற்பத்தி செய்கின்றது எனில் இந்நாடுகள் பரிமாற்றத்தினால் நன்மையினைப் பெற்றுக் கொள்ளுமா இல்லையா என்பது அந்நாடுகளின் உள்நாட்டுப் பரிமாற்று வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது வெளிநாட்டுப் பரிமாற்று வீதம் (வர்த்தக மாற்று வீதம்) உயர்வாக இருக்கின்றதா இல்லையா என்பதில் தங்கியிருக்கும். உள்நாட்டுப் பரிமாற்று வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது வெளிநாட்டு

பரிமாற்று வீதம் உயர்வாக இருந்தால் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடு வதன் மூலம் நன்மையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அட்டவணை 6 : வர்த்தகத்திற்குப் பின்ன ரான பரிமாற்று வீதம்

போர்த்துக்கல்		இங்கிலாந்து	
வைன்	துணி	வைன்	துணி
1	1.23	1.13	1

வர்த்தகத்திற்கு முன்பு போர்த்துக்கலில் ஒரு அலகு வைன் 0.89 அலகு துணிக்காக மட்டும் பரிமாற்றப்பட்டது. வர்த்தகத்திற்குப் பின் போர்த்துக்கல் ஒரு அலகு வைனை இங்கிலாந்து ஏற்றுமதி செய்வதால் 1.23 அலகு துணியினைப் பெற்றுக் கொள்ளலாம். இது உள்நாட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட துணியைவிட அதிகமானதாகும். வர்த்தகத் திற்கு முன்பு இங்கிலாந்தில் ஒரு அலகு துணி 0.83 அலகு வைனுக்காக மட்டும் பரிமாற்றப்பட்டது. வர்த்தகத்திற்குப் பின் இங்கிலாந்து ஒரு அலகு துணியை போர்த்துக்கலுக்கு ஏற்றுமதி செய்வதால் 1.13 அலகு வைனைப் பெற்றுக் கொள்ளலாம். இது உள்நாட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட வைனைவிட அதிகமானதாகும். எனவே நாடுகள் தாம் ஒப்பிட்டு நயத்தினை அனுபவிக்கும் பொருட்களின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அப்பொருட்களை மட்டும் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து ஒப்பீட்டு நயமின்மையினை அனுபவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தினால் கிடைக்கும் நன்மையினை உச்சப்படுத்திக் கொள்ள லாம்.

ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின் அடிப்படையில் நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும்போது அந்நாடுகளின் வளங்கள் முழுமையாகவும் வினைத் திறனாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் உற்பத்தி அதிகரிக்கின்றது. வேலைவாய்ப்பு அதிகரிக்கின்றது. வருமானம் அதிகரிக்கின்றது. சேமிப்பு, முதலீடுகள் அதிகரிக்கின்றன. மேலும் ஏற்றுமதி அதிகரிப்பதனால் வர்த்தகம் அந்நாட்டிற்குச் சாதகமாக அமைகின்றது. அத்துடன் இந்நாடுகள் பரிமாற்றத்தின் மூலம் உள்நாட்டில் உற்பத்தி செய்யாத பொருட் களை மலிவான விலையில் வெளிநாட்டில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதனால் நுகர்வு அதிகரிக் கின்றது. சமூக நலனை உச்சப்படுத்தப்படு கின்றது. மொத்தத்தில் நாடுகள் ஒப்பிட்ட நன்மையின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி இலக்கினை இலகுவில் அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

றிக்காடோவின் கோட்பாடானது. ஒப்பீட்டு நயம் நாடுகளுக்கிடையில் வேறுபடு வதற்கான காரணங்களைக் கூறவில்லை. பொதுவாக காரணிகளின் நிரம்பல் மற்றும் தொழில்நுட்பத்தில் காணப்படும் வேறுபாடு கள் ஒப்பீட்டு நயத்தினைத் தோற்றுவிக் கின்றன. இவை இரண்டும் இல்லாத சந்தர்ப்பங்களில் சுவையில் காணப்படும் வேறுபாடு ஒப்பீட்டு நயத்தினைத் தோற்று விக்கின்றது. இம் மூன்றும் எல்லா நாடு களிலும் ஒத்திருப்பின் அளவுத்திட்ட சிக்கனங்கள் ஒப்பீட்டு நயத்தினை நிர்ணயிக்கின்றது. இத்துடன் நாடுகளின்

பருமன். இடவமைவு மற்றும் சந்தைக் கட்டமைப்பும் ஒப்பீட்டு நயத்தினை நிர்ணயிக்கும் பிற காரணிகளாகக் காணப்படுகின்றன.

உசாத்துணை நூல்கள்

Bowen, H.P., A. Hollande, and JM.Viaene. 1998. Applied International Trade. London : Macmillan Press Ltd.

Dunkley, G. 2004. Free Trade : Myth, Reality and Alternatives. Dhaka : University Press Ltd.

Krugman, P. R. and M.Obstfeld 2007. International Economics : Theory and Policy. Delhi : Dorling Kindersley Pvt. Ltd.

Mannur, H.G. 1995. International Economics. New Delhi : Vikas Publishing House Pvt Ltd.

Jhingan, M.L. 1995. International Economics. 3rd.ed. New Delhi : Konark Publishres Pvt. Ltd.

Porter, M.E. 1998. The Comparative Advantage on Nations. New York : Palgrave

Salvatore, D. 1987. International Economics. 2nd ed. Singapore : McGraw - Hill Book Company.

Sawyer, W.C. and R.L.Sprinkle. 2004. International Economics. New Delhi : Prentic - Hall of India Pvt. Ltd.

Vash, M.C. and S. Singh. 1994. International Economics. 6th ed. New Delhi : Oxford & IBH Publish Co. Pvt. Ltd.

http : //stevesuranovic.blogspot.com/2007/10/lesson-on-comparative-advantage.html

பெண் குழந்தை தாலாட்டு

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேறுவந்த பெண்ணழகே
தாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்கு
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே.

இலங்கையின் தொடக்ககால இலக்கிய முயற்சிகள்

பேராசிரியர் துரை மனோகரன்

தமிழ்நாட்டுக்கு அடுத்ததாகத் தமிழ் மக்கள் மிக நீண்டகாலமாக வாழ்ந்துவரும் நாடாக இலங்கை விளங்குகின்றது. இலங்கையின் தமிழ் இலக்கியம் ஈழத்துப் பூதந்தேவனாரோடு தொடக்கம் பெறுவதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. சங்கச் சான்றோருள் ஒருவராக விளங்கிய ஈழத்துப் பூதந்தேவனார். பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்ற பெயர் களாலும் குறிப்பிடப்படுகின்றார். சில ஆய்வாளர்கள் பூதந்தேவனார் இலங்கை யைச் சேர்ந்தவர்தானா என்பதில் கருத்து வேறுபாடு கொண்டவர்களாக விளங்கு கின்றனர். ஆயினும் சங்ககாலத்தைச் சார்ந்தவராக இலங்கையைச் சேர்ந்த புலவர் ஒருவர் பங்களிப்புச் செய்திருக்க முடியும் என்று கொள்வதில் தவறில்லை. தமிழ்நாடு இலங்கைக்கு மிக அண்மையில் இருப்ப தாலும் தமிழர்கள் நீண்டகாலமாக இங்கு வாழ்ந்து வந்திருப்பதனாலும் இலங்கை யைச் சேர்ந்த ஒரு புலவர் பண்டைத் தமிழ் இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்திருக்க முடியும். ஈழத்துப் பூதந்தேவனார் என்பது, அவர் இலங்கையைச் சார்ந்தவர் என்பதனையும் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்பது, அவர் இலங்கையில் பிறந்து, மதுரையில்தமது வாழ்க்கையைக் கழித்தவர் என்பதையும் உணர்த்துவதாக கொள்ளலாம்.

ஈழத்துப்பூதந்தேவனாரை இலங்கையர் எனக் கொள்வோமாயின், இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த முதல் தமிழ்ப் புலவர், அறிஞர் என அவரே கொள்ளப்படவேண்டி யவர். இவரைப் போன்று வேறு சில புலவர்களும் தமிழ்நாட்டுக்குப் புலம் பெயர்ந்து சென்றிருக்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கலாம். ஆனால், பூதந்தேவனார் 'ஈழத்து' என்ற அடைமொழி பெற்றிருந்தமை யால் அவரை இலகுவாக இலங்கையராக இனங்கண்டு கொள்ள முடிந்திருக்கிறது.

ஈழத்துப் பூதந்தேவனார் பாடியன வாகக் குறுந்தொகை 343, அகநானூறு 88 என்பன காணப்படுகின்றன. மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் பெயரில் குறுந் தொகையில் இரண்டு செய்யுள்களும் (189, 360), நற்றிணையில் ஒரு செய்யுளும் (366), அகநானூற்றில் இரண்டு செய்யுள் களும் (231, 307) இடம்பெற்றுள்ளன.

பூதந்தேவனாருக்கு இன்னொரு பெருமை இருக்கிறது. அவர் குறுந்தொகை யில் (189) கையாண்ட "இன்றே சென்று வருதும் நாளை" என்ற தொடர், கம்பரால் அவரது காவியத்தில் "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" எனப் பயன்படுத்தப் பட்டுள்ளது. கம்பருக்குச் சங்கச் செய்யுள் களில் இருந்த ஈடுபாடு இதனால் புலப்படு கின்றது.

சங்கச் செய்யுள் தொகுப்புகளில் இடம் பெறும் ஈழத்துப் பூதந்தேவனாரின் இரு செய்யுள்கள் குறிஞ்சித் திணை சார்ந்தவை. மற்றையவை பாலைத்திணையைச் சேர்ந் தவை. அவரது செய்யுள்களை நோக்கும் போது, ஆளுமையும், ஆற்றலும் மிக்க புலவராக அவர் திகழ்ந்தார் என்பது புலப்படுகிறது. சங்க இலக்கிய அகத்திணை மரபுக்கேற்ப அழகிய செய்யுள்களை அவர் புனைந்துள்ளார். பூதந்தேவனாரின் செய்யுள் களில் இலங்கையைப் பற்றிய குறிப்புகள் எவையும் இடம்பெறவில்லை. ஈழத்துப் பூதந்தேவனாரின் செய்யுள் போக்குக்கு எடுத்துக்காட்டாக ஒரு செய்யுளை நோக்க லாம்.

"இன்றே சென்று வருதும் நாளைக்
குன்றிழி யருவியின் வெண்தேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
காவியற் செலலின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் குவமே"

ஈழத்துப் பூதந்தேவனார் காலம் பொதுவாக கி.பி. 3ஆம் நூற்றாண்டு என்றே கருதப்படுகின்றது. இது பற்றிப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடும்போது,

"பூதந்தேவனார் பாடிய பசும்பூண் பாண்டியனைப் பாணர், நக்கீரர், மதுரைக் கணக்காயனார் ஆகியோரும் பாடியுள்ளனர். நக்கீரர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனையும் பாடியுள்ளார். அந்த நெடுஞ்செழியன் கி.பி. 210 இல் அரசு கட்டிலேறினான். தோழி கூற்றிலே தலைவ னாகக் குறிக்க மரியாதையொருமையை வழங்கிய பூதந்தேவனார் சங்ககாலத்தின் பின்னெல்லையான கி.பி. 3ஆம் நூற் றாண்டுக்குரியவரென்றே கொள்ளலாம்" என்று கூறியுள்ளார். பேராசிரியர் வேலுப்பிள்ளையின் கருத்து ஏற்கத்தக்க தாகவே உள்ளது.

ஈழத்துப் பூதந்தேவனாரின் இலக்கியப் பணி தமிழ்நாட்டிலேயே இடம்பெற்றமை யால், இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்நிலை பாதிக்கப்பட் டுள்ளது. இலங்கையில் இருந்த இத்தகைய புலவர்கள், யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலம் வரைக்கும் தம்மை வரவேற்கும் ஆதரிக்கும் அரசு போன்ற நிறுவன ரீதியான புரவலர்கள் இந்நாட்டில் இல்லாதிருந்தமை யால் இயல்பாகவே தமிழ்நாட்டின் பால் கவர்ச்சி கொண்டிருந்திருப்பர். ஈழத்துப் பூதந்தேவனாருக்குப் பின், ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருண்ட காலமாகவே விளங்குகின்றன.

பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் வீறுபெற்று வளர்ச்சியுள்ள காலகட்டத்தில், இலங்கை யின் இரு தலங்கள் நாயன்மார் இருவரால் பாடல்பெற்றவையாக விளங்கின. இவற்றுள் திருக்கேதீஸ்வரத்தைச் சுந்தரரும் திருக்கோணேஸ்வரத்தைத் திருஞான சம்பந்தரும் பாடியுள்ளனர். கி.பி. 7, 8 ஆம் நூற்றாண்டுகளில் இவை தமிழ்நாடுவரை புகழ்பெற்ற தலங்களாக விளங்கியுள்ளன என்பதை, இரு நாயன்மார்களாலும் பாடப் பட்டுள்ளமை வாயிலாக உணரமுடிகின்றது. தேவார காலத்தில் இவ்விரு தலங்களும் சிறப்புப் பெற்றிருந்தமையில் இருந்து, அப்பிரதேசங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்து வந்துள்ளமை பற்றியும் தமிழ் மொழி சிறந்தோங்கி விளங்கி வந்துள்ளமை பற்றியும் ஊகிக்க முடிகின்றது. இத்தகைய

காலகட்டத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அனுசரணையான சில முயற்சிகளும் நடந்திருக்கக்கூடும். ஆனால், அவை பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு வாய்ப்பின்றிப் போய்விட்டது.

எவ்வாறாயினும் இலங்கையில் சோழர் ஆட்சியின்போது தமிழ் வளர்ச்சி யுற்றிருந்தது என்பதை, ஆங்காங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ள தமிழ்ச்செய்யுள்கள் உணர்த்து கின்றன. அநுராதபுரம், பதவியா, பண்டு வஸ்நுவர, கோட்டகம முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இவ்வாறு தமிழ்ச்செய்யுள்கள் காணப்படு கின்றன. இவை கி.பி. 9 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையில் எழுந்தவையாகும்.

கி.பி. 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் பொறிக்கப்பட்ட சாசன மொன்றில் காணப்படும் செய்யுள் வணிகக் கணம் ஒன்று பௌத்த விகாரை எழுப்பித்தமையைக் குறிக்கும். அதே வேளை, பௌத்தப் பெரியார் ஒருவரைப் பாராட்டும் முறையில் இச் செய்யுள் அமைந்துள்ளது. நான்கு நாட்டார் கல்வெட்டு என்றும் இது குறிப்பிடப்படுகின்றது.

"போதி நிழலமர்ந்த புண்ணியன்போ [வெவ்வுயிர்க்குந்
தீதி லருள்சுரக்குஞ் சிந்தையா - னாதி
வருதன்மங் குன்றாத மாதவன்மாக் [கோதை
யொருதர்ம பால னுளன்"

என அக் கல்வெட்டின் இறுதிப்பகுதி அமைந்துள்ளது. வெண்பா யாப்பில் அமைந்துள்ள இச் செய்யுள், அக் கால கட்டத்து இலங்கைத் தமிழ்ச் செய்யுள் போக்கை உணர்த்துகிறது.

பதவியாவில் கிடைக்கப்பெற்ற சாசன மொன்றில் இடம்பெறும் தமிழ்ச் செய்யுள் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. சைவக் கோயிலைப் பாடும் இலங்கைத் தமிழ் இலக்கியங்களுள் இலங்கையரால் பாடப்பட்டு இன்று கிடைக்கும் மிகத் தொன்மையான செய்யு ளாகப் பதவியாச் செய்யுள் காணப்படு கின்றது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாகக் கருதப்படும் பண்டுவஸ்நுவரச் சாசனத்தில் இடம்பெறும் தமிழ்ச் செய்யுள் விருத்தப்பாவால் அமைந்துள்ளது. பௌத்த நிறுவனங்கள் சில நிறுவப்பட்டமை பற்றி இச் செய்யுள் குறிப்பிடுகிறது. இச் சாசனச் செய்யுளில் சோதிடக் கலைச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. சோதிட நூலான சரசோதிமாலை அரங்கேறிய தம்பதேனியா வுக்கு அருகில் பண்டுவஸ்நுவர காணப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவை மாத்திரமன்றி, சோழர் இலங்கையை ஆட்சிசெய்த காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் சிலவற்றில் அம்மன்னர்கள் பற்றிய மெய்க்கீர்த்திச் செய்யுள்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. சோழர்களின் மெய்க் கீர்த்திகள் இலங்கையின் வடகிழக்குத் திசையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருகோணமலை, பொலன்னறுவை, பதவியா ஆகிய இடங்களில் முதலாம் இராசராசனின் மெய்க்கீர்த்தி முதல் அதிராசேந்திரனின் மெய்க்கீர்த்தி வரை கிடைத்துள்ளன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, இப் பிரதேசங்களில் தமிழர் பரம்பல் இருந்திருக்கிறது என்பதை உணர முடிகின்றது. தமிழர் வாழாத பிரதேசங்களில் தமிழ்க் கல்வெட்டுகள் இடம்பெற்றிருக்க முடியாது.

கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுகள் முதல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு வரையான சாசனத் தமிழ்ச் செய்யுள்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், அக்கால கட்டத்தில் ஆங்காங்கு உதிரியாகச் சில இலக்கிய முயற்சிகள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. ஆயினும் அக்கால இலக்கிய வளர்ச்சி பற்றி அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைத்தில.

இலங்கையில் தமிழ் இலக்கியங்கள் தொடர்ச்சியாகத் தோன்றுவதற்கு முன்னர், ஆரம்ப கட்டத்தில் சோதிட, வைத்திய நூல்களே தோற்றம் பெற்றன. தம்பதேனியாவிலும் பின்னர் குருநாகலிலும் ஆட்சி புரிந்த நான்காம் பராக்கிரமபாகுவின் காலத்தில் தேனுவரைப் பெருமான் என்ற இயற்பெயர் கொண்ட போசராச பண்டிதர் என்பவர், சரசோதிமாலை என்ற சோதிட நூலை மன்னனின் அவையில் அரங்கேற்றினார். தமது தந்தையின் பெயராகிய சரசோதி என்பதன் அடிப்படையிலேயே தமது நூலுக்குப் போசராச பண்டிதர் சரசோதி மாலை எனப் பெயரிட்டுள்ளார்.

நூலாசிரியர் நூலில் தம்மைப் பற்றி விரிவாகவே குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக, அந்நூலின் சாதகப் படலத்தின் இரண்டாவது பாடலில் போசராசர் தம்மைப் பற்றிக் குறிப்பிடுவதை எடுத்துக் காட்டலாம்.

"செந்திரு வாழு மார்பன் சினவரன் பாத [பத்தன்
சுந்தரத் தரும நூலுஞ் சோதிட நூலுஞ் [செய்தோன்
புந்தியிற் றெளிந்த கல்விச் சரசோதி போச [ராசன்
பைந்தமிழ் விருத்தப் பாலா லோரைநூல் [பகர லுற்றான்"

"சுந்தரத் தரும நூலும் சோதிட நூலுஞ் செய்தோன்" என நூலாசிரியர் குறிப்பிடுவதால், சரசோதிமாலைக்கு முன்னரும் போசராசர் ஓர் அறநூலையும், சோதிட நூலையும் எழுதியிருப்பதை அறிய முடிகின்றது. இவ்விரு நூல்களையும் பற்றி அறிந்த நான்காம் பராக்கிரமபாகு, தனது அரசசபையில் சரசோதிமாலையை அரங்கேற்றச் செய்தான் என்று கருத இடமுண்டு.

இந்நூல் அரங்கேறிய காலகட்டத்தில் வடக்கில் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களின் (ஆரியச் சக்கரவர்த்திகளின்) ஆட்சி நிலவியது. சரசோதிமாலையைத் தனது அரசபையில் அரங்கேற்றிய நான்காம் பராக்கிரமபாகு இவ்வகை வரலாற்றில் சிறந்த மன்னர்களுள் ஒருவனாகக் கருதப்படுகின்றான். சிங்கள இலக்கியத்துக்கும் பௌத்தமதத்துக்கும் அளப்பரிய சேவைகளை இம்மன்னன் ஆற்றியுள்ளான். இத்தகைய ஒரு சிறந்த மன்னனின் அரசவையிலேயே சரசோதிமாலையும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

தமிழ் அறிந்த மன்னனாகவும் தமிழ் நூல் ஒன்றைத் தனது அரசபையில் அரங்கேற்ற இணைந்த பண்பாளனாகவும்

விளங்கிய நான்காம் பராக்கிரமபாகு, போசராச பண்டிதரைப் போற்றிப் பராமரித்த வள்ளலாகவும் விளங்கியிருத்தல் கூடும். இவற்றைக் கருத்தில் கொண்டே நூலின் பல இடங்களிலும் பராக்கிரமபாகு நூலாசிரியரால் போற்றப்படுகின்றான் எனலாம். நூலின் பாயிரத்தில் பராக்கிரமபாகுவைப் போற்றுவதாக அமைந்த செய்யுள்களில் ஒன்று பின்வருமாறு.

"பூமாது மேவு தோளான் பொற்கம லத்து [வாழு
மாமாது சேரு மார்பன் மாமணி நாட [னெங்கோன்
காமானுஞ் செங்கை வள்ளல் கதிரவன் [மரபில் வந்தோன்
பாமாலை சூடு மீளிப் பராக்ரம வாகு பூபன்"

நான்காம் பராக்கிரமபாகுவின் ஏழாவது ஆட்சியாண்டில் இந்நூல், அம்மன்னனின் வேண்டுகோளுக்கேற்ப இயற்றப்பட்டதாக நூலாசிரியர் தெரிவிக்கின்றார். பராக்கிரமபாகு மன்னனே தமிழில் இந்நூலைச் செய்யுமாறு தம்மைக் கேட்டுக்கொண்டதாக நூலாசிரியர் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில், அம்மன்னனின் தமிழ் அபிமானம் போற்றத் தக்கது.

பல்வேறு சோதிட விடயங்களைக் குறிப்பிடும் சரசோதிமாலையின் ஆசிரியர் போசராச பண்டிதர், ஆயுள் பெருகும் மார்க்கம் பற்றியும் சாதகப்படலத்தில் அழகாக ஒரு செய்யுளில் குறிப்பிடுகின்றார்.

"அருந்தவ ராசியாலு மளவுறு முண்டியாலும்
புரிந்தநற் சீலத்தாலும் பூண்டபே [ரன்பினாலும்
மருந்துறு முபாயத்தாலும் வதையுயிர் [காத்தலாலு
மரும்பிணி யிடையூ றின்றி யாயுற [மேறுமாதோ"

இலங்கையில் தோன்றி, இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் காலத்தால் முந்தியது என்ற பெருமை சரசோதி மாலைக்கு உண்டு. இலங்கையின் தொடக்ககால நூல் முயற்சிகளை இவை காட்டுவதாகவும் இந்நூல் விளங்குகின்றது.

உசாத்துணை நூல்கள்

சதாசிவம், ஆ., 1996, ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், கொழும்பு, சாகித்திய மண்டலம்.

போசராச பண்டிதர், குரோதன ஆண்டு, சரசோதி மாலை, மூன்றாம் பதிப்பு : சாகித்திய மண்டலம்.

மனோகரன், துரை., 1977, இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, யாழ்ப்பாணம் - கண்டி கலைவாணி புத்தக நிலையம்.

வேலுப்பிள்ளை, ஆ., 1986, தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நிகழ்தகவின் மூன்று வகைகள்
(Three Types of Probability)

பேராசிரியர் சி. சிறிசற்குணராசா
பீடாதிபதி,
விஞ்ஞான பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

திரு. ஏ. லகீதரன்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கணித புள்ளிவிபரவியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

நிகழ்தகவு எழுமாற்று (Random) இயல்புடன் சம்மந்தப்பட்ட எண்ணக்கருவாகும். இவ்வெண்ணக்கரு கொள்கையானது அடிப்படையில் கணிதத்தின் ஒரு புலமாகக் (Field) காணப்படுகின்றது. நிகழ்தகவுக் கொள்கை இன்று பௌதீகம், மருத்துவம், பொறியியல், சமூக விஞ்ஞானம், வணிகத்துறை மற்றும் விவசாய ஆராய்ச்சி போன்ற பல பரப்புக்களில் வெற்றிகரமாக பிரயோகிக்கப்படுகின்றது. இவ்வெண்ணக்கருவான நிகழ்தகவுக் கொள்கை புள்ளிவிபரவியல் (Statistics) துறையின் அடிப்படையாக அமைகின்றது. மேலும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் போன்று புள்ளிவிபரவியல் எல்லாக் கற்கைநெறிகளிலும் ஒரு அத்தியாவசியமான பாடமாக போதிக்கப்படுகின்றது, நிகழ்தகவு பற்றிய அடிப்படையான அறிவு புள்ளிவிபரவியலின் உள்ளார்ந்த தன்மையை சிறப்பான முறையில் விளங்கிக்கொள்ளவும், உணர்வுபூர்வமாக கற்றறிந்து கொள்ளவும் இன்றியமையாததாகின்றது. இந்தவகையில் பலதுறையைச் சேர்ந்தவர்கட்கும் பயனளிக்கும் வகையில் நிகழ்தகவு பற்றிய அடிப்படையான அம்சங்களை உதாரணங்கள் மூலம் விவரிக்கும் முறையில் இக்கட்டுரை அமைகின்றது.

நிகழ்தகவு பிரச்சினையை மூன்று பிரதான வகைகளாக வகைப்படுத்துவதன் மூலம் அவற்றை நாம் இலகுவாக அணுகமுடியும்.

1. கணக்கிடல் (Counting)
2. கேத்திர கணிதம் (Geometry)
3. அட்சரகணிதம் (Algebra)

1. கணக்கிடல் ரீதியான நிகழ்தகவு (Probability as Counting)

இந்தவகை நிகழ்தகவானது அனேகமாக இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியவாறு இருக்கும். ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கான நிகழ்தகவை *P(நிகழ்ச்சி)* என எடுத்துக்கொள்வோம். இந்த *P(நிகழ்ச்சி)* ஆனது வெற்றிகரமான விளைவுகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு, சமமாக நிகழக்கூடிய விளைவுகளின் மொத்த எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் துணியப்படும்.

எண்ணக்கரு :

$$P(\text{நிகழ்ச்சி}) = \frac{\text{வெற்றிகரமான விளைவுகளின் எண்ணிக்கை}}{\text{மொத்த விளைவுகளின் எண்ணிக்கை}}$$

நிகழ்தகவு பிரசினங்களை தீர்ப்பதற்கு இந்த கணக்கிடல் கோட்பாட்டை பிரயோகிப்பது எவ்வாறு என இரு பிரசினங்களில் எடுத்துப்பார்ப்போம்.

பிரசினம் 1.1 :

ஆறு முகங்களைக் கொண்ட இரண்டு நியம தாயக்கட்டைகள் எறியப்படும் போது மேல் முகங்களில் தோன்றும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 5 ஆக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

தீர்வு :

ஒரு சோடித் தாயக்கட்டைகள் எறியப்படும்போது நிகழக்கூடிய சாத்தியமான விளைவுகளின் எண்ணிக்கையானது $6 \times 6 = 36$ ஆகும். மேல் முகங்களில் தோன்றும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 5 ஆக இருப்பதற்கான விளைவுகளை கீழ் கண்டவாறு பட்டியலிடலாம்.



ஆகவே இந்த பிரசினத்தின் தீர்வானது சுலபமாக பின்வருமாறு பெறலாம்,

$$P(\text{கூட்டுத் தொகை } 5) = \frac{\text{கூட்டுத்தொகை 5 ஆகும் விளைவுகளின் எண்ணிக்கை}}{\text{மொத்த விளைவுகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{4}{36} = \frac{1}{9}$$

இனி சற்று சிந்திக்க வேண்டிய உதாரணம் ஒன்றை பார்ப்போம்.

பிரசினம் 1.2 :

ஒரு பையில் உள்ள 16 மாபிள்களில் 4 நீலமும் 12 பச்சையும் இருக்கின்றன. பையில் இருந்து இரண்டு மாபிள்கள் ஒரே நேரத்தில் எழுமாறாக எடுக்கப்படுகின்றன. இரண்டு மாபிள்களும் நீலமாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

தீர்வு :

இந்தப் பிரசினத்தை நாம் வெவ்வேறு வழிகளில் அணுகலாம் - எல்லா வழிமுறைகளும் கணக்கிடல் முறைமைகளை சார்ந்தவையாக இருக்கும்.

எங்களுடைய முதலாவது முறைத் தீர்வில் இரண்டு மாபிள்களும் ஒரே தடைவையில் எடுப்பதனால் ஒரு பாதகமுமில்லை எனக் கொள்ளலாம். நாம் எதேச்சையாக அவற்றுள் ஒன்றை முதலாவது மாபிள் எனவும் மற்றையதை இரண்டாவது மாபிள் எனவும் அழைக்கலாம். அதில் முதலாவது மாபிள் தெரிந்தெடுப்பதற்கு 16 வழிகளும், இரண்டாவது மாபிள் தெரிந்தெடுப்பதற்கு 15 வழிகளும் இருக்கும். ஆகவே இரண்டு மாபிள்களை பையில் இருந்து எடுப்பதற்கான மொத்த வழிகளின் எண்ணிக்கை $= 16 \times 15 = 240$ ஆகும்.

இவ்வாறே, நீல மாபிள்களில் இருந்து இரண்டை எடுப்பதற்கான வழிகளின் எண்ணிக்கையை நாம் கணக்கிட முடியும். அதாவது அவற்றில் முதலாவது நீல மாபிள் தெரிந்தெடுப்பதற்கு 4 வழிகளும், இரண்டாவது நீல மாபிள் தெரிந்தெடுப்பதற்கு 3 வழிகளும் ஆகும். எனவே பையில் இருந்து இரண்டு நீல மாபிள்களை தெரிந்தெடுப்பதற்கான மொத்த வழிகளின் எண்ணிக்கை $= 4 \times 3 = 12$ ஆகும்.

இப்பொழுது தேவையான நிகழ்தகவை பின்வருமாறு கணிப்போம் :

$$P(2 \text{ நீல மாபிள்கள்}) = \frac{2 \text{ நீல மாபிளை எடுப்பதன் வழிகளின் எண்ணிக்கை}}{2 \text{ மாபிளை எடுப்பதன் வழிகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{12}{240} = \frac{1}{20}$$

இனி மாணவர்களுக்கு சேர்மானத்தில் பரீட்சயம் இருப்பதாக எடுத்துக்கொண்டு இந்த பிரசினத்தை கையாள்வோம். மாபிள்கள் தெரிந்தெடுப்பதில் ஒழுங்கு கருதப்படவில்லை எனில், அவற்றில் இரண்டு மாபிள்களை தெரிந்தெடுப்பதற்கான மொத்த வழிகள் $\binom{16}{2}$ உம், பையிலுள்ள நீல மாபிளிலிருந்து இரண்டை எடுப்பதற்கான வழிகளின் எண்ணிக்கை $\binom{4}{2}$ உம் ஆகும். இதிலிருந்து,

$$P(2 \text{ நீல மாபிள்கள்}) = \frac{2 \text{ நீல மாபிளை எடுப்பதன் வழிகளின் எண்ணிக்கை}}{2 \text{ மாபிளை எடுப்பதன் வழிகளின் எண்ணிக்கை}}$$

$$= \frac{\binom{4}{2}}{\binom{16}{2}} = \frac{\frac{4\times3}{2}}{\frac{16\times15}{2}} = \frac{6}{120} = \frac{1}{20}$$

இந்த பிரச்சினையை, ஒவ்வொரு தடவையிலும் ஒரு மாபிள் எடுப்பதற்கான நிகழ்தகவை கணித்துப் பெருக்குவதன் மூலம் எவ்வாறு தீர்க்கலாம் என்பதை பார்ப்போம். முதலாவது மாபிள் நீலமாக இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{4}{16} = \frac{1}{4}$ ஆகும். முதலாவது மாபிள் நீலமாக இருந்தால், மீதி 15 மாபிள்களில் 3 நீலமாக இருக்கும், ஆகவே இரண்டாவது மாபிளும் நீலமாக இருப்பதற்கான நிகழ்தகவு $\frac{3}{15} = \frac{1}{5}$ ஆகும். இரண்டு மாபிளும் நீலமாக இருப்பதன் நிகழ்தகவானது ஒவ்வொரு எடுத்தலிலும் உள்ள நிகழ்தகவுகளின் பெருக்கமாக இருக்கும்.

$$P(2 \text{ நீல மாபிள்கள்}) = P(1^{\text{வது}} \text{ நீலமாக இருத்தல்}) \times P(2^{\text{வது}} \text{ நீலமாக இருத்தல்})$$

$$= \frac{1}{4} \times \frac{1}{5} = \frac{1}{20}$$

2. கேத்திரகணித ரீதியான நிகழ்தகவு (Probability as Geometry)

முடிவில்லாத பல சந்தர்ப்பங்களில் மொத்த எண்ணிக்கையான நிகழ்ச்சிகளை கணக்கிடுதல் சில வேளைகளில் சாத்தியமற்றதாக இருக்கும். இவ்வாறன சில பிரச்சினைகள் உட்படுவது ஒரு கோட்டுத் துண்டத்தில், அல்லது வெளியில், அல்லது நேரம் போன்ற ஒரு தொடர் மாறியின் குறித்த பெறுமானங்களின் புள்ளிகளை மதிப்பிடுதலிலாகும். இதற்கான ஒரு இலகுவான உதாரணம் பின்வருமாறு :

பிரசினம் 1.3 :

லோரன்ஸ் என்பவர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஓர் கார் தரிப்புத் தொகுதியில் நேரம் 2.30 P.M இற்கும் 4.00 P.M இற்கும் இடையில் அவருடைய காரைத் தரித்தார். அவர் சரியாக அரை மணி நேரத்தின் பின் தரிப்புத் தொகுதியில் இருந்து அவருடைய காரை வெளியே ஓட்டினார். அவர் தரிப்புத் தொகுதியில் இருந்து 4.00 P.M இன் பின் வெளியேறி இருந்ததற்கான நிகழ்தகவு என்னவாக இருக்கும்.

தீர்வு :

நாம் மணித்தியாலங்களை நிமிடங்களாகவும், நிமிடங்களை செக்கன்களாகவும், செக்கன்களை சிறிய சிறிய பின்னங்களாகவும் வகுக்க முடியும். அதிலுள்ள நேரங்களின் கால எண்ணிக்கை எண்ணிடமுடியாதளவு இருக்கும். இவற்றில் லோரன்ஸ் எடுத்துக் கொண்டதும் ஒன்றாகும். நாம் இந்தப் பிரச்சினையை நேரத்தைக் கணக்கிட்டு தீர்க்க முடியாது!

நேரம் தொடர்ச்சியாக இருக்கும், எனவே நாம் வேறு விதமாக இந்தப் பிரச்சினையை சிந்திப்போம்.

லோரன்ஸால் அவ்வழியே ஓட்டப்பட்ட சாத்தியமான நேரங்களை குறித்துப் பார்ப்பதற்கு ஒரு கோட்டுத் துண்டத்தை எடுத்துக் கொள்வோம்.



படத்திலிருந்து நாம் வெற்றிகரமான விளைவுகள், மொத்த விளைவுகளின் துண்டங்களின் நீளங்களை ஒப்பிடுவதன் மூலம், லோரன்ஸ் 4.00 P.M இன் பின் அவ்வழியே ஓட்டியதற்கான நிகழ்தகவை துணிய முடியும்.

$$P(4.00\ \text{P.M இன் பின்}) = \frac{\text{வெற்றிகரமான துண்டத்தின் நீளம்}}{\text{மொத்த துண்டத்தின் நீளம்}}$$

$$= \frac{30(\text{நிமிடங்கள்})}{90(\text{நிமிடங்கள்})} = \frac{1}{3}$$

இப்பொழுது நாம் கேத்திரகணித ரீதியான நிகழ்தகவின் ஒரு உதாரணத்தை பார்த்தோம். இதை பின்வருமாறு ஒரு மையக்கருத்தாக்குவோம்.

எண்ணக்கரு :

ஒரு நிகழ்தகவுக் கணிப்பில் ஒன்று அல்லது மேற்பட்ட தொடர் மாறிகள் உட்பட்டிருக்கும்போது, நாம் கேத்திரகணித பிரதேசங்களின் அளவுகளை ஒப்பிடுவதால் நிகழ்தகவை துணிய முடியும்:

$$P(\text{நிகழ்ச்சி}) = \frac{\text{வெற்றிகரமான பிரதேசத்தின் அளவு}}{\text{மொத்த பிரதேசத்தின் அளவு}}$$

சில வேளைகளில் நாம் ஒப்பிடுவது நீளங்களின் அளவாக இருக்கும், சில வேளைகளில் அவை பரப்புகளாக இருக்கும், சில வேளை அவை கனவளவாக இருக்கும்.

இனி பல தொடர் மாறிகளைக் கொண்ட ஒரு பிரச்சினையை எடுத்துப் பார்ப்போம் :

பிரசினம் 1.4 :

$1 \le x \le 4$ உம் $2 \le y \le 6$ ஆகவும் இருந்தால் $x + y \ge 5$ இற்கான நிகழ்தகவைக் காண்க.

தீர்வு :

இந்தப் பிரச்சினை இரண்டு வேறுபட்ட தொடர் மாறிகளை கொண்டிருப்பதால் சற்று சிக்கலானதாகும். எவ்வாறாயினும் எண்ணக்கரு ஒரே மாதிரியே இருக்கும். நிகழ்தகவை துணிவதற்கு எமக்கு தேவையானவை வெற்றிகரமான பிரதேசமும் மொத்தப் பிரதேசமும் ஆகும். கீழ் உள்ள வரைபில் மொத்தப் பிரதேசமும் பரீட்சிக்கப்பட்டு அவற்றில் வெற்றிகரமான பிரதேசம் நிழற்றப்பட்டுள்ளது:



இங்கு நாம் ஒப்பிட இருக்கும் பிரதேசங்கள் பரப்புக்களாகும். ஆகவே இப்பரப்புக்களை ஒப்பிடுவதன் மூலம் கேட்கப்பட்ட நிகழ்தகவை துணிவோம்.

$$\frac{\text{வெற்றிகரமான பிரதேசத்தின் பரப்பு}}{\text{மொத்த பிரதேசத்தின் பரப்பு}} = \frac{10}{12} = \frac{5}{6}$$

இன்னொரு விதமாக இந்தப் பிரச்சினை வெற்றியளிக்காத பரப்புக்களை கருதுவதன் மூலம் சுலபமாக பின்வருமாறு கணிக்கலாம்.

$$P(\text{வெற்றிகரமான விளைவு}) = 1 - P(\text{வெற்றியளிக்காத விளைவு}) = 1 - \frac{2}{12} = \frac{5}{6}$$

3. அட்சரகணித ரீதியான நிகழ்தகவு (Probability as Algebra)

சில நிகழ்தகவுப் பிரச்சினைகளை அட்சரகணித நுட்பத்தை உபயோகித்து தீர்க்க முடியும், அதேசமயம், வழக்கமான பாடப் புத்தகங்களில் இது அரிதாகவே போதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. நாம் நிகழ்தகவுகளை மாறியாக எண்ணுவதன் மூலம் அடுத்துவரும் பிரச்சினைகளை நோக்குவோமாயின், அட்சர கணித முறையை பிரயோகித்து அந்த மாறிகளின் பெறுமானங்களைக் காணலாம்.

ஒரு நியாயமான சுலப உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம்:

பிரசினம் 1.5 :

யாழ்ப்பணத்தில் அடுத்த திங்கட்கிழமை மழை பெய்வதற்கான நிகழ்தகவானது மழை பெய்யாமல் இருப்பதற்கான நிகழ்தகவின் இரு மடங்கானால், யாழ்ப்பணத்தில் அடுத்த திங்கட்கிழமை மழை பெய்வதற்கான நிகழ்தகவு என்ன.

தீர்வு :

நாங்கள் மழையை கணக்கிடவோ அல்லது தொடர்ச்சியான மாறியாகவோ குறிப்பிடமுடியாது. இருந்தாலும், நாம் அடுத்த திங்கட்கிழமை மழை பெய்வதற்கான நிகழ்தகவு என்ன எனக் குறிப்பிடமுடியும், அதாவது அதன் பெறுமதியை ஒரு மாறியாக எழுத முடியும்.

அடுத்த திங்கட்கிழமை மழை பெய்வதற்கான நிகழ்தகவு x என எடுத்துக் கொள்க. நாம் சொற்களில் தர்க்கிக்கும் பிரச்சினையை இப்பொழுது x இன் உறுப்புக்களிலான ஒரு கணிதப் பிரச்சினையாக மாற்ற முடியும். யாழ்ப்பணத்தில் அடுத்த திங்கட்கிழமை மழை பெய்யும் அல்லது மழை பெய்யாது என்பதிலிருந்து மழை பெய்யாமல் இருப்பதற்கான நிகழ்தகவு $1 - x$ ஆக இருக்க வேண்டும். எனவே நாம் $x = 2(1-x)$ என எடுத்துக் கொள்ளலாம்.

இந்தச் சமன்பாட்டை தீர்த்து $x = \frac{2}{3}$ எனக் காணலாம். அதாவது யாழ்ப்பணத்தில் அடுத்த திங்கட்கிழமை மழை பெய்வதற்கான நிகழ்தகவு $\frac{2}{3}$ ஆகும்.

எண்ணக்கரு :

நீங்கள் நிகழ்தகவுக் கிடையிலான தொடர்புகளை போதுமானளவு அடையாளம் காண முடியுமென்றால், அந்த பிரச்சினையை அட்சரகணிதரீதியாக தீர்க்க முயலலாம்.

இனி சற்று அதிகமாக அட்சர கணிதத் தொடர்புக்குட்பட்ட ஒரு பிரச்சினையை எடுத்துப் பார்ப்போம்.

பிரசினம் 1.6 :

கரன் மற்றும் மதன் எனும் இருவர் ஒரு சோடி கோடாத தாயக்கட்டைகளை மாறி மாறி எறிந்து விளையாடுகிறார்கள். இவ் விளையாட்டில் இரு தாயக்கட்டைகளிலும் மேல் முகத்தில் தோன்றும் இலக்கம் 1 ஆகக் காணப்பட்டால் அவர் வெற்றி பெற்றவராவார். கரன் முதலாவதாக விளையாடத் தொடங்கினால் மதன் விளையாட்டை வெல்வதற்கான நிகழ்தகவு என்ன.

தீர்வு :

கரன் வெல்வதற்கான நிகழ்தகவை h எனவும் மதன் வெல்வதற்கான நிகழ்தகவை m எனவும் எடுத்துக் கொள்வோம்.

இருவரில் ஒருவர் வெற்றி பெறுவதற்கான நிகழ்தகவு 1 ஆக இருப்பதால், $h + m = 1$ எனும் சமன்பாட்டை நாம் எழுதலாம்.

எனினும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்குறிப்பிட்ட சமன்பாடு மட்டும் போதுமானதல்ல.

தீர்வுக்கான பாதை உடனடியாக புலப்படாதபோது இலகுவான உதாரணங்கள் மூலம் அப்பிரச்சினையை அணுகுவது உபயோககரமானதாக இருக்கும். கரன் மற்றும் மதன் ஒவ்வொருவரினதும் வெற்றிக்கான நிகழ்தகவுகள் அவர்களுடைய முதலாவது எறிதல், இரண்டாவது எறிதல் என எறிதல் தொடரும் போது, ஒரு பெருக்கற் தொடரின் கூட்டுத்தொகையாக இருப்பதை பின்வருமாறு அவதானிக்கலாம்.

	வெற்றிக்கான எறிதல் 1		வெற்றிக்கான எறிதல் 2		வெற்றிக்கான எறிதல் 3		...
$h =$	$\frac{1}{36}$	$+$	$\frac{1}{36}\left(\frac{35}{36}\right)^2$	$+$	$\frac{1}{36}\left(\frac{35}{36}\right)^4$	$+$	...
$m =$	$\frac{1}{36}\left(\frac{35}{36}\right)$	$+$	$\frac{1}{36}\left(\frac{35}{36}\right)^3$	$+$	$\frac{1}{36}\left(\frac{35}{36}\right)^5$	$+$	...

பெருக்கற் தொடரைக் கூட்டுவதன் மூலம் h இன் பெறுமதியைக் காணும் அதேவேளை அதற்கிடையே ஒரு புதிய தொடர்பு அறிமுகப்படுத்தப்படுகிறது. இங்கு ஒவ்வொரு எறிதலிலும் கரன் மற்றும் மதன் வெல்வதற்கான நிகழ்தகவுகளுக்கு இடையிலான விகிதமானது ஒரு மாறிலியாகும். அதாவது m ஆனாது $\frac{35}{36}h$ இற்கு சமனாகும்.

இப்பொழுது இரண்டு மாறிகளினுடைய ஏகபரிமாண சமன்பாடுகளின் முறைமையை நாம் கொண்டுள்ளோம் :

$$h + m = 1$$

$$m = \frac{35}{36}h$$

இந்த இரு சமன்பாடுகளை தீர்ப்பதால் $h = \frac{36}{71}$ எனக் கணிக்க முடியும். ஆகவே கரன் முதலாவதாக விளையாடத் தொடங்கினால் மதன் விளையாட்டை வெல்வதற்கான நிகழ்தகவு $m = \frac{35}{36} \times \frac{36}{71} = \frac{35}{71}$ ஆகும்.

உசாத்துணை :

1. http://www.artofproblemsolving.com
2. http://www.cut-the-knot.org/probability.html
3. http://en.wikipedia.org/wiki/Probability

ஆய்ந்து பார்

சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?

ஒரு கூறு கொண்ட தொகுதிகளின் அவத்தைச் சமநிலை

கலாநிதி நா. சிவபாலன்
இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிமுகம்

இக் கட்டுரையானது 2012 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் க.பொ.த.(உ.த) இரசாயனவியலுக்கான பாடத்திட்டத்தின் 13ம் அலகில் (Unit 13) இரண்டாம் தேர்ச்சி மட்டப் பிரிவில் (Competency Level 13.2) உள்ள பாடப்பரப்பை விளக்கும் நோக்கத்தைக்கொண்டது.

ஆங்கில மொழியிலுள்ள பாடத்திட்டத்தின்படி இதனைப் பயிலும் ஒரு மாணவி அல்லது மாணவன் ஒரு கூறை மட்டும் கொண்ட ஒரு தொகுதியின் திரவ - ஆவி சமநிலை பற்றிய விபரங்களை ஆய்ந்து அறிய வேண்டும். ஆனால் விளக்கமான உள்ளடக்கத்தில் திண்மத்தையும் கொண்ட சமநிலைக்குரிய மும்மைப் புள்ளியைப் பற்றியும் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே இந்தப் பிரிவை ஒரு கூறை மட்டும் கொண்டுள்ள ஒரு தொகுதியின் திண்ம, திரவ, ஆவி நிலைகளுக்கிடையிலான சமநிலை பற்றியது எனக் கொள்ளலாம்.

வரைவிலக்கணங்கள்

ஒரு கூறைக் கொண்ட தொகுதி என்று இங்கு கூறப்படுவதால், கூறு என்றால் என்னவென்று நாங்கள் விளக்கவேண்டும். இதன் வரைவிலக்கணம் ஆசிரியருக்கான வழிகாட்டியில் தரப்படாததால் இதைப் பற்றிய விளக்கமான அறிவு க.பொ.த. (உ.த) மாணவர்களுக்குத் தேவை இல்லை என நாம் எடுத்துக் கொள்ளலாம். எனவே க.பொ.த. (உ.த) ஐப் பொறுத்தவரை ஒரு கூற்றுத் தொகுதி என்பது ஒரே ஒரு இரசாயனப் பொருளை மட்டும் (உ - ம் : H_2O) கொண்ட தொகுதி என நாம் எடுத்துக் கொள்வோம்.

நீருக்கு இருக்கக்கூடிய சமநிலைகள்

H_2O ஆனது நான்கு விதமான சமநிலைகளில் இருக்கலாம். அவை கீழே தரப்பட்டுள்ளன.

1. திரவநீர் $\rightleftharpoons$ நீராவி

   இதனை $H_2O(l) \rightleftharpoons H_2O\,(g)$ என எழுதலாம். இங்கு l என்பது திரவம் (liquid) ஐயும், g என்பது வாயு (gas) ஐயும், இதேபோல் s என்பது திண்மம் (solid) ஐயும் குறிக்கும்.

2. பனிக்கட்டி $\rightleftharpoons$ திரவநீர்

   அதாவது $H_2O\,(s) \rightleftharpoons H_2O\,(l)$

3. பனிக்கட்டி $\rightleftharpoons$ நீராவி

   $H_2O(s) \rightleftharpoons H_2O(g)$

இந்தச் சமநிலை இருக்கக்கூடிய ஒன்றா என்று உங்களுக்கு சந்தேகம் தோன்றலாம். குறிப்பிட்ட வெப்பநிலை, அமுக்கங்களில் இது சாத்தியமான ஒன்றுதான்.

கற்பூரமும், பூச்சி உருண்டையும் (naphthalenc balls) அறை வெப்பநிலை, அமுக்கத்தில் திண்ம நிலையிலிருந்து வாயுவாவதை எண்ணிப் பாருங்கள். H_2O இற்கு இது மிகக் குறைந்த வெப்பநிலை, அமுக்க நிபந்தனைகளில் நடைபெறும்.

4. பனிக்கட்டி $\rightleftharpoons$ திரவநீர் $\rightleftharpoons$ நீராவி

$$H_2O(s) \rightleftharpoons H_2O(l) \rightleftharpoons H_2O(g)$$

இம் மூன்றும் ஒன்றாக சமநிலையில் இருப்பதும் நிகழக்கூடிய ஒன்றுதான். ஆனால் இது ஒரு குறிப்பிட்ட வெப்பநிலை, அமுக்கத்தில் மட்டுமே நிகழும். இந்த வெப்பநிலை, அமுக்கத்திற்குரிய வரைபுப் புள்ளிதான் மும்மைப்புள்ளி (triple point) எனப்படும்.

நீருக்குரிய மும்மைப் புள்ளியின் பெறுமானங்கள் வெவ்வேறு அலகுகளில் கீழே தரப்பட்டுள்ளன.

நீரின் மும்மைப் புள்ளி

வெப்பநிலை	அமுக்கம்
273.16 K அல்லது	0.006 atm அல்லது
0.01°C	611.73 Pa* அல்லது
	4.588 torr **

* 1 Pa = 1 Nm^{-2}

** 1 torr என்பது 1 mm Hg நிரல் ஏற்படுத்தும் அமுக்கமாகும். அதாவது பனிக்கட்டி, திரவநீர், நீராவி மூன்றும் ஒன்றாக சமநிலையில் இருப்பது 0.01°C இலும் அமுக்கம் 0.006 atm இலும் மட்டுமே நிகழும் ஒன்றாகும்.

முதலில் திரவநீர் $\rightleftharpoons$ நீராவி சமநிலையைப் பார்ப்போம்.

திரவ – ஆவி சமநிலை

திறந்த பாத்திரமொன்றில் சிறிதளவு நீரை இட்டுவைத்தால் அது ஆவியாகி சற்று நேரத்தில் மறைந்து போவதை அவதானித்திருப்பீர்கள். ஆவி வெளியேறாமல் இப் பாத்திரத்தை மூடி வைப்பீர்களானால் தோன்றிய ஆவி மூலக்கூறுகள் பாத்திரத்தினுள்ளேயே திரவ மட்டத்தின் மேல் இருக்கும்; திரவமும் மறையாது.



படம் 1

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் நீராவியானது இவ்வாறு திரவ நீருடன் சமநிலையில் உள்ளபோது அதன் அமுக்கமும் ஒரு குறிப்பிட்ட அளவாகத்தான் இருக்கும். நீருக்கு 25°C இல் (அதாவது 298 K இல்) இப் பெறுமானம் 0.031 atm ஆகும். இதுவே 25°C இல் நீருக்குரிய நிரம்பலாவி அமுக்கமாகும். இதனை சுருக்கமாக நீரின் ஆவி அமுக்கம் என்றும் கூறலாம். திரவமும் ஆவியும் சமநிலையில் உள்ளபோதுள்ள அமுக்கமே ஆவி அமுக்கம் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

பொருளுக்குப் பொருள் ஆவி அமுக்கப் பெறுமானம் மாறுபடலாம். வேறு சில வெப்பநிலைகளில் நீரின் ஆவி அமுக்கம் வெவ்வேறு அலகுகளில் கீழே தரப்படுகிறது.

நீரின் ஆவி அமுக்கப் பெறுமானங்கள்

T/ °C	அமுக்கம்/ Pa	அமுக்கம்/ torr	அமுக்கம் / atm
0	611.2	4.58	0.006
25	3173.1	23.8	0.031
50	12352.7	92.65	0.122
100	101325	760	1

வெப்பநிலை அதிகரிக்கும்போது மூலக்கூறுகளின் சக்தி அதிகரிப்பதால் கூடிய எண்ணிக்கையான மூலக்கூறுகள் ஆவி நிலையை அடைந்து திரவத்துடன் சமநிலையில் இருக்கும். அதாவது ஆவி அமுக்கம் வெப்பநிலையுடன் அதிகரிக்கும். நீருக்குரிய வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.

திரவ – ஆவி சமநிலை

நீர்



படம் 2

வெவ்வேறு பொருட்களுக்கு இப் புள்ளிகளின் பெறுமானங்களும் வரைபின் சாய்வும் வேறுபடலாம்.

கொதிநிலை (Boiling point)

மேலுள்ள வரைபின்படி வெப்பநிலை அதிகரிக்க ஆவி அமுக்கம் அதிகரிக்கின்றது என்பதை அவதானித்திருப்பீர்கள். ஒரு திறந்த பாத்திரத்தில் நீரை சூடாக்கும்போது ஆரம்பத்தில் திரவ மட்டத்தின் மேல் வளிமண்டல மூலக்கூறுகளும் நீராவி மூலக்கூறுகளும் காணப்படும்.



வெளி அமுக்கம் = வளிமண்டல அமுக்கம்

திரவ மட்டத்தின் மேல் அமுக்கம் = நீராவி மூலக்கூறுகளால் ஏற்படும் அமுக்கம் + அண்மையிலுள்ள வளி மூலக்கூறுகளால் ஏற்படும் அமுக்கம்

படம் 3

வெப்பநிலை அதிகரிக்க திரவ மட்டத்திற்கு அண்மையிலுள்ள நீராவி மூலக்கூறுகளின் எண்ணிக்கை அதிகரித்து ஒரு சந்தர்ப்பத்தில் திரவ மட்டத்திற்கு அண்மையில் நீராவி மூலக்கூறுகள் மட்டுமே காணப்படும். திறந்த பாத்திரமாயிருப்பதால் திரவ மட்டத்திற்கு மேலுள்ள அமுக்கம் வளிமண்டல அமுக்கத்திற்கு சமனாகவே இருக்கும். மேலதிக மூலக்கூறுகள் வளிமண்டலத்துடன் கலந்துவிடும்.

திரவ மட்டத்திற்கு மேல் சிறிது தூரத்திற்கு நீராவி மூலக்கூறுகள் மட்டும் இருக்கும் நிலை வரும்போது, இந்த நீராவி மூலக்கூறுகளின் அமுக்கம் (அதாவது நீரின் ஆவி அமுக்கம்) வெளியமுக்கமான வளிமண்டல அமுக்கத்திற்கு சமனாக வரும். திறந்த பாத்திரமாயிருப்பதனால் நீராவியின் அமுக்கம் வெளியமுக்கத்திலும் கூட முடியாது. எனவே இந்த வெப்பநிலையில் வெப்பநிலை மாறாதிருக்க ஆவியாதல் தொடர்ந்து நடைபெறும். இதுவே நீரின் கொதிநிலையாகும்.

வெளியமுக்கம் (வளிமண்டல அமுக்கம்) குறைந்த மலைப் பிரதேசங்களில் 100^0C இலும் சற்றுக் குறைந்த வெப்பநிலையிலேயே நீரின் ஆவி அமுக்கம் வெளியமுக்கத்திற்கு சமனாக வந்துவிடுகிறது. இதனால் நீர் 100^0C இலும் குறைந்த ஒரு வெப்பநிலையில் கொதிக்கும்.

நீராவி வெளியேறாதவாறு pressure cooker போன்ற ஒரு பாத்திரத்துள் நீரை விட்டு மூடி சூடாக்கும் போது, இங்கு நீராவிக்கு வெளி வளிமண்டலத்துடன் தொடர்பு இல்லாததால், வெளியமுக்கத்திலும் கூடுதலான அமுக்கத்திற்கு நீராவி செல்லலாம். திரவ நீரின் வெப்பநிலையும் 100^0C இலும் அதிகரிக்கலாம். (இதனால்தான் pressure cooker இல் சமையல் விரைவில் நடந்துவிடுகிறது)



படம் 4

100°C இலும் கூடிய சில வெப்பநிலைகளில் நீராவியின் அமுக்கத்தை கீழுள்ள அட்டவணை தருகிறது.

நீராவியின் அமுக்கம்

வெப்பநிலை/ °C	kPa	Torr	atm
104	116.78	876	1.15
110	143.38	1075	1.42
120	198.67	1490	1.96

இதனால்தான் படம் 2 இல் கொதிநிலையிலும் உயர்ந்த வெப்பநிலைகளிலும் வரைபு கீறப்பட்டுள்ளது.

அவதிப் புள்ளி (Critical point)

மூடிய பாத்திரமொன்றுள் நீரை சூடாக்க வெப்பநிலையும் அமுக்கமும் தொடர்ந்து அதிகரிக்கும் என்பதைப் பார்த்தோம். ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையை அடையும்போது. நீர் மூலக்கூறுகள் போதிய அளவு சக்தியைப் பெற்றுவிடுவதால் அவற்றால் தொடர்ந்து ஒடுங்கிய நிலையில் திரவமாக இருக்கமுடியாது. அவை முற்றாக ஆவிநிலைக்கு சென்றுவிடுகின்றன. இந்த நிலை 647.4 K (374.25°C) இற்கு மேல் நிகழ்கிறது.

647.4 K இல் இறுதித் திரவம் காணப்படும். அப்போது இந்த இறுதித் திரவத்துளியுடன் சமநிலையில் இருக்கும் நீராவியின் அமுக்கம் 218.3 atm ஆகும். வெப்பநிலை இதிலும் சற்று அதிகரித்தாலும் அங்கு திரவம் இருக்காது. இதனால் திரவ $\rightleftharpoons$ ஆவி சமநிலையும் இருக்காது.

இந்த வெப்பநிலை நீரின் அவதி வெப்பநிலையாகும். இதற்குரிய நீராவியின் அமுக்கம் அவதி அமுக்கமாகும். வரைபில் இந்த வெப்பநிலை. அமுக்கத்தைக் குறித்துக் காட்டும் புள்ளி அவதிப் புள்ளியாகும். இந்த வெப்பநிலை, அமுக்கத்தில் ஒரு மூல் நீராவியின் கனவளவு அதன் அவதிக் கனவளவாகும்.

வெவ்வேறு பொருட்களுக்கு இப் பெறுமானங்கள் வேறுபடலாம். உதாரணமாக எதனோலின் அவதி வெப்பநிலை 241°C, அதற்குரிய அவதி அமுக்கம் 62.18 atm ஆகும்.

அவதி வெப்பநிலைக்கு மேல் திரவமும் இல்லை. திரவ - ஆவி சமநிலையும் இல்லை என்பதால் திரவ - ஆவி சமநிலையைக் காட்டும் வரைபும் இதனுடன் நின்றுவிடும்.



படம் 5

எனவே 647.4 K இலும் கூடிய வெப்பநிலையில் நீராவி இருந்தால் எவ்வளவு அமுக்கத்தைப் பிரயோகித்தாலும் அது திரவமாகாது.

திண்ம – திரவ சமநிலை

1 atm அமுக்கத்தில் 0^0C இல் திரவ நீரும் பனிக்கட்டியும் சமநிலையில் இருக்கும் என்பது நீங்கள் அறிந்ததே. அமுக்கம் 1 atm ஆக இருக்க வெப்பநிலை 0^0C இலும் சற்றுக் குறைந்தாலும் நீர் முழுவதும் பனிக்கட்டியாக மாறிவிடும். வெப்பநிலை 0^0C இலும் சற்று அதிகரித்தாலோ பனிக்கட்டி முழுவதும் நீராக உருகிவிடும். எனவே நீருக்குரிய திண்ம - திரவ சமநிலை வளையியில் $T = 0^0C$, $p = 1$ atm என்பது ஒரு புள்ளியாகும்.

வெப்பநிலையை 0^0C இலும் சற்றுக் குறைப்பதாக கற்பனை செய்யுங்கள். அப்போது பனிக்கட்டி மட்டுமே காணப்படும். இப்போது வெப்பநிலையை மாற்றாமல் வேறு என்ன செய்தால் திரவம் தோன்றும் என யோசிப்போம்.

பனிக்கட்டி நீரிலும் அடர்த்தி குறைந்தது. எனவே பனிக்கட்டியின் மேல் அமுக்கத்தை அதிகரித்தால் இலச்சற்றலியரின் தத்துவப்படி. அடர்த்தி கூடிய திரவ நீரை நோக்கி சமநிலை நகரும்.

பனிக்கட்டி $\rightleftharpoons$ திரவநீர்
(அடர்த்தி குறைவு) (அடர்த்தி அதிகம்)

எனவே வெப்பநிலை குறைக்கப்படும்போது. அமுக்கத்தை அதிகரிப்பதன் மூலமே பனிக்கட்டி $\rightleftharpoons$ திரவநீர் சமநிலையைத் தொடர்ந்து வைத்திருக்கலாம். எனவே $T < 0^0C$ எனின் அதற்குரிய அமுக்கம் $p > 1$ atm.

திண்ம – திரவ சமநிலை
நீர்



படம் 6

இதிலிருந்து நீருக்குரிய திண்ம - திரவ வளையி குறைந்த வெப்பநிலைப் பிரதேசத்தில் இருக்குமெனவும் எதிர்ச் சாய்வுடையதாக இருக்குமெனவும் அறிந்து கொள்ளலாம் (படம் 6). நீருக்கு மட்டுமே திண்மம் அடர்த்தி குறைந்தாக இருப்பதால் எதிர்ச் சாய்வுள்ள வளையி பெறப்படும். திண்மமானது திரவத்திலும் அடர்த்தி கூடிய பொருட்களுக்கு நேர்ச் சாய்வுடைய வளையியே கிடைக்கும்.

மும்மைப் புள்ளி (Triple point)

இப்போது இவ்விரு வளையிகளையும் (திரவ - ஆவி மற்றும் திண்ம - திரவ) ஒரே படத்தில் கீறுவோம்.



படம் 7

இவ்விரு வளையிகளும் ஒரு புள்ளியில் சந்திக்கும். எனவே அப்புள்ளியில் திண்மம் - திரவம் - ஆவி மூன்றும் சமநிலையில் இருக்கும். இது மும்மைப்புள்ளி எனப்படும். நீருக்குரிய மும்மைப்புள்ளியில் T = 273.16 K ஆகவும் p = 0.006 atm ஆகவும் இருப்பதை இவ் வளையிகளிலிருந்து அறியலாம்.

மும்மைப் புள்ளி பொருளுக்குப் பொருள் வேறுபடும். எதனோலுக்கு மும்மைப் புள்ளியில் $T = 150^0C$, $p = 4.24 \times 10^{-9}$ atm அல்லது 4.3×10^{-3} Pa அல்லது 3.2×10^{-6} torr ஆக காணப்படும்.

திண்ம – ஆவி சமநிலை

மும்மைப் புள்ளியில் திண்மம் - திரவம் - ஆவி மூன்றும் சமநிலையில் இருப்பதால் திண்ம - ஆவி சமநிலைக்குரிய வளையியும் இம் மும்மைப் புள்ளியைச் சந்திக்கும் என்பது தெளிவாகிறது. (திண்ம - ஆவி சமநிலை உண்டு என்பதை ஏற்கனவே பார்த்துவிட்டோம்) மேலும் திண்ம - ஆவி சமநிலை தாழ்ந்த வெப்பநிலை, அமுக்க நிலைகளிலேயே நடைபெறும். ஆவியானது அடர்த்தி குறைந்தது என்பதனால் திண்ம - ஆவி சமநிலை வளையியும் திரவ - ஆவி சமநிலை வளையிபோல் நேர்ச் சாய்வுள்ளதாகவே இருக்கும். இவ்வளவு தகவல்களுடனும் மேலுள்ள படத்தினுள் திண்ம - ஆவி சமநிலை வளையியையும் (TA) இணைத்து படத்தை மீண்டும் வரைவோம்.



படம் 8

முழுமையான சமநிலை வரைபடம்

திண்ம - திரவ சமநிலை வளையி TB ஐ அவதானியுங்கள். ஒரு குறிப்பிட்ட புள்ளி X இல் அதற்குரிய வெப்பநிலையிலும் அமுக்கத்திலும் திண்மமும் திரவமும் சமநிலையிலிருக்கும். இதே அமுக்கத்தில் வெப்பநிலை குறைக்கப்பட்டால் அங்கு திண்மம் மட்டுமே இருக்கும்; வெப்பநிலை அதிகரிக்கப்பட்டால் அங்கு திரவம் மட்டும் இருக்கும். இந்த வாதம் வளைவிலுள்ள எல்லாப் புள்ளிகளுக்கும் பொருந்தும். அதாவது திண்ம - திரவ வளையியைப் பொறுத்தவரை வெப்பநிலை கூடிய பக்கம் அதாவது வளையிக்கு வலது புறம் திரவம் மட்டும் காணப்படும், வெப்பநிலை குறைந்த இடதுபுறம் திண்மம் மட்டும் காணப்படும். வளையிக்குரிய வெப்பநிலை, அமுக்க நிபந்தனைகளில் திண்மமும் திரவமும் சமநிலையில் இருக்கும்.



படம் 9

திரவ - ஆவி சமநிலைக்குரிய TC வளையியைக் கருதுங்கள். அதில் ஏதாவது ஒரு புள்ளி Y இலிருந்து வெப்பநிலை அதிகரிக்கும் திசையிலோ அல்லது அமுக்கம் குறையும் திசையிலோ ஆவி மட்டும் காணப்படும். அப் புள்ளியிலிருந்து வெப்பநிலை குறையும் அல்லது அமுக்கம் அதிகரிக்கும் திசையில் திரவம் மட்டுமே காணப்படும். இந்த வாதமும் TC வளையியிலுள்ள எல்லாப் புள்ளிகளுக்கும் பொருந்தும். எனவே இவ் வளையியின் இடது புறமுள்ள வெப்பநிலை, அமுக்க நிபந்தனைகளில் திரவம் மட்டுமே காணப்படும்; வலதுபுறம் ஆவி மட்டுமே காணப்படும். வளையி TC இன் வழியேயுள்ள வெப்பநிலை, அமுக்க நிபந்தனைகளில் திரவமும், ஆவியும் சமநிலையில் இருக்கும்.

இது போன்றே திண்ம - ஆவி சமநிலைக்குரிய TA வளையிக்கும் வலதுபுறம் ஆவியும் இடதுபுறம் திண்மமும் இருக்குமெனக் காட்டலாம்.

எனவே இதுவரை நாம் அறிந்தவற்றுள் சிலவற்றை ஒரே படத்தில் கீறும்போது கீழுள்ள வரைபு பெறப்படும்.



படம் 10

இறுதிக் குறிப்பு : இங்கு தரப்பட்ட வரைவுகள் திட்டமான அளவுகளின்படி கீறப்படவில்லை. தேவைப்படும் புள்ளிகளைக் காண்பிப்பதை முக்கியமான நோக்கமாகக் கொண்டே வரைபுகள் கீறப்பட்டுள்ளன.

நில அளவையும் கிடைத்தூரங்களை அளவிடும் உபாயமுறைகளும்

திரு. பொன்னையா அரவிந்தன்
Principal – J/Katcovalam Methodist Mission Tamil Mixed School.
Visiting Lecturer National Institute of Education Nelliaddy M.M.V Centre.

அறிமுகம் : நிலஅளவை என்பதனை புவிமேற்பரப்பிலோ, புவியின் உட்பகுதியிலோ, புவிக்கு மேலான பகுதியிலோ உள்ள புள்ளி ஒன்றின் சார் அமைவைத் தீர்மானித்துக் கொள்ளுதல் அல்லது குறித்த புள்ளி ஒன்று அமைந்துள்ள நிலைக்குத்தூரம், கிடைத்தூரம், திசை ஆகியவற்றினை அளந்து அப்புள்ளியை நிலைப்படுத்தும் கலை என வரையறுத்துக் கொள்ள முடியும்.

இது கி.மு 14 ஆம் நூற்றாண்டளவில் முதன்முதலில் எகிப்தியர்களால் நிலங்களை வரி விதிப்பு நடவடிக்கைகளுக்காக பிரித்துக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டது. இன்று உலகில் நில அளவைத்துறையானது வளர்ச்சி பெற்று பல்வேறு நிலைமைகளிலே பயன்படுத்தப் படுவதுடன் நவீனமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் உபகரணப் பயன்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு தொழிநுட்பத்துறையாக விளங்கி வருகின்றது.

நிலஅளவையின் பயன்கள் :

நில அளவையின் பயன்பாடுகளை பின்வரும் சந்தர்ப்பங்கள் மூலமாக அறிந்துகொள்ள முடியும். பொதுவான சில இங்கே வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

01. நில அளவையானது நாடு ஒன்றினுடைய மலைகள், ஆறுகள், மணல்வெளிகள், கிராமங்கள், நகரங்கள், கட்டிடங்களை உள்ளடக்கிய சமவுயரக்கோட்டுப் படங்களை தயாரித்துக் கொள்ளப் பயன்படுத்தப்படுகிறது.
02. காணித்துண்டு ஒன்றின் எல்லைகள் மற்றும் ஏனைய இயல்புகளைக் காட்டும் வரைபடங்களைத் தயாரித்துக் கொள்ள முடியும்.
03. நாடு ஒன்றில் உள்ள பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், கால்வாய்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு நில அளவை பற்றிய அறிவு பயன்படுத்தப்படுகிறது.
04. நாடு ஒன்றின் வெவ்வேறு இடங்களின் முக்கிய தகவல்களை உள்ளடக்கிய இராணுவ வரைபடங்களை (Military Map), புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகள் பற்றிய விபரங்களை தயாரித்துக் கொள்ள இது பயன்படுத்தப்படுகிறது.
05. பெரும் பண்ணைப் பயிர்ச் செய்கை ஒன்றின் போது அலகு நிலப் பரப்புக்குத் தேவையான உள்ளீடுகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கும், பண்ணைத் திட்டப் படங்களை தயாரித்துக் கொள்வதற்கு நிலஅளவையானது பயன்படுகிறது.
06. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களின் வரைபடங்களை தயாரித்துக் கொள்ள முடிகிறது.
07. புவியிலுள்ள வளங்களைக் காட்டும் புவியியல் வரைபடங்களை தயாரித்துக் கொள்வதற்கு நில அளவை பற்றிய அறிவு பயன்படுகிறது.

இருப்பினும் நில அளவையின் பயன்பாடு இவைதான் என மட்டுப்படுத்திக் கூறிவிட முடியாது. அதன் செல்வாக்கு பல்வேறு துறைகளில் பரிணமித்து இருப்பதனை நாம் அனுபவத்தின் ஊடாக உணர்ந்து கொள்ள முடியும்.

நில அளவையின்போது பல்வேறு தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. புவியிலுள்ள குறித்த புள்ளி ஒன்று அமைந்துள்ள கிடைத்தூரம், நிலைக்குத்துத்தூரம், அப்புள்ளி அமைந்துள்ள திசை, சாய்வுத்தூரங்கள், சாய்வுக் கோணம், மட்டங்காணல் போன்ற பல்வேறு தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

கிடைத்தூரம் (Horizontal distance) - அவற்றின் அளவீட்டு உபாயமுறைகளும்

புவிமேற்பரப்பிலுள்ள இரு புள்ளிகளுக்கிடையிலுள்ள மிகக்கிட்டிய நேர்கோட்டுத் தூரமானது கிடைத்தூரம் என வரையறுக்கப்படுகிறது. இவ்விரு புள்ளிகளும் கிடைத்தளத்தில் அமைகின்ற பொழுதே கிடைத்தூரம் என குறிப்பிடமுடியும். இக்கட்டுரையில் நில அளவை ஒன்றின்போது கிடைத்தூரங்கள் அளவிடப்படும் உபாயமுறைகளை இக்கட்டுரை விளக்க முயல்கின்றது. பொதுவாக பின்வரும் பொதுவான உபாயமுறைகளில் கிடைத்தூரங்களானது உரிய உபகரணங்கள் கொண்டு அளந்தறியப்படுகிறது.

01. கவடு வைத்தல் முறை (Pacing Method)



இம்முறையிலே உபரணங்கள் எதுவுமின்றி கிடைத்தூரங்களானது பின்வருமாறு அளவிடப் படுகின்றது. இதன்போது முதலில் கவட்டுத்தூரமானது படிவகுக்கை செய்துகொள்ளப்பட்டு குறித்த தூரத்தை கடக்க வைக்கப்பட்ட கவடுகளின் எண்ணிக்கை (Steps) அறியப்பட்டு, அதனை கவட்டுத்தூரத்தினால் (Pacing Distance) பெருக்கிக் (0.91m) கொள்ளப்படுவதன் மூலம் மொத்தத் தூரமானது அறியப்படுகிறது. இது பொதுவாக கிடைத்தூரங்களை பருமட்டாக அறிவதற்காக பயன்படுத்தப்படுகிறது. அனுபவம் மிக்க நில அளவையாளர் ஒருவரினால் பொருத்தமான நில அளவை உபகரணங்கள் எடுத்துவரப்படாத நிலையில் இம்முறையை நேர்த்தியாகப் பயன்படுத்தி தூரங்களை அளந்து கொள்ள முடியும். இம்முறையின் செம்மை 1/50 ஆகும்.

அதாவது 50 மீற்றர்கள் அளவிடப்படும்போது 01 மீற்றர் அளவு வழு உருவாகலாம். இது எளிமையான ஒரு முறையாகவும், குறைந்த உத்திகள் பயன்படுத்தப்படுகின்ற தன்மையும், விசேடித்த உபகரணத் தேவையில்லாமல் இருப்பதுமே இதன் அனுகூலமான இயல்புகளாகும்.

இருப்பினும் இம்முறையில் சில குறைபாடுகள் உள்ளன. சரியான பயிற்சி உள்ளபோதே திருத்தமான முறையில் தூரம் ஒன்றினை செம்மையாக அளவிட்டுக் கொள்ள முடியும். அதேபோன்று நேரம் பிடிக்கின்ற ஒரு அளவீட்டு முறையாகக் காணப்படுகிறது.

கவடு வைத்தல் முறையில் பின்வரும் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக குறித்த தூரத்தை 0.91 m கவட்டுத்தூரத்தினால் 88 கவடுகள் ஊடாக கடந்து செல்வாராயின், அவர் கடந்த மொத்தத்தூரம் = கவடுகளின் எண்ணிக்கை x ஒரு கவட்டுத்தூரம்

= 88 x 0.91m = 80.08 m அண்ணளவாக 80 m ஆகும்.

அளக்கும் சில்லு முறை (Odometer wheel Method)



இம்முறையிலே அளக்கும் சில்லு ஒன்று உருட்டிச் செல்லப்பட்டு அளவீடுகள் மேற்கொள்ளப்படுகிறது. நியம அளக்கும் சில்லை உருட்டிச் செல்ல கைபிடி ஒன்றும் கடந்து செல்லும் தூரத்தை பதிவு செய்யும் பதியீ (Recorder) ஒன்று காணப்படுகிறது. அளக்கும் சில்லைப் பயன்படுத்தி அளவீடுகளை மேற்கொள்ள முன்னர் பதயீயானது பூச்சியத்திற்கு கொண்டுவரப்படும். தனி ஒருவரினால் அளவீடுகளை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது. உபகரணத்தை இலகுவாக கையாளக்கூடியதாக இருப்பது. குறைந்த தொழில்நுட்பத்தை வேண்டி நிற்பது இதன் அனுகூலமாகும். இம்முறையின் செம்மை மேற்பரப்பின் தன்மையில் தங்கியுள்ளது. இருப்பினும் அளக்கும் சில்லைப் பயன்படுத்தி 1% செம்மையாக அளவீடுகளை மேற்கொள்ள முடியும். அளக்கப்படும் முழுத்தூரமும் கடந்து அளவீடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பது இதன் குறைபாடாக கருதப்படுகிறது.

தூரமானி முறை (Stadia Method)



இம்முறையில் தூரமானி எனும் உபகரணம் பயன்படுத்தப்படுகிறது. இதன்போது அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு உரிய அட்டவணைகள், சமன்பாடுகள் மூலமாக அளவிடப்பட்ட தூரத்தின் பெறுமானமானது கணித்தறியப்படுகிறது.



இக்கருவியானது கிடைத்தூரம் அறியப்பட வேண்டிய நிலப்பரப்பின் ஆரம்பப்புள்ளியில் முக்காலி (Tripod) ஒன்றின் உதவியுடன் நிறுவப்பட்டு நீர் மட்டத்தின் உதவியினால் கருவி உரிய மட்டத்தில் இருக்கும் வண்ணம் பேணப்படும். தொடர்ந்து இறுதிப்புள்ளியானது அடையாளமிடப்பட்டு. அதில் வரிசைப்பாட்டுக் கோல் (Ranging Pole) ஒன்று நாட்டப்படும். தொடர்ந்து தூரமானியின் தொலைகாட்டிப்பகுதி ஊடாக நோக்கி இறுதிப்புள்ளியில் நிலைப்படுத்தப்பட்ட வரிசைப்பாட்டுக் கோலின் தெளிவான விம்பம் பெற்றுக் கொள்ளப்படும். இறுதியாக பின்வரும் வாசிப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தூரமானி ஊடாக நோக்கி பார்வைப்புலத்தின் மேற்கோட்டுவாசிப்பு (Upper stadia reading) பெறப்படும்.
2. தூரமானி ஊடாக நோக்கி பார்வைப்புலத்தின் கீழ்க்கோட்டு வாசிப்பு (Lower stadia reading) பெறப்படும்.

மேற்கூறிய வாசிப்புக்களில் இருந்து கீழ்வரும் கணிப்புகளை மேற்கொண்டு அல்லது அட்டவணையைப் பயன்படுத்தி அளவிடவேண்டிய கிடைத்தூரமானது பின்வருமாறு கணித்தறியப்படும்.

நிலஅளவையாளர் ஒருவர் தூரமானி ஒன்றினைப் பயன்படுத்தி சமதரை ஒன்றில் உள்ள A, B ஆகிய இரண்டு புள்ளிகளுக்கிடையிலான கிடைத்தூரத்தை அளவிட்டுக்கொள்வதற்காக தூரமானியின் பார்வைப்புலத்தின் ஊடாக அதன் மேற்கோட்டு வாசிப்பு, கீழ்க்கோட்டு வாசிப்பு பெறப்பட்டது. கீழ்க்கோட்டு வாசிப்பு = 11.98 m ஆகவும், மேல்கோட்டுவாசிப்பு = 12.38 m ஆகவும் காணப்பட்டது.



மேற்கூறிய உதாரணப்படி,

அளவிடப்பட்ட கிடைத்தூரம் = (மேற்கோட்டு வாசிப்பு - கீழ்க்கோட்டு வாசிப்பு) x 100 = 2.47 x 100 = 247 மீற்றர்களாகும்.

இங்கு 100 என்பது உபகரணம் சார்ந்த காரணியாக (Stadia factor) கொள்ளப்படுகிறது.

தடைகள் உள்ளபோது தூரமானி அளவீடுகள் மேற்கொள்ளப்படும் முறை.



தூரமானி ஊடாக அளவீடுகளை மேற்கொள்ளும் போது தடைகள் காணப்படின் பின்வரும் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அதாவது தூரமானியின் கீழ்க்கோட்டு வாசிப்புகள் மேற்கொள்வதற்கு தடைகள் காணப்படின் பின்வருமாறு கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அளவிடப்பட்ட கிடைத்தூரம் = [(மேற்கோட்டு வாசிப்பு – தூரமானி உயர வாசிப்பு) x 2] x 100

அதேபோன்று தூரமானியின் மேற்கோட்டு வாசிப்புகள் மேற்கொள்வதற்கு தடைகள் காணப்படின் பின்வருமாறு கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அளவிடப்பட்ட கிடைத்தூரம் = [(தூரமானி உயர வாசிப்பு - கீழ்க்கோட்டு வாசிப்பு) x 2] x 100

இம்முறையினால் அளவீடுகளை மேற்கொள்ளும்போது நிலஅளவையாளர் களத்தின் பகுதிகளுக்கு நடந்து செல்லாது ஒரு இடத்தில் இருந்தவாறே வேண்டிய அளவீடுகளை மேற்கொள்ள முடியும் என்பது இதன் அனுகூலமாகும். பாரிய நில அளவையை மேற்கொள்கின்றபோது இவ்வாறான பல உபகரணத்தொகுதிகள் தேவை என்பதுவே இதன் பிரதான குறைபாடாக உள்ளது.

அளவு நாடா முறை (Tape Method)



இதுவே அதிகளவு பயன்படுத்தப்படும் முறையாகும். பல்வேறு வகையான அளவு நாடாக்கள் பயன்படுத்தப்படுகிறது. பொதுவான அளவுநாடா 30 m நீளமானதாக இருக்கும். 100 m வரையான நிலஅளவை நாடாக்களும் உள்ளன. அளவுநாடாவுடன் சேர்த்து பல்வேறு நிலஅளவைத் துணைச்சாதனங்களும் இணைத்து பயன்படுத்தப் படுகிறது. தனியொருவரால் அளவு நாடாவைப் பயன்படுத்தி அளவீடுகளை மேற்கொள்ளமுடியாது. குறைந்தது இருவராவது தேவை. உயர் செம்மைத் தன்மையாக அளவீடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் இம்முறையின் பிரதான அனுகூலமாகும். ஒன்றுக்கு மேற்பட்டவர் அளவீடுகளை மேற்கொள்ளத் தேவையாக இருத்தல். அளவுநாடாவைப் பயன்படுத்தி அளவிடும்போது, அளவுநாடா இழுபடுதல் அளவீடுகளை மேற்கொள்ள கூடிய நேரம் எடுத்தல் மற்றும் தயாரிப்பின்போதான தவறுகள் என்பன இதன் பிரதான குறைபாடாக உள்ளன. வாசிப்பின் செம்மை அதிகரிப்பதற்கு பின்வரும் சமன்பாட்டைப் பயன்படுத்தி வழுச்சீர்திருத்தம் செய்துகொள்ளப்படுகிறது.

மெய்த்தூரம் (da) / அளவிட்டதூரம் (dm) = அளவுநாடாவின் மெய்த்தூரம் (la) / அளவுநாடாவின் பெயரளவிலான தூரம் (ln)

அதாவது,

உதாரணமாக, 30 m குறிப்பிட்டிருந்த அளவுநாடா ஆனது 0.009 m நீட்சியடைந்திருந்தது. அதனைப் பயன்படுத்தி 81.903 m தூரமானது அளவீடு செய்யப்பட்டிருந்தது எனின் அளக்கப்பட்ட சரியான தூரமானது பின்வருமாறு கணித்தறியப்படும்.

1a (அளவுநாடாவின் மெய்த்தூரம்) = 30.009 m
1n (அளவுநாடாவின் பெயரளவிலான தூரம்) = 30.000 m
dm (அளவிப்பட்ட தூரம்) = 81.903m
da (மெய்த்தூரம் / அளக்கப்பட்ட சரியான தூரம்) = (la / ln) x dm
= (30.009/30.000) x 81.903 m
= 81. 928 m

அதேபோல் உலோகத்தால் ஆன அளவுநாடா பயன்படுத்துகின்றபோது வெப்பநிலை காரணமான விரிவு, சுருக்கம் உண்டாகின்றபோதும் அதற்கான திருத்தம் பின்வரும் சமன்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

Ct = 0.000116 (Tt-Ts) L

இங்கு, Ct என்பது குறித்த வெப்பநிலையில் அளவீடு செய்யும்போதான திருத்தம்.

Tt என்பது அளவீடு மேற்கொள்ளும்போதுள்ள வெப்பநிலை.

Ts என்பது நியம வெப்பநிலை, பொதுவாக 20^0C நியம வெப்பநிலையாகக் கொள்ளப் படுகிறது.

உதாரணமாக, 20^0C யில் நியமப்படுத்தப்பட்ட உலோக அளவுநாடா ஒன்றானது அதன் பூச்சியம் அடையாளமிடப்பட்ட பகுதிக்கும் 30 m அடையாளமிடப்பட்ட பகுதிக்கும் 30.000 m களைக் கொண்டிருந்தது. இதனை 10^0C வெப்பநிலை உள்ள இடத்தில் 87.342 m தூரத்தை அளவிட பயன்படுத்தப்பட்டது எனின் சரியாக அளவிடப்பட்ட தூரமானது பின்வருமாறு கணித்துக் கொள்ளப்படும்.

Ct = .0000116 (Tt – Ts) L Ct = 0.0000116 (10-20) (87.342) Ct = -0.010 m

எனவே சரியாக அளவிடப்பட்ட தூரம் = 87.342 - 0.010 = 87.332 m ஆகும்.

இலத்திரனியல் அளவீட்டு முறை Electronic Distance Measurement (EDM)

நவீன நிலஅளவை முறைகளில் இலத்திரனியல் அளவீட்டு முறையே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இலத்திரனியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றமையே இப்பெயர்வரக் காரணமாகும்.

ஆரம்ப காலத்தில் இலத்திரனியல் உபகரணங்களில் ஒளிக்கதிர்கள் பயன்படுத்தப்பட்டன. 1948 ஆம் ஆண்டில் சுவிஸ் நாட்டிலே முதன்முதலாக நிலஅளவை இலத்திரனியல் உபகரணங் களில் ஒளிக்கதிர் பயன்பாடு வந்தது. இதனால் 40 km கிடைத்தூரத்தினை அளவிடக்கூடியதாக இருந்தது.

தொடர்ந்து 1957 ஆம் ஆண்டளவில் நுண் அலைகள் (Micro Waves) நிலஅளவைக்கு பயன்படும் இலத்திரனியல் உபரணங்களில் பயன்படுத்த தொடங்கப்பட்டது. இதனால் 80 km வரையான கிடைத்தூரங்கள் அளவிடக்கூடியதாக இருக்கிறது. தற்பொழுது உள்ள நிலஅளவைச் சாதனங்களில் Infra Red கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன.



இம்முறையின்போது இலத்திரனியல் உபகரணங்களில் இருந்து சமிக்கைகள் (Signals) பிறப்பிக்கப்படுகின்றது. பின்னர் பிறப்பிக்கப்பட்ட சமிக்கைகள் கிடைத்தூரம் அளவிடப்படவேண்டிய தூரத்தில் பேணப்பட்ட தெறிக்கும் மேற்பரப்பில் அல்லது அரியம் பொருத்தப்பட்ட வரிசைப்பாட்டுக் கோல் ஒன்றின் உதவியினால் மீள உபகரணத்தை அடையச் செய்யப்படுகிறது. பிறப்பிக்கப்பட்ட சமிக்கையானது மீள உபகரணத்தை அடைய எடுக்கப்பட்ட நேரம், பிறப்பிக்கப்பட்ட சமிக்கை அலையின் வேகம் என்பவற்றைப் பயன்படுத்தி கிடைத்தூரமானது பின்வரும் சமன்பாட்டால் அறிந்து கொள்ளப்படுகிறது.

$$\text{கிடைத்தூரம்} = \frac{\text{அலையின் வேகம் x சமிக்கை அலை உபகரணத்தை வந்தடைய எடுத்த நேரம்}}{2}$$

இம்முறையில் தனியொருவர் கையாளக்கூடியதாக இருப்பதும், நீண்ட தூரங்களை அளவிடக்கூடியதாக இருப்பதும், உயர் செம்மைத்தன்மையாக அளவீடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதும் அனுகூலமான பண்புகளாகும். இருப்பினும் இவ்உபகரணம் விலை உயர்ந்ததாக இருப்பதும், உபகரணத்திலுள்ள மின்கலங்கள் செயலிழப்பின் பயன்படுத்த முடியாதிருப்பதும், அளவீடுகளின் செம்மைத் தன்மையானது வளிமண்டலவியல் காரணிகளால் பாதிக்கப்படுவதும் இம்முறையின் பிரதிகூலமான பண்புகளாகும்.

GPS- (Global Positioning System) தூர முறை

இம்முறையில் 21 - 24 வரையிலான செய்மதிகள் பூமியைச் சூழ நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றின் உதவியுடன் பூமியிலுள்ள அளவிடவேண்டிய கிடைத்தூரங்கள், வாகனம் ஒன்றினால் கடந்து சென்ற தூரங்கள் என்பன அளவிடப்படுகின்றன. வாகனங்களில் பொருத்தப்பட்ட GPS - வாங்கிகளின் உதவியினால் செய்மதிகளின் சார்பாகக் கொண்டு தூரங்கள் அளவிடப்படுகின்றன. முன்னர் குறிப்பிட்ட அளவீட்டுச் சில்லு முறையைக் காட்டிலும் இம்முறை செம்மையானதாகும். அளவிடப்படுகின்ற தூரங்கள் Universal Transverse Mercator coordinates முறையைப் பயன்படுத்தி மீற்றர்களில் குறிப்பிடப்படுகின்றது.

உதாரணமாக, யாழ்ப்பாணத்திற்கும் முல்லைத்தீவிற்கும் இடையிலான கிடைத்தூரமானது இம்முறையினால் அறியப்படுகின்ற பொழுது பின்வரும் அளவீடுகள் பெறப்பட்டு தூரமானது அறியப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரின் UTM coordinates
= 675087E & 3998345N
யாழ்ப்பாண நகரின் UTM coordinates
= 639982E & 3925518N
முக்கோணியின் சாய்வுத்தூரம் இரண்டு நகர்களுக்கு இடைப்பட்ட தூரமாகும்.



$$= \sqrt{39996^2 + 72255^2} = 82586211 \text{ m}$$

இம்முறையானது திருத்தமான ஒரு முறையாக இருப்பது இதன் சிறப்பம்சமாகும். எனினும் இங்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் தொடர்பாக போதிய அறிவு அளவீடுகள் மேற்கொள்பவருக்கு அவசியமானதாகும்.

சங்கிலி நிள அளவை முறை

இம்முறையிலே சங்கிலிகள் மற்றும் ஏனைய நில அளவைத் துணைச் சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றது. நிலஅளவையாளர் சங்கிலி (Surveying Chain), எந்திரவியலாளர் சங்கிலி (Engineering Chain) என இரு வகையான சங்கிலிகள் வழக்கத்தில் உள்ளன. எந்திரவியலாளர் சங்கிலியானது போக்குவரத்து நெடுஞ்சாலைகள், புகையிரதப்பாதைகள் போன்ற நெடுஞ்சாலைகளை அளப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. நிலஅளவையாளர் சங்கிலியானது குறுகிய தூரங்களை அளவிட பயன்படுத்தப்படுகின்றது. இதன்போது அளவிடப்படவேண்டிய இரு புள்ளிகளுக்கு இடையில் சங்கிலிகள் போடப்பட்டு அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அளவிட இருக்கும் இடைத்தூரங்களுக்கிடையில் போடப்பட்ட தொடர் சங்கிலிகளின் எண்ணிக்கையை ஒரு சங்கிலி இடைத்தூரத்தினால் பெருக்குவதனால் மொத்த இடைத்தூரமானது அறியப்படு கின்றது. அதேவேளை நீண்ட தூரங்களை அளவிடப் பொருத்தமான முறையாக உள்ளது. மேலும் அளவீடுகளை மேற்கொள்வதற்கு நீண்ட நேரம் எடுக்கின்றமை, சங்கிலிகளை பேணிவைத்திருப்பதிலுள்ள கடினம் என்பனவே இதன் பிரதிகூலமான இயல்பாகும்.

முடிவுரை :

நில அளவையிலே கிடைத்தூரங்களை அளவிடுவதற்கு மேற்குறித்த முறைகள் பயன்பாட்டில் காணப்படினும் ஒவ்வொரு முறைகளிலும் இலகு தன்மையும், கடினத்தன்மையும் காணப்படுகின்றன. மேலும் தற்பொழுது கல்விப் பொது உயர்தரத்தில் புதிதாக தொழில்நுட்பப்பிரிவில் கற்கும் மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பாடத்தொகுதி களில் உயிரமுறைமை தொழில்நுட்பவியல் எனும் பாடத்தின் ஒரு அலகாக இடம்பெற்றிருக்கும் நில அளவையும் மட்டங்காணலும் எனும் விடயப்பரப்பின் பகுதித் தேவையை இக்கட்டுரை நிறைவு செய்யும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உசாத்துணை

1. உயிர்முறைத் தொழில்நுட்பவியல் பாடவிதானம்
2. உயிர்முறைத் தொழில்நுட்பவியல் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி.
3. Pettet.J(1981) Site Surveying and Leveling Second Level (1st ed.) Australia: Hutchinson Group (Australia) Pty Ltd.
4. http://www.fao.org/docrep/ measuring Distance .
5. http://en.wikipedia.org/wiki/Distance_measuring_equipment

பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட உணவுகள் (Genetically Modified foods or GM foods)

நிர்மலா இரவிமன்னன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தாவரவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்

பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட உணவுகள், DNA யில் பிறப்புரிமைப் பொறியியல் மூலம் தனித்துவமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட அங்கிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட உணவுகள் முதன்முதலாக 1990 களில் வர்த்தக ரீதியாக விற்பனைக்கு விடப்பட்டது. இந்த அடிப்படையில் பின் முதிர்வடையும் தக்காளி வகை (Flavr savr tomato) விற்பனைக்கு வந்தது. விவசாயிகளின் மத்தியில் அதிக மதிப்பைப் பெறுகின்ற பயிர்களான சோளம், சோயா அவரை, பருத்தி போன்றவற்றில் இவ்வாறான பிறப்புரிமையியல் ரீதியான மாற்றீடு ஆராய்ச்சிகள் முன்னிலை வகித்தன. இப் பயிர்கள் பிறப்புரிமைப் பொறியியல் மூலம் நோயங்கிகள், களை கொல்லிகளினால் தாக்கப்படாத தன்மை, அதிக போசணைத் தன்மை ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

உணவு விஞ்ஞானத்தின் ஒரு முக்கிய கிளையாக உணவு உயிர்த்தொழில் நுட்பமானது விளங்குகிறது. புதிய உணவு வகைகளைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப் படும் உயிர்த்தொழில் நுட்பமுறைகள் நொதித்தற் செய்முறை, தாவர இழைய வளர்ப்பு, பிறப்புரிமைப் பொறியியல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. உணவு உயிர்த் தொழில்நுட்பவியலானது நீண்டகால வரலாற்றை கொண்டுள்ளது. ஆரம்பத்தில் தாவர விலங்குப் பிரித்தெடுப்பு களிலிருந்து பெறப்பட்ட நொதியங்கள் பாவனையிலிருந்தன. பின்பு பிறப்புரிமைப் பொறியியலுக்கு உட்பட்ட நுண்ணங்கி களிலிருந்து பெறப்பட்ட நொதியங்கள் பாவிக்கப்பட்டன. பாற்கட்டி உற்பத்தியில் கைமோசினின் (Chymosin) உபயோகம் ஒரு சிறந்த உதாரணமாக அமைகின்றது. முன்பு பசுவின் இரைப்பைச் சுவரிலிருந்து பெறப்பட்ட rennet, பாற்கட்டி உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டது. இதன் பின் விஞ்ஞானிகள் மீளச் சேர்க்கைக்குட்பட்ட chymosin ஐப் பயன்படுத்தி பாலை உறையச் செய்து பாற்கட்டித் தயிரை (cheese curd) உற்பத்தி செய்தனர். பிறப்புரிமைப் பொறியியலுக்குட்பட்ட நுண்ணங்கிகளின் நொதியங்களைப் பயன்படுத்தி உணவு தயாரித்தலே உணவு உற்பத்தியில் பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட அங்கிகளின் முதலாவது பிரயோகமாகும். இது தவிர, தாவரங்களில் சில முக்கிய இயல்புகளான பீடை எதிர்ப்பு, பங்கசு எதிர்ப்பு, வைரசு எதிர்ப்பு, களை கொல்லி எதிர்ப்பு, போசணைத் தன்மையில் விரும்பத்தக்க மாற்றம், சுவையை அதிகரித்தல், சேமிப்புக் காலத்தைக் கூட்டுதல் போன்றவற்றிற்காக பிறப்புரிமைப் பொறியியலுக்கு உட்படுத்தப் படுகின்றன.

2000 ஆம் ஆண்டில் golden rice இன் உருவாக்கத்தின் பின் விஞ்ஞானிகள் முதன்முதலாக பிறப்புரிமைப் பொறியியல் மூலம் உணவின் போசணைப் பெறுமானத்தை அதிகரிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். சாதாரண அரிசி இனங்களில் விற்றமின் A குறைவாக இருந்ததால் மனிதர்களில் விற்றமின் A குறைபாட்டு நோய் ஏற்பட்டதை அவதானித்துள்ளனர். Golden rice இன் கண்டுபிடிப்பின் பின் இக்குறையை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. இது பாரிய நன்மையை ஏற்படுத்தியது என்பது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது. ஆனால் இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட golden rice முளைக்கும் தன்மை அற்றது. எனவே இதை உணவாக மட்டும் பயன்படுத்தலாம். உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால் இதன் விற்பனை விலையும் அதிகமாக இருக்கும். 2013 இல் பெற்ற தரவுகளின் படி, அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் 8% சோளம், 91% சோயா அவரை, 88% பருத்தி ஆகியன பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்டு உணவுத் தேவைகளுக்காக சந்தைக்கு விடப்பட்டுள்ளன. 1990களில் ஹவாய் நாட்டில் பப்பாசி வர்த்தகம் வளையப் புள்ளி வைரசு நோய் காரணமாகப் பாரிய பாதிப்புக்குள்ளாகியது. இதன் பின்பு மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பயனாக, பப்பாசியானது வளையப்புள்ளி வைரசு நோயை எதிர்க்கும் இயல்பிற்காக பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்டது.

இதுதவிர, பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட சோயா அவரையிலிருந்து தயாரிக்கப்படும் பல்வேறுபட்ட செறிவாக்கப்பட்ட சோயாப் புரத உற்பத்திகள் விற்பனையிலுள்ளன.

அமெரிக்காவில் அநேகமாகப் பயன்படுத்தப்படும் மரக்கறி எண்ணெய் பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட பயிர்களாகிய canola, சோளம், பருத்தி, சோயா அவரை ஆகியவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன.

பாவனையாளர்கள் மத்தியில் GM foods சம்பந்தமாகப் பல்வேறுபட்ட முரண்பாடான கருத்துக்கள் நிலவுகின்றன. இலங்கை மக்களில் அநேகமானவர்கள் இவ்வகை உணவுகள் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்குமென நம்புகின்றனர். ஆனாலும் இந்த GM foods ஐப் பயன்படுத்துவதால் உள்ள நன்மைகள் பற்றி அபிவிருத்தியடைந்த நாடுகளில் நன்கு அறியப்பட்டுள்ளது. சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவு உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சனத்தொகைப் பெருக்கம் காரணமாக இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே குறுகிய நிலப் பரப்பில் அதிக உணவை உற்பத்தி செய்வதற்கு இது ஒரு சிறந்த முறையாகும்.

இந்த பிறப்புரிமையியல் ரீதியாக மாற்றப்பட்ட உணவுகள் அவற்றின் நன்மைகள் பற்றி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அத்தியாவசியமானதாக அமைகிறது. இது நிச்சயமாக விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு அதிசயம் என மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

கூர்ப்படையும் மனிதன்

டாக்டர் பொ. மனோகரன்

பகுதி I : பரிணாமத்தின் பல பரிமாணங்கள்



உயிர்வாழ்வதற்கு ஏற்ற சூழலைக் கொண்ட ஒரே ஒரு கிரகமாக தற்போது வரை ஏகோபித்த உரிமையை கொண்டாடி வரும் நாம் வாழும் பூமியானது தன்னகத்தே பல மில்லியனுக்கும் மேற்பட்ட உயிரினங்களைக் கொண்டு காத்துவருகிறது. நான்கு பில்லியுன் வருடங்களுக்கு முன்பு ஒரு கலத்தைக் கொண்ட அங்கியாக தோற்றம் பெற்ற உயிரின ஆட்சியானது இன்று பல சிக்கலான கட்டமைப்புகளையுடைய தாவரங்களாக, விலங்குகளாக பரிணாம வளர்ச்சியடைந்து அவற்றின் உச்சமாக ஆறறிவு படைத்த மனிதனை உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு யுகத்திலும் ஏதாவது ஒரு உயிரினம் கூர்ப்பில் தான் பெற்ற சாதகமான இயல்புகளை கொண்டு ஏனைய இனங்களைவிட தன்னை மேன் நிலைப்படுத்தி பூமியின் ஆட்சியான உயிரினமாக இருப்பதும் பின்னர் அவ்வினம் பூமியில் ஏற்பட்ட பாரிய எரிகற்களின் மோதுகை, எரிமலைக்குமுறல்கள், நில நடுக்கங்கள், வெள்ளப் பெருக்குகள் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் அவற்றை தொடர்ந்து ஏற்பட்ட காலநிலை மாற்றங்களாலும் முற்றாக அழிவடைவதும் அவ்வெற்றிடத்தை இன்னுமொரு ஆட்சியான உயிரினம் இட்டு நிரப்புவதுமாக இருந்து வந்துள்ளது.

அந்தவகையில் இரண்டு லட்சம் வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றதாக நம்பப்படும் மனித இனமானது (Homo sapiens) இன்றுவரை தனது ஆட்சியை பூமியில் நிலைநிறுத்தியுள்ளது. விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மூலம் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ள இந் நவீன மனிதன் ஏனைய உயிரினங்களை விட பூமியின் இயற்கைச் சமநிலையில் ஏற்படுத்திய தாக்கம் மிக அதிகம். இம் மனிதன் எதிர்காலத்தில் கூர்ப்பின் எத்திசையில் பயணிப்பான் என்பதும் அப்போது அவன் தனது இனத்தின் மீதும் பூமியின் மீதும் எவ்வகையான தாக்கங்களை ஏற்படுத்துவான் என்பதும் தொடர்பான கருத்துக்கள் பல ஆய்வாளர்களின் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளது.

உயிரினங்களின் தோற்றம் அவற்றின் பல்வகைத்தன்மை தொடர்பாக அதுவரை காலமும் இருந்து வந்த அதாவது பூமியிலுள்ள ஒவ்வொரு இனமும் தனித்தனியாக தோற்றம்பெற்றன என்றும் அவை நிலையானவை என்றதுமான தவறான கொள்கைகளை சாள்ஸ் டாவினின் (Charles Darwin) 'இயற்கைத் தேர்வு' (Natural Selection) தொடர்பான கூர்ப்புக் கொள்கையானது தலைகீழாக மாற்றி

வைத்தது. அவர் 1859 ம் ஆண்டில் தனது 'உயிரினங்களின் தோற்றம்' (The origin of species) என்ற ஆய்வு நூலில் உயிரினங்கள் அனைத்தும் ஒரு பொதுவான ஆரம்பத்திலிருந்து தோற்றம் பெற்றே இயற்கைத் தேர்வினூடாக பல்வகைத் தன்மை பெற்றன என்றும் இச் செயன்முறையானது ஒரு தொடர்ச்சியான நிகழ்வொன்றும் தனது முடிவினை முன்வைத்தார். அவரது இயற்கைத் தேர்வு கொள்கையானது பின்வருமாறு அமைகிறது.

- ஒரு குடித்தொகையிலுள்ள ஒவ்வொரு தனியனும் (individual) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது. அந்த வேற்றுமை (variation) ஆனது மரபுவழியாக அதன் எச்சங்களுக்கு கடத்தப்படக்கூடியது.
- சூழலுடன் ஒத்துவாழ முடியாத தனியனுக்கு சூழலில் அது எதிர் கொள்ளும் சவால்களிலிருந்து தப்பி உயிர் பிழைத்து இனப்பெருக்கத்தில் ஈடுபடும் வாய்ப்பு மிகக் குறைவு. சூழலுடன் ஒத்துவாழும் தனியன் தப்பிப்பிழைத்து இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு தனது மரபுவழியாக பெறத்தக்க பண்புகளை அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்லும். இச் செயன்முறையே இயற்கைத்தேர்வு முறையை உருவாக்குகிறது.
- இவ்வாறு மெதுவாக நடைபெறும் இயற்கைத்தேர்வு முறையானது குடித்தொகைகளில் சுற்றுச்சூழலுடன் ஒத்து வாழ்வதற்கான இசைவாக்கத்தை ஏற்படுத்துகிறது. இறுதியில் அக் குடித்தொகையில் சிறிது சிறிதாக தோற்றம் பெற்ற வேற்றுமைகளானது புதிய இனத் தோற்றத் திற்கு வழிவகுக்கிறது.

இந்த வகையில் மனிதன் அவனது மூதாதையர்களான மனிதக் குரங்கிடம் இருந்தே கூர்ப்படைந்தான் என்ற கருத்து டாவினின் கொள்கையின்பின் முன்வைக்கப்பட்டது. இதற்கு தோமஸ்ஹக்ஸ்லி (Thomas Huxly) என்ற ஆய்வாளரின் கருத்தும் வலுச் சேர்த்தது. ஆனால் டாவினின் கோட்பாடானது ஒரு உயிரினம் தனது பண்புகளை எப்பொறிமுறையினால் அதனது எச்சங்களுக்கு கடத்துகிறது என்பதையும் விலங்குகளில் காணப்படும் சிக்கலான கட்டமைப்பையுடைய அங்கங்கள் (organs) எவ்வாறு மெதுவாக நடைபெறும் இயற்கைத் தேர்வு முறையினால் உருவாக்கம் பெற்றன என்பதையும் விளக்க தவறிவிட்டது. டாவினின் கொள்கையை ஆதரித்த பலரில் முக்கியமாக அல்ஃரட்ரசல்வலஸ் (Alfred Russel Wallace) உம் சாள்ஸ்லயல் (Charles Lyell) உம் மனிதனின் தனித்துவமான பண்புகளான மனவாற்றலையும் தார்மீக பண்புகளையும் இயற்கைதேர்வு முறையால் விளக்கப்படுத்த முடியாது என்ற வாதத்தை முன்வைத்தார்கள்.

இதற்கு சரியான பதில் கிடைக்கப்பெறாவிட்டாலும் இதன் பின்னர் 1936 - 1947 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல உயிரியலாளர்களின் உதவியுடன் டாவினின் இயற்கைத் தேர்வு கொள்கையானது மரபியல் (genetics), தொல்லுயிரியல் ஆய்வு (paleontology), உயிரியல் ஒழுங்கு முறைகள் (biological systematics) என்பவற்றுடன் இணைக்கப்பட்டு நவீன டாவினின் கோட்பாடு/ நவீன பரிணாமத் தொகுப்பு (Neo - Darwinism/ The Modern evolutionary synthesis) உருவாக்கப்பட்டது. இக் கோட்பாட்டின்படி ஒரு தனியனுடைய

பண்புகள் அதன் எச்சங்களுக்கு மரபணு மாற்றுமுறை (genetic transfer) மூலம் கடத்தப்படுவதினாலேயே கூர்ப்பு நடைபெறு வதாகவும் இம் மரபணு மாற்று முறை யானது இயற்கைத்தேர்வு. மரபணுவின் நகர்வு (genetic drift), பிறழ்வு (mutation), பரம்பரை அலகின் ஓட்டம் (gene flow) என்ற காரணிகளாலேயே தீர்மானிக்கப்படுவ தாகவும் கொள்ளப்பட்டது.

நவீன டாவினின் கோட்பாட்டினைக் கொண்டு ஆய்வாளர்கள் பூமியில் ஒரு கல அங்கியின் தோற்றத்திலிருந்து சிக்கலான கட்டமைப்பைக் கொண்ட மனிதன் வரை எவ்வாறு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை பல்வேறு யுகங்களாகப் பிரித்து ஆராய்ந்து ஆதாரங்களுடன் முன்வைத்துள் ளார்கள். அந்த வகையில் எவ்வாறு மனிதக் குரங்கிலிருந்து பல படிநிலை மாற்றங் களினூடாக நவீன மனிதன் உருவானான் என்பதை சற்று நோக்கினால்.

Homo sapienssapiens எனும் இனமே இப்போது Homo என்ற சாதியில் (genus) எஞ்சியுள்ள ஒரே ஒரு இனமாகும். ஆதாரங் களின்படி மனிதனின் ஆதி மூதாதையரான Homohabilis எனும் 2.4 - 1.4 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தெற்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்காவில் தோற்றம் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து H.rudolfensis (1.9-1.6 Ma), H.erectus (1.8 Ma - 70000 வருடங்களுக்கு முன்), H.antecessor (1.2 Ma - 500 ka), H.rhodesiensis (300 ka - 125 ka) H.neanderthalensis (40000 - 30000 வருடங்களுக்கு முன்) என பல படிநிலை களினூடாக பரிணாமமடைந்து நவீன மனிதன் உருவாகியுள்ளான். இவற்றிலே H.erectus உம் H.neanderthalensis உம் குறிப்பிட்ட காலப்பகுதியில் H.sapiens உடன் சமகாலத்தில் வாழ்ந்ததற்கான தொல் லுயிரியல் ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இதில் H.neanderthalensis ஆபிரிக்காவுக்கு வெளியே முக்கியமாக ஐரோப்பா மற்றும் ஆசியாவிலேயே தோற்றம் பெற்றதாகவும் ஆபிரிக்காவை விட்டு வெளியேறிய நவீன மனிதன் இவ்வினத்துடனும் இனக்கலப்பில் ஈடுபட்டதாகவும் தற்போதைய ஆய்வாளர்கள் நம்புகின்றனர். பின்னர் இவ்வினங்கள் நவீன மனிதனுடன் ஏற்பட்ட போட்டியின் காரணமாக அழிவடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. நவீன மனிதனுக்கும் அவனது மூதாதையினருக்கும் இடையே யுள்ள பிரதான வேற்றுமைகள் என்ன வென்றால் அவை மனித மூதாதையர் கொண்டிராததும் நவீன மனிதன் கொண்டுள்ளதுமான நிமிர்ந்த தோற்றமும் அதீத நுண்ணறிவுமேயாகும். நுண்ணறிவு வளரவளர மனிதன் கருவிகளை பயன் படுத்த ஆரம்பித்ததோடு நாகரீகமாகவும் வாழப் பழகிக்கொண்டான். இன்று விஞ்ஞான அறிவோடு விஸ்வரூபம் எடுத்து நிற்கிறான்.

நுண்ணறிவினது வளர்ச்சிப் போக்கு பற்றிய ஆராய்ச்சிகள் தற்போது விஞ்ஞானி கள் மத்தியில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. நுண்ணறிவின் வளர்ச்சிப் போக்கானது கூர்ப்பில் மனித மூளையின் கனவளவு அதிகரிப்போடு நேரடியான தொடர்பைக் காட்டுவதாக உள்ளது. Homo habilis இனத்தின் மண்டைஓட்டை ஆராய்ந்தபோது அவற்றில் மூளையின் கனவளவு வெறும் 500 - 600 cm^3 அளவே இருந்துள்ளது. ஆனால் மூளையின் பருமன் பரிணாம வளர்ச்சிப் போக்கில் ஏனைய மனித மூதாதையர்களில் படிப்படியாக அதிகரித்து இன்றைய நவீன மனிதனில் அதன் கனவளவானது 1200 -

1850 cm^3 ஆக காணப்படுகின்றது. இது மூளையின் பருமனில் மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டுகின்றது. அந்த வகையில் மூளையின் பருமன் அதிகரிப்பு நுண்ணறிவின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை செய்துள்ளது.



ஆனால் சில ஆய்வாளர்களின் கருத்துப்படி நுண்ணறிவானது கூர்ப்பினூடாக படிப்படியாக அதிகரித்திருந்தாலும் அண்மைக் காலம்வரை மனிதன் தற்போது கொண்டுள்ள பாரிய நுண்ணறிவு வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை எனவும் சில ஆயிரம் வருடங்களினுள்ளே மூளையின் பருமனிலே பாரிய மாற்றமெதுவும் ஏற்படாத போதும் நுண்ணறிவு பல மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான காரணத்தை அறிய பல விஞ்ஞானிகள் முற்பட்டுக் கொண்டிருக்கையில் புராதன விண்வெளி கோட்பாட்டாளர்கள் (Ancient Astronaut Theorists - AAT) என்று தம்மை அடையாளப்படுத்தும் ஆய்வாளர்கள் சிலர் பின்வருமாறு அதற்கு விளக்கமளித்துள்ளனர். எவ்வாறெனில் குறுகிய காலப்பகுதியில் மனிதன் அடைந்த இப்பாரிய நுண்ணறிவு வளர்ச்சியானது இயற்கையான பரிணாம வளர்ச்சியினூடாக ஏற்பட்ட ஒரு மாற்றம் அல்லவெனவும் அது மனிதனைவிட நுண்ணறிவில் அதீத வளர்ச்சியடைந்த வேற்றுக் கிரகவாசிகளின் (extraterrestrials) தலையீட்டின் காரணமாக ஏற்பட்டதெனவும் கூறுகின்றனர்.

மனிதர்களை இவ் வேற்றுக் கிரகவாசிகளால் உருவாக்கப்பட்ட அல்லது அவர்கள் வழிவந்த இனமாக கருதும் இவர்கள் நமது மூதாதையர்கள் வேற்றுக் கிரகவாசிகளையும் அவர்களது அதிநவீன தொழிநுட்பங்களையுமே அளப்பரிய சக்தி கொண்ட கடவுளாகவும் தெய்வத் தூதுவர்களாகவும் பிழையாக கற்பிதம் கொண்டதாக வாதாடுகின்றனர். மனித வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கும் போது பல முக்கியமான வரலாற்று மாற்றங்களின் போதும் இவ் வேற்றுக் கிரகவாசிகளின் பிரசன்னம் பூமியில் இருந்துள்ளது எனவும் இவர்களே மனிதனின் பரிணாம வளர்ச்சியையும் வரலாற்றினையும் நெறிப்படுத்தினார்கள் எனவும் நம்புகின்றனர். அந்த வகையில் இவ்வேற்று கிரகத்தவர்கள் பண்டைய மனிதனில் பல பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு மனிதனின் உடல் ஆற்றலையும் நுண்ணறிவினையும் அதிகரிக்க முயன்றிருப்பதாக பல ஆதாரங்களையும் முன்வைக்கின்றார்கள்.

இக்கொள்கையை தீவிரமாக சார்ந்து நிற்கும் எரிக் வொன்டெனிக்கன் (Erich Von Daniken) எனும் ஆய்வாளர் Chariots of the Gods எனும் இது தொடர்பான தனது ஆய்வு நூலில் இங்கிலாந்தில் அமைந்துள்ள ஸ்ரோன்ஹென்ஞ் (Stonehenge), பொலிவியா வின்திவானாகு (Tiwanaku) பகுதியிலுள்ள புமாபுங்கு (Pumapunku), ஈஸ்டர் தீவின் மொய் (Moa of Ester Island), கிசாவின் உயர்ந்த பிரமிட் (Great Pyramid of Giza) போன்ற பல புராதன நினைவுச் சின்னங்களின் கட்டுமானத்தில் நவீன சிக்கலான தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருப்ப

தாகவும் அத் தொழிநுட்பத்தை வேற்று கிரகத்து வாசிகளிடம் இருந்து நமது மூதாதையர்கள் பெற்றுக்கொண்டு அவற்றை கட்டியிருக்கலாம் அல்லது வேற்றுக் கிரகத்துவாசிகளே அவற்றைக் கட்டியிருக்கலாம் எனவும் குறிப்பிடுகிறார்.

கிழக்கத்தைய மற்றும் மேற்கத்தைய புராணங்களில் வர்ணிக்கப்படும் மிருக - மனித கலப்பு உருவங்களும் எகிப்தில் அமைந்துள்ள பிரமிட்டில் வரையப் பட்டிருக்கும் ஓவியங்களிலும் செதுக்கப் பட்டிருக்கும் சிற்பங்களிலும் காணப்படும் மிருகத் தலையுடன் கூடிய உருவங்களும் மேலும் அங்கே கண்டெடுக்கப்பட்ட சில எலும்புக்கூடுகளும் மனிதனது மரபணுக் களை விலங்குகளின் மரபணுக்களுடன் கலந்து மரபணுப் பொறியியல் முறை மூலம் புதிய இனங்களை உருவாக்க மேற் கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாக ஆதாரம் காட்டுகின்றனர். இவை பண்டைய மனிதர்களின் புனைக் கதைகளின் கதாபாத்திரங்களாக இருக்க வாய்ப்பிலை. ஏனென்றால் அவர்கள் எப்போதும் தாம் பார்ப்பவற்றையே ஓவியங்களாக அல்லது சிற்பங்களாக வடிக்கும் வழக்கத்தை கொண்டிருந்தவர்கள். இந்தவகையில் தமது மரபணுக்களை மனிதர்களின் மரபணுக் களுடன் கலந்து இன்றைய அதீத நுண்ணறிவுள்ள நவீன மனிதனை வேற்றுக்கிரகவாசிகள் உருவாக்கி யிருக்கலாம் எனக் கூறி மிகக் குறுகிய காலப்பகுதியிலே மனிதன் அடைந்த பாரிய நுண்ணறிவு வளர்ச்சிக்கு தமது புதிய கருத்தியலை காரணமாக முன்வைக் கின்றனர்.

புராதன விண்வெளி கோட்பாளர்களின் இக் கருத்தியல் தற்போதுள்ள சமயங் களையும் கடவுள் வழிபாட்டு முறை களையும் கேள்விக்குள்ளாக்கியதோடு விஞ்ஞானிகளிடையே பல வாதப் பிரதி வாதங்களையும் தோற்றுவித்தது. இதற்கு முக்கிய காரணம் இதுவரை இப் பிரபஞ்ஞத்தில் உயிர்வாழ்வதற்கேற்ற வகையிலுள்ள இன்னுமொரு கிரகத்தை விண்வெளி ஆய்வாளர்களினால் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதேயாகும். ஆனால் அவ்வாறான பல கிரகங்கள் இருப்பதற்கும் அவற்றில் நம்மைவிட தொழிநுட்பத்தில் பாரிய வளர்ச்சியடைந்த இனங்கள் இருப்பதற்குமான வாய்ப்புகளை மறுப்பதற்கில்லை.

கூர்ப்பினூடாக மனித இனம் நுண்ணறிவிலே ஏனைய இனங்களை விட இமாலய வளர்ச்சியடைந்திருந்தாலும் ஒரு சில முக்கியமான பண்புகளை முற்றாக இழந்துள்ளதென்றே எண்ணத் தோன்று கிறது. அவற்றில் முக்கியமானது நில நடுக்கங்கள், எரிமலைக் குமுறல்கள், சுனாமிகள் போன்ற இயற்கை அழிவுகளை முன்கூட்டியே உணர்ந்தறியும் அறிவாற்ற லாகும். சாதாரண சிற்றெறும்பிலிருந்து பாம்புகள், டொல்பின் மீன்கள், பறவைகள், நாய்கள், குரங்குகள் என பொதுவாக அனைத்து உயிரினங்களும் இவ்வழிவு களை பல மணி நேரங்களுக்கு முன் கூட்டியே உணர்ந்தறிந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்வதையும் விநோத சத்தங்களை எழுப்புவதையும் பல ஆய்வாளர்கள் விலங்குகளின் நடத்தை யினை ஆய்வு செய்ததன் மூலம் கண்டுள்ளனர். அந்தவகையில் ஏனைய உயிரினங்கள் அவ்வாற்றலைக் கொண் டுள்ளபோது அவற்றைவிட கூடிய நுண்ணறி வுடைய மனிதனுக்கு ஏன் இவ்வறிவு மேலும் சிறப்பாக விருத்தியடையாமல்

முற்றாக அற்றுப்போனதென்று தெரிய வில்லை. இவ்வறிவானது மனிதனது பரிணாம வளர்ச்சியில் திட்டமிட்டு மரபணுப் பொறியியல் முறையால் அழிக்கப்பட் டுள்ளதா? இதற்கும் புராதன விண்வெளிக் கோட்பாட்டாளர்கள் கருதுவது போன்று வேற்றுக் கிரகவாசிகளுக்கும் ஏதேனும் தொடர்புண்டா? பூமியிலே மனித சாம்ராஜ் யத்தை சத்தமில்லாமல் இடையிடையே ஆட்டம் காணவைப்பவை தான் வெற்றுக் கண்ணால் காணமுடியாத நுண்ணுயிர் கூட்டங்கள். இவற்றில் மிக முக்கிய மானவை பல மில்லியனுக்கும் மேற்பட்ட இனங்களாக பெருகிக்கிடக்கும் வைரஸ், பக்டீரியா போன்ற தொற்றுக் கிருமிகள். இவை உலகின் மூலை முடுக்கெங்கும் பரவி உயிர் வாழ்வதற்கரிய இடங்களிலும் தமது இருப்பை நிறுவியுள்ளன. மனித வரலாற்றிலே இக் கிருமிகளால் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பல மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இதற்கு உதார ணங்களாக 14ஆம் நூற்றாண்டில் 75 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களை காவு கொண்டு ஐரோப்பாவின் சனத்தொகை யினை 30% ஆல் குறைத்த பிளேக் (Plague) எனும் கொள்ளை நோயினையும் 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஐரோப்பாவில் மட்டும் ஆண்டுதோறும் 400000 மக்கள் கொல்லப்படக் காரண மான சின்னம்மை (small pox) நோயினை யும் குறிப்பிடலாம்.

வேகமாக பிறழ்வுக்கு உட்படக்கூடிய இந் நோய்க் கிருமிகள் குறிப்பாக வைரஸ் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் புதுப்புது வடிவமெடுத்து பல ஆட்கொல்லி தொற்று நோய்களை பரப்பிவருகின்றன. இந்நோய் தொற்றுக்கு உட்படும் மனிதர்கள் நோய்க் கிருமிக்கெதிரான பிறபொருள் எதிரிகளை (antibodies) தமது நிர்ப்பீடனத் தொகுதியில் (immunue system) தோற்றுவிக்கும் வரை அத் தொற்றிலிருந்து முற்றாக குணமடைய முடியாது. பிறபொருள் எதிரிகளை தோற்று விக்கும் மனிதர்கள் அந்நோய்க்கெதிரான எதிர்ப்புசக்தியைப் பெற்று அதிலிருந்து மீள்வதுடன் அந் நோய் தாக்கம் மீண்டும் ஏற்படாமலும் பாதுகாக்கப்படுகிறார்கள். இந்தவகையில் இந்நோய்க் கிருமிகள் மனிதனின் நிர்ப்பீடனத் தொகுதியை வலுவடைய செய்துள்ளதுடன் டாவினின் இயற்கைத்தேர்வு முறையினால் மனித பரிணாமவளர்ச்சியை நெறிப்படுத்தியு முள்ளது. தற்போது மருந்து வளர்ச்சியின் உதவியுடன் இத் தொற்றுக்கள் வேகமாக பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டாலும் எதிர் காலத்தில் இவற்றைவிட மிக உக்கிரமான நோய்க்கிருமிகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு. புராதன விண்வெளி கோட்பாடாளர்கள் பூமியில் புதிதாக தோன்றும் நோய்க் கிருமிகளுக்கு காரணம் வேற்றுக் கிரகவாசிகளே என்றும் இது மனிதனது பரிணாம வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம் அல்லது பூமியானது அவர்களால் புதிய நோய்க்கிருமிகளை பரிசோதித்து பார்ப்பதற்கான களமாக பயன்படுத்தப்படுவதாக இருக்கலாம் என அனுமானிக்கிறார்கள்.

பகுதி 2 : கூர்ப்பினது எதிர்காலப் போக்கு

அந்த வகையில் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற மனித இனம் இன்றுவரை உடற் கூற்றியல் ரீதியாக பாரிய மாற்றங்கள் எதனையும் எட்ட வில்லை. மனித இனத்தின் எதிர்கால பரிணாம வளர்ச்சி தொடர்பாக கருத்து

தெரிவிக்கும் ஆய்வாளர்களில் தொல்லுயிரியலாளரான இயன் டெரெர்சோல் (Ian Tattersall) மனித இனமானது சிறிய சிறிய குழுக்களாக பிரிந்து தனிமைப்படுத்தப்படாமல் ஒன்றாக இருப்பதோடு அதற்குள் உள்ள வேறுபட்ட மனித வர்க்கங்கள் தொடர்ச்சியாக தங்களுக்குள் இனப் பெருக்கத்தில் ஈடுபட்டு வருவதால் மனித இனத்தினது மரபணுத் தொகுதியில் குறிப்பிடத்தக்க பிறழ்வுகள் ஏற்பட்டு அது நிலைத்தன்மை அடைந்து அதனூடாக மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக அரிதென கூறுகின்றார். மேலும் நவீன மருத்துவ தொழிநுட்ப உதவிகளால் சூழலுடன் ஒத்துவாழ முடியாத பலவீனமான மனிதர்களும் தமது ஆயுட்காலத்தை அதிகரித்து இனப் பெருக்கத்தில் ஈடுபடுவதால் டாவினின் இயற்கைத்தேர்வு முறையானது நவீன மனித இனத்தினால் ஓரங்கட்டப்பட்ட ஒரு விடயமாகவேயுள்ளது. இதனால் மனிதன் மேலும் கூர்ப்படைவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவென வாதிடுகிறார்.

நவீன டாவின் கோட்பாட்டின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த ஜூலியன்ஹக்ஸ்லி (Julian Huxly) எனும் உயிரியலாளர் மனிதனானவன் தற்போது உடற் கூற்றியல் ரீதியாக பரிணாம வளர்ச்சியின் உச்சத்திலிருப்பதாகவும் இனிமேல் ஏற்படும் பரிணாம வளர்ச்சியானது மனம் சார்ந்ததாகவே இருக்குமெனவும் அது அடுத்த கட்ட பாய்ச்சலுக்கான வாசல்படியில் உள்ளதெனவும் கூறியுள்ளார். அந்த வகையில் மனிதன் இன்னும் சிறிது காலத்தில் பேர்மனம் படைத்தவனாக பரிணாம வளர்ச்சியடைய வாய்ப்புண்டு. மன வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அதற்கு மூளையும் வளர்ச்சியடைய வேண்டுமென கருதும் சில விஞ்ஞானிகள் கூர்ப்பில் மூளையின் பருமன் மும்மடங்காக அதிகரித்திருப்பதை ஆதாரம் காட்டி மேலும் மூளையின் பருமன் கூர்ப்பினூடாக அதிகரிக்கும் என எதிர்வு கூறியுள்ளனர்.

ஆனால் சில விஞ்ஞானிகள் அதற்கு எதிரான கருத்தை முன்வைக்கின்றார்கள். எவ்வாறெனில் நமது மூளையானது ஏற்கனவே உடலில் பிறப்பிக்கப்படும் சக்தியின் 20% தினை தனது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதாகவும் இது தனி ஒரு அங்கத்திற்கு தற்போதுள்ள மனித உடலால் வளங்கப்படக்கூடிய சக்தியின் உச்ச அளவென்பதாலும் மூளையின் பருமன் கூர்ப்பிலே மேலும் அதிகரிக்கும்போது அதன் அதிகரித்த சக்திப் பயன்பாட்டை பூர்த்திசெய்ய அதிகளவு குருதி மிகவேகமாக இருதயத்தினால் கூடிய விசையுடன் குருதிக் கலன்களினுள் வெளித் தள்ளப்படவேண்டி வருவதால் இருதயத்தின் பருமனும் அதற்கேற்றால் போல் ஏனைய உடல் அங்கங்களின்து பருமனும் விருத்தியடைய வேண்டுமென்கிறார்கள். அதனால் மூளையின் பருமன் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.



அத்தோடு நரம்புக் கூற்றியலாளர்கள் (neurologists) மனித மூளையின்

பருமனுக்கும் அது கொண்டுள்ள நுண்ணறிவுக்கும் சம்பந்தமில்லையெனவும் அது மூளை எவ்வளவு வினைத்திறனாக தனது ஏனைய பகுதிகளுடன் நரம்பு கணத்தாக்கு தொடர்புகளை கொண்டுள்ளது என்பதினாலும் பெற்றுக்கொண்ட அநுபவத்தினாலுமே தீர்மானிக்கப்படுவதாக கூறுகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் மேதையான ஆல்ப்ரட் ஐன்ஸ்டீனின் (Albert Einstein) மூளையை ஆராய்ந்த பேராசிரியர் சாண்ட்ரா விட்டில்சன் (Prof.Sandra Witelson) அவரது மூளையானது சாதாரண நுண்ணறிவுடைய மனிதன் ஒருவனின் மூளையின் பருமனை ஒத்ததாகவே இருந்ததாக கருத்து தெரிவித்துள்ளார். அந்த வகையில் நவீன மனிதனில் மூளையின் பருமனுக்கும் அதன் நுண்ணறிவுக்குமுள்ள தொடர்பை நிராகரித்த விஞ்ஞானிகள் கூடிய நுண்ணறிவுடைய மனிதர்களின் மூளையானது அதனது ஏனைய பகுதிகளுடன் மிக வினைத்திறனாக தொடர்புபட்டிருப்பதாகவும் அவர்கள் மூளையின் அதிகளவு சதவீதத்தினைப் பாவிப்பதாகவும் கூறுகின்றனர். சராசரி மனிதன் மூளையின் 10% தினையே பாவிக்கிறான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே பரிணாம வளர்ச்சியில் மூளையின் 100% தினையும் பாவிக்குமாற்றல் வரப்பெற்றவனாக மனிதன் தோற்றம் பெறவாய்ப்புண்டு. அம்மனிதன் பேர்மன் ஆற்றல் படைத்தவனாக இருப்பான்.

இவ்வாறு பேர்மன் ஆற்றல் பெற்ற மனிதன் தனது மனவாற்றலால் இருந்த இட்திலிருந்து கொண்டே பல செயல்களை செய்து முடிக்கும் ஆற்றலை பெறுவதோடு புதிய புலனறிவுகளையும் கைவரப் பெறுவான். அவற்றில் முக்கியமானவையாக ரெலிபதி (telepathy), ரெலிகைனெசிஸ் (telekinesis), ரெலிரான்ஸ்போடேசன் (teletransportation) என்பவற்றைக் கொள்ளலாம். இவ்வாற்றல்களை இன்று சில மனிதர்கள் கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அது ஆரம்பநிலையில் இருப்பதாகவே விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவை முழுமையாக விருத்தியடையின், ரெலிபதி மூலம் மனிதன் உலகின் எம் மூலையி லிருந்தாலும் தனக்கு வேண்டியவருடன் மனவாற்றல் மூலம் தொடர்பை ஏற்படுத்தமுடியும். இதனால் உலக தொலைபேசி தொடர்பாடல் முறைமை முற்றாக அழிந்து போகலாம். எண்ணங்கள் மூலம் மனிதன் உரையாட ஆரம்பிப்பதால் மொழிக்கான தேவையும் அற்றுப்போக வாய்ப்புண்டு. இவ்வாற்றலை அதிகளவு கைவரப்பெற்றவர்கள் தமது எண்ணங்களை மற்றையவர்களின் மூளைக்குள் பலவந்தமாக புகுத்தி அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் இடம் உண்டு.

ரெலிகைனெசிஸ் மூலம் தூர இருந்து கொண்டே பொருட்களை தனது மன ஆற்றலால் இயக்கும் ஆற்றல் படைத்தவனாக இருப்பான். ரெலி ரான்ஸ்போடேசன் உதவியுடன் மனிதன் ஒரு சூட்சும வடிவில் தான் நினைத்த மாத்திரத்தில் விரும்பிய இடத்தில் தோன்றுவதற்கான சக்தியைப் பெறுவான். அவனது மனவாற்றலைப் பொறுத்து அவன் பயணிக்கும் தூரம் வேறுபடக் கூடியதாக இருக்கும். இப் புலனறிவுகளைக் கொண்டு மனிதன் தனது முப்பரிமாண எல்லைகளை உடைத்து வேறு பரிமாணங்களில் தனது இருப்பை நிறுவுவான். அதன்போது அவன் கால - வெளி எல்லைகளைக் கடந்தவனாகவும் இருப்பான். மேலும் மனிதன் தனது பேர் மனத்தின் உதவியுடன் அட்டமாசித்திகள்

அனைத்தையும் கைவரப்பெற்று அதனை அநாயசமாக பாவிக்கும் ஆற்றல் கொண்டவனாக தோற்றம்பெறும் சாத்தியப்பாடுகளும் நிறையவேயுண்டு.



இயற்கைத் தேர்வினூடாக மெதுவாக நடைபெறும் கூர்ப்புச் செயன்முறையானது பல் வேறுபட்ட தொழிநுட்பங்களுடன் கூடிய மனித தலையீடுகள் காரணமாக எதிர் காலத்தில் எவ்வாறு எத்திசையில் பயணிக்கும் என்பதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. ஆனால் அப்பயணம் தொழிநுட்ப உதவியோடு செயற்கை தேர்வினூடாக மிக விரைவாக அதீத நுண்ணறிவையும் அமரத்துவத்தையும் அடையும் திசையை நோக்கி பயணிப்பதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு. இந்தவகையில் பரிணாம வளர்ச்சியின் போக்கை மாற்றக்கூடிய ஆற்றல் கொண்ட தொழிநுட்பங்களாக மரபணுப் பொறியியல் (genetic engineering), செயற்கை நுண்ணறிவு (artificial intelligence), படியாக்கம் (cloning), நனோ தொழிநுட்பம் (nono technoly), எந்திர அறிவியல் (robotics) போன்றன கருதப்படுகின்றன.

இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற மனித மரபணு கருத்திட்டம் (Human Genome Project) மூலம் மனிதனது 23 நிற மூர்த்த சோடிகளிலும் DNA களில் காணப்படும் மரபணுக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டன. இதன் மூலம் ஒவ்வொரு மரபணுவும் உடலின் எத்தகைய தொழிற்பாட்டில் பங்குபற்றுகின்றது என அறியப்பட்டது. இதில் முக்கியமானது பரம்பரையாக கடத்தப்படும் நோய்களுக்கு காரணமான மரபணுக்களையும் கலவயதாதலை (cell aging) கட்டுப்படுத்தும் மரபணுக்களையும் கண்டறிந்ததே. இம்மரபணுக்களை மரபணுப் பொறியியல் முறை மூலம் அகற்றிவிட்டு ஒரு மனிதனை உருவாக்கும் போது அவன் பல பரம்பரை நோய்கள் அற்றவனாகவும் ஆயிரம் வருடங்களுக்கு மேல் உயிர்வாழ்பவனாகவும் இருப்பான். மேலும் இம் முறையால் நுண்ணறிவையும் அதிகரித்துக் கொள்ளலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் ஒப்பீட்டளவில் இது ஒரு மெதுவான செயன்முறையாகும். இதனைவிட விரைவானதும் வினைத்திறனுமான வளர்ச்சியை நோக்கியதாயுள்ளது நைக்போஸ்ட்ரம் (Nick Bostrom) என்ற தத்துவவாதியால் முன்வைக்கப்படும் மாற்று மனிதத்துவம் (Transhumanism) எனப்படும் மெய்யியல் சார்ந்த நிலைப்பாடு. இது எவ்வாறு தொழிநுட்ப உதவிகளோடு மனிதனது அறிவு, உடல், உள சார்ந்த திறன்களை அதிகரித்து இறுதியில் அமரத்துவத்தை அடையலாம் என்பது பற்றிய கருத்தை முன்வைக்கிறது. இந்த வகையில் நுண்ணறிவை அதிகரிக்க முயலும் மனிதன் இலத்திரனியல், நனோ தொழிநுட்பம் போன்றவற்றின் உதவியுடன் சிலிக்கானால் ஆக்கப்பட்ட மூளை மேம்பாடுகளை (Silicon made brain en-

hancements) மூளையில் பொருத்தி பாவிக்க தொடங்கும்போது அவன் Homo cyberneticus என்ற புதிய இனமாக தோற்றம் பெறுவான். இத் தொழிநுட்பம் வெற்றியடைகையில் மனிதன் தனது முழு மூளையினையும் கணனிமயப்படுத்த முனையும்போது Homo hybridus என்ற இனமாக மாற்றமடைவான். இவ்வினம் அதனது மூளையைத் தவிர ஏனைய உடலமைப்பில் சாதாரண மனிதனை ஒத்ததாகவே இருக்கும். இவ்வினம் மனிதனைவிட பாரிய நுண்ணறிவு பாய்ச்சலைக் கண்டிருந்தாலும் சாதாரண மனித உடற் கட்டமைப்பு அதனது வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதாக அமையும். இதனால் இறுதியில் முழு மனித உடற் கட்டமைப்பும் இயந்திர மயமாக்கப்பட்டு Homo machines என்ற இனம் உருவாகலாம். இதன் மூலம் மனிதன் இலத்திரனியலூடான அமரத்துவத்தை (electronic immortality) அடைவான். இவ்வினம் தன்னைப் போன்று பல பிரதிகளை உருவாக்கி மிக வேகமாக பல்கிப் பெருகும். அதன்போது சூழலுடன் ஒத்துவாழ முடியாத நிலையை அடையும் Homo sapiens முற்றாக Homo machines இனால் பிரதியீடு செய்யப்படும். இவ்வினம் தமது மூளையிலுள்ள தகவல்கள் அனைத்தினையும் ஒரு இயந்திர உடலில் இருந்து தரவேற்றி (upload) இன்னுமொரு இயந்திர உடலில், அது வேறொரு கிரகத்தில் இருந்தால் கூட தரவிறக்கம் (download) செய்வதன் மூலம் விரும்பிய வடிவத்தை பெறுவதுடன் ஒளியின் வேகத்துடன் பயணிக்கும் ஆற்றலையும் பெற்றதாக இருக்கும். தமக்குள் ஏற்றத்தாழ்வுகள் ஏதுமற்ற இவ்வினம் மிக விரைவாக வளர்ச்சியடைந்து தம்மினப் பரம்பலை மேற்கொள்ள ஏனைய உடுமண்டலங்களை (galaxy) நோக்கிய பயணங்களை மேற்கொள்ளும்.

இவ்வாறு மனிதன் தொழிநுட்ப உதவியால் கணனிமயப்படுத்தப்பட்ட பிரக்ஞையுடன் கூடிய ஒரு இயந்திரமாக மாறி அமரத்துவத்தை அடைந்தாலும் அதன் போது மனிதன் மனிதனாக இருப்பானா என்பது கேள்விக்குரியது. அத்தோடு மனிதன் இயந்திரமாக மாறும் கால கட்டத்தில் ஏற்படும் சில தவறுகள் மனித குலத்தை அடியோடு அழிப்பதற்கும் வழிவகுக்கும்.

பாரிய மாற்றங்களை எதிர்நோக்கி நிற்கின்ற இக்காலகட்டத்தில் இனம், மதம், சாதி என பல பிரிவுகளாக பிளவுபட்டிருக்கும் நமது மனித இனமானது இக்குறுகிய நோக்குடைய சிந்தனைகளை உடைந்தெறிந்து ஒரு ஆரோக்கியமான முன்னோக்கிய பாய்ச்சலுக்கு தன்னை தயார்ப்படுத்துமா? அல்லது இப்பிறவுகள் காரணமாக தன்னையே மாய்த்துக் கொள்ளுமா என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

பெண்களின் முயற்சியாண்மையும் தலைமைத்துவ வளர்ச்சியும்

திருமதி தேவரஞ்சினி சுபாஷ்கரன்

போர்க் காலத்திற்கு பின்னரான அபிவிருத்திக் கட்டத்தில் பல்வேறுபட்ட நெருக்கடிகளும், தூண்டுதல்களாலும் பெண்கள் கூடுதலாக குடும்பங்களை தலைமை தாங்குபவர்களாகவும், விதவைகளாகவும் காணப்படுகின்றனர். இந் நிலைமை, அவர்களை முயற்சியாண்மையை உருவாக்குவதற்கும், அதனைத் தலைமை தாங்கி நடாத்துவதற்கும் வழிகோளாக அமைந்தது. குடாநாட்டில் 60% மான பெண்கள் சிறிய நடுத்தர முயற்சியாண்மையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களின் முயற்சியாண்மை விருத்தியானது வெற்றியானது அவர்களின் சிறந்த தலைமைத்துவத்தினால் ஏற்படுகின்றது. எனவே ஏனைய காரணிகளின் தாக்கத்தினை நிலையாக கொண்டு, இங்கு பெண் தலைமைத்துவமும் முக்கியமாகின்றது.

சனத்தொகையில் பெண்கள் சரி அரைவாசியாக உள்ளனர். பெரும்பாலான நாடுகளில் சனத்தொகையிலும் பெண்கள் ஆண்களின் எண்ணிக்கைக்கு சமமாகவே உள்ளனர். அதேபோல வேலைப்படையிலும் முயற்சியாண்மையிலும் கூட பெண்களின் பங்குபற்றல் சில தசாப்தங்களாக அதிகரித்துவந்துள்ள காரணத்தால் ஆண்களுக்கு சமமாகவே பெண்கள் விருத்தி அடைந்து தொழில் உலகத்தில் சாதனைகள் நிகழ்கின்ற போதிலும் நிறுவனங்களின் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கையை ஓர் கணிசமாகவே காணப்படுகின்றது. உதாரணமாக இலங்கையில் பணிபுரியும் வேலைப்படையில் 65 வீதத்துக்கும் அதிகமானோர் பெண்களாவர். ஆனால், தலைவர்கள் என்ற அடிப்படையில் கணக்கெடுத்தால் பெண்களின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக் கூடியதாகவே உள்ளது.

இவ்வாறு பெண்களின் உயர்வு தடுக்கப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. இது தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுவாக நிறுவனங்களில் பெண்களின் உயர்வுக்கு எதிரான "கண்ணாடித் தடை" (Glass Ceiling) காணப்படுகின்றது. அதாவது சட்டரீதியாக பெண்கள் தலைமைத்துவ நிலையை அடைவதை தடுக்க முடியாது எனினும் கண்ணுக்குத் தெரியாத மறைமுகத் தடை காணப்படவே செய்கிறது.

இந்நிலைமைக்கு இன்னுமொரு காரணம் பெண்கள் பற்றிய எண்ணப் பாங்கு வேறுபட்டுக் காணப்படுவதாகும். பெண்கள் பலவீனமானவர்கள், அவர்களால் தீர்மானங்கள் சரியான முறையில் எடுக்க முடியாமை போன்றன சமூகத்தில் காணப்படுகின்றன.

பால் தொடர்பாக வேறுபட்ட எண்ணப் பாங்கு காணப்படுகின்றது. இவ்வேறுபாடுகள் பெண்ணின் தலைமைத்துவத்திற்கு தடையாக காணப்படுகின்றது. ஆனாலும், சூழ்நிலைகளின் போதும் பெண்களை

சிறந்த தலைவர்களாகவும் மாற்றியுள்ளது. பெண் ஆணைவிட உடல்வலிமையில் பொதுவாக குறைவான நிலையில் இருக்கின்றபோதிலும் அறிகை, ஆற்றல், சிந்தனை மற்றும் செயலாற்றல்களில் ஆணைவிட குறைந்தவள் அல்ல என்னும் சமூகத்தின் கலாசார பார்வையின் ஊடாகவே பெண்ணின் தலைமைத்துவ வேறுபாடு ஏற்படுகிறது. இவ்வாறான கலாசார தடைகளிலிருந்து விடுபட்டு ஆசிய, ஆபிரிக்க பெண்களைவிட மேற்கு நாடுகளின் பெண்கள் பல பதவிகளை வகிக்கின்றனர்.

இன்று பெண்கள் தொழில் துறையில் வேகமாக முன்னேறுவதுபோல ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதிலும் வேகமாக முன்னேறி வருகின்றனர். எனினும் ஆண்களுக்கு சமமாக பூரணமான விடுதலையை அவர்கள் அடைந்துவிடவில்லை. பலநிறுவனங்களில் "கண்ணாடித் தடை" களை உடைக்க அவர்களால் முடியவில்லை. தவிர வேலைத்தளங்களிலும், பொது போக்குவரத்திலும், வீதிகளிலும் பெண்கள் பல்வேறு விதமான பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். சட்டங்களினால் பெண்களுக்கு ஏற்படும் இத்தகைய அசௌகரியங்களைத் தடுக்க முடியவில்லை. சமூக ரீதியாக சுரண்டல்களுக்கும், இம்சைகளுக்கும், பெண்கள் ஆட்படுத்தப்படும் நிலைமை இன்னும் தொடர்கிறது.

பெண் தலைமைத்துவம் தொடர்பான ஆய்வுகள்

நோர்த்ஹவுஸ் (2003) அவர்களின் கருத்துப்படி பெண் தலைமைத்துவம் குறித்து கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பின்வரும் மூன்று அடிப்படை வினாக்களை மையம் கொண்டுள்ளன :

1 பெண்கள் தலைவர்களாக முடியுமா?
2 பெண்கள் தலைவர்களின் நடத்தையும் விளைதிறனும் ஆண் தலைவர்களில் நின்றும் வேறுபட்டுள்ளதா?
3 ஏன் ஒரு சில பெண்கள் மாத்திரம் உயர் தலைமைத்துவ நிலையை அடைகின்றனர்?

இதில் முதலாவது வினாவுக்கு விடைதேடிய ஆய்வுகள் பெண்களால் வெற்றிகரமான தலைவர்களாக விளங்க முடியும் என உறுதிப்படுத்துகின்றன. ஓர் ஆய்வின்படி ஐக்கிய அமெரிக்காவின் 135 மில்லியன் சனத்தொகையில் (2001) 46.6% பெண்கள் ஆவர். 20 வயதுக்கு மேற்பட்ட பெண்களில் 58% தொழில் துறைகளில் பணி புரிகின்றனர். ஆண்கள் ஒரு டொலர் சம்பாதிக்கும் போது பெண்கள் 0.76 டொலர் சம்பாதிக்கின்றனர். பல்கலைக்கழகப் பட்டங்களை பெற்றவர்களில் 58% பெண்களாவர். எனினும் 15.7% வீதமான பெண்களே நிறுவனங்களின் உயர் பதவிகளை அலங்கரித்தனர். அமெரிக்காவின் பாரிய கம்பெனிகளின் (Fortune 500) பணிப்பாளர் சபைகளில் 12.4% பெண்களாக இருந்தனர். ஆனால், இந்த 500 கம்பெனிகளில் ஆறு கம்பெனிகளில் மட்டுமே பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) யாக பெண்கள் தலைமை வகித்தனர்.

ஐக்கிய அமெரிக்கா சிறுகைத்தொழில் துறைகளில் 44% நிறுவனங்களை பெண்களே சொந்தமாகக் கொண்டு

உள்ளனர். ஆனால், அரசாங்க ஒப்பந்தங்களில் 3% மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பெண்களின் தொழில் துறை பங்கு பற்றலும் தலைமைத்துவமும் பொதுவாக அதிகரிப்பைக் காட்டினாலும் கறுப்பின, லத்தீன் அமெரிக்க, ஆசிய பெண்களின் வளர்ச்சி வெள்ளை இன பெண்களின் வளர்ச்சிக்கு சமமாக இருக்கவில்லை.

இலங்கையில் பெண் தலைமைத்துவம் தொடர்பான தகவல்கள் குறைவாகவே உள்ளன. உலகின் முதலாவது பெண் பிரதமர் இலங்கைப் பெண்ணாக இருந்தபோதிலும், பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பெண் தெரிவுசெய்யப்பட்ட போதிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சரவை உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெண்களின் பங்குபற்றல் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கவில்லை. பிரதேச, மாகாண சபைகளில் பெண்களின் பங்கேற்பு ஓரளவு உயர்ந்துள்ள போதிலும் இன்னும் மாகாண முதலமைச்சராக பெண் ஒருவர் நியமிக்கப்படவில்லை. எனினும் பல்கலைக்கழகம், பாடசாலை, வங்கிகள் உட்பட அரச, தனியார் நிறுவனங்களின் தலைமைப் பதவிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல பெண்கள் அமைச்சுகளின் உதவி மேலதிக செயலாளர்களாகவும் சிலர் அமைச்சு செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் துறைகள், பீடங்களின் தலைமைத்துவத்தை பெண்கள் பெற்றுக்கொண்டுள்ளனர். கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர் பதவிகளையும் பெண்கள் அலங்கரித்துள்ளனர். அத்துடன் தலைமை வகித்துக்கொண்டும் உள்ளனர்.

மேற்படி தகவல்கள் கடந்த சில தசாப்தங்களாக பெண்கள் தலைமைத்துவ பொறுப்பேற்றலில் முன்னேறி இருப்பினும் சனத்தொகையில் அவர்களது வீதத்துக்கும் அரசாங்க, மற்றும் தனியார் துறைகளில் அவர்கள் கொண்டுள்ள தலைமைத்துவ பதவிகளின் வீதத்துக்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுகிறது. உற்பத்தித் திறன், செயலாற்றுகை ஆகியவற்றில் மட்டுமல்லாது நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்குவதிலும் பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பது நிரூபிக்கப்பட்ட போதிலும் தலைமைத்துவ பதவிகளில் பெண்களின் பங்குபற்றல் மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் பொருள் பெண்களின் ஆற்றல்களை உச்சமாகப் பயன்படுத்துவதற்கு கலாசாரம் உட்பட பல்வேறு தடைகள் இன்றும் உள்ளன என்பதாகும்.

ஆண் தலைவர்களுக்கும் பெண் தலைவர்களுக்குமிடையே நடத்தையிலும் விளைதிறனிலும் வேறுபாடுகள் உள்ளனவா எனப்பார்க்கும் போது அறிவு, திறன், மனப்பாங்கு தொடர்பாக ஆண் தலைவர்களுக்கும் பெண் தலைவர்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், பெண்கள் ஆண்களைவிட கூடிய பங்கேற்பு அல்லது ஜனநாயக தலைமைத்துவ பாங்கினை பின்பற்றுகின்றனர் எனவும், ஆண் தலைவர்கள் கூடிய அதிகார தலைமைத்துவ பாங்கினை பின்பற்றுகிறார்கள் எனவும் இவ்வாய்வுகள் காட்டின. அதே நேரத்தில்

தமது நிறுவனத்தில் ஆண்கள் அதிகமாக இருந்தால் ஆண்களும், பெண்கள் அதிகமாக இருந்தால் பெண்களும் பணிகளை பூரணப்படுத்துவதில் கூடிய அழுத்தம் தருகின்றனர். அதாவது, நெறிப்படுத்தல் பாங்கினை (Directive style) பின்பற்றுகிறார்கள் எனவும் இவ்வாய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

இன்னுமொரு தொகுதி ஆய்வுகளின்படி தலைமைத்துவ விளைதிறனிலும், உளச்சார்பு, தொழில்சார் திருப்தி, அர்ப்பணிப்பு, பணியாளரைத் திருப்திப்படுத்தல் முதலிய மாறிகளின் அடிப்படையிலும்கூட ஆண், பெண் தலைவர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படவில்லை.

எனினும் உயர்பதவியை அடைவதற்கு காத்திருக்க வேண்டிய காலம், பணியாளர்களிடமிருந்து பெறக்கூடிய ஒத்துழைப்பு, சமூக இசைவாக்கம் போன்றவற்றிலும் குடும்ப அம்சங்கள் அவர்களது தொழில்சார் முன்னேற்றத்தைப் பாதிக்கின்ற விடயத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் வேறுபாடுகள் இருப்பதை சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இடைநிலை முகாமைத்துவம், கல்வி, அரச சேவை, சமூக சேவை ஆகியவற்றில் பெண் தலைவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். இராணுவம் மற்றும் மேற்பார்வை சார்ந்த தொழில்களில் ஆண்கள் முன்னிலை வகிக்கின்றனர். தவிர கட்டுப்படுத்தல் குறைவாகவும் ஒத்துழைப்பும் பங்கேற்பும் அதிகமாகவும் தேவைப்படுகின்ற தலைமைத்துவ நிலைகளில் பெண்கள் ஆண்களைவிட முன்னிலை வகிக்கின்றனர். பெண் தலைவர்கள் பெரும்பாலும் ஒத்துழைப்பு சார்ந்த தலைமைத்துவத்தையே (web Leadership) விரும்புகின்றனர். அத்துடன் குறைந்தளவு தொழிலாளர்களை வைத்து வேலை செய்கின்ற முயற்சியாளர்களும் சிறந்த தலைவர்களாக காணப்படுகின்றனர்.

பெண் தலைவர்கள் ஏன் அதிஉயர் பதவிநிலையை அடைவதில்லை. இதற்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றில் மிக பிரபலமானது "குழாய் கோட்பாடு" (Pipeline Theory) ஆகும். அதாவது பெண்கள் முகாமைத்துவ பதவிகளில் நீண்டகாலம் நிலைதிருக்காத காரணத்தால் அவர்கள் இயல்பாக அதிஉயர் பதவி நிலைக்கு செல்ல முடியவில்லை என்பதாகும். இதுதவிர பொது முகாமைத்துவத்தில் போதிய அனுபவமின்மை, போதிய தகைமைகள் இன்மை, சுய நம்பிக்கை இன்மை, உயர்பதவிகளில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்கும் ஆற்றலின்மை போன்ற காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இத்தகைய காரணங்களின் புறவயத் தன்மை கேள்விக்குரியது. ஏனெனில் மேற்படி காரணங்களில் போதுமான அனுபவம் இல்லாமை என்ற ஒரு காரணத்தை தவிர ஏனைய காரணங்களை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை. எனினும் நாம் முன்பு குறிப்பிட்ட "கண்ணாடித் தடை" பெண்களின் தலைமைத்துவ முன்னேற்றத்தை தடுக்கும் முக்கிய காரணி என்பதை பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

தாம் பணிபுரியும் நிறுவனங்களிலேயே பெண்களின் தலைமைத்துவ முன்னேற்றத்துக்கு எதிரான தடைகள் காணப்படுகின்றன. சமமான கல்வித்

தகைமைகள் கொண்ட ஆண்களைவிட பெண்கள் பிரதிகூலமான நிலைமையில் உள்ளனர். அவர்களிடம் உயர் தராதரமுள்ள செயலற்றலும் முயற்சியும் எதிர்பார்க்கப் படுகின்றன. அதேபோல நிறுவன கலாசாரம் பெண்களின் தலைமைத்துவத்தை ஊக்கு விப்பதில்லை. போதிய வளங்களை வழங்காது கடினமான பணிகளை நிறை வேற்றுமாறு பெண்களை பணிப்பதன் மூலம் அவர்களது திறமையை குறைத்து மதிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப் படுகின்றன. அத்துடன் ஆண்களின் மேலான்மை காணப்படும் நிறுவனங்களில் பெண்கள் தலைமைத்துவ பொறுப்பேற்பது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. உயர் தலைமைத்துவ குழு முழுவதும் ஆண் களாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதில் முக்கிய விடயம் என்னவெனில் இவ்வாறான சந்தர்ப்பங் களில் பால்நிலை தொடர்பாக நடுநிலை வகிக்கும் ஆண் பணியாளர்கள் கூட இவ்வாறு பெண்கள் தலைமைத்துவத்தில் ஒதுக்கப்படும்போது அதற்கு எதிராக குரலெழுப்பாது அமைதி காப்பதாகும்.

பெண்கள் ஏன் தலைமைத்துவத்தில் சரியான நிலையில் இல்லாமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பெண்களுக்கு மிக உயர்ந்த செயலாற் றுகை தராதரங்களை விதித்தல்
- நிறுவனக் கலாசாரம் சாதகமாக இல்லாமை
- ஆண் வர்க்கத்தினருக்கு பதவி உயர்வு வழங்க விரும்புதல்
- பெண்களின் செயலாற்றல் பற்றி அதிஉயர் அதிகாரி அறியாதிருத்தல்
- போதுமான அங்கீகாரம் வழங்க தவறுதல்
- உதவிகளைப் பெறுவதில் மிதமிஞ்சிய சிரமங்கள்
- தீர்க்கமான தொழில் முன்னேற்ற வாய்ப்புக்கள் இல்லாமை
- ஆண்களுடைய முற்போக்குத் தன்மை
- மனவெழுச்சி சார்ந்த ஆதரவு இல்லாமை
- நிறுவனத்தின் உள்ளார்ந்த வலை யமைப்புகளில் ஒதுக்கி வைத்தல்
- ஆண் வழிப்படுத்துநர்கள் (Mentors) இல்லாமை
- நிறுவனத்தின் நுண் அரசியல் (Micro-politics)
- வேலை – குடும்ப முரண்பாடும், சமனாக பேணமுடியாமையும்

ஆளிடைத் தொடர்புகளும் பெண்களின் தலைமைத்துவ முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கின்றனர். உயர் பதவியிலுள்ள ஆண்கள், பெண்கள் தொடர்பாக உடன் பாடான மனப்பாங்குகளைக் கொண்டிருக் கும்போது பெண்களுக்கான தலைமைத்துவ வாய்ப்புகள் அதிகரிக்கும். அதே நேரத்தில் பெண்களுக்கு எதிரான எண்ணப்பாடு (Prejudice) பெண்களுக்கான வாய்ப்பு களைத் தடை செய்கின்றன. பெண்களுக்கு சவால்களை ஏற்க முடியாது. தலைவர் என்பவர் ஆண்மை கொண்டவராக இருத்தல் வேண்டும் போன்ற எண்ணப்பாடு பெண்களுக்கு எதிரானவை. ஆண்கள் இவ்வாறான எண்ணப்பாடு கொண்டிருப் பதற்கு பெண்களின் வலுவாண்மை அதிகரித்தால் அவர்கள் தம்மை பாரபட்சமாக நடத்துவார்கள் (Reverse Discrimination) என்ற அச்சமாகும் என சில ஆய்வு முடிவுகள்

கூறுகின்றன. இதனால், பெண்களின் செயலாற்றுகையை ஆண்கள் மதிப்பீடு செய்யும்போது எதிர்மறையான மனப்பாங்குகளைக் கொண்டுள்ளனர். தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், பின்னூட்டல் போன்றவற்றில் நிறுவனங்களில் பெண்கள் தேவையான ஆதரவை பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அத்துடன், முறையில் வலையமைப்பு (Informal Networks) களிலிருந்தும் பெண்கள் ஒதுக்கிவைக்கப் படுகின்றனர். தவிர, நிறுவனங்களில் சிரேஷ்ட ஆண் உறுப்பினர்கள் புதிய ஆண் உறுப்பினர்களுக்கு பணிகள் மற்றும் மனவெழுச்சி தொடர்பான உதவிகளை வழங்குவதுடன் தமது இளையவர்கள் பற்றி மேல்நிலை முகாமைத்துவத்துக்கு விதந்துரைகளையும் செய்வார்கள். ஆய்வுகளின் படி இத்தகைய சிரேஷ்ட உறுப்பினர்களின் வழிப்படுத்துநர் தொடர்புகளை (Mentor Relationship) பெண்களால் பெற முடிவதில்லை.

ஆகவே, பெண்களின் தலைமைத்துவ முன்னேற்றம் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்படுகிறது. இக்காரணிகள் பெரும்பாலும் நேரடியாக அல்லாமல் மறைமுகமாகவே தொழிற்படுகின்றன. இக்காரணிகளின் தாக்கத்தைக் குறைத்து பெண்கள் தமது விகிதாசாரத்துக்கு ஏற்ப தலைமைத்துவ பதவிகளைப் பெறுவதற்கு நிறுவன கலாசாரத்தில் மாற்றம் கொண்டு வருவது மாத்திரம் போதுமானதல்ல. தனித்து இயங்க கூடிய, முடிவெடுக்க கூடிய ஒரு இனிய சூழல் அமைய வேண்டும்.

ஓர் விதவையின் நிலை

கோரிக்கை யற்று கிடக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா - மிகக்
கொடிய தென்றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்
வடிக்கின்ற வட்ட நிலா.

உலகின் குடித்தொகைப் போக்கு

பேராசிரியர் கா. குகபாலன்
புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

உலகில் காணப்படும் வளங்களில் மனித வளமே மதிப்பு வாய்ந்த வளமாகும். இம் மனிதன் உற்பத்தியாளனாக, நுகர்வோனாக அழிப்பவனாக காணப்படுகின்றான். அத்துடன் உளரீதியாக சிந்தித்து பௌதிக ரீதியாக வளங்களை கண்டறியும் ஆற்றல் மிக்கவன். தான் வாழும் இயற்கையுடனும் கலாசார சூழலுடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கிறான். எனினும் சில சந்தர்ப்பங்களில் இவ்விரண்டையும் வெற்றி கொள்கிறான். வளவாய்ப்புக்களை பயன்படுத்துவதில் ஈடுபாடு கொண்டுள்ள மனிதன் அறிவு விருத்தி, வளப் பரம்பல் என்பவற்றிற்கேற்ப தாம் வாழும் பிரதேசங்களை விருத்தி செய்யும் ஆற்றலையும் கொண்டுள்ளான். எனவே மேற்குறித்த இரு பண்புகள் குடித்தொகைப் போக்குகளை பெரிதும் பாதித்துவருகின்றன என்றால் மிகையாகாது.

வரலாற்று ரீதியாக குடித்தொகை

உலகின் குடித்தொகை வளர்ச்சிப் போக்கினை வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து கோமோ செப்பியன்ஸ் காலத்திலிருந்து இன்றுவரை அறிதல் வேண்டும். எனினும் மனித வரலாறு பற்றிய சரியான தகவல்களோ சான்றுகளோ இதுவரை தெளிவாகக் கிடைக்கவில்லை என்றே கூறல் வேண்டும். இன்றும் கூட உலகில் குடிக்கணிப்பினை உரியமுறையில் நடைமுறைப்படுத்தாத நாடுகள் பலவுள. இருப்பினும் கிடைக்கக்கூடிய தரவுகளைக் கொண்டே உலக குடித்தொகைப் பண்புகளை அறிய முடிகின்றது.

உலகில் மக்கள் ஒரு மில்லியன் வருடங்களாக வாழ்ந்து வருகின்ற போதிலும் கி.மு. 8000 ம் ஆண்டிலிருந்து குடித்தொகையை அண்ணளவாக மதிப்பிட்டுள்ளனர். மானிடவியலாளர்கள் அவ்வாண்டில் உலக குடித்தொகை ஏறத்தாழ 8 மில்லியன்களாகும் என்பர். கி.மு. 8000 - கி.பி. 1 வரையுள்ள காலப்பகுதியில் 1530 வருடங்களுக்கொரு முறை குடித்தொகை இரட்டிப்பு நிலை ஏற்பட்டிருந்துள்ளது என குடித்தொகை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். உரோமர் காலத்திலிருந்து கி.பி. 1750ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 800 மில்லியனாக குடித்தொகை அதிகரித்திருந்ததாகவும் இரட்டிப்பு நிலையானது 12402 வருடங்களாக இருந்தது எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் விருத்தி பெற்ற நாடுகளில் விஞ்ஞான ரீதியிலான குடிக்கணிப்புகள் 17ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் மூன்றாம் உலக நாடுகளான வளர்முக மற்றும் விருத்தியடையாத நாடுகள் பலவற்றில் இரண்டாம் உலகப் போரின் பின்னரேயே மேள்கொள்ளப்படலாயின. எனினும் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் 1960 களைத் தொடர்ந்தே கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் உலகில் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட

காலத்திற்கு முன்னரான காலப்பகுதிகளில் குடித்தொகைப் போக்கு பற்றிய சிந்தனை மதிப்பீடுகளாகவே காணப்படுகின்றன என்பதே உண்மை நிலையாகும்.

உலக உணவு என்ற நூலின் ஆசிரியர் எம். கே. கொன்ற் என்ற ஆய்வாளர் கி.பி. 1000 - 1600ம் ஆண்டுகளிடையே உலகின் குடித்தொகையை மதிப்பீடு செய்துள்ளனர். அவை பின்வருமாறு.

அட்டவணை - I

மதிப்பிடப்பட்ட குடித்தொகை கி.பி. 1000 - 1600

ஆண்டு	குடித்தொகை (மில்லியன்)
1000	275.0
1100	306.0
1200	348.0
1300	348.0
1400	373.0
1500	446.0
1600	486.0

Source : sirvastava.s.population studies, New delhi.2002.

மேற்குறித்த அட்டவணை I இன் பிரகாரம் 600 ஆண்டு காலப்பகுதியில் குடித்தொகை இரட்டிப்புநிலை கூட ஏற்படவில்லை என்பதனைக் காணமுடிகின்றது. இக் காலங்களில் குடித்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் காரணிகளான பிறப்பை விஞ்சிய இறப்புகளால் அல்லது பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் குறுகிய இடைவெளிகளால் குடித்தொகை வளர்ச்சியைத் தாமதப்படுத்தியிருக்கலாம்.

கி.பி. 1600 - 1800 ஆண்டுகளுக்கிடையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விஞ்ஞான பூர்வமான குடித்தொகை தரவுகள் கிடைக்கப்பெறாதுவிடினும் குடித்தொகையின் முக்கியத்துவம் பற்றி பல்வேறு கோணங்களில் ஆட்சியாளர்களினாலும் அவர்களின் சித்தாந்தங்களை ஏற்றுக்கொள்ளும் அறிஞர்களினாலும் காலத்துக்குக் காலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அதாவது புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல், அவற்றினைத் தத்தம் அதிகாரத்துக்குள் கொண்டு வருதல், கனிப்பொருள் அகழ்தல், கைத்தொழிலாக்கத்தினை துரிதப்படுத்தல், சந்தை வாய்ப்புக்களைத் தேடல் போன்ற பல்வேறு நோக்கங்களைப் பெற்றிட குடித்தொகைப் பெருக்கத்தின் அவசியத்தினை வலியுறுத்தினர் எனலாம். இதனைப் போல அக்கால அறிஞர்களும் தமது ஆய்வின் முடிவாகக் கொண்டிருந்தனர் எனினும் தொழில் புரட்சியுடன் கூடிய மருத்துவ சுகாதார விருத்தியின் விளைவாக வருடாந்த வளர்ச்சி வீதம் படிப்படியாக அதிகரித்த நிலை ஏற்பட்டது. இந்நிலையில் 1800ம் ஆண்டில் 900.0 மில்லியன் மக்கள் உலகில் வாழ்ந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

18ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் 1 பில்லியனாகவிருந்த குடித்தொகை 2000ம் ஆண்டில் 7.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதனை அட்டவணை II விளங்குகின்றது.

அட்டவணை - II

உலகின் குடித்தொகை வளர்ச்சி கி.பி. 1750 - 2012

ஆண்டு	அதிகரித்த காலப்பகுதி	குடித்தொகை
1750 - 1850	100 ஆண்டுகள்	1 பில்லியன்
1850 - 1930	80 ஆண்டுகள்	2 பில்லியன்
1930 - 1960	30 ஆண்டுகள்	3 பில்லியன்
1960 - 1975	15 ஆண்டுகள்	4 பில்லியன்
1975 - 1987	12 ஆண்டுகள்	5 பில்லியன்
1987 - 2000	13 ஆண்டுகள்	6 பில்லியன்
2000 - 2012	12 ஆண்டுகள்	7 பில்லியன்

Source - Population Division, United Nation 2012

தற்போதைய நிலையில் உலகின் நாளொன்றுக்கு 250000 மக்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளனர். விருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றது. இந்நாடுகளில் சராசரி பிறப்பு வீதம் 1000 : 12-15 ஆகவிருக்க இறப்புவீதம் 1000 : 10-13 ஆகவிருக்கின்றது. இந் நிலையிலே விருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகை வளர்ச்சிக் குறைவுக்கு இந்நாடுகளின் மக்களிடையே சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சியே பிரதான காரணிகளாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வளர்முக மற்றும் விருத்தியடையாத நாடுகளில் 1950களைத் தொடர்ந்து இறப்பு வீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்ற போதிலும் பிறப்பு வீதம் உயர் நிலையில் ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டு வருகின்றது. குறிப்பாக பெரும்பாலான வளர்முக நாடுகளில் இறப்புக்கள் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதிலும் பிறப்புவீதத்தினை கட்டுப்படுத்துவதில் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

அட்டவணை - III

விருத்தியுற்ற மற்றும் வளர்முக நாடுகளில் சராசரி வருடாந்த வீதம் 1941 - 2000

ஆண்டு	விருத்தி பெற்ற நாடுகள்	வளர்முக நாடுகள்
1941 - 1950	1.35	1.44
1951 - 1960	1.35	2.03
1961 - 1970	1.06	2.31
1971 - 1975	0.89	2.39
1976 - 1980	0.75	2.11
1981 - 1985	0.64	2.01
1986 - 1990	0.60	1.94
1991 - 1995	0.50	1.70
1996 - 2000	0.50	1.60

Source - Population Division, United Nation - 2000.

அட்டவணை III இன் பிரகாரம் வளர்முக நாடுகளில் 1971 - 1975 ஆண்டு காலங்களில் அதியுயர் வளர்ச்சி வீதமாக 2.39 வீதமாக இருந்துள்ளபோதிலும் விருத்தியடைந்த நாடுகளைப் போலவே வளர்முக நாடுகளும் வருடவளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைந்து கொண்டு சென்றது. இருப்பினும் 2010ம் ஆண்டு வளர்முக நாடுகளில் 1.10 சதவீதமாக குறைவடைந் துள்ளதைக் காணமுடிகின்றது.

உலகின் குடித்தொகைப் போக்கினை 2000 - 2015ம் ஆண்டுகளிடையில் அவதானிக்கும் போது அட்டவணை IV ல் குறித்துரைக்கப்படுகிறது.

அட்டவணை - IV

குடித்தொகை வளர்ச்சிப் போக்கு

(மில்லியன் 2000 - 2015)

குடித்தொகை நிலை	விருத்திபெற்ற நாடுகள்	வளர்முக நாடுகள்	உலகம்
2001ம் ஆண்டு குடித்தொகை	1284.9 (20.9%)	4863.1 (79.1%)	6148.0 (100%)
2015ம் ஆண்டு குடித்தொகை	1331.1 (18.5%)	5865.6 (81.5%)	7197.0 (100.0%)

2001ம் ஆண்டு மொத்தக் குடித்தொகையில் வளர்முக நாடுகளில் 79.1 சதவீத மானவர்கள் வாழ்ந்துவர கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகளில் 20.9 சதவீதமானவர்கள்

வாழ்ந்துள்ளனர். வளர்முக நாடுகளில் சராசரி வருடாந்த வளர்ச்சி வீதம் 2010ல் 1.1 வீதமாக காணப்பட்டிருக்க விருத்தியடைந்த நாடுகளில் 0.5 சதவீதமாக காணப்படுகின்றது. இந்நிலையில் பொதுவாக உலகின் குடித்தொகை வளர்ச்சிநிலை மேற்குறித்தவாறு காணப்படுமாயின் உலகின் குடித்தொகை இரட்டிப்பால் 42 வருடங்களில் நிகழ வாய்ப்புண்டு. எனினும் இன்றைய உலகின் குடித்தொகை வளர்ச்சிப் போக்கில் பல்வேறு பொருளாதார சமூக பண்பாட்டுக் காரணிகளின் விளைவாக இவ்விரு உலகிலும் குடித்தொகை நிலையானது மந்தகதியிலேயே காணப்பட்டுவருவதனை அவதானிக்க முடிகின்றது. எவ்வாறெனினும் உலகில் அதிகரித்த மற்றும் குறைவடைந்து கொண்டு செல்லும் குடித்தொகைப் போக்கானது நாடுகள் மட்டத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது.

விருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகையுடன் தொடர்புடைய பிரச்சனைகள்

உலகில் பொதுவாக விருத்தியடைந்து வரும் நாடுகள் விருத்தியடைந்த நாடுகள் என அவ்வவ் நாடுகளின் பொருளாதார சமூக பண்பாட்டுக் கோலங்களை அடிப்படையாகக் கொண்டு பகுபடுத்தப்படுகின்றது. விருத்தியடைந்து வரும் நாடுகள் உலகில் லத்தின் அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் பரந்து காணப்படுகின்றன. இக் கண்டங்களிலுள்ள விருத்தியடைந்துவரும், விருத்தி குறைவான நாடுகள் பெரும்பாலானவை மேற்கு ஐரோப்பியரின் குடியேற்றவாதத்தினுள் அகப்பட்டு அவர்கள் தம் பொருளாதார நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட நாடுகளாக காணப்படுவதுடன் தற்போது கூட நவகாலனித்துவத்துக்குள்வாங்கப்பட்ட நிலையில், இந்நாடுகளில் வாழ்ந்து வரும் மக்கள் பொருளாதார சமூக பண்பாட்டு ரீதியில் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து வருவதை காணமுடிகின்றது. மேற்குறித்த நாடுகளில் சில தமது பொருளாதார திட்டமிடல், மற்றும் அரசியல் செயற்பாட்டினால் விருத்தியடைந்து வருகின்ற போதிலும் பெரும்பாலான நாடுகள் குடித்தொகையோடு தொடர்புடைய பிரச்சனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் அனுபவித்து வருவதைக் காணமுடிகின்றது.

விருத்தியடைந்த நாடுகளாகவுள்ள மேற்குல நாடுகள் உலகவளங்களில் 85.0 சதவீதத்தினையும் குடித்தொகையில் 21.0 சதவீதத்தினையும் கொண்டிருக்க விருத்தியடைந்து வரும் நாடுகள் 15.0 சதவீத வளத்தினையும் 79.0 சதவீத குடித்தொகையினையும் கொண்டு காணப்படுகின்றது. இவை தவிர விருத்தியடைந்த நாடுகளில் 75.0 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் கைத்தொழில் மற்றும் நகரப் பொருளாதார அமைப்புக்குள் வாங்கப்பட்ட நிலையில் காணப்பட்ட விருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் மக்களில் 75.0 சதவீதமான மக்கள் கிராமிய பொருளாதார அமைப்புக்குள் உள்வாங்கப்பட்ட நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.

உலகில் 2010ம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரசாரம் 6916 மில்லியன் மக்கள் வாழ்ந்துள்ளனர். இந்நிலையானது 2050ம் ஆண்டு 9551 மில்லியனாக அதிகரிக்கும் என

எதிர்வு கூறப்பட்டுள்ளது. அட்டவணை V கண்டங்கள் ரீதியாக குடித்தொகை எதிர்வு கூறல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை - V
குடித்தொகை எதிர்வுகூறல்

ஆண்டு	உலகம்	ஆசியா	ஆபிரிக்கா	ஐரோப்பா	லத்தின் அமெரிக்கா	வட அமெரிக்கா	ஓசானியா
2010	6916	4165 (60.2%)	1031 (14.9%)	740 (10.7%)	596 (8.6%)	347 (5.0%)	37 (0.5%)
2020	7717	4582 (59.4%)	1312 (17.2%)	744 (9.6%)	662 (8.6%)	376 (4.9%)	42 (0.5%)
2030	8425	4887 (58.0%)	1634 (19.4%)	736 (8.7%)	717 (8.5%)	403 (4.8%)	47 (0.6%)
2040	9039	5080 (56.2%)	1999 (22.1%)	724 (8.6%)	757 (8.4%)	426 (4.8%)	52 (0.6%)
2050	9551	5164 (54.1%)	2393 (25.1%)	709 (7.4%)	782 (8.2%)	446 (4.7%)	57 (0.6%)

Source : Population Division United Nation 2011.

அட்டவணை V இன் பிரகாரம் உலகில் கண்ட ரீதியாக குடித்தொகை வளர்ச்சி பண்புகளை நோக்கும்போது விருத்தியடைந்த கண்டமான ஐரோப்பாவில் 2010ம் ஆண்டில் 10.7 சதவீதமான மக்கள் வாழ்ந்து வர 2050ல் 7.4 சதவீதமான மக்களே வாழ்வர் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதாவது 2010 லிருந்து 2050 வரை தொடர்ச்சியாக வீழ்ச்சிநிலையை காணமுடிகின்றது. வடஅமெரிக்காவினை பொறுத்தவரை 2010 லிருந்து தொடர்ச்சியாக குடித்தொகை அதிகரித்து செல்கின்ற போதிலும் உலக குடித்தொகையினைக் கருத்திற் கொள்ளும் போது குடித்தொகையின் வீதாசாரப்பரம்பல் தொடர்ச்சியாக குறைவடைந்து கொண்டே செல்கின்றது. ஓசானியாக் கண்டத்தின் குடித்தொகை வளர்ச்சி நிலையில் ஸ்திரத்தன்மை கொண்டுள்ளதுடன் வீதாசாரத்தில் மாற்றநிலை ஏற்படவில்லை எனலாம்.

இந்நிலையில் விருத்தியடைந்து வரும் நாடுகளைக் கொண்ட (யப்பான், சிங்கப்பூர் தவிர்ந்த) ஆசியாக்கண்டம் சார்பு ரீதியாக வளர்ச்சியினை கொண்டிருக்கின்ற போதிலும் உலக குடித்தொகையில் 2010ம் ஆண்டில் 60.2 சதவீதமாகயிருந்து 2050ம் ஆண்டில் 54.1 சதவீதமாக குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. லத்தின் அமெரிக்க கண்டத்தில் 2010ம் ஆண்டில் 8.6 சதவீதமாக இருந்த நிலை குறைவடைந்து 2050 ல் 8.2 சதவீதமாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

மேற்குறித்த கண்டங்களுக்கு மாறாக ஆபிரிக்கா கண்டத்தில் குடித்தொகை வளர்ச்சியானது விரைவாக அதிகரித்து வருவதால் அக் கண்டத்திலுள்ள நாடுகள் பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது. விருத்திடையந்துவரும் நாடுகள் மற்றும் விருத்தி குறைந்தனவான நாடுகளின் குடித்தொகை வளர்ச்சி அதிகரிப்பதற்கான காரணிகளில் முக்கியமானது. பிறப்பு வீதம் சார்பு ரீதியாக குறைவடைந்து கொண்டு செல்லும் அதேவேளை இறப்பு வீதத்தில் காணப்படக்கூடிய வீழ்ச்சி நிலையே பிரதான காரணியாகவுள்ளது. இதனால் குடித்தொகை வளர்ச்சி வீதம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

அட்டவணை - VI

குடித்தொகை வளர்ச்சி வீதம் 2012

ஆபிரிக்கா	வளர்ச்சி வீதம்	ஆசியா	வளர்ச்சி வீதம்
சிம்பாபே	4.36	பிலிப்பைன்ஸ்	1.87
நைகர்	3.36	நேபாளம்	1.77
உகண்டா	3.30	இந்தியா	1.31
எதியோப்பியா	2.90	இஸ்ரேல்	1.54
கொங்கோ	2.85	இலங்கை	0.91
மடகஸ்கார்	2.68	லத்தின் அமெரிக்கா	
		மெச்சிக்கோ	1.09
கென்யா	2.44	பேரு	1.02

Source : International Monetary Fund - 2012

வட ஆபிரிக்கா நாடுகள் தவிர்ந்த ஆபிரிக்க நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகக் காணப்படுவதற்கு இள வயது விவாகம், விவசாய நடவடிக்கைகளில் மக்கள் அதிகளவில் ஈடுபாடு கொண்டிருத்தல், வறுமை, அதிகளவிலான குழந்தைகளை விரும்பும் நிலை, பெண்கள் அந்தஸ்து தாழ்வாகக் காணப்படுவதுடன் வேலைவாய்ப்பில் பெருமளவில் ஈடுபாடு கொள்ளாத நிலை, கல்வி நிலை குறிப்பாக பெண்கள் கல்வி தாழ்ந்த மட்டத்தில் காணப்படல் போன்ற பல காரணிகளைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

குறிப்பாக இளவயது விவாகமானது பொதுவாக ஆபிரிக்க கண்டத்தில் வாழும் கறுப்பின பெண்களிடையே 10 - 15 வயதிடை வெளியில் 43.0 சதவீதமாகவுள்ளது. இவர்களிடையே கல்வி நிலையானது குறிப்பாக எழுத வாசிக்க தெரிந்த நிலையானது 20.0 சதவீதத்திற்கு குறைவானதாகவிருப்பதுடன் பள்ளிக்கு செல்லாதவர்களில் பங்கு 37.0 சதவீதமாகவுள்ளது என உலக குடிப்புள்ளியியல் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5ம் வகுப்புக்கு கீழ் கல்வி கற்றவர்களாக 46.0 சதவீதத்தினராக இருக்கின்றனர். அது மட்டுமல்லாது ஆபிரிக்க

நாடுகளில் வாழும் மக்கள் விவசாயத்தினையே அடிப்படைத் தொழிலாகவும் பருவகாலத் தொழிலாகவும் கைக்கொள்கின்றனர்.

2010ம் ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் மொத்தக் கருவள வீதமானது தெரிவு செய்யப்பட்ட விருத்தியடைந்துவரும் நாடுகளில் பின்வருமாறு காணப்படுகின்றது.

அட்டவணை - VII

விருத்தியடைந்துவரும் நாடுகளில் மொத்த கருவள வீதம்

ஆபிரிக்கா	மொத்த கருவளவீதம்	ஆசியா/ லத்தின் அமெரிக்க நாடுகள்	மொத்த கருவளவீதம்
நைகர்	7.1	வங்காளதேசம்	2.2
மாலி	6.3	கம்போடியா	2.6
சோமாலியா	6.3	இந்தியா	2.6
சம்பியா	6.3	சீனா	1.6
உகண்டா	6.1	இந்தோனேசியா	2.1
மாலாலி	6.0	மியன்மார்	2.0
சாட்	6.0	ஆர்ஜென்ரீனா	2.2
கொங்கோ	5.8	பிறேசில்	1.8
நைஜீரியா	5.5	கொலம்பியா	2.1
றுவண்டா	5.4	மெக்சிக்கோ	2.3
		பரகுவே	3.0
		பேரு	2.5

Source : World Bank group

அட்டவணை VII இல் காட்டப்பட்டுள்ள மொத்த கருவள வீதமானது ஆபிரிக்க நாடுகளில் சராசரி 5.0 க்கு மேல் காணப்பட்டிருக்க ஆசிய லத்தின் அமெரிக்க நாடுகளில் 3.0 க்கும் குறைந்த நிலையில் கடந்த இரு தசாப்தங்களாக காணப்பட்டு வருகின்றது. எனினும் பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் சராசரி 3.0 க்கும் அதிகமான கருவளவாக்க வீதத்தினைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவை தவிர விருத்தியடைந்து வரும் நாடுகளில் இளவயது விவாகத்துடன் அதிகளவான பிறப்புக்கள் நிகழ்வதால் குழந்தை இறப்புக்கள், சிறுவர் இறப்புக்கள், பிரசவத்தாய் இறப்புக்கள் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. மேலும் ஆண் குழந்தைகளை விரும்பியேற்கும் நிலை, மூடநம்பிக்கை, அறியாமை, குறைவான வாழ்க்கைத்தரம், குழந்தைகள் மூலம் வருமானம் பெறல், பொழுதுபோக்கு வழியின்மை, கூட்டுக்குடும்ப முறை, மதக் கொள்கை களின் தலையீடு, ஆணாதிக்கம், கட்டாயத் திருமணம், பலதார விவாகம், குடும்பத்

திட்டமிடலில் அக்கறை கொள்ளாமை போன்ற பல காரணிகள் விருத்தியடைந்து வரும் நாடுகளின் குடித்தொகை அதிகரிப்பு காரணிகளாக அமைந்துவிடுகின்றன.

குறிப்பாக விருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படுகின்ற வறுமையும் வருமான பகிர்வில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் குடித்தொகை பெருக்கத்திற்குரிய காரணிகளில் பிரதானமாகவுள்ளது என குடிப்புள்ளியாளர்கள் தெரிவிக்கின்றனர். வறுமை குடித்தொகையை அதிகரிப்பதற்கு பிரதான பங்கினை வகிக்கின்றது.

அட்டவணை - VIII

உலகின் மக்களின் தலைக்குரிய வருமானம் - 2010 (அமெரிக்க டொலரில்)

விருத்தியடைந்த நாடுகள்		விருத்தியடைந்துவரும் நாடுகள்	
கட்டார்	102211	ஆப்கானிஸ்தான்	680
லக்ஸ்பேக்	79785	சிம்பாபே	559
சிங்கப்பூர்	60410	பறூண்டி	625
நோர்வே	55009	எதியோப்பியா	1191
புருணை	54389	றுவாண்டா	1486
ஐக்கிய அமெரிக்கா	49922	வங்களதேசம்	2039
ஐக்கிய அரபு எமிரேட்	49012	இந்தியா	3830
அவுஸ்திரேலியா	42620	பிலிப்பைன்ஸ்	4430
ஜேர்மனி	39028	சுவிசிலாந்து	5782
நியூசிலாந்து	29730	எகிப்து 680	6545

Source : International Monutery Fund 2010 - 2012

அட்டவணை VIII இல் தரப்பட்ட நாடுகளின் மக்களின் தலைக்குரிய வருமானத்தினை நோக்கும்போது விருத்தியடைந்துவரும் நாடுகள் மிக தாழ்ந்த நிலையில் தலைக்குரிய வருமானத்தைக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இது குடித்தொகை பெருக்கத்திற்கு பிரதான காரணியாகக் கொள்ளப்படுகின்றது.

குடித்தொகை பெருக்கத்தினால் ஏற்பட்டு வருகின்ற விளைவுகளை நோக்கின் பிறப்புக் கால இறப்புகள் அதிகரித்த நிலையினை அவதானிக்க முடிகின்றது. ருவாண்டா, மாலி, மொசாம்பிக் போன்ற ஆபிரிக்க நாடுகளில் 1000 பிறப்புகளுக்கு சராசரி 330 குழந்தை இறப்புக்கள் நிகழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இவை தவிர விருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் 60.0 சதவீதமானவர்களிடையே ஒரு நாளுக்கான தலைக்குரிய வருமானம் 1 - 2 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. இதனால் அன்றாட வாழ்வினை போக்குவதற்கு போதுமானதாக இல்லாதநிலையில் சேமிப்புக்கான வாய்ப்புக்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவுள்ளது. அத்துடன் வருமான குறைவானது

தாம் சார்ந்த விவசாய துறையில் முதலீடு செய்வதற்கு முடியாத நிலை ஏற்படவே உற்பத்தியும் குறைவடைந்து கொண்டு செல்லும் நிலை காணப்படுகிறது.

விருத்தியடைந்து வரும் நாடுகளில் குடித்தொகை அதிகரிப்பின் விளைவாக சமூக சீர்கேடுகள் அதிகரித்த நிலையில் உள்ளது மட்டுமல்லாது பாடசாலை செல்வதை தவிர்த்தல் அல்லது இடைவிலகல் அதிகரித்த நிலையில் உள்ளதை காணமுடிகின்றது. இத்தகைய விளைவுகளால் இந் நாடுகளின் அரசுகள் அன்னிய நாடுகளை சார்ந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் அபிவிருத்தி திட்டங்களின் பயன்களை பெற்று கொள்வதில் தவறும் நிலையும் காணப்படுகின்றது. இத்தகைய விளைவுகளின் காரணமாக நாடுகளுக்கிடையே அமைதியின்மை, ஸ்திரமற்ற அரசியல் போக்கு என்பன மேலும் மக்களது வாழ்வாதாரத் தினை பாதிப்பனவாக அமைந்துள்ளன எனலாம்.

விருத்தியடைந்த நாடுகளின் குடித்தொகை பிரச்சனைகள்

சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழிநுட்ப முன்னேற்றத்தினைக் கருத்தில் கொள்ளுமிடத்து விருத்தியடைந்த நாடுகள் சிறப்பான இடத்தில் உள்ளன எனலாம். இன்றைய உலகில் 40 - 45 நாடுகள் விருத்தியடைந்த நாடுகளின் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்நாடுகள் பொருளாதார ரீதியிலும் ஆள்புல நிலையிலும் குடித்தொகைப் பண்புகளை பொறுத்தவரையிலும் சிறப்புற்ற நாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா 316 மில்லியன் (2012) மக்களையும் ஐஸ்லாந்து மால்டா என்பன ஒரு மில்லியன் மக்களையும் கொண்ட நாடுகளாக இருக்கின்ற போதிலும் விருத்திநிலையில் மேலோங்கி யிருக்கின்றன.

விருத்திபெற்ற நாடுகள் சிலவற்றில் உயர்வான குடித்தொகை அடர்த்தியும் ஏனையவற்றில் அடர்த்திக் குறைவும் குடித்தொகைப் பண்புகளாகவுள்ளன. உதாரணமாக பல ஐரோப்பிய நாடுகள் ஜப்பான் போன்றன உயர்வான அடர்த்தி கொண்டனவாகவும் ஐக்கிய அமெரிக்கா கனடா ருஷ்யா போன்றன குறைவான குடித்தொகை அடர்த்தி கொண்ட நாடுகளாகவுள்ளன. இந்நாடுகளின் பொருளாதார விஞ்ஞான தொழிநுட்ப ரீதியாக விருத்தி பெற்றுள்ளதன் விளைவாக மக்களிடையே வாழ்க்கைத்தர உயர்வு (அட்டவணை VIII) தலைக்குரிய வருமான உயர்வு, தொழில்வாய்ப்பு, சுகாதார மருத்துவ வசதிகளின் பெருக்கம், வாழ்க்கை முறையில் முன்னேற்றகரமான நிலை போன்ற பலவற்றைக் காணமுடிகிறது.

2012ம் ஆண்டில் 7.01 பில்லியன் மக்களைக் கொண்டுள்ள உலகில் ஏறத்தாழ 21.0 சதவீதமானவர்கள் விருத்தியடைந்த நாடுகளில் வாழ்ந்துள்ளனர். இந்நாடுகள் குடித்தொகை மாறாநிலைக் கோட்பாட்டில் இறுதிக்கட்டத்திற்குள் வாங்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது குடித்தொகை வளர்ச்சி வீதமானது மிகத் தாழ்ந்த மட்டத்தில் அல்லது வீழ்ச்சி நிலையில் சென்று கொண்டிருக்கிறது (அட்டவணை IX)

அட்டவணை - IX
விருத்திபெற்ற நாடுகளின் குடித்தொகை வளர்ச்சி வீதம் - 2012

நாடுகள்	வளர்ச்சி வீதம்	நாடுகள்	வளர்ச்சி வீதம்
நியூசிலாந்து	0.86	சுவீடன்	0.06
ஐக்கியராச்சியம்	0.55	அவுஸ்திரேலியா	0.03
ஸ்பெயின்	0.65	போலந்து	-0.08
நோர்வே	0.33	கங்கேரி	-0.18
பின்லாந்து	0.07	பல்கேரியா	-0.80

Source : International Monetary Fund 2012.

இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சியில் மேன்மை கொண்டிருக்கும் இந்நாடுகளுக்கு வேண்டிய குடித்தொகையினைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையினால் அதிகரித்த குடித்தொகையைக் கொண்ட விருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து தவிர்க்க முடியாத நிலையில் உள்வரவினை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. இத்தகைய உள்வரவானது பல்வேறுபட்ட சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதை அண்மைக்காலங்களில் அவதானிக்க முடிகின்றது.

உலகின் மனித/ நில விகிதமானது சராசரி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 35 ஆகவுள்ளது. இது விருத்தி பெற்ற நாடுகளில் 19 ஆகும். இந்நாடுகள் உலக இயற்கை வளங்களில் 70.0 சதவீதத்துக்கும் மேற்பட்ட பங்கினையும் மொத்தத் தேசிய உற்பத்தியில் 85.0 சதவீதத்தினையும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலைக்கு வரலாற்றுக் காரணிகள் பெரும் பங்கினைக் கொண்டிருக்கின்றது குடியேற்றவாதமும் நவீன குடியேற்ற வாதமும், கைத்தொழில் புரட்சி போன்றனவும் இந்நாடுகளின் பொருளாதார சமூக பண்பாட்டு வளர்ச்சிக்கு பெருந்துணை புரிந்துள்ளது. அதேவேளை புதிய நாடுகளைத் தம்வசப்படுத்தி அவற்றின் ஆளுகையைப் பெற்று அந்நாடுகளிலிருந்து தேவைப்படும் மூலப் பொருட்களைக் கொண்டு முடிவுப் பொருட்களை சந்தைப்படுத்தியும் தமது பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்திக் கொண்டனர். இவ்வாறான விருத்திபெற்ற இந்நாடுகள் தொடர்ந்தும் தம் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு குடித்தொகையுடன் கூடிய பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையானது எதிர்காலத்தையும் பாதிக்கும் செயலாக அமைந்து விடுகிறது.

இந்நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி நிலையில் தேக்கமானது உற்பத்தியாற்றலை பாதிப்பனவாக அமைந்துள்ளது என குடிப்புள்ளியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனனர். உலகில் 2012ம் ஆண்டில் சராசரி மொத்தக் கருவள வீதம் 3.2 ஆகக் காணப்பட விருத்தி பெற்ற நாடுகளில் 1.3 ஆகவுள்ளது. கடந்த மூன்று தசாப்த காலமாக மொத்த கருவள வீதத்தின் வீழ்ச்சியினைக் கருத்திற் கொண்டு குடித்தொகை வளர்ச்சியினை விரும்பிய குடித்தொகை

கொள்கையினை நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்நாடுகள் செயற்படுத்தி வருகின்ற போதிலும் வெற்றியடைவதில் தவறும் நிலையையே காணமுடிகிறது. அதாவது தொடர்ச்சியாக மேற்கைரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது கிழக்கைரோப்பிய நாடுகளிலும் மொத்தக் கருவள வீதத்தில் வீழ்ச்சிநிலை தொடர்கிறது.

விருத்திபெற்ற நாடுகளில் பிறப்பு சார்ந்த குறிப்பாக ஆண் பெண் உறவுகளில் சாதகமான போக்கினைக் கொண்டிருக்கின்ற போதிலும் பெண்கள் தொழிற்படையில் பங்காற்றும் நிலை தொடர்வதால் குழந்தைப் பேறு, அவர்களைப் பராமரித்தல் என்பனவற்றில் அக்கறை கொள்ளாத நிலையினை அவதானிக்க முடிகின்றது. இதற்கு மாறாக தொழிலாளர் கேள்வியானது தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்வதனால் உயர்வான கருவளவாக்கத்தினை நாடுகள் விரும்பிய போதிலும் அது சாத்தியப்படாத நிலை தொடர்வதால் விருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து உள்வரவினை விரும்பியோ விரும்பாமலோ பெற்றுக்கொள்ளும் நிலை தொடர்கிறது.

விருத்தி பெற்ற நாடுகளில் சட்டத்திற்கு புறம்பான முறை தவறிப் பிறந்த குழந்தைகளின் தொடர்ச்சியான உயர்வானது இந்நாடுகளில் சமூக பொருளாதார உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தி சமூகம் சார்ந்த பிரச்சனைகளை உருவாக்கி விடுவதையும் அவதானிக்க முடிகிறது. அது மட்டுமல்லாது பெரும்பாலான விருத்தி பெற்ற நாடுகளில் சட்டரீதியிலான விவாகங்களும் நீண்ட காலம் நிலைத்து நிற்காத நிலையையும் காணமுடிகிறது. இந்நிலைகளுக்கு இளைஞர் சுதந்திரம், பெண் விடுதலை என்பன காரணமாகவுள்ளது என்பர் ஆய்வாளர்கள். குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவில் 1991ம் ஆண்டு 1.2 மில்லியன் குழந்தைகள் விவாகமாகாத பெண்களுக்கு பிறந்தவர்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இவ்வாண்டில் பிறந்த குழந்தைகளில் 30.0 சதவீதமானோராக இவர்கள் காணப்படுகின்றனர். இவை தவிர முறைதவறிப் பிறந்த குழந்தைகளும் காணப்படுகின்றனர். இத்தகைய பிறப்புகளில் கறுப்பின மக்களிடையே 68.0 வீதத்தினரும் வெள்ளையின மக்களிடையே 22.0 சதவீதத்தினருமாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விருத்திபெற்ற நாடுகளில் வேண்டப்படும் குடித்தொகை வளர்ச்சியை எய்த முடியாத நிலைக்கு பெண்களிடையே விவாக வயதானது படிப்படியாக பின்தள்ளப்பட்டு வருவதும் வலுவான காரணிகளில் ஒன்றாகும். உதாரணமாக சுவீடனில் சராசரி பெண்களிடையே முதலாவது விவாகமானது 1960 ல் 22.5 வயதிலும் 1980 ல் 27.6 வயதிலும் 2006 ல் 30.5 வயதிலும் 2010 இல் 31.7 வயதிலும் நிகழ்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதே போலவே பெரும்பாலான விருத்திபெற்ற நாடுகளிலும் காணப்படும் பொதுப் பண்பாகவுள்ளது.

விருத்திபெற்ற நாடுகளில் 2012ம் ஆண்டு சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு 78 வயதாக வுள்ளது. பெண்களுக்கு 82 ஆகவும் ஆண்களுக்கு 76 ஆகவும் காணப்படுகிறது. இத்தகைய உயர்வான ஆயுள் எதிர்பார்ப்புக்கு சுகாதார மருத்துவ வளர்ச்சியுடன் பொருளாதார

முன்னேற்றம். தலைக்குரிய வருமான அதிகரிப்பு. உயர்வான வாழ்க்கைத்தரம். சிறப்பான நலன்புரிச்சேவைகள். தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டிலுள்ளமை போன்ற பல காரணிகளில் இணைந்து செயற்பட்டுவருகின்றன. இத்தகைய நிலைகள் சிறப்பாக இருக்கின்ற போதிலும் பெரும்பாலான நாடுகள் முதியோரைப் பராமரிப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வதாக முதியோர் தொடர்பான ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக பெற்றோர்களை அவர்களது வாரிசுகள் பராமரிக்கத் தவறுகின்றமையினால் அவர்களை அரசே பொறுப்பேற்று பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் அரசுக்கான செலவீனம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விருத்தி பெற்ற நாடுகளில் வாழும் மக்களில் 80.0 சதவீத்திற்கு மேற்பட்டோர் நகரம் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வருவதனால் குடித்தொகைப் பரம்பல். அடர்த்தியோடு தொடர்புடைய பிரச்சினைகள் மட்டுமல்லாது அவர்கள் தம் வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகள் பலவற்றைப் பெற்றுக் கொள்வதில் சிரமப்படுகின்றனர் என்பதை நகர நிர்வாகங்களினால் தெரிவிக்கப்பட்டு வருவதையும் அறியமுடிகின்றது. குறிப்பாக குடியிருப்புக்கள். நீர் வழங்கல் ஆகிய பெரிய சவாலாக அமைந்துள்ளது.

விருத்தி பெற்ற நாடுகளுக்கு வளர்முக நாடுகளிலிருந்தும் விருத்தி பெறாத நாடுகளிலிருந்தும் சட்டத்திற்குட்பட்டோ. அன்றி சட்டத்திற்குப் புறம்பாகவோ மேற்கொள்ளப்படும் உள்வரவானது சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளை தோற்றுவித்து வருகின்றது என்பர் சமூகவியலாளர்கள். இவர்கள் உள்வரவினை அவ்வவ் நாடுகளில் பூர்வீக குடிகளினால் விரும்பியேற்காத நிலையினால் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெறுவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். அது மட்டுமல்லாது பூர்வீக மக்களுக்கும் உள்வரவினை மேற்கொண்டவர் களுக்குமிடையில் பாலியல் தொடர்புகள். விவாக நிலை என்பன காரணமாக புதிய கலப்பு இனத்தின் அறிமுகமானது பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தி வருவதையும் நடைமுறையில் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறாக விருத்தியடைந்து வரும் மற்றும் விருத்தியடைந்த நாடுகளின் குடித்தொகை பிரச்சினைகள் வெவ்வேறான பண்புகளைக் கொண்டு காணப்படுகின்ற போதிலும் மேற்குறிப்பிட்ட குடித்தொகைப் பிரச்சினைகள் களையப்படுதலானது ஆரோக்கியமான உலக சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு பெரும் துணைபுரியும் எனலாம்.

குடிப்புள்ளியியல் நிலைமாறற் கோட்பாடு

செல்வி அபிராமி நல்தைம்பி
உதவி விரிவுரையாளர், புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1.0 அறிமுகம்

அண்மைக் காலங்களில் பலராலும் போற்றப்பட்டு வரும் குடிப்புள்ளியியல் நிலை மாறற் கோட்பாடானது உலகின் குடித் தொகைப் பண்புகளுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. இக் கோட் பாடானது ஏனைய குடித்தொகைக் கோட்பாடு களிலிருந்து முற்றிலும் மாறுபட்டமைந்த கோட்பாடாக உருவாக்கம் பெற்றுள்ளது. குடிப் புள்ளியியல் நிலைமாறற் கோட் பாடானது குடித்தொகை நியதியின் வேறுபட்ட பண்புகளையும் படிமுறைகளையும் விளக்கி நிற்கின்றது. மேற்கு நாடுகளில் சனத் தொகை இயக்க நியதியானது உயர் கருவளவாக்கம், உயர் இறப்பிலிருந்து தாழ் இறப்பு, தாழ் கருவள வாக்கமாக மாற்ற மடைந்துள்ளது. Ansley. J. Coale, Edgar M. Hoove போன்ற அறிஞர்கள் குடித்தொகை நிலை மாற்றம் பற்றிய விளக்கத்தினை முன்வைத்துள்ளனர்.

இக் கோட்பாடானது மேற்குலக நாடு களின் உண்மையான குடித்தொகை வரலாற்று அனுபவங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உயர் பிறப்பு வீதம், உயர் இறப்பு வீதம் என்பவற்றினாலும், தாழ்ந்த பிறப்பு வீதம், தாழ்ந்த இறப்பு வீதம் என்பவற்றினாலும் குடித்தொகை வளர்ச்சி யின் தாமதித்த பண்புகளை வெளிக் கொணரும் கோட்பாடாக இக் கோட்பாடு உருவாக்கம் பெற்றுள்ளது. விருத்தியடைந்த நாடுகளில் பிறப்பு, இறப்பு வீதங்களின் வீழ்ச்சிச் செயன்முறை பற்றிய பொதுமைப் படுத்தப்பட்ட விளக்கத்தை உருவாக்கும் ஒரு முயற்சியாக விபரிக்கப்பட்ட இக் கோட்பா டானது, மூன்றாம் உலக நாடுகளில் இன்றும் கூட ஆரம்ப கட்டத்திலிருக்கிற குடித்தொகை யின் மாற்றங்களுக்குப் பிரயோகிக்கக் கூடிய தான கோட்பாடாகவும் காணப்படுகின்றது. உயர்மட்ட பிறப்பு வீதத்தாலும், வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் இறப்பு வீதத்தாலும் உயர்ந்த குடித்தொகை வளர்ச்சி வீதத்தைத் தற்போது கொண்டிருக்கும் நாடுகள், தமது எதிர்கால குடித்தொகையின் போக்கினைக் கண்டறிந்து செயற்படுத்துவதற்கு இக் கோட்பாடு பெரிதும் பயன்படக் கூடியதாக இருக்கின்றது.

1.2 குடித்தொகை நிலைமாற்றக் கட்டங்கள்

இக் கோட்பாட்டின் உருவாக்க கர்த்தா வான லான்றி (Landry, 1909) என்பவர் குடிப்புள்ளியியல் நிலை மாறுதல் பிரதான மாக மூன்று கட்டங்களின் ஊடாகச் சென்று கொண்டிருக்கின்றது என்றார்.

அவையாவன :

1) புராதன காலம்
2) இடைக்காலம்
3) நவீன காலம்

புராதன காலத்தில் கருவள மானது உடற் கூற்றியலில் உச்சத்தை யடையும் பாலுறவுப் பண்புகளைக் கொண்டு இருந்ததுடன், உணவு வழங்கலில் அக் காலத்தில் தடைகளிருந்தமையால் இறப்பு

வீதத்தில் தமது செல்வாக்கினையும் கொண்டிருக்க, அதிகளவிலான பிறப்புக்களும் இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன என்றார். அதனால் அதிகரித்த பிறப்பினால் வளரவிருந்த குடித்தொகை அதிகரிப்பினை பலவீனமான பொருளாதாரக் காரணிகள் குறைந்திருந்தன. இடைக் காலகட்டத்தில் காலம் தாழ்த்திய விவாகங்கள், பொருளாதாரக் காரணிகளின் விருத்தியும் கருவளத்தைப் பாதித்தன. நவீன காலத்தில் முந்திய காலப்பகுதிகளில் ஆற்றியது போல பொருளாதாரக் காரணிகள் பிரதான பங்கை ஆற்றவில்லை. இக்கட்டத்தில் பிறப்பு வீத வீழ்ச்சி என்பது ஒரு பொதுவான பண்பாக இருந்துள்ளதுடன் ஒரு சமனிலைத் தன்மையும் காணப்பட்டது.

ஐரோப்பியக் குடித்தொகை அனுபவங்களை கோட்பாட்டு வடிவத்தில் பொதுமைப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட தோம்சன் (Thompson, 1929), பிராங் நொட்டெஸ்றெயின் (Frank. Q. Notestein, 1945), பிளாக்கர் (C.P.Blacker) போன்றோர் குடித்தொகை நிலைமாறலில் வேறுபட்ட படிமுறைகளை முன்வைத்துள்ளனர்.

i) படிமுறை 1 - Pre transitional stage (நிலைமாறு காலத்திற்கு முந்திய நிலை)

இது கைத்தொழில் யுகத்திற்கு முன்னைய காலத்தில் ஏற்பட்டது. உயர் மட்ட பிறப்பு, இறப்பு வீதங்களைக் கொண்ட உயர் மட்ட எண்ணிக்கையில் மாற்றமுறாத கட்டமாகும். இக் கட்டத்தில் பிறப்பு, இறப்புக்கள் அதிகமாகும். இதன் விளைவாக இயற்கை அதிகரிப்பு வீதம் மிகக் குறைவாகவே காணப்பட்டதுடன் குடித்தொகை வளர்ச்சியும் குறைவடைகின்றது. இக் காலத்தில் ஏற்பட்ட உயர் பிறப்பிற்கும் உயர் இறப்பிற்கும் பல காரணிகள் அடிப்படையாக அமைந்தன.

- குடும்பத் திட்டமிடல் சம்பந்தமான அறிவின்மை.
- மலேரியா, அம்மை போன்ற தொற்று நோய்களின் தாக்கம்
- மருத்துவ சுகாதார வசதிகளின் பற்றாக்குறை
- உணவு உற்பத்தியில் விருத்தியடையாத தன்மை
- பஞ்சம், வரட்சி
- சமூக, மத அடிப்படையில் குடித்தொகை அதிகரிப்பு கொடையாக உணரப் பட்டமை.

1920ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இந்நிலையில் காணப்பட்டிருந்தன. ஆபிரிக்காவில் எதியோப்பியா, சோமாலியா, கொங்கோ, அங்கோலா போன்ற நாடுகளில் தற்பொழுது இந்நிலையை அவதானிக்க லாம்.

ii) படிமுறை 2 - Transitional stage (நிலைமாறு காலப்பகுதி)

உயர் பிறப்பு வீதத்தினையும், வீழ்ச்சியடைந்து வரும் உயர் இறப்பு வீதத்தினையும் கொண்ட காலமாகும். அதாவது பிறப்பு வீதம் வீழ்ச்சி நிலைக்கு செல்லாதிருப்பதுடன், இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இதனால் பிறப்பு, இறப்பு வீதங்களுக்கிடையில் வேறுபாடு அதிகரித்துச் செல்வதனால் வளர்ச்சி வீதம் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் குத்தான குடித்தொகை வளர்ச்சி காணப்பட்டது. சனத்தொகை இக்காலத்தில் தான் விரிவடையத் தொடங்கியது. இதனால் சனத்தொகை தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றது.

பிறப்பு வீதம் உயர்வடைந்து இறப்பு வீதம் வேகமாகக் குறைவடைய பின்வரும் காரணிகள் அடிப்படையாக அமைந்தன.

- சுகாதார மருத்துவ வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றம்
- தொற்று நோய்களுக்கெதிரான தடுப்பு நடவடிக்கைகள். இதனால் மக்களின் ஆயுட்காலம் அதிகரித்தது.

இந் நிலைமாறு கட்டமானது மேலும் மூன்று பிரிவாக வகைப்படுத்தப்படும்.

1) நிலைமாறு காலத்திற்கு முந்திய நிலை (Early Transitional stage)
2) இடைப்பட்ட நிலைமாறு காலம் (Mid Transitional stage)
3) நிலைமாறு காலத்திற்குப் பிந்திய நிலை (Late Transitional stage)

முதலாவது கட்டத்தில் பிறப்புக்களும், இறப்புக்களும் சிறிதளவு வேறுபட்ட போதிலும் கருவளவாக்கம் நிலையானதாக இருக்கின்றது. இரண்டாவது கட்டத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் குறைவடைந்து செல்கின்ற போதிலும் பிறப்பு வீதம் சார்பு ரீதியாகக் குறைவடைந்து செல்கின்றது. மூன்றாவது கட்டத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதனால் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்திருந்தது. இந்த நிலையில் மக்களிடையே வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளதுடன் வளங்கள் உத்தம முறையில் பயன்படுத்தப்படுகின்றன எனலாம்.

இக்கட்டத்தில் சீனா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, கொரியா மற்றும் தென்னாசிய நாடுகள் உள்ளடங்குகின்றன.

iii) படிமுறை 3 - Industrial stage (கைத்தொழில் காலத்திற்குரிய நிலை)

வீழ்ச்சியடையும் பிறப்பு வீதத்தையும் அதனை விட வேகமாக வீழ்ச்சியடையும் இறப்பு வீதத்தையும் கொண்ட கட்டமாகும். இதனால் இக்காலத்தில் இயற்கை அதிகரிப்பு வீதமும் குறைவடைந்திருந்தது. இவ்வாறாகப் பிறப்பு வீதம் படிப்படியாகக் குறைவடையப் பின்வரும் காரணிகள் அடிப்படையாயின :

- பெண்களிடையே பிறப்பைக் கட்டுப்படுத்துவதற்கான கருத்தடை சாதனங்களின் பாவனை அறிமுகப்படுத்தப்பட்டு நாடுகளில் பரவியமை.
- பெண்களின் கல்வி, சமூக அந்தஸ்து உயர்வடைந்து சென்றமை.
- சமூக மாற்றம் மற்றும் நகராக்கம்.
- உணவுப் போசணை மட்டம் அதிகரிப்பினால் கருவளவாக்கம் குறைவடைந்து சென்றமை.

விவசாய அபிவிருத்தி, நகராக்க விருத்தி மற்றும் கைத்தொழிலாக்க நிலை காணப்படும் நாடுகளில் (யப்பான், சிலி, கனடா, ரஷ்யக் குடியரசு) இத்தகைய பண்புகளைக் காணமுடியும்.

iv) படிமுறை 4 - Post Industrial stage (கைத்தொழில் காலத்திற்கு பிந்திய நிலை)

குறைவான பிறப்பு வீதத்தையும், அதற்குச் சமனான குறைவான இறப்பு வீதத்தையும் கொண்ட மாற்றமுறாத கட்டமாகும். இங்கு குடித்தொகையின் வளர்ச்சி வீதத்தைக் காணமுடியாதுள்ளது. கருவளவாக்கமும், இறப்புக்களும் ஏறத்தாழ ஒரே மட்டத்தில் காணப்படுகின்றன. நிலையான கட்டத்தை குடித்தொகை இக் காலகட்டத்தில் அடைந்தது. இக் கட்டத்தினை

அபிவிருத்தி அடைந்த நாடுகளும், சில அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் எட்டிவிட்டன. இவை உயர்ந்த கைத்தொழில் வளர்ச்சியையும், உயர்ந்த தலைக்குரிய வருமானத்தையும் கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன. குழந்தைகளுக்கு தரமான உணவு நிரம்பல், உயர்ந்த கல்வி நிலை வேலை வாய்ப்புக்களை தாராளமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் போன்றன இக்கட்ட நாடுகளின் பண்பாகும். ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளில் இத்தகைய பண்புகளைக் காணமுடிகின்றது.

v) படிமுறை 5

இக் கட்டத்தில் பிறப்பு வீதம் மிகத் தாழ்ந்த மட்டத்திலும், இறப்பு வீதம் தாழ்ந்த மட்டத்திலும் காணப்படும். இக் கட்டத்தில் எதிர்க்கணிய சனத்தொகை காணப்படும். இவ்வாறான தன்மைக்கு

- சிறந்த குடும்பத் திட்டமிடல்
- பெண்களின் அந்தஸ்து உயர்வு
- பின்தள்ளிய விவாக வயது
- சுகாதாரம், மருத்துவம், உணவு உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம்

என்பன அடிப்படையாக அமைந்தன. இந் நிலையை ஜேர்மனி, சுவீடன், நோர்வே போன்ற நாடுகள் அடைந்துள்ளன.

மேற்கூறப்பட்ட குடிப்புள்ளியியல் நிலை மாறல் தன்மையின் ஒவ்வொரு கட்டங்களையும் அவற்றின் பண்புகளையும் படம் 1 விளக்கி நிற்கின்றது.

படம் 1 : குடித்தொகை நிலைமாறல் கட்டங்கள்



Source : www.coolgeography.co.ok/A-level/AQA/year%2012/population/DTM/DTM%20new.htm.

படிநிலை	1	2	3	4	5
உதாரணங்கள்	குறைவிருத்தி கொண்ட நாடுகள்	எகிப்து, கென்யா, இந்தியா	பிறேசில்	ஐக்கிய அமெரிக்கா, யப்பான், பிரான்ஸ், ஐக்கிய ராக்கியம்	ஜேர்மனி
பிறப்பு வீதம்	உயர்வு	உயர்வு	வீழ்ச்சி	குறைவு	மிகக்குறைவு
இறப்பு வீதம்	உயர்வு	கூடுதலான வீழ்ச்சி	குறைவான வீழ்ச்சி	குறைவு	குறைவு
இயற்கை அதிகரிப்பு	குறைவான வளர்ச்சி	மிக விரைவான வளர்ச்சி	மெதுவாக கீழ் நோக்கி அதிகரித்தல்	குறைவான வளர்ச்சி	குறைவான வளர்ச்சி
பிறப்பு வீதத் திற்கான காரணங்கள்	விவசாயத்திற்காக அதிக குழந்தைகள் தேவை. இளவயதில் சிறுவர்களின் இறப்பு, சமயம், சமூகங்கள் பிறப்பை ஊக்குவித்தன. குடும்ப திட்டமிடல் வசதி இன்மை.		மருத்துவ வசதி களின் முன்னேற்றம், விரும்பியளவு குழந்தையை பெறும் தன்மை	சிறந்த குடும்பத் திட்டமிடல் சிறந்த சுகாதார வசதி, பெண்களின் அந்தஸ்து உயர்வு, காலம் தாழ்த்திய திருமணம்	
இறப்பு வீதத்திற் கான காரணங்கள்	நோய்த்தாக்கம், மருத்துவ வசதிகளின் பற்றாக்குறை.	மருத்துவ சுகாதார வசதிகளின் முன்னேற்றம், நீர் விநியோகம்		மருத்துவ சுகாதார வசதிகளின் முன்னேற்றம், போசாக்கான உணவு.	

ஐக்கிய நாடுகள் சபையின் குடித்தொகைப் பிரிவினது கருத்தின் படி இக் கோட்பாடு சமூகத்தினை ஐந்து கட்டங்களாக வகைப்படுத்தப்படுகின்றது.

1) சமூகத்தில் உயர் பிறப்பும், உயர் இறப்பும் காணப்படுதல்
2) சமூகத்தில் உயர் பிறப்பு வீதம் காணப்படுவதுடன் இறப்பு வீதம் படிப்படியாக குறைவடைந்து செல்லும் நிலை.
3) சமூகத்தில் உயர் பிறப்பு வீதம் காணப்படுவதுடன், இறப்பு வீதம் தாழ்ந்த நிலையில் காணப்படுதல்.
4) சமூகத்தில் பிறப்பு வீதம் குறைவடைந்து கொண்டு செல்ல, இறப்பு வீதம் தாழ்ந்து செல்லல்.
5) பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டிருத்தல்.

கால்சாஸ் (Karlsax) என்பவருடைய கருத்தின் பிரகாரம் குடித்தொகை நிலை மாறல் கோட்பாட்டின்படி,

1) முதலாம் கட்டத்திலுள்ளவை விருத்தி நிலையற்ற சமூகமாக இருப்பதனால் அங்கு உயர் பிறப்பு வீதமும், உயர் இறப்பு வீதமும் காணப்படும்.
2) இரண்டாம் கட்டத்திலுள்ளவை உயர் இறப்பு வீதம் காணப்பட பிறப்பு வீதத்தில் மாற்றம் நிகழவில்லை எனவும், இதன் விளைவாக குடித்தொகை அதிகரிப்பு, சமூகத்தில் மெதுவான பொருளாதார விருத்தி ஏற்பட்டது எனவும்,

3) மூன்றாம் கட்டத்தில் இறப்பு வீதமானது ஆகக் குறைந்தளவிற்குச் சென்றிருக்க, பிறப்பு வீதம் குறைவடைந்து சென்றது எனவும்,

4) நான்காவது கட்டத்தில் குடித்தொகையில் சமநிலையில் காணப்பட்டது எனவும் கூறினார்.

இவரது கணிப்பீட்டின் பிரகாரம் முதலாம், நான்காம் கட்டங்களில் குடித்தொகை வளர்ச்சி குறைவாகவும், இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் குடித்தொகை வெடிப்பு நிகழ்ந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

1.3 முடிவுரை

தொகுத்து நோக்கும் போது குடித்தொகை வளர்ச்சி நிலை பற்றி பல அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இதில் மிகவும் முக்கியமான பண்பு யாதெனில் ஒவ்வொரு நாடும் மேற்குறித்துரைத்த ஐந்து கட்டங்களில் ஏதோ ஒன்றிற்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. அதாவது ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலானவை முதலாம் கட்டத்தினுள்ளும் ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை மூன்றாம் கட்டத்திலும் ஐரோப்பிய நாடுகள் ஐந்தாம் கட்டத்தினுள்ளும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளன.

குடித்தொகைக் கூட்டு
(Population composition)

1.1 அறிமுகம்

குடித்தொகைக் கூட்டு அல்லது குடித்தொகை அமைப்பு என்பது குடித்தொகையின் பக்கத் தோற்றத்தினை அளவிட்டுக் கூறுவது எனப் பொருள்படும். அதாவது ஏதோ ஒரு வகையில் குறித்த தொகுதி மக்களது பண்புகளை விரித்துரைத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும் இது ஒவ்வொருவரது தனிப்பட்ட பங்களிப்பின் கூட்டு மொத்தம் என்றால் மிகையாகாது. குடித்தொகைக் கூட்டு என்பது வயது, பால், விவாகநிலை, குடும்பங்களினதும் குடியிருப்பாளர்களினதும் அளவு, பொருளாதார நடவடிக்கைகள், தொழில், தேசியம், மொழி, மதம், இனம், கல்விநிலை, வருமானம் போன்ற உப கூறுகளை விளக்கிச் சொல்வது எனலாம். இக்கூட்டினைப் பற்றிப் பெரும்பாலும் அளவு ரீதியாகவும் தர ரீதியாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதாவது அளவு ரீதியாகப் பெறப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்தி தேவைக்கேற்றாற் போல தர ரீதியாக வகைப்படுத்தி விளங்க வைப்பது எனக் கொள்ளலாம். இக் கூட்டானது மக்கள் சார்ந்த தன்மைகளையும் (பால், வயது, இனம்) வாழ்வு சார்ந்த பண்புகளையும் (விவாகம், குடும்பம், தொழில்) விளக்கிச் சொல்வதாயினும் இவ்விரு தொகுதிகளும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றன.

குடித்தொகையியலாளர்கள், குடிப் புள்ளியியலாளர்கள், புவியியலாளர்கள் குடித்தொகைக் கூட்டு அல்லது அமைப்பினை நாடுகள், பிரதேசம், நகரம், கிராம ரீதியாக வும் சமூகம், இனம், மதம் மற்றும் மொழி போன்றவற்றினூடாகவும் அவற்றினை நெறிப்படுத்துவதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால் தவிர்க்க முடியாத வகையில் உலகில் பெரும்பாலான வளர்முக நாடுகளில் குடித்தொகை சம்பந்தமாக குறிப்பாக குடித்தொகைக் கூட்டுப் பற்றி பெரிதும் கவனம் கொள்வது குறைவாகவே காணப்படுகின்றது. அல்லது இக்கூட்டில் சில பண்புகளை மட்டுமே வெளிக்கொணர் கின்றனர். உதாரணமாக இனம், மதம், மொழி என்பன பெருமளவிற்குப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. குடியிருப்பு, கல்வி, சுகாதார வசதி, தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துதல், குடும்பத் திட்டமிடலைத் தீர்மானித்தல் போன்ற பலவற்றிற்கு வயது வகைப் பிரிவுகள், பால் வகைப் பிரிவுகள் தேவைப்படுகின்றது.

1.2 வயது, பால் கூட்டு

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் பொருளாதாரம், சமூக பண்பாட்டு விருத்தி யானது அங்கு வாழும் மக்களது வயதுப் பிரிவின் பரம்பலினால் பெருமளவிற்கு நிர்ணயம் செய்யப்படுகின்றது. குடித்தொகை இயக்கக் கூறுகளான பிறப்பு, இறப்பு, இடப் பெயர்வு என்பன குறித்த நாட்டினதோ அல்லது பிரதேசத்தினதோ வயதமைப்பில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. எனினும் மேற் குறித்த மூன்று கூறுகள் ஒன்றாக இணைந்து செயற்படுகின்றன எனக் கூற முடியாது. தனித்தனியாக இயங்கினாலும் வயதமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

உலகின் சமூகக் கட்டமைப்பினை ஸ்திரப்படுத்தி வைத்திருக்கும் உயிரியற் கூறு பால் அமைப்பாகும். பிறப்புக்கள் கூட எம்மை அறியாத வகையில் இயற்கையுடன் இணைந்ததாயினும், சமூக பொருளாதார பண்பாட்டுக் கோலங்களை சீர்குலைக்காத வகையில் ஏறத்தாழ ஆண், பெண் சம பங்கினராக இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம் போன்ற நாடுகளில் 100 பெண்களுக்கு 102 ஆண்களாகக் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. எவ்வாறெனினும் உலகின் பல பாகங்களில் பால் கூட்டு வேறுபட்டுக் காணப்படுவதற்கு உள்நாட்டு, சர்வதேச இடப்பெயர்வு கணிசமான பங்களிப்பினைச் செய்து வருகின்றது. உதாரணமாக விருத்தியடைந்த நாடுகள் பெரும்பாலும் மேம்பாடு அடைந்தனவாக இருக்க வளர்முக நாடுகள் பின்தங்கிய பொருளாதார அமைப்பிற்குட்பட்டுள்ளன. இதனால் வளர்முக நாடுகளில் கிடைப்பதற் கரிதான வேலைவாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்பு, சிறப்பான வாழ்வு என்பவற்றைக் கருத்திற் கொண்டு பெண்களோடு ஒப்பிடும் போது ஆண்கள் இடம்பெயர்வினை மேற்கொள் கின்றனர். அது மட்டுமல்லாமல் விருத்தி யடைந்த நாடுகளில் குடித்தொகை வளர்ச்சி வீதம் தாழ்ந்த மட்டத்தில் காணப்படு வதனால் இந் நாடுகளுக்கு மனித வலு வேண்டப்படுவதாலும் இடப்பெயர்வு மேற் கொள்ளப்படுகின்றது. அதே போலவே இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கிராமங்களில் வாழ்வாதாரத்தைப் பெற்றுக்

கொள்ள முடியாத நிலையில் நகரம் நோக்கிய இடப்பெயர்வு அதிகரித்து வருகின்றது. இதனால் நகரங்களிடையே பால் கூட்டில் வேறுபட்ட பண்புகளைக் காண முடிகின்றது. அதாவது கிராமங்களில் பெண்களின் பங்கு அதிகமாகவும் நகரங்களில் குறைவாகவுமுள்ளன. இத்தகைய பண்புகள் உலகில் எப்பிரதேசங்களில் காணப்பட்டாலும் அப் பிரதேசங்களில் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணிகளில் பெரும் தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பது வெள்ளிடைமலையாகும்.

1.3 வயது, பால் அமைப்பினைப் பெற்றுக் கொள்வதன் அவசியம்

குடித்தொகைக் கூட்டில் பால் அமைப்பினை வயதடிப்படையில் பெற்றுக் கொள்வது குடித்தொகைக் கல்வி மற்றும் குடிப் புள்ளியியற்றுறைகளுக்கு மிகவும் பொருத்தமானது. மேற் குறித்த தரவுகளைப் பெற்றுக்கொள்ளுமிடத்து குறித்த பிரதேசத்திலோ அல்லது நாட்டிலோ வாழும் மக்களது நிகழ்கால, எதிர்கால சமூக பொருளாதார பண்பாட்டு மற்றும் உயிரியற் பண்புகளை கண்டறிவதற்கு வாய்ப்பு இருக்கும் எனலாம். அத்துடன் பிறப்பு, இறப்பு விவாக நிலை மற்றும் வாழ்நிலைப் புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து பல்வேறு ஆய்வுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் மேற்குறித்த தரவுகளுடாக சமூக, பொருளாதார அமைப்புக்களையும் அவற்றினை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பதனைக் கண்டறிவதற்கும் பேருதவியாகவிருக்கும். மேலும் சர்வதேச நாடுகளின் குடித்தொகைக் கூட்டுக்களுடன் தொடர்புபடுத்தி ஏற்ற இறக்கத்திற்கான காரணிகளைக் கண்டறிவதற்கு வாய்ப்பிருக்கின்றது. வயது ரீதியாகப் பெறப்படும் தரவுகளை இரு வழிகளில் வெளிக் கொணரலாம். வயதுத் தொகுதி (Indices), வயதுக் கூம்பு (Divergencs) போன்றனவே அவையாகும்.

1.4 வயதுத் தொகுதி

ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் வாழும் மக்கள் யாவரினதும் வயதமைப்பினைத் தெரியும் பட்சத்திலே அவர்களது பொருளாதார, சமூக, பண்பாட்டு நலன்களின் அளவு, தேவை என்பவற்றைக் கண்டு கொள்ள முடியும். உதாரணமாக 2013ம் ஆண்டு பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையினைத் தெரிந்து கொள்ளும் பட்சத்தில் அக் குழந்தைகளுக்கு வயது ஐந்து பூர்த்தியாகும் போது அவர்களின் கல்விக்கான தேவைகளைக் கண்டுகொள்ள முடியும். வயதமைப்பினைக் கவனத்தில் கொள்ளாதுவிடின் குறித்த குழந்தைகளின் கல்வி வாய்ப்புக் குறித்து ஆறாவது வயதில் உடனடியாக செயற்படுத்த முடியாது. அதாவது இவ்வயதுத் தொகுதியினைக் கண்டறியும் பட்சத்தில் எதிர்காலத் திட்டங்களை முன்வைத்து தீர்மானிப்பதற்கு வாய்ப்பினைக் கொடுக்கின்றது. இதேபோலவே விருத்தியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் சுகாதார மருத்துவ விருத்தியின் விளைவாகத் தங்கி வாழும் முதியோரின் ஆயுள் எதிர்பார்ப்பு நீடிக்கப்பட்டு வருவதனால் அரசுகள் அவர்கள் நலன் பேணும் நோக்கத்துடன் நாட்டின் வருமானத்தில் கணிசமான பங்கினைச் செலவிட்டு வருகின்றனர். உதாரணமாக மலேசியா, யப்பான், சீனா போன்ற நாடுகள் இத்தகைய நடவடிக்கையினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இடர்பாடுகளைத் தோற்றுவித்து உள்ளதெனத்

தெரிவிக்கப்படுகின்றது. பொதுவாகக் குடித் தொகையியலாளர்கள் வயதுத் தொகுதி யினரை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப் படுத்துவதுண்டு.

1) குழந்தைகள், இள வயதினர் 0 - 14 அல்லது 0 - 19 வயதிடை வெளி.
2) வளர்ந்தோர் 15 - 59, 15 - 64 அல்லது 19 - 59, 19 - 64 வயது இடைவெளி.
3) முதியோர் 60 வயதுக்கு அல்லது 65 வயதுக்கு மேல்.

எனினும் ஐக்கிய நாடுகள் குடித் தொகை நிதியம் பின்வருமாறு முதலாவது வயதுத் தொகுதியினரை அடையாளம் கண்டுள்ளனர்.

சிறுவர் 0 - 18 வயது
வளர் இளம் பருவத்தினர் 10 – 19
வாலிபர் 15 - 24 என்பனவே அவையாகும். எனினும் மேற் கூறியவாறு பாகுபடுத்தலே பொதுவானதாகும். முதலாவது வயதுத் தொகுதியினரான 0 - 14 வயதிடைவெளியி லுள்ளவர்கள் உற்பத்தியில் ஈடுபாடு கொள்ளாதவர்கள். வளர்முக நாடுகளில் இவ்வயதுத் தொகுதியினர் ஏனைய வயதுத் தொகுதியினருக்கு இணையானவர்களா கவோ அன்றில் அதிகமாகவோ உள்ளனர். ஏனெனில் இவ் வயதுத் தொகுதியினரில் இறப்பு வீதம் வீழ்ச்சியடைந்ததன் விளை வினாலேயாகும். பிறப்பு வீதம் ஏற்ற இறக்கத்தினைக் கொண்டதாகவிருக் கின்றது. இத் தொகுதியினர் எதிர்கால வாழ்வுக்குரியவர்கள். எனவே இத் தொகுதியினரைச் சிறப்பாகப் பராமரிப்பது ஏனையர்களின் கடமையாகவுள்ளது.

வளர்ந்தோரைப் பொறுத்தவரையில் இவர்கள் குழந்தைகள், சிறுவர்கள், இள வயதினர், முதியோரைப் பராமரிக்கும் தொகுதியினராகவுள்ளனர். இத் தொகுதி யினர் பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களாகவும் மீள் இனப் பெருக்கத்தினை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். மற்றைய தொகுதியினரை விட நடமாடும் தொகுதியினராவர். வளர்முக நாடுகளில் ஏறத்தாழ ஏனைய இரு தொகுதியினருக்கும் இணைவாகக் காணப் பட்டாலும் விருத்தியுற்ற நாடுகளில் குறைவான கருவளவாக்கம், இறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால் விருத்தியுறாத நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் காரணி களின் பாதகத் தன்மையினால் கணிச மானோர் தொழில் வாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்றனர். வளர்ந்தோர் தொகுதி யினரைப் பொறுத்த வரை 15 - 34, 19 - 34 மற்றும் 35 - 60, 35 - 64 என உப வயதுப் பிரிவுகளாகப் பாகுபடுத்தி விபரங்களைப் பெற்றுக் கொள்வதுண்டு.

முதியோர் வயதுத் தொகுதியானது சில ஆய்வாளர் 60 வயதினை ஆகக் குறைந்த வயதாகக் கொள்கின்றனர். பொதுவாக உலகில் 55 அல்லது 60 வயதிலே தமது வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள் கின்றனர். இலங்கையில் உடல், உள ரீதியாக சௌபாக்கியமாகக் காணப்படும் பட்சத்தில் 60 வயது வரையும் தமது வேலையை ஆற்ற முடியும். உலகில் பின்தங்கிய பொருளாதார அமைப்பு உடைய நாடுகளில் ஆயுள் எதிர்பார்ப்பு சராசரி 55 வயதுக்குட்பட்டதாகக் காணப்படுகின்றது. அந் நாடுகளில் முதியோரின் பங்கு மிகக் குறைவாக இருப்பது தவிர்க்க முடியாது.

படம் 1

உலகளாவிய ரீதியான வயதமைப்பு



உலக நாடுகளில் பொதுவாக ஆண்களை விட பெண்கள் அதிக காலம் வாழ்ந்து வருவதை சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இத்தகைய நிகழ்வுக்கு இயற்கை நியதி ஒருபுறமிருக்க பெண்களில் பெரும்பாலானோர் கடின உழைப்பில் ஈடுபடாதவர்களாகவிருப்பதுடன் பிரசவத் தாய் மற்றும் குழந்தை இறப்புக்கள் முன்னரை விடக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமையும் அதிக பிறப்புக்களை விரும்பாமை, மனைவியை இழந்தவர் மீண்டும் விவாகம் செய்யும் நிலை, கணவனை விட மனைவி வயதில் குறைவாக இருத்தல் போன்றனவும் பெண்களது இறப்பினைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவிருப்பதால் பெண் விதவைகளே அதிகமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

உலகில் பல நாடுகளில் குறிப்பாக வளர்முக நாடுகளில் முதியோரின் பங்கு அதிகரித்து வருவதனால் வளர்ந்தோர் தொகையினர் பொருளாதார ரீதியில் மட்டுமல்லாது அவர்களைப் பராமரித்தல் ரீதியாகவும் பிரச்சினைக்குட்படுகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பங்கு அதிகரித்து வருவதனால் வளர்ந்தோரினால் பொருளாதார விருத்திக்கான முதலீட்டினை அல்லது சேமிப்பினைச் செய்ய முடியாதவர்களாக தொடர்ச்சியாக வறுமையில் வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். விருத்தியுற்ற நாடுகளில் மக்கள் உழைக்கும் போது அவர்களது பிற்காலச் செலவீனத்தையும் பராமரிப்பினை உறுதிப்படுத்தவும், உழைப்பில் ஒரு சில பகுதியினை அரசு அறவிட்டு வருகின்றது. இச் செயற்பாடு சிறப்பானது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இந்நாடுகள் முதியோரைப் பராமரிப்பதற்கான செலவினங்கள் அதிகரித்து வருவதைச் சுட்டிக் காட்டுகின்றனர். அந்நாடுகளில் சராசரி 77 வயதுக்கு மேலாக அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

1.5 மனித நடத்தையில் ஏற்படக் கூடிய விளைவுகள்

வயது, பால் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து மனித நடத்தையில் பிரதானமான பல விளைவுகளை உருவாக்கும் எனலாம். அதாவது ஒத்த தன்மையுள்ள (cohort) வயது பால் தொகுதியினரில் மாற்றங்கள் ஏற்படுத்துமிடத்து குடித்தொகை இயக்கப் பண்புகளில் மாற்றங்கள் ஏற்படலாம். அண்மைக் காலங்களில் கருவளவாக்கச் செயற்பாடுகளில் பல விளைவுகள் பெருகி வருகின்றன. குறிப்பாக தூண்டப்பட்ட கருச்சிதைவு செய்து கொள்வதிலும், கருவிலே பாலினைக் கண்டுபிடிக்கும் நிலை உருவானதாலும் பெண்களை விஞ்சிய ஆண் பிறப்புக்கள் நிகழ வாய்ப்புண்டு. இதனால் ஆண் - பெண் சமநிலைத் தன்மைக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக அமைய வாய்ப்பு உண்டு. உதாரணமாக பம்பாய் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 6000 தூண்டப்பட்ட கருச்சிதைவில் 5998 கருச்சிதைவுக்கு பெண் கருவாக இருந்ததாலே மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பாலமைப்பானது குடித்தொகை இயக்கப் பண்புகளில் பாற்பட்டதாயினும் ஆண் குழந்தை பிறக்கும் வரை பெண் குழந்தை பிறப்புக்கான ஒழுங்கினை இரகசியமாக வைத்துக் கொள்வதும் காரணமாயிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

குறித்த வயது, பால் விகிதத்தினை நோக்குவோமானால் பெண்கள் விதவையாவது ஆண்களை விட அதிகம். ஏனெனில் ஆண்களின் சராசரி ஆயுள் காலத்தை விட பெண்களுக்கு ஆயுட்காலம் அதிகமாக விருப்பதாகும். மேலும் மனித நடத்தையின் காரணமாக யுத்தங்கள் நிகழும் போது ஆண்கள் அதிக இறப்பினை ஏற்படுத்துமிடத்து பெண்களின் தொகை அதிகரித்துக் காணப்பட வாய்ப்புண்டு. இதனால் சமூக, பொருளாதார பண்பாட்டுக் காரணிகளில் மாற்றங்கள் ஏற்பட ஏதுவாகின்றது. 1985ம் ஆண்டு கணிப்பீட்டின் படி 25 - 49 வயதுத் தொகுதியினரிடையே 100 பெண்களுக்கு 98.4 ஆண்களே காணப்பட்டனர். அதே வேளை 80 வயதுக்கு மேல் 100 பெண்களுக்கு 46.8 ஆண்களே வாழ்ந்துள்ளனர். அதே போலவே இலங்கையில் தமிழர்களிடையே யுத்தத்தின் விளைவாக கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆண்களின் இறப்புக்கள் அதிகரித்திருந்ததுடன் வெளியிடப்பெயர்விலும் ஒப்பீட்டு ரீதியில் அதிகமாக இருந்துள்ளனர். இதனால் பெண்கள் ஆண்களைவிட அதிகமாகவே காணப்பட்டனர் என்பதனைப் பல்வேறு புள்ளிவிபர அறிக்கைகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பால்நிலை விகிதாசாரத்தைப் பொறுத்த மட்டில் 1981ம் ஆண்டில் 100 பெண்களுக்கு 104 - 106 ஆண்கள் காணப்பட்டனர். இது 2012ம் ஆண்டுக் கணிப்பீட்டின் படி 100 பெண்களுக்கு 94.3 ஆண்கள் காணப்பட்டனர். மாவட்ட ரீதியாக இலங்கையில் இப் போக்கினை நோக்கும் போது, கொழும்பில் 1981ம் ஆண்டு 100 பெண்களுக்கு 111.2 ஆண்கள் காணப்பட்டனர். இது 2012ம் ஆண்டில் 100 பெண்களுக்கு 97 ஆண்கள் எனக் காணப்பட்டனர். யாழ் மாவட்டத்தில் இப் போக்கு 1981ல் 100 பெண்களுக்கு 96.8 என ஆண்கள் விகிதமும், 2012ம் ஆண்டு 100 பெண்களுக்கு 89.5 ஆண்கள் என்ற வகையிலும் காணப்பட்டது.

1.6 வயதுக்கூம்பு (Age Pyramid)

ஒரு மனிதனுக்கோ அல்லது எந்த உயிரினங்களுக்கோ ஒரு வருட காலம் ஒரு வயதாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு நாட்டில் ஒரு பிரதேசத்தில் வாழுகின்ற சகல மக்களது வயதினை நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கு குடிக்கணிப்பொன்றின் மூலமே சாத்தியப்பட முடிகின்றது. இவை தவிர வாழ்நிலைப் புள்ளி விபரத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு பெறப்படுகின்ற ஒவ்வொரு நபரினதும் வயதினைக் கருத்திற் கொண்டு அவ்வவ் வயதுகளில் வாழுகின்ற மக்களது எண்ணிக்கை பெறப்படுகின்றது. பொதுவாகக் குடித்தொகைப் பண்புகளை விளங்க வைப்பதற்கு குறித்த வயதிடை வெளியிலுள்ளவர்களை ஒன்றிணைத்துக் கொள்வது பொதுவான அம்சங்களாகும். அதாவது 0 - 4, 5 - 9, 10 - 14, 15 - 19 என ஐந்து வயது இடைவெளியில் வகைப் படுத்தும் போது சுலபமாக விளங்கிக் கொள்ள முடிவதுடன் அதன் ஊடாக குடித்தொகைப் பண்புகளைக் கண்டறிய வாய்ப்பு ஏற்படு கின்றது.

வயதுக் கூம்பானது குத்தான அச்சில் வயதுத் தொகுதியினைக் கண்டறிவதாகும். கிடையான அச்சில் எண்ணிக்கையையோ அன்றில் வீதங்களையோ அறிந்து கொள்ளலாம். அதாவது குத்தான அச்சில் 0 - 4, 5 - 9, 10 - 14 என வயதுத் தொகுதியினரை வீதாசாரப்படியோ அல்லது எண்ணிக்கை அடிப்படையையோ கணிப் பிட்டு வரைந்து கொள்வதாகும். கூம்புருவ மாக உருவாவதற்கு ஒரு பக்கத்தில் ஆண்களது வயதுத் தொகுதியினரையும், மறு பக்கத்தில் பெண்களது வயதுத் தொகுதியினரையும் கிடையான அச்சில் வரைந்து கொள்ளப்படும். பொதுவாக வளர்முக நாடுகளில் பிறப்பு வீதம் அதிகரித்துக் காணப்படுவதனால் அதிகரித்த குழந்தைகளையும் படிப்படியாக சிறுவர், இளவயதினர், முதிய இள வயதினர், வயது வந்தோர், முதியோர் என்போர் குடித்தொகை இயக்கப் பண்புகளின் காரணமாக படிப்படியாக எண்ணிக்கையில் குறை வடைந்து செல்பவர்களாகவும் காணப்படு கின்றனர். இப் பண்புகள் ஆண்,பெண் இருபாலானருக்கும் பொருந்துவனவாக விருப்பதனால் வயதமைப்பானது கூம்புருவத் தன்மை கொண்ட வடிவமாக காணப்படும். ஆனால் விருத்தியடைந்த நாடுகளில் குடித்தொகை இயக்கப் பண்பு களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் காரண மாக வயதமைப்பில் கூம்பு வடிவத்தன்மை மாற்றமுற்றதாய்க் காணப்படும்.

படம் 2

அமெரிக்கா நாட்டின் கால ரீதியாக வயதமைப்பில் குடித்தொகை இயக்கப் பண்புகளில் ஏற்படும் மாற்றங்கள்



Source : Freebooks.UVU.edu/soc 1010/index.php/ch17-population.html

வயதுக் கூட்டமைப்பானது குடித் தொகை வளர்ச்சி வீதத்தினைப் பாதிப்பதில் வலுவான பங்களிப்பினைச் செலுத்தி வருகின்றது. தெரிவு செய்யப்பட்ட சில வளர்முக நாடுகளில் 15 வயதிற்கு குறைந்தவர்களின் பங்கு அதிகரித்துச் சென்றுள்ளதை புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது. ஏறத்தாழ பெரும்பாலான வளர்முக நாடுகளில் 40 - 48 சதவீதத்தினர் 15 வயதுக்குக் குறைந்தவர்களேயாவர். விருத்தி பெற்ற நாடுகளில் இவ் வயதிற் குறைந்தவர்களின் பங்கு 25 - 30 சதவீதத்தினராக இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது குழந்தைகள், சிறுவர்கள், இள வயதினர் என்போர் அதிகரித்துச் செல்வதற்கு பிறப்பு வீத அதிகரிப்பும் இறப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே பிரதான காரணிகளாக வுள்ளன. அத்துடன் இளவயது விவாகமும் அதிகரித்த பிறப்பிற்கு வழிகோலுகின்றன. வளர்முக நாடுகளில் 15 வயதிற்குக் குறைவான பெண்கள் இளவயதில் விவாகம் செய்து கொள்கின்றனர். இவற்றின் விளைவாக தங்கி வாழ்வோர் வீதம் அதிகரித்துச் செல்வதனால் வறுமைநிலை தொடர்கின்றது.

வயதுப் பிரமிட்டுக்களைப் பொறுத்த வரை அவ்வவ் நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கோலங்களுக்கேற்ப அவற்றின் வடிவமானது வேறுபடுகின்றது.

படம் 3

வேறுபட்ட நாடுகளின் வயதுப் பிரமிட்டுக்கள்



Stage 1	Stage 2	Stage 3	Stage 4
Expansive.	Expansive.	Stationary.	Contractive.
Concave sides.	Straight sides.	Convex sides.	Convex sides.
High birth rate.	Still high birth rate.	Declining birth rate.	Very low birth rate.
High death rate.	Falling death rate.	Low death rate.	Low death rate.
Short life expectancy.	Slightly longer life expectancy.	Long life expectancy.	Longer life expectancy.
Rapid fall in each upward age group due to high DR.	Fall in DR so more people living into middle age.	An increasing proportion of the population is in the 65+ age group.	Higher dependency ratio.
Niger	Haiti	Morocco	Australia

Source : 14 kome.wordpress.com/2012/03/16/population_Pyramid

நிலை 1	நிலை 2	நிலை 3	நிலை 4
கூம்பின் வடிவம் விரிவடைதல்	கூம்பின் வடிவம் விரிவடைதல்	கூம்பின் வடிவத்தில் நிலையான தன்மை	கூம்பின் வடிவம் மாறுபாடு அடையும் தன்மை
பிரமிட்டின் வடிவம் குழிவானதன்மை	பிரமிட்டின் வடிவம் இரு பக்கமும் சமனாக காணப்படல்	பிரமிட்டின் வடிவம் குவிவாகக் காணப்படல்	பிரமிட்டின் வடிவம் குவிவாகக் காணப்படல்
உயர்பிறப்பு வீதம் உயர் இறப்பு வீதம்	உயர் பிறப்பு வீதம் வீழ்ச்சியடையும் இறப்பு வீதம்	பிறப்பு வீதம் குறைவடைதல் குறைவான இறப்பு வீதம்	மிகக் குறைவான பிறப்பு குறைவான இறப்பு வீதம்
ஆயுள் எதிர்பார்ப்பு குறைவு	சராசரி ஆயுள் எதிர்பார்ப்பு	நீண்ட ஆயுள் எதிர்பார்ப்பு	மிக நீண்ட ஆயுள் எதிர்பார்ப்பு
ஒவ்வொரு வயதுத் தொகுதியிலும் உயர் இறப்பு வீதம் காணப்படல்	இறப்புவீதம் குறைவடைவதால் கூடுதலான மக்கள் மத்தியதர வகுப்பில் காணப்படுகின்றனர்.	65 வயதிற்கு மேற்பட்ட மக்களின் வயது தொகுதியின் சதவீதம் அதிகரித்துச் செல்கின்றது.	உயர் தங்கிவாழும் வயதுத் தொகுதியினர் காணப்படல். இதனால் அவ்வவ் நாடுகளின் பொருளாதாரம் பாதிப்படையும்
நைகர்	கெயிட்டி	மொறோக்கோ	அவுஸ்ரேலியா

பல வளர்முக நாடுகளில் பிறப்பு வீதத்தில் ஓரளவு வீழ்ச்சி காணப்படுவதுடன் சமூக பண்பாட்டுக் காரணிகளின் விளைவினால் இறப்புக்களும் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

குடித்தொகை வயதுக் கூம்பினை பிறப்புக்களும் இறப்புக்களும் மட்டுமே தீர்மானிக்கின்றது எனக் கூறமுடியாது. இடப்பெயர்வு, கொள்ளைநோய், குழந்தைச் செழிப்பு, குடித்தொகைக் கொள்கையின் அமுலாக்கம், போர் போன்றனவும் தீர்மானிக்கும் காரணிகளாகவுள்ளன. பொருளாதார ரீதியில் வளர்ச்சி கண்ட நாடுகளின் வயதுக் கூம்பானது வளர்முக நாடுகளைப் போலன்றி வேறுபட்டமை வதைக் காணலாம். பிரான்ஸ், சுவீடன், யப்பான் போன்ற விருத்தி பெற்ற நாடுகளில் வயதுக் கூம்பு செவ்வக வடிவத்தை ஒத்ததாகக் காணப்படுகின்றது.

படம் 3

நாடுகளின் வேறுபட்ட வயதுக் கூம்பு



Source : en.wikipedia.org/wiki/population_Pyramid.

மேற்காட்டிய படங்களினடிப்படையில் நிலை ஒன்றின் வடிவமானது உயர் பிறப்பு மற்றும் உயர் இறப்பு வீதமும் குறைவான ஆயுள் எதிர்பார்ப்பினையும் கொண்ட ஆபிரிக்க நாடுகளில் காணக்கூடியதாக இருக்கும். நிலை இரண்டின் வடிவமானது உயர் பிறப்பு மற்றும் வீழ்ச்சியடையும் இறப்பு வீதத்தினையும் ஓரளவான ஆயுள் எதிர்பார்ப்பினையும் கொண்ட கெயிட்டி போன்ற நாடுகளில் காணப்படும். நிலை மூன்றின் வடிவமானது குறைவடையும் பிறப்பு வீதம், குறைவான பிறப்பு வீதத்தினையும் கொண்ட நாடுகளுக்கு பொருத்தமானது. இங்கு வயது வந்த முதியோரின் தொகை அதிகமாகக் காணப்படும். நிலை நான்கில் தாழ் பிறப்பு, இறப்பு வீதங்கள் காணப்படுவதுடன் ஆயுள் எதிர்பார்ப்பு வீதமும் அதிகமாகவுள்ளது.

இவ்வடிவம் உள்ள நாடுகளில் இளவயதுத் தங்கி வாழ்வோரை விட முதியோர் எண்ணிக்கை மிக அதிகமாகும். பெரும்பாலான விருத்தியடைந்த நாடுகளில் இவ்வடிவத்தினை காணமுடியும்.

வயதுக் கூம்பினைப் பொறுத்தவரை நாடுகளுக்கு உள்ளேயும், நாடுகளிடையேயும் வேறுபட்ட பண்புகள் காணப்படுவது மட்டுமல்லாது உயிரியல் மற்றும் பொருளாதார, சமூக பண்பாட்டியல் அடிப்படையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

உசாத்துணை நூல்கள்

1) Chandna. C, (2000), "Geography of population", Kalyani Publishers, New delhi.
2) குகபாலன். கா. (2005). "குடித்தொகையியல் கோட்பாடுகளும், பிரயோகங்களும்". கரிகணன் பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.
3) Kumar, (1992), "Social deomography and population studies", Newdelhi.
4) "The donography transitional model", Retrieved from www.coolgeography.co.UK/A-level/AQA/year%2012/population/DTM/DTM%20new.htm, 28.05.2014.
5) "Demography transition" Retrieved from en. wikipedia. Org/wiki/demographic_transition, 14.05.2014.
6) குகபாலன். கா. (2005). "குடித்தொகையியல் கோட்பாடுகளும், பிரயோகங்களும்". கரிகணன் பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.
7) "Population Pyramid", Retrieved from en.wikipedia.org/wiki/population_Pyramid, 20.05.2014.
8) "Population Pyramid", Retrieved from 14 kome,wordpress.com/2012/03/16/population_Pyramid, 16.03.2012.
9) "Population pyramid", Freebook. Uvu.edu/soc 1010/Index.Php/ch17_Population.html, 19.05.2014.
10) "Population Pyramid difinition", "http://www.prb.org/pdf/08.08 wpds-Eng.pdf", 2014.05.21

(கட்டுரை எழுதியவர் இந்நூலகத்தினை பயன்படுத்திய பயனாளிகளில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது)

இலங்கை பொருளாதார அபிவிருத்தி நிலை ஒரு சமகால நோக்கு

V. S. தினேஸ்
உதவி விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

"அபிவிருத்தி என்ற எண்ணக்கரு ஆனது பொதுமக்கள் அரசு, பொது என்ற வகையில் மிகவும் காத்திரமான ஒன்றாகும். எனவே ஒரு நாட்டின் சர்வதேச போட்டி நிலைக்கு இவ் அபிவிருத்தி என்ற எண்ணக்கரு நிலை மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும்.

பொருளாதார நிலை ஆனது சமூக அமைப்பு ரீதியில் மனித நாகரிக முன்னேற்றத்திற்கு ஒரு மைல் கல்லாக திகழ்வது பொருளாதார எழ்ச்சி ஆகும். மானிய முறை சமுதாய அமைப்பானது உரு மாற்றம் பெற்று முதலாளித்துவ முறைகளாக மாறியமையின் ஊடாக பொருளாதார அபிவிருத்தி நிலையில் வியக்கத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. எனவே இத்தகைய மாற்றங்களின் ஊடாக உற்பத்தி வளர்ச்சி தலா வருமான வளர்ச்சியை பெற்ற நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகளாகவும் ஏனைய நாடுகள் குறைவிருத்தி நாடுகளாகவும் உலகளாவிய ரீதியில் அமைந்தன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது மெய் மொத்த தேசிய உற்பத்தியானது நீண்ட காலப் போக்கில் தொடர் தேர்ச்சியாக அதிகரிக்கும் நிலை ஆகும். இருப்பினும் இப் பொருளாதார வளர்ச்சி என்பது அபிவிருத்திக்கான ஓர் முன் நிபந்தனையாக காணப்படுகின்றது. அதாவது அதிகரிக்கின்ற உற்பத்தி வருமானங்கள் அனைத்தும் அடிமட்ட மக்களுக்கும் போய் சேரக்கூடிய விதத்தில் வருமான பங்கீடு ஏற்பட்டு வறுமை நீங்கி அனைத்து வசதிகளையும் இம் மக்கள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்வதே அபிவிருத்தியின் பிரதான தார்ப்பரியமாகும்.

ஆனால் பல நாடுகளில் காணப்படு கின்ற ஜனநாயக முறையோடு கூடிய ஆட்சி நிலைகளானது தமது வாக்கு வங்கிகளை நிரம்பி அடுத்த தேர்தலில் வெற்றிவாகை சூடக்கூடிய விதத்தில் நல அரசுகள் மக்களுக்கு நல சேவைகளை வழங்கி ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லாத ஒரு ஏழ்மை கூட்டத்தை தொடர்ந்து உருவாக்கி வருவதையே காணமுடிகின்றது.

ஒரு நாட்டினது அபிவிருத்தி நிலையை அண்மிக்க வேண்டுமாயின் கைத்தொழில் மயமாக்கங்களின் விருத்தி நிலை, விவசாயத் துறையில் சார்பளவு முக்கியத்துவ குறைப்பு, வியாபார போக்கில் சடுதியான முன்னேற்றம், உற்பத்தி வளங்களின் வினைத்திறன் அதிகரிப்பு, உற்பத்தி முறைகள் மற்றும் தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளின் விருத்தி, புத்தாக்க முயற்சிகள், அறிவு பொருளாதார மேம்பாடு, நிறுவன ரீதியான மாற்றங்கள் உட் கட்டமைப்பு மேம்படுத்தல்கள் ஆகியவை மிகப் பிரதான பங்கை வகிக்கின்றன.

இவ்வகையில் இலங்கை என்ற தாய் நாட்டின் அபிவிருத்தியின் அண்மைக்கால போக்கினை நோக்குகின்றபோது 2013 இலங்கை பொருளாதாரம் ஆனது 7.3 சதவீத வளர்ச்சியுடன் வலுவான முறையில் மீள் எழுச்சி உற்ற வேளை தொடர்ச்சியாக ஐந்தாண்டுகளாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்ட பணவீக்கம் மேலும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2013 இறுதியில் ஒரு ஒற்றை இலக்க மட்டத்தினை அடைந்து பொருளா தாரத்தின் அனைத்து துறைகளும் வளர்ச்சிக்கு சாதகமான முறையில் பங்களித்ததுடன் சாதகமான வானிலை நிலமைகளும் வெளிநாட்டு வர்த்தக முதலீட்டு விரிவாக்க நிலைகளும் உறுதியான உயர்விற்கு ஆதரவளித்தன. இவ் ஆண்டு பகுதியில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உறுதியான வளர்ச்சி தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2013 இல் 3280 $ இற்கு உயர்வடைய செய்தது. செலவினை பிரதிபலிக்கும் விதத்தில் உள்நாட்டு வலு விலைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் மேல் நோக்கிய சீராக்கங்கள் செய்யப்பட்டபோதும் முன் மதிப்புடைய நாணய முகாமைத்துவமும் மேம்பட்ட உள்நாட்டு உணவு நிரம்பல்களும் முதன்மைப் பணவீக்கமும் படிப்படியான வீழ்ச்சியை தோற்று வித்திருந்தது. இருந்தபோதும் நாணய விரிவாக்கம் 2013 இல் அதன் விரும்பத்தக்க மட்டத்தினை நோக்கி வீழ்ச்சியடைந்த வேளையில் முன்னைய ஆண்டின் இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள் தங்கத்தினால் உத்தரவளிக்கப்பட்ட முற்பணங்கள் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடன் பகிர்ந்தளிப்பினை குறைத்து விட்டன. மேலும் நாணயக் கொள்கை தளர்த்தபட்டதுடன் சென்மதி நிலுவை யிலும் விரும்பத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன.

பொருளாதார கட்டமைப்புக்கள் முதலரை ஆண்டுகளில் வீழ்ச்சியை கண்டிருந்தபோதிலும் பின்னைரை ஆண்டுகளில் வானிலை சாதகமாக இருந்தமையும் பௌதீக ரீதியிலான உட்கட்டமைப்புகளின் வளர்ச்சி நிலை களும் கைத்தொழில் துறை 9.9% வளர்ச்சியை கொண்டதுடன் GDP யில் 31.1% மாக அமைந்தது.

பணிகள் துறையானது 6.4% ஆக முன்னைய ஆண்டினைவிட உயர்வாக காணப்பட்டமையும் இதற்கு மொத்த சில்லறை விற்பனைகள் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக அமைந்தது. வேளாண்மை துறையானது மோசமான வானிலை நிலமைகளின் காரணமாக ஆண்டு வளர்ச்சி வீதம் 4.7% குறைவாக இருந்ததுடன் 10.8% பங்களிப்பினையும் பணிகள் துறையானது 58.1% பங்களிப்பினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக ஒற்றை இலக்கத்தில் காணப்பட்ட பணவீக்கம் பொருளாதார கூலி அழுத்தங் களை குறைக்க உதவியதுடன்

முதலீட்டாளர்களின் நம்பிக்கையினையும் உயர்த்தியது. மேலும் பணவீக்கம் 2013 December 4.7% சதவீதத்தையடைந்து ஆண்டுக்கான அதன் மிகக் குறைந்த சராசரி பணவீக்கமானது 2013 இல் 6.9% ஆக அமைந்துள்ள அதேவேளை காத்திரமான முறையில் முகாமை செய்யப் பட்ட கூட்டு கேள்வியை பிரதிபலிக்கும் விகிதத்தில் இவ்வாண்டு மைய பண வீக்கம் தொடர்ந்து படிப்படியாக December 2.1% இற்கு வீழ்ச்சியடைந்ததுடன் ஆண்டு சராசரியாக 4.4% மாக காணப்படுகின்றது.

மேலும் மொத்த வரவு செலவு திட்டப் பற்றாக்குறையானது 6.7% இல் இருந்து 2013 இல் GDP யில் 3.9% இற்கு குறுக்கம் அடைந்தது. இதற்கு நேரடி முதலீடுகள் மற்றும் நிதியியில் உட்பாய்ச்சல்கள் காரணமாக அமைந்தன. மேலும் சென்மதி நிலுவையானது 2012 இல் 151 மில்லியன் டொலர்களாக இருந்தது. 2013 இல் 985 மில்லியன் டொலர்களாக மாற்ற மடைந்தது.

இலங்கையின் அபிவிருத்தி சார்ந்த சுட்டெண்களின் நிலைகளை நோக்கு கின்ற போது பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் மானிட அபிவிருத்தி சுட்டெண் என்பன உயர்நிலையில் இருப்பதை காணலாம்.

அதாவது பௌதீக வாழ்க்கை பண்பு சுட்டெண்ணில் உள்ளடங்குகின்ற ஆயுள் எதிர்பார்ப்பானது 77 வருடங்களாக உள்ளமையும் கல்வி அறிவு வீதம் 92.5% ஆக உள்ளமையும் சிசு மரண வீதம் ஆனது (1000 உயிருள்ள பிறப்புக்கு) 9.4 % என குறைவாக உள்ளமையும் நோக்கத்தக்கது. மேலும் மானிட அபிவிருத்தி நிலையானது 186 நாடுகளில் 0.715 என்ற வகையில் 92 ஆவது நாடாக இலங்கையானது காணப்படுகின்றது. மேலும் சௌபாக்கிய சுட்டெண் ஆனது 52% மேற்பட்ட அளவில் பிரதேச ரீதியாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு அண்மைக் காலத்தில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட பரந்தளவிலான வேலைவாய்ப்புக்கள் அடிப்படையில் வேலை இன்மை வீதம் ஆனது 4 - 5% என குறைவாக உள்ளதோடு சேமிப்பு வீதம் 20% ஆக உள்ளமையினால் முதலீட்டு வீதங்களும் 2013 இல் 29.9% என உயர்நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 3280 அமெரிக்க டொலர்களாக உள்ளது. எதிர்கணிய வளர்ச்சி வீதம் ஆனது (2001) இல் -1.3% ஆக இருந்தது. அதன் பின்னர் பொருளாதார வளர்ச்சி நிலையானது 2010 இல் உயர் நிலையில் 8% ஆக அமைந்து 2006 இல் 8.2 ஆக உயர்நிலையினை அடைந்து தற்போதும் 7.2% ஆக காணப்படுகின்றது குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.

அடுத்து பத்தாண்டு கால அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய வலு தொலைத் தொடர்பு பணிகள், குடிநீர், வீதிகள், துறை முகங்கள், விமான நிலையங்கள் மற்றும் கல்வி சுகாதார மருத்துவ வசதிகள் போன்ற வற்றின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறை

யிலிருக்கும் உட்கட்டமைப்பு மற்றும் பணிகளுக்கான தடைகளுக்கு தீர்வு காண்பதற்காக முதலீட்டு அதிகரிப்பின் ஊடாக வளர்சசியை தூண்டுவதாக அமைகிற இவ்வகையில் 2016 இல் பொதுப் படுகடனை GDP யில் 50% மாக குறைத்தல் பணவீக்கத்தினை 4 % இற்கு கொண்டு வருதல் பொருளாதார வளர்ச்சியினை 9 - 10% இடையில் அதிகரித்தல் போன்றன எதிர்பார்ப்பாக அமைகிறது. அத்தோடு முதலீட்டு வீதம் ஆனது 35 - 40% ஆக இருந்தாலே இது சாத்தியமான நிலையை அடையும். எனவே முதலீட்டுக்கும் சேமிப்புக்கும் இடையிலான இடைவெளியினை குறைக்க (சேமிப்புவீதம் 15 - 16%) வெளிநாட்டு முதலீடு அதிகரிக்க வேண்டும். இதற்கு உறுதியான அரசியல் ஸ்திரத் தன்மை காணப்படுதல் அவசியமான தாகும்.

அண்மைக்காலத்தில் தேசிய ரீதியில் இலங்கையின் அதிவேக பாதை அமைப்பு (தென்பகுதி விரைவுப்பாதை, கொழும்பு - கண்டி வீதி, கொழும்பு வெளிச்சுற்று வீதி, கொழும்பு - கட்டுநாயக்கா விரைவுப் பாதை) ஆகியவை உருவாக்கப்பட் டுள்ளது. இவ் விரைவுப் பாதையானது உலகத்திலேயே அதிகூடிய செலவில் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

மேலும் துரைச்சோலை, கொரவலப் பிட்டிய, மேல் கொத்மலை மின் நிலையங் களும் மத்தளவில் இரண்டாவது சர்வதேச விமான நிலையமும் சர்வதேச ரீதியில் பண்டாரநாயக்க விமான நிலையத்தை விரிவாக்கம் செய்தமையும் குறிப்பிடத் தக்கது. மேலும் கொழும்பு, அம்பாந் தோட்டை, ஒலுவில் துறைமுக விருத்தி களும் குறிப்பிடக்கூடிய அண்மைக் கால அபிவிருத்தி செயற்திட்டங்களாகும். பிரதேச அபிவிருத்தி திட்டங்களாக மகரகும, கமரகும, திவிநெகும போன்ற வற்றையும் இவ்விடத்தில் கூறிக்கொள்ள முடியும்.

மேலும் அம்பாந்தோட்டையில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் சுற்றுலாத் துறை விரிவாக்கம் மூலம் 2013 இல் வருவாய்கள் 3 பில்லியனாக உள்ளது. 2016 இல் 2.1 மில்லியன் சுற்றுலா பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

போருக்கு பின்னர் சில வருடங்களில் இலங்கை பாரிய அபிவிருத்தி கண்டுள்ளது எனவும் இப்போது மிக வலுவான நிலையில் ஆசியாவில் வளர்ச்சி அடைந்து வரும் நாடாக இருக்கின்றதெனவும் இலங்கையில் முதலீடு செய்வது சிறந்தது என்றும் நானும் அதிக முதலீட்டை செய்வேன் எனவும் அவுஸ்ரேலியாவின் கிறவுண் நிறுவனத்தின் தலைவர் ஜேம்ஸ் பெக்கர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. பொதுநலவாய வர்த்தக பேரவையின் மாநாட்டிலே சனல் 4 தொடர்பான விமர்சனத்தின் போது இக் கருத்து தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் சைபர் முஸ்தபா அவர்கள் குறிப்பிடும்

போதும் முதலீட்டினை செய்யக்கூடிய அனைத்து ஸ்திரமான நிலைகளும் இலங்கையில் காணப்படுவதாக தெரிவித்திருந்தார்.

இவ்வகையில் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச அபிவிருத்திகளும் ஏனைய பிரதேச அபிவிருத்திகளும் அதிகளவு முன்னெடுக்கப்பட்டுவிடுகின்றமையும் வளங்களினை அதி உச்சமாக காட்டுகின்ற நிலையும் காணப்படுகின்றது. மேலும் உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதிகளும் மேம்படுத்தப்படுவதோடு சீனா, இந்தியா போன்ற நாடுகளை போல இலங்கையும் ஆசியாவில் வியத்தகு நாடாக அமைய வேண்டும் என்பது எல்லோரது எதிர் பார்ப்பாகும்.

இருப்பினும் இத்தகைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் சரியான முறையில் சென்றடையாமையும் கிராமிய வறுமை 7.6% மாக உள்ளமையும் தலைக்குரிய வறுமைச்சுட்டி 6.5% ஆக இருக்கின்றமையும் கினிக் குணகம் ஆனது 0.48 ஆக உள்ளமையும் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணங்களில் ஒரு சில பிரதேச வறுமை நிலைகளும் ஒட்டு மொத்த அபிவிருத்தியை பாதிப்பதாகவே உள்ளன. ஏனெனில் இலங்கையில் 70% மான மக்கள் கிராமிய மக்களாகவும் அதே வேளை பிழைப்பூதிய மட்ட விவசாயிகளாகவும் இருக்கின்ற நிலையில் நகர அபிவிருத்தியில் இத்தகைய முதலீட்டு அதிகரிப்புக்கள் ஒருபோதும் நாட்டு பிரஜை அனைவரது தாகத்தையும் தீர்த்துவிடாது.

செபஸ்தியாம்பிள்ளை என்ற ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகையில் "கொழும்புக்கு - பால் அநுராதபுரத்துக்கு - கொக்கரிக்காய் யாழ்ப்பாணத்துக்கு காலம் கடந்த பால்மா பைக்கற்" என்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் காணப்படுகின்றமை எதிர்கால சுபீட்சம் நிறைந்த பொருளாதார விருத்திக்கு ஒரு தடங்கல் நிலையினையே ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே இலங்கையின் கிராமிய அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஊடாக அனைவருமே ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை பேண் அபிவிருத்தி என்பது ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது எனது அவா ஆகும்.

உசாத்துணை நூல்கள்

1. மத்தியவங்கி ஆண்டறிக்கை (2011, 2012)
2. மத்திய வங்கி பொழிப்பு (2013)
3. வ ி. நித்தியானந்தம் (2008) "பகு நிலைப் பொருளியல் ஓர் அறிமுகம்"
4. http://www.g.gov.lk
5. http://data.worldbank.org.SL
6. Asian Development out look (2009, 2012)
7. http://www.theodara.com//wfbcurrent/sri-lanka-economy.html

கல்வியியலும்
சமூகவியலும்

சமகால நோக்கு

முன்பள்ளி வயதுப் பிள்ளை விருத்தியின் முக்கியத்துவம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ஐந்து வயதில் ஆரம்பக் கல்வி நிலையில் அனுமதி பெறுமுன்னர் கல்வியாளர்களின் நோக்கில் முன்பள்ளிக் கல்வி முக்கியத்துவம் வாய்ந்ததாயினும் இலங்கையில் முன்பள்ளிக் கல்வி வசதிகள் சகல பிள்ளைகளுக்கும் கிட்டுவதில்லை. முன்பள்ளிக் கல்வியில் மத்திய வகுப்பினரும் நகர்ப்புற மக்களும் செலுத்தும் அக்கறை சமூகத்தின் சகல பிரிவினராலும் செலுத்தப்படுவதில்லை. இலங்கையில் முன்பள்ளிக்குச் செய்யவேண்டியது கட்டாயமுமில்லை; அதற்கான பள்ளிகளை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டியதும் இல்லை.

புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளின் படி (2009) தேசிய கல்வி ஆணைக்குழு முன்பள்ளிக் கல்வி தொடர்பான கொள்கையை உருவாக்குதல் வேண்டும்; முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தின்படி மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் முன்பள்ளிகளைப் பதிவு செய்தல், கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் பொறுப்பை மாகாண நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்பள்ளிப் பாட ஏற்பாட்டை ஏற்படுத்தும் பொறுப்பு, தேசிய கல்வி நிறுவனத்திடம் இருத்தல் வேண்டும்.

மாகாண வகைப்படி முன்பள்ளிகள், மாணவர்களின் தொகை

மாகாணம்	முன்பள்ளிகள் தொகை	மாணவர் தொகை	முன்பள்ளி செல்லாதவர்கள்
1) மேல் மாகாணம்	2067	63,500	4018
2) தென் மாகாணம்	1658	43,400	7654
3) சப்பிரகமுவா மாகாணம்	1062	23,017	17,251
4) ஊவா மாகாணம்	874	19,185	3689
5) வடமேல் மாகாணம்	938	27,000	5465
6) மத்திய மாகாணம்	1796	48,800	13,047
7) வடமத்திய மாகாணம்	632	13,827	3458
8) வடகிழக்கு மாகாணம் (திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள்)	220	5065	1466
இலங்கை	9247	244,000	56,000

ஆதாரம் : கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள், 2006
பிள்ளைகள் செயலகம், கொழும்பு

மாணவர்கள் முன்பள்ளிக்குச் செல்லாததன் காரணங்கள் - 2006

1) உடல், உளக் குறைபாடுகள்
2) வறுமை
3) நீண்டகால சுகவீனம்
4) அருகில் முன்பள்ளிகள் இல்லாமை
5) முன்பள்ளிக் கல்வி அவசியமின்மை

ஆதாரம் : பிள்ளைகள் செயலகத்தின் ஆய்வுகள்

ஆறு வயதுப் பிள்ளைகளின் ஆற்றல்கள் - ஈகுவடோர் ஆய்வுகள் (2005)

'மூன்று வயதுக்கும் ஆறு வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியானது, அப்பிள்ளைகளின் வாழ்விடம், பெற்றோரின் கல்வி நிலை, வீட்டின் பொருளாதார நிலை என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடுகின்றது. வயது போகப்போக உயர் வருமானக் குடும்பப் பின்னணியை உடைய பிள்ளைகளின் வளர்ச்சி அதிகரித்துச் செல்ல வறிய பிள்ளைகள் பின்தங்குவதுடன் மற்றவர்களை எட்டிப் பிடிக்க முடியாத நிலையும் தோன்றுகின்றது'.

உலக வங்கியின் கல்வியாளர்களின் கருத்தின்படி பிள்ளைகள் பிறக்கும்போது குடும்பச்சூழல், சமூகக்காரணி என்பன காரணமாக இருக்கக்கூடிய ஆற்றல் வேறுபாடுகள், மற்றும் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றைப் பல்வேறு கல்வி, சுகாதார நடவடிக்கைகள் மூலம் அகற்றப்படல் வேண்டும்.

சகல அபிவிருத்தி நடவடிக்கைகளின் நோக்கம் மனிதர்களின் ஆற்றலை மேம்படுத்தி அவர்கள் வாழ்க்கையை முழுமையாக வாழச்செய்வதாகும். இதன் பொருள் அவர்களுடைய கல்வியிலும் ஆரோக்கியத்திலும் சரியான முறையில் முதலீடுகள் செய்யப்படல் வேண்டும் என்பதாகும். வறிய குடும்பத்துப் பிள்ளைகள் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளைவிட மிகப் பின்தங்கிய நிலையிலேயே தமது வாழ்க்கை களைத் தொடங்குகின்றனர். அவர்கள் அனுமதி பெறும் பாடசாலைகள் தரத்தில் குறைந்தவை; அவர்களுக்குக் கிடைக்கும் சுகாதார வசதிகளும் அவ்வாறானவை. குடும்ப நெருக்கடிகளும் பொருளாதார வீழ்ச்சிகளும் அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன. அவர்கள் வளர்ந்தோராகும் போது அவர்களுடைய உடல், உள மற்றும் அறிவாற்றல்கள் வளர்ச்சியுறாத நிலையில், மிகச் சாதாரண தொழில்களையே நாட வேண்டியுள்ளது. அவர்கள் சமூகத்துக்குச் சிறந்த உற்பத்தித்திறன் மிக்க உறுப்பினர் களாக மாறுவதில்லை. கடைச் சிப்பந்திகள், வீட்டு வேலையாட்கள், சாரதிகள் மற்றும் சாதாரண வேலைகளையே இவர்கள் செய்யவேண்டியுள்ளது. அவர்கள் செய்யும் பணிகளில் 'பதவி உயர்வு' என்று எதுவும் கிடையாது. பல தலைமுறைகளுக்கு அவர்கள் இவ்வாறான வாழ்க்கையையே நாடவேண்டியுள்ளது. இவர்களுடைய ஆற்றல்களை மேம்படுத்த கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் விசேட அரசாங்க நடவடிக்கைகள் தேவை.

உலக நாடுகளில் வறிய பிள்ளைகள் ஐந்து அல்லது ஆறு வயதில் பாடசாலை செல்லத் தொடங்கும்போது தமது கற்றல் மற்றும் சமூக திறன்களில் பல பிரச்சினை களை எதிர்நோக்குகின்றனர். ஆறு வயதுப் பிள்ளைகள் தமது சமூக, பொருளாதார அந்தஸ்து, பெற்றோரின் கல்வி நிலை என்பன காரணமாகப் பல வழிகளில்

வேறுபட்டவர்களாகத் காணப்படுகின்றனர் என ஈகுவடோர் நாட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பிள்ளைகள் வயது 22 மாதங்களாக இருக்கும்போதே அவர்களுடைய அறிவாற்றல் வளர்ச்சியில் வேறுபாடுகள் தென்படுகின்றன. ஐக்கிய அமெரிக்க ஆய்வொன்றின்படி சொற் களஞ்சியத்தை வைத்து நோக்கும்போது மூன்று வயதுப் பிள்ளைகளின் கற்றலில் பெரிய வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. வெவ்வேறு சமூக வகுப்புப் பிள்ளைகள் இவ்விடயத்தில் பல ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுகின்றனர். இவ்வாய்வின்படி (போஷாக்கு இன்மை, இரும்புச் சத்துக் குறைவு, தொற்று நோய் போன்ற) ஆரோக்கியக் காரணிகள் வீட்டுச் சூழலின் தராதரம், வீட்டில் கவனிப்பு, அறிவுத் தூண்டலுக்கான வாய்ப்பு ஆகிய காரணிகள் பிள்ளைகளின் தேர்ச்சியைப் பாதிக்கின்றன.

ஒரு காலத்தில் மூளையின் அமைப்பானது பிறப்பியல் (பரம்பரை) காரணிகளால் நிர்ணயிக்கப்படுவதாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மைக் கால ஆய்வுகள் இக்கருத்தை மறுக்கின்றன. பிறப்பிலிருந்து ஆறு வயது வரை பிள்ளைகள் பெறுகின்ற ஆரம்பகால அனுபவங்களே குறிப்பாக முதல் மூன்று வருடங்களில் பெறும் அனுபவங்களே பிள்ளைகளின் மூளையின் அமைப்பையும் வளர்ந்தோர் பருவத்தின் ஆற்றல்களையும் தீர்மானிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் (Shore Rima 1997, மூளை பற்றிய மீள் சிந்தனை என்ற ஆய்வு)

பிள்ளையின் வயது அதிகரிக்க அதிகரிக்க சூழல் காரணிகளின் பாதிப்பு அதிகரிக்கின்றது. குறைந்த அறிவாற்றல், சமூக திறன்கள் காரணமாக எதிர்கால அறிவுத் தேர்ச்சியும் பொருளாதார சமூக முன்னேற்றங்களும் வளர்ந்தோரிடத்துக் குறைய நேரிடுகின்றது; இதனால் அவர்கள் வன்செயலிலும் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். உடல் ஆரோக்கியமும் குறைகின்றது. இவ்வாறான முறையில் தேர்ச்சி குறைந்த வளர்ந்தோர், தமக்கு அடுத்த தலைமுறையினரில் (பிள்ளைகளில்) பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றனர். இதனால் வறுமையானது தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றது.

மாணவர்களின் பரீட்சைச் சித்திகள் பற்றிய சர்வதேச தரவுகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி கல்வித் தேர்ச்சிகளில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணி, சமூக - பொருளாதார நிலைமைகளாகும்; பாடசாலைக் கல்வியானது 20 சதவீதமான தேர்ச்சிக்கே காரணமாகின்றது.

இவ்வாய்வுகளின்படி பிள்ளைகளின் சிறு பருவத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் அவர்களுடைய எதிர்கால வாய்ப்புகளை மேம்படுத்தும்; பாடசாலைகள் அவ்வாறான முன்னேற்றத்தின் 20 சதவீத செல்வாக்கையே செலுத்த முடியும்.

தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் வறுமை, ஏற்றத் தாழ்வுகள் என்பவற்றை அகற்றுவதில், பிள்ளைகளின் ஆரம்ப பருவத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்கனவே இடம்

பெற்றவை; இன்று சகல வளர்முக நாடுகளும் இவ்வாறான நடவடிக்கைகளில் அதிக அக்கறை செலுத்திவருகின்றன.

பிள்ளைகளின் ஆரம்பப் பருவத்தில் போஷாக்கான உணவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், அவர்களுடைய வளர்ச்சியைக் கண்காணிக்கும் ஏற்பாடுகள், அவர்களுடைய அறிவாற்றலையும் சமூக திறன்களை ஊக்குவிக்கும் செயல்திட்டங்கள், பெற்றோர்களின் பிள்ளை வளர்ப்புத் திறன்களை மேம்படுத்தல் என்பன பிள்கைளின் வளர்ச்சிக்கான சில தலையீடுகளாகும்.

பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியின்போது வளர்ந்தோர் ஆன பின்பும் அடையக் கூடிய சித்திகளிலும் செயலாற்றல்களிலும் இவ்வாறான ஆரம்பப் பருவத் தலையீடுகள் முக்கிய செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதற்கு ஆய்வு ஆதாரங்கள் உண்டு.

மற்றொரு ஐக்கிய அமெரிக்க ஆய்வின் படி பிள்ளைகளின் ஆரம்பப் பருவ விருத்திக்காகச் செய்யப்படும் முதலீடு பிற்காலத்தில் பாடசாலைக் கல்விக்குச் செய்யப்படும் முதலீடுகளை விட அதிக பயன்களைத் தருகின்றன. பின்தங்கிய வறிய குடும்பங்களின் பிள்ளைகளின் சிறு பருவ விருத்திக்கான முதலீடுகள் பிற்காலத்தில் அவர்களுடைய மேம்பாட்டிற்குப் பெரிதும் உதவின; பிறப்பின் காரணமாக ஏற்பட்ட ஏற்ற தாழ்வுகளைத் தவிர்க்க அவை பெரிதும் உதவின.

வளர்முக நாடுகளில் இவ்விடயம் தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வுகளும் சகல பிரிவுப் பிள்ளைகளும் இவ்வாறான ஆரம்பப் பருவ காலத்தில் செய்யப்பட்ட தலையீடுகள் நன்மை பயத்ததாகத் தெரிவிக்கின்ற சிறு வயதில் விருத்திக்காகச் செய்யப்பட்ட ஒவ்வொரு டொலர் முதலீட்டிற்கும் 2 - 5 டொலர் வரையிலான நன்மை கிடைத்ததாகச் 'செலவுப் பயன்' (cost - benifit) ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குவாதமாலா நாட்டில் செய்யப்பட்ட ஆய்வுகளின் படி 6 - 24 மாதப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட விசேட போஷாக்கு உணவுத் திட்டத்தின் விளைவாக பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் சமூகமளிப்பது அதிகரித்தது; வளர்ந்தவர்கள் ஆன பின்னரும் சித்தி பெறுவது அதிகரித்தது.

சிறு வயதில் பிள்ளை விருத்தியை நோக்கிய நடவடிக்கைகளில் பிரதானமானது முன்பள்ளிக் கல்வியாகும். இலங்கையில் முன்பள்ளிக் கல்வி (3 - 5 வயதுப் பிள்ளைகளுக்கான) கட்டாயமில்லையாயினும் பல ஐரோப்பிய நாடுகளில் இது சட்டரீதியான ஒரு உரிமையாகும். முன்பள்ளிக் கல்வியானது பாடசாலைக் கல்வி மற்றும் பிற்காலக் கல்விக்கான அத்திவாரத்தை அமைக்க உதவுவதால் இலங்கையில் அதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

மாகாணசபைகளும் பிள்ளைகள் செயலகமும் முன்பள்ளிக் கல்வியில் அக்கறை செலுத்தும் முக்கிய நிறுவனங்களாகும். 2003 ஆம் ஆண்டிற்குரிய தரவுகளின்படி இலங்கையில் 11,000 - 12,500 முன்பள்ளிகள் காணப்பட்டன; 3 - 5 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகளில் 60% பிள்ளைகள் முன்பள்ளிகளில் சேர்ந்து கற்றதாக அத்தரவுகள் தெரிவிக்கின்றன.

முன்பள்ளிக் கல்வி நிலைமை பற்றிய அண்மைக் காலத் தரவுகள் பிள்ளைகளுக்கான செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவ் வயதுப் பிள்ளைகள் முன்பள்ளிகளுக்குச் செல்லாததன் காரணங்களையும் அது செயலகம் தந்துள்ளது (பார்க்க அட்டவணைகள்) 80 சதவீத முன்பள்ளிகள் தனியாரால் நடத்தப்படுபவை.

முன்பள்ளிக் கல்வியின் எதிர்காலம் குறித்த கொள்கைகள் பற்றி கலாநிதி குணவர்தனா குழு முன்வைத்துள்ள முக்கிய பரிந்துரைகளாவன :

தேசிய கல்வி ஆணைக்குழுவானது முன்பள்ளிக் கல்விக் கொள்கையை வகுத்தல் வேண்டும்;

முன்பள்ளிக் கல்விக்கான பாட ஏற்பாட்டை தேசிய கல்வி நிறுவகம் தயாரித்தல் வேண்டும்;

அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தப்படி, முன்பள்ளிகளைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், பதிவு செய்தல் ஆகிய பணிகளை மாகாண சபைகள் செய்தல் வேண்டும்;

'முன்பள்ளிக் கல்வியானது ஆரம்பக் கல்வியில் இடம்பெறும் கல்வியுடன் நேரடித் தொடர்புள்ளது. இரு நிலைகளுக்குமான பாட ஏற்பாட்டில் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்'. இவ்வாறான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இலங்கையின் முன்பள்ளிப் பருவப் பிள்ளை விருத்தியும், கல்வி முறையும் வளர்ச்சி பெறவில்லை.

உலக வங்கி (2003)
இலங்கைக் கல்வி முறைமையின்
பொக்கிசங்கள்

தமிழின் சிறப்பு

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது
கனியை பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு.

சிறுவர் சமூகமயமாவதன் அவசியமும் அதில் பாடசாலையின் வகிபங்கும் பற்றிய சமூகவியல் ஆய்வு

க. சயந்தன்

சமூகவியற்றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

சமூகமயமாதல் பற்றிய அறிமுகம்

சமூகமயமாதல் (Socialization) என்பது சமூக விஞ்ஞானங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள ஒரு எண்ணக்கருவாகும். நாங்கள் எமது சமூகத்தில் அல்லது நாம் வாழுகின்ற குழுவினுள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளுகின்ற ஒரு செயன்முறையினை சமூகமயமாதல் என வரையறுத்துக் கொள்ளலாம். (Elkin மற்றும் Handel, 1978). சமூகமயமாதல் தொடர்பாக மற்றுமோர் வரைவிலக்கணம், 'தனிநபர்கள் (Individuals) தமது சமூகத்தினுடைய அங்கீகரிக்கப்பட்ட பண்பாட்டினை (Culture) அறிந்து கொள்கின்ற தொடர்ச்சியான செயன்முறை' என வரையறுக்கின்றது (Haralambos and Holbom, 2002).

ஒரு சமூகம்தான் தனது எல்லைக் குட்பட்ட தனிநபர்களது நியமங்கள் (Norms), விழுமியங்கள் (Values), ஒழுக்கநெறிகள் (Morals), வழக்காறுகள் (Customs) மற்றும் பண்பாட்டின் ஏனைய கூறுகளை (Elements of culture) வரையறுக்கின்றது. இவற்றினை அந்தச் சமூகத்தில் அடங்குகின்ற தனிநபர்கள் ஏற்றுக் கொள்ளுகின்ற பட்சத்திலே அவர்களைக் குறித்த சமூகத்தைச் சார்ந்தவர்களாக அந்த சமூகம் அங்கீகரிக்கும். உதாரணமாக ஒரு சமூகத்தால் தடுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட செயலைச் செய்யும் ஒருவரை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உண்மையில் அது ஒரு சமூக மயப்படுத்துவதில் குறித்த நபர் பூரணமாகத் தேறவில்லை என்பதையே இவ்வாறான ஓரங்கட்டலானது காட்டுகின்றது.

ஒருவரைச் சமூக மயப்படுத்துவது என்பது சிறுபராயத்துடன் முடிவுக்கு வருவதாக நாம் கருதிவிடலாகாது. ஒருவர் பிறந்தது முதல் இறக்கும்வரைக்கும் சமூகத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கற்றுக் கொண்டே இருக்கின்றார். இங்கு எவ்வாறு சமூகத்தில் வாழவேண்டும் என்ற கற்றல் செயன்முறையே (Learning Process) சமூகமயமாதலாகும். டேவிட் கியூம் என்ற அறிஞர் 'ஒரு குழந்தை பிறக்கும்போது ஒரு வெற்றுத் தாளைப் போன்றதாகும்' எனக் குறிப்பிடுகின்றார். இங்கு வெற்றுத்தாள் என்பது குழந்தைக்கு உவமிக்கப்படுவதன் மூலம் கள்ளங்கபடமற்ற வெறுமையான நிலையினை குறிக்கின்றது.

ஒரு குழந்தை தானாகவே பேசக் கற்றுக் கொள்வதில்லை. உணவுண்ணக் கற்றுக் கொள்வதில்லை. நடக்கக் கற்றுக் கொள்வதில்லை. ஆடையணியக் கற்றுக் கொள்வதில்லை. அதாவது இவ்வாறான ஒவ்வொரு அம்சமும் சமூகத்தில் ஏனைய நபர்களின் மூலமாக குழந்தைக்கு கற்றுக்

கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒரு குழந்தை தமிழ்மொழியைப் பேசவேண்டு மென்றால் அங்கு தமிழ்மொழி தெரிந்த ஒருவரின் வழிகாட்டல் கட்டாயம் தேவை. இங்கு கற்பித்தல் மற்றும் கற்றல் ஆகிய செயற்பாடுகளின் மூலமாக சமூகமயமாதல் நிகழ்வதாக நாம் அறிந்துகொள்வது முக்கிய மானது.

பெரும்பாலும் நாம் அனைவரும் குழந்தைகளின் பழக்கவழக்கங்கள் தொடர் பாக உச்சரிக்கின்ற ஒரு பாடல் வரி பின்வரு மாறு இருக்கும். 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையே மண்ணில் பிறக்கையிலே, அவை நல்லவையாவதும் தீயவையாவதும் அன்னை வளர்ப்பினிலே....' இதன் தத்துவமானது குழந்தைக்கு டேவிட் கியும் உவமித்த வெள்ளைத்தாளில் அல்லது வெற்றுத்தாளில் நாம் எழுதுவதைப் போன்றதாகும். இங்குதான் அரிஸ்டோட்டில் எனும் மெய்யியல் தத்துவ அறிஞர் கூறியவாறு மனிதன் ஒரு சமூகப் பிராணியாகின்றான் (Social Animal). அதாவது மற்றவர்களுடனான சமூக இடைவினைகள் அல்லது இடைத் தொடர்புகள் (Social Interactions) மூலமாக மனிதன் ஒரு சமூகத்திற்கேற்றவாறு, சமூகத்தில் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு மாற்றமடைகின்றான். எதுவும் தெரியாத ஒரு நிலையிலிருந்து சமூகமானது வரையறுத்த விடயங்களைத் தனக்குள்ளே உள்வாங்கிக் கொள்வதன் மூலமாக சமூகப் பிராணியாகின்றான். இங்கு நாம் அறிந்து கொள்ளவேண்டிய முக்கிய விடயம் என்ன வென்றால் சமூகமயமாதல் ஒருவகையில் சமூகப் பிராணியாதல் ஆகும்.

நாம் இன்று குறிப்பிட்ட ஒரு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளோம் என்றால் குறித்த சமூகத்திலே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை அனுசரித்துப் போகின்றோம் என்பதாகும். இதற்கு காரணம் எதுவென்றால் குறித்த விடயத்தில் நாம் சமூகமயமாக்கப்பட்டுள்ளோம் என்ப தாகும். உதாரணமாக, இன்று நாங்கள் ஆடைகளை அணிந்துள்ளோம். இந்த சமூகத்தில் குறிப்பிட்ட நபரொருவர் ஆடை அணியாது விடுவாரானால், எமது சமூகத்தில் மற்றவர்களால் சரியென ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை அவர் நிராகரிக் கின்றார் என்று அர்த்தம். மேலுமொரு உதாரணத்தைப் பார்ப்போமானால், கோவிலுக்குப் போகும்போது கால்களைக் கழுவிச் செல்வது இந்துக்களால் சமூக ரீதியாக எதிர்பார்க்கப்படும் ஒரு சமய விழுமியமாகும் (Religious Values). இங்கு அவ்வாறு செய்யாது விடுவதன் மூலம் ஒருவர் சமூகரீதியான எதிர்ப்புக்கு முரணாக நடக்க முற்படுகின்றார் என கருதிக் கொள்ளலாம். மேற்குறித்த விடயங்களில் குறித்த நபர் இன்னும் குறித்த விடயம் தொடர்பில் சமூகமயமாக்கப்படவில்லை என்பதனையே காட்டுகின்றது. இதன்மூலம் சமூகமயமாக்கலுக்கு உட்படாத ஒருவர் விலகல் நடத்தையுடையவராக (Deviant Behaviour) கருதப்படுவார். எனவே சமூகத்தில் எமது இருப்பினை தக்க வைக்க வேண்டுமானால் சமூகமயமாக்கலுக்குட் படல் வேண்டியது கட்டாயமானதாகும்.

சமூகமயமாதல் செயன்முறையின் அவசியம்

சமூகமயமாதல் என்பது சிறுபராயம் முதல் தமது கலாசாரத்தினைக் கற்று அதன்மூலம் சமூக நியமங்களுக்கு (Social Norms) ஏற்ப வாழ்வதற்கான படிமுறைகளை உள்ளடக்கியதாகும். இங்கு சமூகமயமாதல் நடவடிக்கைகளினூடாக தனிநபர்கள் அவர்களது உலகத்தினைத் தெரிந்து கொள்ளவும், ஏனையோருடன் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் இடைவினையாடல் வேண்டுமென்பதனையும் கற்றுக் கொள்ளுகின்றனர் (Newman, 2006).

பிறந்தது முதல் இறக்கும் வரைக்கும் மனிதராகப் பிறந்த ஒருவர் பல்வேறு வாழ்வியல் கட்டங்களை (Life Stages) கடந்து வருகின்றார். ஒவ்வொரு படிமுறையிலும் பல்வேறுபட்ட நடிபாங்கினையும் (Role) அந்தஸ்த்தினையும் (Status) உள்வாங்கி நடந்துகொள்ள வேண்டும். உதாரணமாக இந்து மதம் கூறுவதைப் போன்று பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு படிநிலைகளிலும் வெவ்வேறுபட்ட வகிபங்கு - அந்தஸ்த்தினைக் கண்டுகொள்ளலாம். இவ்வாறு இன்றைய காலகட்டத்தில் சமூக மாற்றத்திற்கேற்ப (Social Change) நாம் பல்வேறுபட்ட வாழ்வியல் அம்சங்களைக் கொண்டுள்ளோம். ஒவ்வொரு வாழ்வியல் அம்சமும் ஒருவகையில் சமூகமயமாதல் மூலம் இலகுவில் தனிநபர்களால் கற்றுக் கொள்ளப்பட முடிகின்றது.

சமூகமயமாதலானது தனிநபர் (Individuals) குழுக்கள் (Groups) மற்றும் சமூகம் (Society) என்பவற்றிற்கிடையே ஒரு பாலமாக (Bridge) விளங்குகின்றதென சமூகவியல் அறிஞர்கள் பலரும் குறிப்பிடுகின்றனர் (Kendall, 2003). இதன் காரணமாகத்தான் சமூகமயமாக்கல் தனிநபரொருவரது உயிர் வாழ்வதற்கும் மனித அபிவிருத்திக்கும் (Human Development) அவசியமானது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது (Furesh, 2006).

சமூகமயமாதலினூடாகத் தனிநபர்கள் எவ்வாறு பேசவேண்டும் என்பதனைக் கற்றுக் கொள்ளுகின்றார்கள். இதன்மூலம் அவர்கள் மொழித்திறனையும் (Language Skill) தொடர்பாடல் விருத்தியினையும் (Communication Improvement) பெற்றுக் கொள்ளுகின்றார்கள். நாம் இன்று ஒருவருக்கொருவர் மொழியியல் தொடர்பாடலைக் (Linguistic Communication) கொண்டுள்ளோம் என்றால் அதுகூட ஒரு சமூகமயமாதலினுடைய விளைவு என்றே கொள்ளப்படல் வேண்டும். இது தவிர நடத்தைக் கட்டுப்பாட்டினை (Behavioural Control) கற்றுக்கொள்வதுடன் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ளவும் இது உதவுகின்றது எனலாம். அதாவது சமூக நிறுவனங்கள் (Social Instittions) சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள், விழுமியங்கள் என்பவற்றை தனிநபர்கள் அறிந்து கற்றுக்கொண்டு அதன்படி நடப்பதற்கான வாய்ப்புக்களினை வழங்குகின்றன. உதாரணமாக பெரியவர்களினை மதிக்காத தருணத்தில், பெற்றோர்கள் எதிர்மறையான தலையசைத்தலை வெளிக்காட்டுவர். இதன் மூலமாகக் குறித்த விடயம் தனது சமூகத்தில் காணப்படுகின்ற நியம விழுமியங்களிற்கு முரணானது என்பதனை சிறுபராயத்தினர் கற்றுக் கொள்ளுகின்றனர்.

ஒரு சமூகம் ஆளுமையான தனிநபர்களைக் கொண்டிருக்க வேண்டுமெனில், அச்சமூகத்தில் வாழும் தனிநபர்களை நேர்க்கணிய சமூகமயமாதலுக்குட்பட்டவராக (Positive Socialization) இருத்தல் வேண்டும். உதாரணமாக கைவிடப்பட்ட அனாதைச் சிறுவர்கள் (Orphan Children) துஸ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட சிறுவர்கள் (Abused Children), கீழ்த்தரமான பழக்க வழக்கங்களினைக் கற்றுக்கொண்ட சிறுவர்கள் என பல்வேறுபட்ட எதிர்மறைச் சமூகமயமாதல் குழுக்களினைக் (Negative ly Socialized Groups) காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களது மொழி விருத்தி (Language Development), பழக்கவழக்கங்கள் (Morals), ஆளுமை விருத்தி (Personality Development), உளவியல் விருத்தி (Psychological Development) போன்ற மானிட அபிவிருத்தி விடயங்களில் எதிர்மறை விளைவுகளையே அவர்கள் கொண்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். உதாரணமாக மலசலகூடப் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளாத சிறுவர்கள் எவ்வாறு பொது இடத்தில் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என தெரியாதவர்களாய் இருப்பார்கள். இதனை சிறு பராயத்திலிருந்தே கற்றுவரல் வேண்டும். இல்லாவிடில் மலம் கழித்த பின்னர் தனது மலவாயிலை நீரைக் கொண்டு சுத்தப்படுத்த ஏனைய ஒருவர் மீது தங்கியிருக்க வேண்டியிருக்கலாம். இது பிற்காலத்தில் குறிப்பாக கட்டிளமைப் பருவத்தில் (Adulthood) பாரிய நடைபிறழ்விற்கு வழிவகுக்கும்.

நாம் குடும்பம் என்ற ஒரு அலகில் வளர்க்கப்பட்டு இருக்காவிட்டால் அல்லது சமூகமயமாதல் என்ற ஒரு செயற்பாட்டிற்கு உள்ளாகாவிட்டால் எவ்வாறான நிலையில் இருப்போம் என்பதை நினைத்துப் பார்க்கவே கடினமாக இருக்கும். 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என ஔவையார் மானிடப்பிறப்பை கூறுவதே சமூகமயமாதலுக்குட்படும் ஒரு பிறப்பாக மானிடம் காணப்படும் தன்மை என்பதனால் இருக்கும். ஏனெனில் சமூகமயமாகாத எந்தவொரு உயிரியல் பிறப்பையும் மனிதராகக் கொள்வதில் எந்தவொரு சிறப்பும் இல்லை. விலங்கில் இருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதே சமூகமயமாதல் மூலம் அடையப்பெறுகின்ற தனித்துவமான பண்புகளே. இதனை கீழ்வரும் எடுத்துக் காட்டு உதாரணங்களின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

பிரான்சில் 1799 ஆம் ஆண்டில் அவெய்ரன் (Aveyron) என்ற நகரிற்கு அண்மையில் உள்ள காட்டில் ஒரு பத்து வயதினையொத்த சிறுவன் ஒருவன் கண்டுபிடிக்கப்பட்டான். அவ்வேளையில் மிருகங்கள் கழிவுப்பொருட்களை எடுத்து உண்ணுவதைப் போலவே தானும் கழிவுப் பொருட்களை உண்டு கொண்டிருந்தான். இதனைக் கண்ட ஆய்வாளர்கள் அவனை பாரிஸ் (Paris) நகரில் உள்ள செவிப்புலன் அற்றோர் பாடசாலை ஒன்றில் விக்டர் (Victor) எனும் பெயரில் கலாநிதி இற்றட் (Dr. Itard) என்பவரின் தலைமையில் சேர்த்துவிட்டனர். ஆயினும் ஆரம்பத்தில் மனிதர்களுக்குரிய பொதுவான உணர்வு ரீதியான பண்புகள் சிலவற்றை விக்டரிடம் அவதானிக்க முடியவில்லை. அவனால் குளிரையும் வெப்பத்தையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளமுடியவில்லை. ஒரு சொல்லைக்கூட அவனால் பேசமுடிய

வில்லை. சரியானவற்றையும் தவறையும் பிரித்துணரமுடியவில்லை.

இறுதியில் நாற்பது வயதில் இறக்கும் போது அவனால் ஓரளவிற்கு பேசக்கூடியதாக இருந்ததாயினும் சிறப்பாகப் பேச முடியவில்லை. இங்கு சிறு பராயத்தில் சமூக மயமாதலுக்கு உட்படாததன் விளைவே ஒரு சாதாரண மனிதனது நிலைமைக்கு விக்டரால் வரமுடியாமல் போனதாகும்.

இவ்வாறே மற்றுமோர் உதாரணத்தை இங்கு தெரிந்துகொண்டால் சமூகமய மாதலின் இன்றியமையாமையை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அமெரிக்கா வில் 14 வயதினையுடைய பெண்ணொருவர் 1970 களில் கண்டுபிடிக்கப்பட்டார். குறித்த பெண்ணின் உண்மையான அடையாளத் தை மறைப்பதற்காக அவளிற்கு ஜீனி (Genie) என ஆய்வாளர்கள் பெயரிட்டுக் கொண்டனர். இவள் ஏறத்தாள ஒன்றரை வயதில் இருந்து ஒரு கதிரையில் கட்டி வைக்கப்பட்டு பெற்றோரினால் துன்புறுத்த லான வாழ்விற்குட்பட்டு வந்திருந்தாள். மலசலம் கழிப்பதற்கு கதிரையில் துளையிடப்பட்டிருந்தது. இதனால் எந்த வொரு தேவைக்கும் அவளால் கதிரையை விட்டு நீங்க முடியவில்லை. இக்காலத்தில் பசியினாலோ அல்லது வலியினாலோ சப்தம் எழுப்பினால் அவள் மோசமாக தண்டிக்கப் பட்டாள். அவளால் சரியாகப் பேசமுடிய வில்லை. அவளை மீட்டதன் பின்னர் அவளால் நடக்க முடியவில்லை. தவழ்ந்து தான் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு நகர்ந்து சென்றாள். அவளால் ஒரு பந்தை எறிந்தபோது எந்தவொரு துலங்கலையும் வெளிப்படுத்தவில்லை. ஏனெனில், பந்து என்பது அவளைப் பொறுத்தவரை சாதாரண ஒரு பொருள். அதை திருப்பி உந்த வேண்டும் என்ற மனோபாவம் அவளிடம் ஏற்படவில்லை. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. அதாவது ஒரு வயதினையுடைய சிறு குழந்தைகூட பந்தை கொடுக்கும் போது அதை தட்டி முட்டி எட்டி உதைத்து விளையாட முயற்சிக்கும். இங்கு ஜீனி எந்தவொரு துலங்கலையும் வெளிக் காட்டவில்லை என்றால் அவளது சமூக மயமாதல் பூச்சியம் எனக் கொள்ளத்தக்க தாக இருக்கலாம். அதாவது, அவள் வெளி உலகிற்கான தொடர்பில் இருந்து முற்றாகத் தடுக்கப்பட்டிருந்தாள். இதனால் எவ்வாறு மனிதர்கள் நடந்துகொள்கிறார்கள். எவ்வாறு மற்றவர்களுடன் தொடர்பு கொள்கின் றார்கள். தனது சமூகத்தின் பண்பாடு எவ்வாறானது. சமூக வாழ்வின் முக்கியத்துவம் என்ன என்பன போன்ற விடயங்களை அவளால் அறிந்து தெளிந்து கொள்ளமுடியவில்லை. இதனாலே அவளை மீட்டதன் பின்னரும் சாதாரண மனிதர்களைப் போன்று நடந்துகொள்ள முடியவில்லை.

இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் எதுவென்றால் ஒருவர் எந்த சூழ்நிலையில் வாழுகின்றாரோ அச் சூழ்நிலைக்கேற்ப தன்னை வளர்த்துக் கொள்கின்றார் என்பதாகும். மனிதர்களின் எந்தத் தொடர்பும் இல்லாது விலங்குகளோடு சேர்ந்து வாழ்ந்தால் விலங்கைப் போன்றே நமது நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள் அமைந்துவிடும். சமூகம் + மயமாதல் என்பது சமூகத்தில் நாம் ஒரு பிரஜை என்ற நிலையை அடைகின்றோம். அவ்வாறு இல்லாவிடில் நாம் சமூகத்தில் பிரஜை என்ற நிலையில் வைத்துப்பார்க்க எந்த தகுதியும் அற்றவர்களாகவே விளங்குவோம்.

இவ்வாறே இந்தியாவிலும் ஒரு சம்பவம் இங்கு குறிப்பிட்டுக் கூறமுடியும். இந்தியாவில் மிட்னாப்பூர் (Midnapore) மாவட்டத்தில் கொடமுறி (Godamuri) என்ற இடத்தில் ஓநாய்களுடன் வாழ்ந்துவந்த எட்டு வயது மற்றும் ஒன்றரை வயதினையுடைய இரு சிறுமிகள் அனாதைச் சிறுவர்கள் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களின் நடத்தைகள் அனைத்துமே ஓநாய்களின் இயல்பை ஒத்தவையாக காணப்பட்டன. உதாரணமாக பச்சையாகவே மாமிசத்தை உண்ணுதல், இரவில் கண் விழித்து பகலில் உறங்குதல், தவழ்ந்து, ஊர்ந்து திரிதல், உணவைக் கையால் உண்ணாது விலங்குகள் உண்ணும் நிலையில் நான்கு கால்களிலும் நின்று உண்ணுதல் என விலங்குகளுக்குரிய நடத்தையாகவே அனைத்தும் காணப்பட்டன. இவர்களில் சிறியவள் கண்டு பிடிக்கப்பட்டு ஒரு வருடங்களில் இறந்துவிட மற்றைய பெண் ஏறத்தாள பதினேழு வயது வரைக்கும் உயிர் வாழ்ந்துள்ளாள். ஆயினும் அவளால் சாதாரண மனிதர்களைப் போன்று சமூகத்தில் வகி பங்கு விளக்க முடியவில்லை.

1983இல் சீனாவில் சமூக விஞ்ஞானிகள் குழுவொன்று பன்றிக்கூட்டில் அடைத்து வைத்திருந்த ஒரு இளம் பெண்ணொருவரை மீட்டு அவளை சமூக வாழ்வினில் இணைத்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொண்டார்கள். ஆனாலும் அவளைப் பூரணமாகச் சமூக வாழ்வில் இணைத்துக் கொள்ள முடியவில்லை. அப்பெண் பசியில் இருக்கின்ற வேளைகளிலெல்லாம் பன்றியைப் போன்றே நிலத்திலே உருண்டு புரண்டு உறுமி நடந்து கொண்டாள். இங்கு துன்புறுத்தலுக்கான அல்லது சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட ஒருவர் அந்தப் பாதிப்பில் இருந்து மீண்டுவர எத்தனையோ மடங்கு வருடங்கள் ஆனாலும் பூரண நிலையினை அடைந்துகொள்ள முடியாது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் சிறு பராய சமூகமயமாதல் என்பது மிகவும் அத்தியாவசியமானது. அதனைத் தவறவிடின் சாதாரண மனிதனாக சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் நிலையை அடைதல் என்பது மிகவும் சவாலானதாகும். ஏனெனில், குழந்தைப் பருவமே மொழி விருத்திக்கும் திறன் விருத்திக்கும் மிகவும் உகந்த காலமாகும். "இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து" என்று சொல்ல கேள்விப்பட்டிருப்போம். இவை யாவும் குழந்தைப் பருவத்தில் சமூகமயமாதலின் அவசியத்தையே குறிப்பிடுகின்றன. நல்ல பழக்கவழக்கங்களைக் குழந்தைப் பருவத்தில் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்து சமூகத்தில் முன்னுதாரணமுள்ள மனிதனை உருவாக்கிக்கொள்ள சிறுபராய சமூகமயமாதல் இன்றியமையாதது.

தனிநபர்கள் தமது சூழ்நிலைக்கேற்றவாறு பழக்கப்படுத்திக் கொள்வதற்கும் அதற்கேற்ப நடந்து கொள்வதற்கும் சமூகமயமாதல் நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும். இங்கு ஒவ்வொரு சூழ்நிலைக்கேற்ப தனிப்பட்ட திறமைகள் மற்றும் பண்பாட்டம்சங்களை அடைந்து கொள்வதற்கு இது இன்றியமையாதது. உதாரணமாக குழந்தைப் பருவத்தில் இருந்தே தத்தமது பால்நிலைக்கேற்ப (ஆண்/ பெண்) வித்தியாசமான ஆடையணிதல், கதைத்தல், வித்தியாசமான

திறமைகளை விருத்தி செய்தல் போன்றன வற்றையும் நடத்தைப் பழக்கவழக்கங்களை யும் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

சமூகக் கட்டுப்பாட்டை அதன் சீர்மை யான தொழிற்பாட்டை தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு தனிநபர்கள் சமூக மயமாக்கப்பட்டிருத்தல் இன்றியமை யாதது. மேலும் கூறுவதாயின் சமூக மயமாதலே ஒரு சமூகத்தின் மீளுருவாக்கத் திற்கும் (Reformation of the Society) அதனுடைய பண்பாட்டை ஒரு சந்ததி யிலிருந்து மற்றைய சந்ததிக்கு கடத்தவும் (Cultural Transmission) முடிகின்றது. இவ்வாறான தொடர்ச்சியான பண்பாட்டுப் பரிமாற்றத்தின் மூலமாகவே ஒரு சமூகம் தொடர்ச்சியான நிலைத்திருப்பினை தக்க வைத்துக்கொள்ள முடிகின்றது (Kendall, 2006)

சமூகமயமாதல் முகவர்கள்

சமூகவியல் அறிஞர்கள் சமூக மயமாதல் செயற்பாட்டில் பிரதான முகவர்கள் (Primary Socialization Agent) மற்றும் இரண்டாம் நிலை முகவர்கள் (Secondary Socialization Agent) என இரண்டு வகையான முகவர்களை வரையறுக் கின்றார்கள். இங்கு குடும்பம், ஊடகங்கள் (Media) மற்றும் சகபாடிகள் குழு (Peer Group) என்பன பிரதான முகவர்களாக காணப்படுகின்றன. குடும்பமே எல்லா சமூகங்களிலும் மிகவும் முக்கியமானதும் அளவிலே சிறியதுமான சமூக நிறுவன மாகும். பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் ஒருவர் குடும்பத்திலேயே இருக்கின்றார். குறிப்பாக திருமணத்திற்கு முன்னர் தான் பிறந்த குடும்பத்திலும், திருமணத்தின் பின்னர் திருமணம் மூலம் தானமைத்துக் கொண்ட குடும்பத்திலும் அங்கத்தவராக இருக்கின்றார். தான் வாழும் சமூகத்தினது ஆழும் பண்பாட்டினையும் உப பண் பாட்டினையும் (Culture and Subculture) முதலில் குடும்பத்திலிருந்தே புதிய குழந்தைகள் கற்றுக் கொள்கின்றார்கள். குடும்ப சமூகமயமாதல் என்பது பெற்றோரது சமூகம், வகுப்பு, ஆளுமை, கல்வி மட்டம், மனோபாவம், நடத்தை, இனம், மதம் போன்ற விடயங்களில் தங்கியிருக்கின்றது.

சகபாடிகள் என்பது ஒரே வயதினை யுடைய பொதுவான வகுப்புக்களாலும் சமய சமூக அந்தஸ்த்தினாலும் இணைக்கப் பட்டுள்ள ஒரு குழுவாகும். இக் குழுவானது தனிநபரது தனிப்பட்ட விடயங்களில் உணர்வுரீதியாகவும் பௌதீகரீதியாகவும் தாக்கம் செலுத்துவதன் மூலமாக சமூக மயமாதல் முகவர்களாகச் செயற்படு கின்றன.

பாடசாலை, சமய நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றன இரண்டாம் தர முகவர்களாகக் கொள்ளப்படுகின்றன. இங்கு இரண்டாந்தர சமூகமயமாதல் முகவர்கள் பெரும்பாலும் குறைந்தளவான உணர்வுகளுடன் கூடியளவு முறைசார்ந்த வாழ்வியல் விடயங்கள் தனிநபர்களுக்கு கற்பிக்கின்றன. பிரதான சமூகமயமாதல் முகவர்கள் என்று சொல்லப்படுகின்ற குடும்ப நிறுவனம் மற்றும் சகபாடிகள் என்பன முன்பிள்ளைப் பருவத்திலிருந்தே சமூக மயமாதலுக்கு உந்துதலாக அமைந்து விடுகின்றன. பெரும்பாலும் இரண்டாம் நிலை முகவர்கள் முன்பிள்ளைப் பருவத்திற்கு பின்னரே இடைவினை

யாடலுக்கு (Interaction) உட்படுகின்றன. ஒப்பீட்டளவில் பிரதான சமூகமயமாதல் முகவர்களால் இரண்டாந்தர சமூகமயமாதல் முகவர்களைக் காட்டிலும் வினைத்திறனான சமூகமயமாதல்ச் செயற்பாட்டிற்கு உதவ முடியும்.

பாடசாலை என்பதன் வரைவிலக்கணம்

பாடசாலை என்ற பதமானது பல்வேறு பட்ட கருத்தியல்களையும் (Ideologies) வரைவிலக்கணங்களையும் (Definitions) கொண்டு காணப்படுகின்றது. இவ்வகையில் பாடசாலை என்பதனை சிறுவர்களுக்கு வழிகாட்டலை வழங்குகின்ற ஒரு நிறுவன மாகும் எனவும், அவ்வாறே முறை சார்ந்த கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளும் நிறுவனத்தினைக் குறிப்பதாகவும் கருத லாம். இலங்கையைப் பொறுத்தவரைக்கும் பொதுவாக 19 வயதிற்குட்பட்டவர்கள் கல்வியைப் பெறுவதற்காக முறையாக உருவாக்கப்பட்ட ஒரு சமூக நிறுவனமாக (Social Institution) பாடசாலை அடையாளப் படுத்தப்படுகின்றது.

'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா....? என்ற முதுமொழியைக் கேட்டிருப்போம். அதன் உள்ளார்ந்த அர்த்தம் எதுவென்றால் சிறு வயதில் இருக்கும்போதே நற் பழக்கவழக்கங்களைப் போதிக்க வேண்டும். நாம் எவற்றை குழந்தைகளுக்கு தெரியக்கூடியவாறு செய்து காட்டுகின்றோமோ அல்லது கற்றுக் கொடுக்கின்றோமோ அவையே குழந்தை களின் மனதில் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்பாடாகப் பதியப்படும். இவ்வாறாகக் குழந்தைகளால் உள்ளீர்க்கப் படும் விடயங்களே அவர்களின் செயற் பாட்டின் மூலம் வெளித் தெரியும். இங்கு சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைக் குழந்தைகளிடம் சமூகமயப் படுத்துவதில் பாடசாலைகளின் வகிபங்கு புறந்தள்ளிவிடலாகாத ஒன்றாகக் காணப் படுகின்றது.

பாடசாலையும் சமூகமயமாதல் செயன் முறையும்

ஒரு சமூக நிறுவனமாக பாடசாலை பல்வேறு தளங்களில் சமூகமயமாதல் செயற்பாட்டிற்கு துணைபுரிகின்றது. பாடசாலை ஒன்றின் எழுச்சி நாகரீக சமூகமொன்றின் வளர்ச்சியாகக் கொள்ளப் படுவதில் தவறேதும் இல்லை. இவ் வகையில் பாடசாலையானது கல்வி உற்பத்தி (Industry of Education), சமூகக் கட்டமைப்பு மற்றும் சமூக கட்டுப்பாடு (Social Order and Social Control), ஆளுமை விருத்தி (Personality Development), சமூக இடைவினை (Social Interaction), பண்பாட்டுப் பரிமாற்றம் (Cultural Transmission), அறிகை விருத்தி (Cognitive Development), சமூக மாற்றம் (Social Change), பால்நிலை வகிபங்கு (Gender role), பொது அடையாளமும் ஒற்றுமைப் பண்பும் (Common Identity and Solidarity), சுய திருப்தி (Self Satisfaction), சமூக அபிவிருத்தி (Social Development), சமூக அந்தஸ்து (Social Status) போன்ற பல்வேறு விடயங்கள் மூலமாக சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சந்ததியை உருவாக்குகின்றது.

ஆரம்பப் பாடசாலையில் மாணவர் களைச் சேர்க்கும்போது அவர்கள் இரண்டு வகையான சமூகமயமாதல் செயன் முறைக்கு உள்ளாவார்கள். அதாவது ஆசிரியரை மையப்படுத்தியதான பாடசாலை

வகுப்புச் சமூகமயமாதல் மற்றும் சக நண்பர்களை அடிப்படையாகக் கொண்ட சமூகமயமாதல் என்ற இரு வகையான சமூகமயமாதல் செயன்முறையைக் கண்டு கொள்ளலாம் (Hartup, Higgins & Ruble 1983). இவ்வாறே சிறுவர்கள் முறைசார்ந்த மற்றும் முறை சாராத சமூகமயமாதல் செயற்பாடும் பாடசாலையில் இடம்பெறு வதனைக் குறிப்பிடலாம். உதாரணமாக வகுப்பறைச் சமூகமயமாதலானது ஒருவர் முறைசார்ந்த இடங்களில் எவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும், முறை சாராத இடங்களில் எவ்வாறான வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை சகபாடிகள் மூலமாகப் பெறும் சமூகமயமாதலும் கற்றுத் தருகின்றது எனலாம்.

இன்றைய போட்டி நிறைந்த உலகிலே முறைசார்ந்த கல்வி முறையே பெரிதும் நடைமுறையிலுள்ளபோதிலும் கல்வி என்பது தவிர்க்கமுடியாத ஒரு சமூக நிறுவனமாக புராதன காலங்களில் இருந்து விளங்கிவருவதை யாராலும் மறுத்துவிட முடியாது. பாடசாலை என்ற தொழிற் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு விடயமாக கல்வி காணப்படுகின்றது. கல்வி இல்லாதவனை இன்றைய சமூகம் பூரண மனிதனாக கருதுவதில்லை. கல்வியே வாழ்க்கையின் அடுத்தகட்ட தயார்ப்படுத்த லுக்கு அடித்தளமாக இருக்கின்றது. நாம் அனைவரும் கல்வி கற்றவராக இருக்க வேண்டும் என்பதன் அர்த்தம் தனியே தொழில்சார் விடயங்களிற்காக சமூகத்தில் சிறந்த பிரஜை என்ற பெயரெடுப்பதற்கும் காலாகாலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒருவர் சிறு தவறைச் செய்யும்போது 'படிக்காதவன், படிப்பறிவற்றவன், மொக்கன்' எனப் பல்வேறு அடையாளத்தை சூட்டு கின்றோம் (Labeling). இது உண்மையில் கல்வி கற்காதவன் சாதாரண மனிதனது நிலையினின்றும் வேறுபட்டவன் என்ற அர்த்தத்திலேயே சொல்லப்படுகின்றது.

ஒவ்வொரு சமூகத்திலும் பாடசாலை யும் அதனோடு இணைந்த கல்வி முறைமையும் சமூகக் கட்டுப்பாட்டைப் பேணுகின்ற அல்லது மேலும் விருத்தி செய்கின்ற முகவராகக் காணப்படுகின்றது. பாடசாலைக் கல்வியென்பது ஒரு சமூகத்தின் சமூகக் கட்டுப்பாடுகளையும் நியம விழுமியங்களையும் போதிக்கின்ற நிறுவன மாகும். தொழிற்பாட்டு சமூகவியல் அறிஞர்கள் (Functionalist Sociologists) கூறுவதைப் போன்று சமூகத்தில் ஒரு சமச்சீர்த் தன்மையைப் (Equilibrium) பேணுவதற்குப் பாடசாலை மூலம் புகட்டப் படுகின்ற கட்டுப்பாட்டு அறிவுறுத்தல்கள் அவசியமானதாகும். இன்று பாடசாலை மட்டங்களில் சாரணர் இயக்கங்கள், தலைமைத்துவக் குழுக்கள், வீதிப் போக்கு வரத்துக் குழு எனப் பல்வேறு குழுக்கள் இயங்குவது இவ்வாறான சமூகக் கட்டுப் பாட்டைப் பேணுவதற்கேயாகும். தவறு செய்கின்றபோது ஊக்கமும் பாராட்டுக்களும் தரும்போது பாடசாலையானது சிறுவர் களைப் பொறுத்த வரைக்கும் சமூகக் கட்டுப் பாட்டை பேணுகின்ற நிறுவனமேயாகும்.

பாடசாலையில் சிறுவர்களது ஆளுமை விருத்தி என்பது பல்வேறு காரணங் களினால் உந்தப்படுவதனைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் சுட்டிக்காட்டலாம். பாடசாலையில் அனுபவக் கல்வியையும் கோட்பாட்டறிவையும் சிறுவர்கள் பெற்றுக் கொள்வதுடன் ஒருவருக்கொருவர் தொடர்பு

கொள்ளுதல், தலைமைத்துவம் வகித்தல் (Leadership), பேச்சுப் போட்டி உள்ளடங்கலான பல போட்டிகளில் பங்கேற்றல், விளையாட்டுக்கள் என பல்வேறு விடயங்கள் மூலமாகப் பல்வேறு ஆளுமைத் திறமைகளையும் பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இங்குதான் சிறுவர்கள் இலக்கண வழுவற்ற மொழியைக் கற்றுக்கொள்கின்றனர்.

பாடசாலையில் வேறுபட்ட சமய, சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பின்புலத்திலிருந்து மாணவர்கள் வந்து சேரும்போது அவர்களுக்கிடையே சமூக இணக்கப்பாடு ஏற்படும். இதுவே வேறுபட்ட அடையாளங்களைக் கொண்ட பிறரை அணுகவும் அவர்களுடன் தொடர்பினைப் பேணவும் வழிவகுக்கின்றது. இதன்மூலம் சமூகத்தில் முரண்பாட்டினைக் குறைக்கக் கூடியதாக இருக்கின்றது. எமது நாட்டின் அரசாங்கமானது நாட்டில் நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வருவதென்றால் அது நாளைய இளைஞர்களின் கைகளிலே உள்ளது என கூறுகின்ற போதெல்லாம் அதன் அர்த்தம் மற்றவர்களது அடையாளங்களை, அவர்களின் பண்பாடுகளை, உணர்வுகளை மதிக்கத் தெரிந்த சந்ததியின் தேவைப்பாட்டையே குறிக்கின்றது. இதனை நாம் எமது சிறுவர்களிற்கு பாடசாலை மூலமாக கற்றுக்கொடுப்பதுவே மிகச் சிறந்த உபாயமாக இருக்கும்.

சிறுவர்களது அறிகை விருத்தியானது (Cognitive Development) பாடசாலையில் அவர்கள் ஈடுபடுகின்ற செயற்பாடுகள் மூலமாக எட்டப்படுகின்றது. உதாரணமாக ஒற்றுமை, கூட்டுறவு, பரிமாற்றம், பிரச்சினைகளைத் தீர்த்தல், விளையாட்டுக்கள், மாணவர் மன்றம், உதவி செய்தல், தலைமைத்துவம் போன்ற பல செயற்பாடுகள் மூலமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்ப முடிவெடுக்கவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஆற்றலுடையவராக இருக்கின்றார்கள்.

பாடசாலை என்பது பண்பாட்டை பரிமாற்றும் (Cultural Transmission) ஒருமையமாக விளங்குகின்றது. பாடசாலையில் சிறுவர்கள் தத்தமது பண்பாட்டுக் கூறுகளை (Cultural Elements) கற்றுக் கொள்ளுகின்றார்கள். ஆடல், பாடல், கூத்து போன்ற அழகியற் கலைகளையும் (Aesthetics), பண்பாட்டுக் கூறுகளையும் (Cultural Elements) தெரிந்து கொள்ளுவதற்கான வாய்ப்புக்களினைப் பெற்றுக் கொள்ளுகின்றார்கள். இதன் மூலம் தமது கலாசாரத்தில் காணப்படுகின்ற நியமங்கள், விழுமியங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பழக்கவழக்கங்கள், சட்டங்கள் போன்ற வற்றிற் கேற்ப நடந்து கொள்ளுவார்கள். இதில் இருந்து விலகி நடக்கின்ற சந்தர்ப்பத்தினையே விலகல் நடத்தையாக கருதி, அவற்றில் ஈடுபடுபவர்களை பூரண சமூகமயமாதலுக்கு உட்படாதவராகக் கருதிக்கொள்ளுகின்றோம். இவ்வகையில் சமுதாயத்தில் சாதகமான சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற சுய ஊக்கம் நிறைந்தவர் களாக (Self Motivating of Social Change) மாற்றமுகவர்களாக (Change Agents) மாணவர்களை உருவாக்குவதில் பாடசாலையின் பங்களிப்பு அளப்பரியது. தனிநபர் ஆளுமை வளர்ச்சியினூடாக சமூக மாற்றத்தை கொண்டுவருவதன் மூலமாக நாம் வளர்ச்சியடைந்த சமூகத்தை பிரதிபலிப்பவர்களாக இருக்கின்றோம்.

நவீன தொழில்நுட்பமானது பாடசாலையின் முறைசார்ந்த வெளியீடான கல்வியின் மூலம் உருவாகிய ஒரு சமூக மாற்றமாகும். இருபத்தியோராம் நூற்றாண்டானது கணனிமயப்படுத்தப்பட்ட உலகமாக மாற்றமடைந்துள்ளது. இதற்கேற்ப இளைய தலைமுறையினரை தயார்ப்படுத்தவும் வழிகாட்டவும் பாடசாலை என்ற சமூக நிறுவனமே அடித்தளத்தை இடுகின்றது என்பதில் எந்த மாற்றக்கருத்தும் இல்லை.

பால்நிலைச் சமூகமயமாதலில் (Gender Based Socialization) பாடசாலைகளின் பங்களிப்பும் இன்றியமையாதது. உண்மையில் குடும்பமே ஒரு சமூகத்தின் பால்நிலைச் சமூகமயமாதலில் அடித்தளத்தை இட்டு வருகின்றபோதிலும் பாடசாலையின் மூலமாகவே ஆண்களும் பெண்களும் குடும்பத்திற்குள்ளேயும் வெளியேயும் எவ்வாறான வகிபங்கினைக் கொண்டிருக்கவேண்டும் என்பதனை கற்றுக் கொள்ளுகின்றனர். உதாரணமாக பாடசாலையில் ஆண்களும் பெண்களும் பால்நிலைக்கேற்ப வேறுபட்ட ஆடைகளை அணிகின்றார்கள். தலை சீவுவதில் இருந்து தொடர்பாடலை எவ்வாறு மேற்கொள்ளுவது என்பது வரைக்கும் இவ்வாறான பால்நிலை சார் நடிபாங்குகளைக் (Gender Roles) கண்டு கொள்ளலாம். இங்கு பால்நிலை நடிபங்குகள் மட்டுமன்றி பால்நிலைச் சமத்துவமும் (Gender Equity) தெளிவாக வலியுறுத்தப்படுகின்றது. இதன் மூலம் வெவ்வேறு பால்நிலையைச் சார்ந்தவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதாக பாடசாலை மூலம் அறிந்து கொள்ளுகின்றார்கள்.

உதாரணமாக 1950ஆம் ஆண்டளவில் பெண்கள் துவிச்சக்கரவண்டி ஓட்டுவது என்பது இலங்கையர்களின் சுதேசிகப் பண்பாட்டுக்கு முரணானதாக கருதப்பட்டு வந்திருந்தது. ஆயினும் இலவசக் கல்வியின் வருகையினைத் தொடர்ந்து ஏற்பட்ட பெண்களின் கல்விப் புரட்சியினால் பெண்களின் சுதந்திரம் அதிகரித்ததுடன் பால்நிலைச் சமத்துவமும் அதிகரிக்கத் தொடங்கியது எனலாம். இதனை நாம் இலங்கையின் கல்வியறிவு வீதத்தில் பெண்களின் அன்றைய நிலையினையும் இன்றைய நிலையினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். 1946 இல் 44% வீதமாகக் காணப்பட்ட கல்வியறிவு வீதமானது 2010 இல் 90% வீதமாக அதிகரித்திருந்ததனை 2011 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கித் தரவுகள் மூலமாகக் காணலாம். இதன் மூலமே இலங்கையில் பல்வேறு பால்நிலைச் சமத்துவமான கருத்துக்கள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு வருவதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

தனிப்பட்ட நபர்களின் வெற்றியில் பாடசாலைச் சமூகமயமாதல் என்பது கணிசமான அளவு பங்களிப்பினை ஆற்றி வருகின்றது. பாடசாலையின் மூலம் வழங்கப்படுகின்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மாணவர்களின் உடல் உள சமூகரீதியிலான வலுப்படுத்தலுக்கு உதவுகின்றன (Physical, Mental and Social Empowerment). ஒரு தனிநபர் தான் எதிர்காலத்தில் எவ்வாறான நிலையில் இருக்க வேண்டும் என்ற இலட்சியக் கனவானது துளிர்விடுவது பாடசாலையில்

தான். ஆசிரியர்கள் மாணவர்களிடம் கேட்கும் வினாக்களில் 'நான் விரும்பும் தொழில்' என்ற தலைப்பிலைமைந்த கட்டுரை வினா நிச்சயமாக இடம்பெற்றிருக்கும். இவ்வாறான தூண்டல்களும் ஏனைய மாணவர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற போட்டிகளும் இன்றைய போட்டி நிறைந்த உலகத்தில் மாணவர்களைத் தயார்ப் படுத்துவதில் பாடசாலைச் சமூகமயமாதல் நிச்சயம் அவசியமானதே.

பெரும்பாலான சமூக அந்தஸ்த்தில் உயர்ந்து நிற்பவர்களும் அரசியல்வாதி களும் தமது தலைமைத்துவத்தை அமைத்துக்கொண்ட களமாக பாடசாலையே விளங்குகின்றது. தொழில்சார் தகைமை யை மட்டுமன்றி பொருளாதார நன்மை களையும் பெற்றுக்கொள்வதற்கு நம்மைத் தயார்ப்படுத்துவதில் பாடசாலைத் தலைமைத்துவம் அவசியமானது.

பாடசாலைச் சமூக மயமாதலின் விமர்சனங்கள்

சில பாடசாலைகள் எதிர்மறைச் சமூக மயமாதல் (Negative Socialization) மூலம் ஆளுமை மற்றும் திறன் விருத்தியிலும் (Personality and Skill Development) எதிர்மறையான தாக்கங்களைச் செலுத்துவ தாகப் பல்வேறு விமர்சனங்கள் காணப்படு கின்றன. அதாவது சிறுவர்களைப் பொறுப்பு வாய்ந்த சமூக அங்கத்தவர்களாக மாற்றிக் கொள்வதில் பாடசாலைகளில் காணப்படு கின்ற சில சூழ்நிலைகளும் வாய்ப்புக்களும் தவறிவிடுவதாக சொல்லப்படுகின்றது. உதாரணமாக பாடசாலைக் கல்வியில் பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கும் மாணவர்கள் தமது எதிர்பார்ப்பு பொய்யா கின்ற சந்தர்ப்பங்களில் பல்வேறு மன அழுத்தங்களுக்கும் சமூக ஓரங்கட்டலுக்கும் உள்ளாவதாக அண்மைய ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதனொரு அங்கமாகவே இலங்கை அரசாங்கம் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்து வதற்கான சில முயற்சிகளை மேற்கொண்டு பின்னர் வேறு சில எதிர்ப்புகளின் காரணத் தினால் அதனைக் கைவிட்டிருந்தது. உண்மையில் பரீட்சை என்ற பெயரில் மாணவர்களைத் துன்புறுத்துவதும் அதன் காரணத்தினால் அவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டு ஆளுமையற்றவர்களாக மாறிவருவதும் கடந்த காலங்களைவிடவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் தாக்கத்தினால் பாடசாலைகளில் மாணவர் களின் சமூகமயமாதற் செயன்முறையானது சவால்கள் நிறைந்ததாக இருக்கின்றமை யினை அண்மையில் இடம்பெற்றுவரும் பல்வேறு சம்பவங்களும் உறுதிப்படுத்தி யிருக்கின்றன. உதாரணமாக குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவ மகா வித்தியாலயத் தைச் சேர்ந்த வினுசா என்ற மாணவியும் அவரது ஆண் நண்பரும் சேர்ந்திருந்த புகைப்படத்தை முகப்புத்தகத்தில் (Face book) அந்த ஆண் நண்பர் தரவேற்றிய தனைத் தொடர்ந்து பாடசாலை அதிபரின் மூலம் ஏறத்தாள ஐயாயிரம் மாணவர்களின் பிரசன்னத்திற்கு முன்னால் மாணவி மோசமான வார்த்தைப் பிரயோகங்களால் தண்டிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டமையையும், இந்தியாவில் மாணவன் ஒருவன் ஆசிரியையின் நிர்வாணப் புகைப்படத்தைத் தரவேற்றிக் கொண்டமையையும் எதிர்மறை யான சமூக மயமாதற் செயற்பாடாகவே கொள்ளப்படல் வேண்டும்.

இன்றைய பாடசாலை முறைமையில் அதிகரித்த போட்டியின் காரணமாக ஏற்பட்டுள்ள ஊழல்களும் அதனால் ஏற்படும் பின் விளைவுகளும் தவறான திசையினையே சமூகத்திற்கு காட்டி வருகின்றன. குறிப்பாக முதலாம் வருடத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும் விடயத்தில் இவ்வாறான சீர்குலைவுச் சம்பவங்களைக் காணலாம். முரண்பாட்டு வாதக் கோட்பாட்டாளர்களின் கருத்தியலின் அடிப்படையில் சமூகமயமானது முதலாளித்துவத்தின் நிலைத்திருப்பிற்கு வழிகோலுவதாக காணப்படுகின்றது. அதாவது சமூகமயமாதல் என்பது தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதுடன் அது தொடர்பாக போதிய விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. அதாவது இக் கோட்பாட்டாளர்களின் விவாதங்களின் அடிப்படையில் சமூக மயமாதலானது வகுப்புக் கட்டமைப்பினை மீளவும் கட்டமைக்கின்றது. உதாரணமாக முதலாளிகள் வர்க்கம் கல்வி வாய்ப்புக்களைப் பெற்று தமது வர்த்தகத்தினை நிலைத்திருக்கச் செய்கையில், தொழிலாளர்கள் வசதி வாய்ப்புக்கள் இல்லாமையால் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் தடங்கல்களை எதிர்நோக்குகின்றார்கள். இதனால் தொழிலாளர் வர்க்கம் என்றைக்கும் தொழிலாளர் நிலையிலேயே நிலைத்திருப்பதற்கு இது வழிகோலுகின்றது.

ஒரு குழந்தை பிறந்ததில் இருந்து தன்முனைப்புள்ளதாகவே (Egocentric) வளருகின்றது. இதனால் உலகத்தில் தன்னை மையப்படுத்தியதாகவே அனைத்தும் நிகழ்வதாக கருதிக் கொள்ளும். சிறுவர்களுக்கு மற்றவர்களைப் பற்றியும் புறச் சூழ்நிலைகளைப் பற்றியும் தெளிவேற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கு போதிய பயிற்சியும், விருத்தியும் மற்றவர்களுடனான ஊடாட்டத்திற்குமான வாய்ப்புக்களை வழங்குவதும் முக்கியமானது. ஆரோக்கியமற்ற சமூக அனுபங்களைக் கொண்ட சிறுவர்கள் தமது ஆயுட் காலம் முழுவதும் ஆரோக்கியமற்ற சமூக உறவுகளையும் தாழ்வு மனப்பாங்கையும் கொண்டு காணப்படுவார்கள். எனவே சிறுவயதில் ஆரோக்கியமான சமூக வாழ்வினுள் சிறுவர்களை இணைத்துக் கொள்வது எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்வியல் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

இங்கு சிறுவர்கள் முறைசார்ந்த வகையிலும் முறைசாராத வகையிலும் பல்வேறு பயிற்சிகளையும் விருத்தியையும் கொடுக்கின்ற இடமாக பாடசாலையானது சமூக மயமாதல் செயன்முறையில் இரண்டாம் நிலை முகவராக பங்காற்றுகின்றது. இங்கிருந்தே முதல்நிலை முகவராக சகபாடிகள் குழு தோற்றம் பெறுவதென்பது சமூக மயமாதலில் பாடசாலைக்கு இருக்கும் இரட்டிப்பு முக்கியத்துவத்தினை உணர்த்துகின்றது. இவ்வாறான பல்வேறு காரணங்களின் அடிப்படையிலே பாடசாலைக் கல்வியைப் பெறுவது சிறுவர்களுக்கு கட்டாய உரிமையாகவும் கடமையாகவும் பல்வேறு நாடுகளின் அரசியல் சாசனத்தின்படி வலியுறுத்தப்படுகின்றது. எனவே, பாடசாலை மூலம் கிடைக்கப் பெறுகின்ற சாதகமான சமூக மயமாதல் அம்சங்களினூடாக உச்சப் பயனைப் பெறுவதும், எதிர்மறை விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளுவதும் மாணவர்களது கடமை மட்டுமன்றி அவர்களை வழிநடத்துகின்ற பெற்றோரினதும் ஆசிரியரினதும் முக்கியமான பொறுப்பாகும்.

உசாத்துணை நூல்கள்

Banks, O. (1968). The Sociology of Education. London : Batfered.

Elkin, F., & Handel, G. (1978). The child and society : The process of socialization (3rd ed.). New York, Random House.

Eric Rauch. THe Socialization of Education. (MAY 27, 2010). http : // emericanvision.org/2624/the-socialization/ (accessed February 27, 2014).

Gordon Marshall (1998), A Dictionary of Socialogy (Artical : Socialogy of Education), Oxford University Press, USA.

Gosling, R.A., Hill, M., Fee, L.K., Taylor, S. (2003). Introduction to sociology, (7th ed.) London : University of London Press.

Haralambos & Holborn. (2008). Socio logy Themes and Perspectives (8th ed.) HarperCollins Publishers Limited.

Hartup, W.W. (1999, January). Constraints on peer socialization : Let me count the ways. Merrill - Palmer Quarterly, 45, 172 - 183.

Henry, M., Knight, J., Lingard, R. and Taylor, S. (1988) Understanding Schooling : An Introductory Sociology of Australian Education, Routledge, Sydney.

Langton, K. and M. K. Jennings. (1968). Political Socialization and the High School Civics Curriculum. American Political Science Review.

Niemi, R. and J. Junn. (1998). Civic Education. What Makes Students Learn. New Haven : Yale University Press.

Newman, B. N., & Newman, P. R. (2011). Development through life. A Psycho logical approach (11th ed.) Belmont. CA : Wadsworth.

Vancouver, J.B. & Kendall, L.N. (2006). When self-efficacy negatively relates to motivation and performance in a learning context. Journal of Applied Psychology, 91, 1146 - 1153.

மாணவர்களுக்குக் கல்வியை வழங்குவதில் சமூகவியலின் செல்வாக்கு

பேராசிரியர் கலாநிதி மா. கருணாநிதி
கல்விப் பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

சமூகவியல் கல்வியோடு மிகநெருக்கமாகவுள்ள துறையென்ற வகையில் அதன் செயற்பாடுகளுக்கும் கல்வி வழங்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்புகள் தெளிவாக இல்லையென்ற தொனிப்பொருளில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்விடயத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வினாக்களுக்கு விடைகாண வேண்டிய தேவையுள்ளது.

1. சமூகவியலாளர்கள் கல்வியில் ஆர்வம் கொண்டுள்ளமைக்கான காரணங்கள் எவை?
2. சமூகவியல் ஆராய்ச்சிகளைக் கற்பதன் மூலம் கல்வியை வழங்குவோர் எத்தகைய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்?
3. கல்வியில் சமூகவியல்சார் அணுகுமுறைகள் ஏனைய முற்போக்கான கொள்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ளனவா?
4. சமூகவியலடிப்படையிலான தேடல்கள் கல்விசார் செயற்பாடுகளின் விளைவாக இடம்பெறுகின்றனவா?
5. கல்வியில் சமூகவியலடிப்படையிலான ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிருவாகிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக உள்ளனவா?

இத்தகைய வினாக்களுக்குரிய விடைகள் கல்வியியலாளரின் கண்ணோட்டங்களின் அடிப்படையில் வேறுபடுமாயினும் அவற்றுள்ளே சில பொதுவான விடயங்கள் உள்ளன என்பதையும் கண்டுகொள்ளலாம். இத்தகையவை சில முக்கியமான வாதத்துக்குரிய ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டவை என்கையில் அவை சமூகவியலை வரையறை செய்வதில் கூடியளவில் அக்கறை செலுத்தின எனலாம்.

தனியாட்களின் நடத்தையும் சமூக வாழ்க்கையும் குடும்ப வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குழுவின் அழுத்தங்கள், நியமங்கள், விதிகள் குழுக் கலாசாரங்களின் செல்வாக்குக்கு உள்ளாகின்றன. ஆயினும் இத்தகைய செல்வாக்குகளினால் உண்டாகும் வலுவும் விவாதத்திற்குரியவையென ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றனர்

சமூகவியலானது சமுதாய விடுதலைக்கு உதவும் கற்கைநெறியென விளக்கப்படுவது அவ்வியலைக் கற்பவர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. அத்துடன் சமகாலத்தில் பெருமளவில் மாணவரைக் கவர்ந்திழுக்கும் கற்கைநெறியாகவும் உள்ளது. அறிவாற்றல் திறன்களை விரிவுபடுத்தும் துறையென்ற அடிப்படைளில் புதிய பெறுமானங்கள் மற்றும் சுதந்திரத்துடன் கூடிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் துறையென்ற கருத்தும் உண்டு. உதாரணமாக சமூகவியலில் கடைப்பிடிக்கப்

படும் புதிய அணுகுமுறைகள் மாணவர்களை ஊக்குவிப்பதற்குரிய கவர்ச்சிகரமான விடயங்களாக அமைகின்றன. புதிய மாற்றங்களுக்கு ஏற்றவகையில் தரவுகளையும் தகவல்களையும் விளக்கங்களையும் தருவதற்கு முற்படுகிறது. சமூகவியலின் ஆரம்ப கர்த்தாக்களான கொம்டே, மக்ஸ் வெபர், டேர்கைம் போன்றவர்கள் கணிசமான காலத்தைச் செலவுசெய்து முரண் புரட்சிகான சிந்தனைகளை உருவாக்க முற்பட்ட வேளையில் அக்காலத்தில் எழுந்த பல முற்போக்கான கருத்துகளை மறுப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்றிருந்தன (Roland Meighan, 1981). ஆயினும் இத்தகைய வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்டு சமூகவியலானது இன்று புதிய கண்ணோட்டங்களுடன் விரிவுபெற்று பலரையும் ஈர்க்கின்ற துறையாக மாறியுள்ளது. சமூகவியல் சார்ந்த விசாரணைகள் பல தீவிரப் போக்கு உடையவையாக மாறியுள்ளமை கவனத்திற்குரியன.

சமூகவியல் கற்கைநெறிபற்றிய இன்னொரு முக்கியமான விடயம், அத்துறையை எந்தக் நோக்கில் கற்பித்தாலும் அங்கும் சர்ச்சைக்குரிய விளைவுகள் உருவாகின்றமையைக் குறிப்பிடலாம். இதற்குச் சான்றாக இத்துறை சார்ந்தவர்கள் பல காரணங்களையும் முன்வைத்து உள்ளனர். முதலாவதாக, தனிமனிதனின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் சமூக இயல்புகள் மற்றும் உளவியல் காரணிகளைக் குறிப்பிடலாம். இரண்டாவதாக, மனித நடத்தைகளைப் பகுப்பாய்வு செய்தல் பற்றிய இலக்கினை கவனத்தில் கொள்ளும்பொழுது, அவற்றை நேருக்கு நேர் அவதானித்து எவ்வித பகுப்பாய்வுக்கும் உட்படுத்தாமல் ஏற்றுக் கொள்கின்ற நோக்கும் உள்ளது. இவ்விடயத்தில் வெளிப்படையான மற்றும் திறந்த தன்மை கொண்ட பார்வை முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும், சமூகவியலில் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் குறிப்பிடத் தக்கவை. ஏனைய கலாசாரங்கள், ஏனைய குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் சார்ந்து ஒப்பீட்டு ஆய்வுகளை மெற்கொள்ளும்போது இந்த அணுகுமுறையில் உள்ள அச்சங்கள் பற்றியும் கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. குறிப்பாக, நிறுவன நடைத்தகைள் தொடர்பில் தவறான மற்றும் சாதகமற்ற முறையிலான விளக்கங்கள், கலாசாரங்கள் பற்றிய தவறான விளக்கங்கள், நடத்தைகள் தொடர்பான விளக்கங்கள் கற்பித்தல் தொடர்பான பகுப்பாய்விலே முக்கியமான விடயமாகக் கொள்ளப்படுகின்றன.

பாடசாலைகள்மீது சமூகவியலாளரின் ஆர்வம்

பாடசாலைகள் சமூகவியலாளரின் பார்வைக்குட்படுதல் ஓர் ஆர்வந் தருகின்ற விடயமாகும். பாடசாலைகள் சமூக மயமாக்கல் முகவராகச் செயற்படுதல் அவற்றுள் முக்கியமானது. சமகாலச் சூழலிலிருந்து பாடசாலைகள் எவையும் தப்பித்துக்கொள்ள முடியாது என்ற நிலை உள்ள போதிலும் பல்வேறு கலாசாரங்கள், மற்றும் உபகலாசாரங்களைக் கற்று மனப் பாங்குகளையும் சிந்தனைகளையும் விருத்தி செய்துகொள்ளத் தேவையான அனுபவங்களை வழங்குவதன் மூலம் பாடசாலைகள் சமூகமயமாக்கல் முகவராகச் செயற்படுகின்றன. இன்னொருவகையில் ஏனைய நிறுவனங்களுக்கு இல்லாத இன்னொரு தனித்துவமான விடயமாக குறிப்பிட்ட வயதெல்லையில் உள்ள

பிள்ளைகள் குறிப்பிட்ட காலத்துக்குப் பாடசாலைக் கல்வியில் பங்கேற்கிறார்கள். இவற்றோடு. பாடசாலைகளிலே இடம்பெறுகின்ற சிக்கலான தொழிற்பாடென்ற வகையில் 'மக்களைப் பதனிடல்'. கணிப்பீடுகள். மாணவர்களைத் தரப்படுத்துதல் முதலானவை மாணவர்களின் வாழ்க்கைச் சந்தர்ப்பங்களைத் தீர்மானிப்பதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதேநேரத்தில் பாடசாலைகள் அறிவை ஒழுங்குபடுத்தும் விடயத்திலும் ஈடுபடுகின்றன. தெரிவுசெய்யப்பட்ட அறிவு கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படுவதைக் கொண்டு அறிவுசார்ந்த ஒழுங்குபடுத்தல்கள் நிகழ்கின்றன. இன்னொருவகையில் பாடசாலைகள் சிக்கலான அறிவமைப்பினை பரிமாற்றம் செய்கின்றன. அதனால் மாணவர்கள் அறிவை நிரற்படுத்தி அமைப்பாக்கம் செய்து வரிசைப்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் உண்டாகின்றன.

பாடசாலைகள் தொடர்பாக சமூகவியலாளருக்கு ஆர்வம்தரும் இன்னொரு முக்கிய விடயமாக பாடசாலைகள் சமூக அமைப்பினுள் காணப்படும் ஏனைய நிறுவனங்களுடன் கொண்டுள்ள தொடர்பினைக் குறிப்பிடலாம். உதாரணமாக குடும்பம் பொருளாதார மற்றும் அரசியல் நிறுவனங்கள் முதியவை கவனத்துக் குரியவை. இந்நிறுவனங்களிடையே நிலவும் சிக்கலான பரஸ்பர தொடர்புகள் சமூக மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலைகள் குறுகிய மற்றும் நீண்ட காலத்தில் இத்தகைய தொடர்புகள் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதில் தெளிவின்மை காணப்பட்டாலும் இவ்விடயத்தை பொறுத்தவரையில் பாடசாலைகளிலும் பார்க்க ஏனைய நிறுவனங்கள் பாடசாலைகள் மீது கூடுதலான செல்வாக்கை கொண்டுள்ளன என்பதைப் புறந்தள்ளிவிடமுடியாது.

ஆசிரியருக்கும் சமூகவியலுக்கும் இடையிலுள்ள பொருத்தப்பாடு

கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களுடன் சமூகவியல் கொண்டுள்ள பொருத்தப் பாடானது ஆசிரியர்கள் சமூகத்தின் முக்கியமான தொகுதியினர் என்ற அடிப்படையில் உருவாகின்றது. உளவியல். பொருளாதாரம். தத்துவவியல் போன்றவை இதனுள் அடங்கும் பிள்ளைகளின் நடத்தைகளை மாற்றுதல் என்னும் விடயத்தில் பிள்ளைகள் குழுவாகச் செயற்படும்பொழுது. அது சமூகவியல் ரீதியாகப் பயன்பாடுடைய விடயமாகின்றது. பாடசாலைகளில் அக மற்றும் புறவயமாக உறவுகளைப் பேணுதல் முக்கியமானது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பிரயோகரீதியான சமூகவியலாளர்கள் போலச் செயற்பட முடியாவிட்டாலும் சமூகவியலைப் பிரயோகிக்கும்பொழுது. அதன் விளைவுகள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வெற்றியளிக்கலாம் அல்லது வெற்றியளிக்காமல் போகலாம். ஆயினும் கல்விச் சமூகவியல் பற்றிய அறிவு கற்பித்தலியலை விளைதிறனுடையதாக்கும் என்பதற்கும் உத்தரவாதம் இல்லை. ஆயினும். கற்பித்தலியலில் முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் அல்லது வாய்ப்புகளை அதிகரிக்கும் என்ற விடயத்தை மறுப்பதற்கில்லை. கல்விச் சமூகவியல் தொடர்பான அறிவின்றி இடம்பெறும் கற்பித்தலானது தெளிவற்ற

விடயமாகிவிடும். இது கல்விச் சமூகவியலின் செல்வாக்கினை யதார்த்த பூர்வமானதாக உருவாக்குகிறது.

கற்றல் அல்லது கற்பித்தலில் போதியளவில் திருப்தி காணப்படாவிடத்து அது ஆபத்துகளை உருவாக்கும். கற்றல் - கற்பித்தல் உளவியல் காரணிகளோடும் பிள்ளைகளின் சூழல் சார்ந்த காரணிகளோடும் தொடர்புடையவை. பொருத்தமற்ற சூழலிலிருந்து வரும் பிள்ளைகள் பாடசாலையிலும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பொழுது அப்பிரச்சினைகளை ஆசிரியர்களின் உதவியோடு ஓரளவுக்குக் குறைக்கலாம். இது போன்று பிள்ளைகளின் பொருளாதார மற்றும் கலாசார வறுமை என்பனவும் கவனத்தில் எடுக்கப்படுதல் அவசியமானது. சமூக – பொருளாதார அந்தஸ்து, கலாசார வேறுபாடுகள் வகுப்பறையில் பிள்ளைகளை வேறுபடுத்திப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படாமல் கற்றலில் பின்தங்கியிருப்பதற்கான காரணங்களை இனங்கண்டு அவர்களை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கல்வியை வழங்குவதில் சமூகம் சார்ந்த விடயங்களைக் கவனத்தில் கொள்ளும்போது சமூகவியல் ரீதியான கொள்கைகளைப் பிரயோகிப்பவர்கள் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் சமூகம் சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். மறுபுறத்திலே கற்றல் உளவியல் தொடர்பான பகுப்பாய்வுகள் மற்றும் கற்றலின் தனியாள் இயல்புகளின் செல்வாக்கு என்னும் விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். கற்பித்தல் கொள்கைகளின்படி கல்விச் சமூகவியலாளரிலும் பார்க்கக் கல்வி உளவியலாளருக்கே கணிசமான இடம் வழங்கப்படுகிறது. கல்வியை வழங்குதற்கான சமூகம்சார் இயல்பு என்ற வகையில் கற்றலுக்கான நிறுவனங்கள் தொடர்பான பின்னணி ஒழுங்குகள் முக்கியமானவை. ஒரு பாடசாலை அதன் நிருவாகம்சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாடசாலையின் மரபுகள், சம்பிரதாயங்கள் மற்றும் வழமையான நடைமுறைகளைப் பின்பற்றுவது பொதுவான அணுகுமுறையாகும். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல், கற்றல் கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு, மாணவர் செயற்பாடுகளுக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தல் என்பன பாடசாலைகளில் இடம்பெறும். இத்தகைய விடயங்கள் பிள்ளைகளின் நடத்தைகளில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைக் கொண்டிருக்கும். மேலும் இவை மாணவர்களின் வகிபாகங்களைத் தீர்மானிப்பதுடன் மாணவர்களின் வெற்றி மற்றும் தோல்விகளுக்கான வாய்ப்புகளை வழங்குவதுடன் பாடசாலை பற்றிய உடன்பாடான மற்றும் எதிரான மனப்பாங்குகளையும் உருவாக்குகின்றன.

கற்றலானது மாணவரின் உடனடிச் சூழலுடன் தொடர்புடையதாக இருக்கும். மாணவர்கள் புதிய அறிவைப் பெறுதல், அவற்றுக்கு விளக்கமளித்தல் முதலிய விடயங்கள் மாணவர்களின் மனப்பாங்குடன் இணைந்து செல்வதாக இருக்கும் புதிய அறிவினையும் தகவல்களையும் பெறுதல் அவற்றின் முக்கியத்துவம், பரீட்சையில் சித்தியடைதல், தொழில் தேவை என்பவற்றுக்கான சூழல் அறிவின் நடைமுறைப் பயன்பாடு என்பவற்றைப் பொறுத்து அமையும். கற்றலுக்கான முக்கிய விடயமாக மொழி கருதப்படுகிறது. மொழி

யானது தனியாள் அமைப்பு என்பதிலும் பார்க்க சமூகம் சார்ந்த அமைப்பாக மாறுகின்றது. மொழி புறவயமானது. ஏனையவரால் உருவாக்கப்படுவது. மற்றும் சிந்தனையில் பாதிப்புகளை ஏற்படுத்துவது.

பாடசாலைகளில் கற்றல் தொடர்பான பல சிக்கலான நிலைமைகள் காணப்படுகின்றன. இவற்றினைச் சமூகவியல் நோக்கில் பார்க்கும்பொழுது. சிக்கல் தன்மைகள் அந்தஸ்து வேறுபாடுகளினால் தோன்றுகின்றன. பாடசாலைகளிலே மாணவர்களிலும் பார்க்க ஆசிரியர்கள் அந்தஸ்தில் உயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், அவர்களுடைய சேவையின் நிரந்தரத்தன்மை, வழங்கப்படும் பொறுப்புகள் ஆசிரியர்களின் உயர் அந்தஸ்துக்குக் காரணமாகின்றன. பிள்ளைகளாகவும் கட்டிளமைப் பருவத்தினராகவும் இருக்கும் மாணவர்கள் ஒப்பீட்டளவில் அதிகாரம் குறைந்தவர்களாக உள்ளனர். இத்தகையவை கற்றல் மற்றும் கற்பித்தலில் சில கட்டாயமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும்.

சமகாலத்தில் மாணவர்கள் பாடசாலைக்கு வருதல் கொள்கையளவிலும் சட்டரீதியாகவும் கட்டாயமாக்கப்பட்டுள்ள வேளையில் அதுவும் பல முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது. இன்று பாடசாலைக்கு வராமலேயே கற்றலில் ஈடுபடுதற்குரிய வாய்ப்புகள் பாடசாலைக்கு வெளியே நிறைய உள்ளன. பாடசாலைக்கு வெளியிலுள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கற்றல் பாசாலைகளில் கற்பதுபோல பிள்ளைகளின் விருத்திக்குரிய சகல அம்சங்களிலும் விளைதிறனுள்ளதாக இருப்பதில்லை. பாடசாலைகளில் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு கற்பதற்கான வசதிகள் உள்ளதால் பாடசாலைகள் பிள்ளைகளின் வருகையைக் கட்டாயப்படுத்துகிறது. இத்தகைய முடிவுகள் சிலநாடுகளில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன. ஆயினும் சமூகத்திலே மற்றும் நாட்டிலே கல்வியறிவுடையோர் தொகையை அதிகரிக்க வேண்டிய தேவைகள் பல இருப்பதனால் மாணவர் வருகையைக் கட்டாயப்படுத்தும் கொள்கைகளை உருவாக்குதல் அத்தியாவசியமாகின்றமை தவிர்க்க முடியாதது.

பாடசாலைகளில் மாணவர் விருப்பங்களுக்கேற்ப பாடத்தெரிவுகள் இடம்பெறுகின்றனவா என்ற கேள்வியும் இப்பொழுது எழுந்துவருகிறது. பாடசாலைகளிலே இளைஞர்கள் அல்லது மாணவர்களுக்கான பாடவிடயங்கள் தேசிய கல்விக் கொள்கைகளுக்கு அமைய ஒவ்வொரு நாட்டிலும் அதற்கென உள்ள பொது நிறுவனங்களால் தெரிவுசெய்யப்படுகின்றன அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ள விடயங்களை மாணவர்கள் இலகுவில் மாற்றிக் கொள்வதற்கும் சுதந்திரம் வழங்கப்படுவதில்லை இத்தகைய நிலைமையானது பரஸ்பரம் தவிர்த்தலுக்கு இடமளிக்கிறது. சமகாலப் பாடசாலைக் கல்விமுறையில் சோதனையை நோக்கமாகக் கொண்ட கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் ஊக்கமளிக்கும் போது அவற்றினால் பாடசாலைச் செயற்பாடுகளில் முரண்பாடுகள் வலுவடைகின்றன. பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விடயங்கள் சமூகரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாக இருக்க வேண்டும் என்ற

வாதத்தினை முன்வைக்கும்பொழுது. மாணவர் நடத்தைகளுக்கான உண்மையான விளக்கங்களைக் கொடுத்தலும் சில வரையறைகளுக்கு உள்ளாகின்றன. சமூகவியல் சார்ந்த அணுகுமுறைகளின் அடிப்படையில் அவ்வாறான முரண்பாடுகளுக்கு தீர்வுகாண்பதற்கான முயற்சிகளைக் கல்வியியலாளரும் சமூகவியலாளரும் இணைந்து மேற்கொள்ளுதல் மற்றும் விளைதிறனுள்ள கற்பித்தலுக்குப் பொருத்தமான மாதிரிகைகளைக் கண்டறிதல் அத்தியாவசியமாகின்றது.

அறிவையும் மக்களையும் ஒழுங்குபடுத்தி நிரற்படுத்தும் பொறுப்பு பாடசாலைகளுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆசிரியர்கள் சமூகவியலாளர்களின் வகிபாகங்களை பொருத்தமான முறையில் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆரம்ப காலங்களிலே அறிவு நடுநிலையானது பிரச்சினைகளற்றது என்ற முடிவுகளைச் சமூகவியலும் ஏற்றிருந்த நிலைமை மாறி இப்பொழுது அறிவின் வகைகள் அதிகரிக்கும் பொழுது, எந்த அறிவு பொருத்தமானது மற்றும் தேவையானது என்பதனை மதிப்பிடும் கடினமான பணியும் ஆசிரியர்களிடத்தில் முன்வைக்கப்படுகிறது. மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவானது அதனைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறைகளுடாக உலகளாவிய யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள துணை நிற்க வேண்டும். அறிவானது, தரவுகள், தகவல்கள் அனுபவங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். பாட விடயங்களைத் தெரிவுசெய்வோர் காலம், இடம் தேவை என்பவற்றைக் கவனத்தில்கொள்ளுதல் முக்கியமானது.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட விடயங்களிலெல்லாம் கல்விச் சமூகவியலானது ஆசிரியர்கள், நிருவாகிகள் மற்றும் கல்விக்கொள்கை வகுப்போர் கவனஞ் செலுத்த வேண்டும் என்பதை நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளில் இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகளும் முரண்பாடுகளுடன்கூடியவையாக இருக்கின்ற வேளையில் அறிவை வழங்கும் நிறுவனங்களாக மட்டுமில்லாமல் அவையெல்லாவற்றையும் சமூகவியல் நோக்கில் பார்ப்பதும் மிகமுக்கியமானது.

மஞ்சள் காமாலை நோய்

Dr. S. சச்சிதானந்தன்

இது செங்கமாரி, மஞ்சட் காமாலை, பித்து நோய் என்றும் அழைக்கப்படும். கண், நா, தோல், சிறுநீர் முதலியன மஞ்சள் நிறமாகத் தோன்றுதல் இதன் முக்கிய குறியாகும்.

நோய் வரும் வழி :

1) தீக்குற்றத்தை பெருக்கக்கூடிய எண்ணெய், கொழுப்பு, புளிப்பு, உறைப்பு சுவையுள்ள உணவுகளை அதிகம் உண்ணுதல்
2) இரவில் அதிக நேரம் விழித்திருத்தல்
3) அஜீரணம்
4) பாண்டுநோய் முற்றி தீவிரமடைந்த நிலையில் அதிகளவு பித்த உணவுகளை புசித்தல்

போன்ற காரணங்களினால் பித்த நீரானது குருதியிலும், உடல் உறுப்புக்களாகிய தோல், கண், நகக்கண், முகம், நாக்கு இவற்றில் தங்கச் செய்து நோயைப் பிறப்பிக்கும்.

இந்நோய் ஆனது 13 வகைப்படும்.

1.	வளி	2.	அழல்
3.	ஐயம்	4.	முக்குற்றம்
5.	வளி ஐயம்	6.	அழல் ஐயம்
7.	ஊது	8.	வறள்
9.	மஞ்சள்	10.	அழுகு
11.	செங்கமல	12.	கும்ப
13.	குன்ம		

இந்நோயின் பொதுக் குறி குணம் :

1) ஆரம்பத்தில் கண்ணின் வெள் விழியும், பின் முகம் உடல் என்பன மஞ்சளளிக்கும்.
2) நோய் முதிர முதிர நா, நகக்கண், சிறுநீர் என்பன மஞ்சள் நிறம் அடைந்து கொண்டு வரும்.
3) நோய் தீவிரமாயின் மூக்கு, வாய், பல்லீறு இவற்றிலிருந்து குருதி கசிவதுண்டு.
4) சிறுநீர் Dark brown colour ல் வரும். ஆடையில் படியில் கறை போல காணப்படும்.
5) சிலருக்கு வியர்வை, கண்ணீர், உமிழ்நீர் இவைகளும் கூட மஞ்சளித்துக் காணப்படும்.
6) எரு வெளுப்படையும்.
7) உடலின் தோலானது வறண்டு தவளையின் தோலைப் போல காணப்படும்.
8) வாய் நீர் ஊறல், வாய் குமட்டல், நாகைத்தல், உணவில் வெறுப்பு போன்றவையும் காணப்படும்.

சிகிக்சை :

செங்கமாரி நோயாளிக்கு மருந்து களிலும் பார்க்க ஓய்வு மிகவும் முக்கியமான தொன்றாகும். உணவு விடயத்திலும் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

- உப்பில்லாப் பத்தியம் வைப்பது குறிப் பிடத்தக்கது.
- புளி, உப்பு நீக்கிய கஞ்சி வகை நல்லது.
- இரு முறை வடித்த சோறு கொடுக்கலாம்.
- எண்ணெய், நெய், வெண்ணெய் முதலிய கொழுப்புப் பொருள்களை நீக்க வேண்டும்.

- முருங்கைப் பிஞ்சு, வாழைப் பிஞ்சு, பனியவரைப் பிஞ்சு, துவரம் பருப்பு முதலியன உகந்த காய்கறி வகைகளாகும்.
- மோர், வெள்ளாட்டுப் பால், பசுப்பால் இவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வீட்டில் பயன்படுத்தும் இலகு பரிகாரங் களாவன :

1) துவரம்பருப்போடு கரிசலாங்கண்ணி இலையை கூட்டு வைத்து உண்ணலாம்.
2) கரிசலாங்கண்ணி இலைச்சாறு 1 அல்லது 2 தேக்கரண்டி வீதம் பாலில் கலக்கி சாப்பிடுதல்.
3) கீழ்க்காய் நெல்லி வேரைப் பச்சையாக எடுத்து அரைத்து பசுப்பாலில் கலக்கி சாப்பிடுதல்.
4) மணிக்கு 1 தடவை எலுமிச்ச பழரசத்தை தண்ணீரில் கலந்து குடித்து வருதல்.
5) புதினாப் பூண்டை உலர்த்தி குடி நீரிட்டு 30 - 60 ml இரு வேளை 1 வாரம் பாவித்தல்.
6) மஞ்சளைப் பொடித்து (5 g) வெந்நீரில் கொடுத்து வர குணமாகும்.

1) பூவரசுக் கொழுந்து குடிநீர் (இளநீர், மிளகு, கொழுந்து இலை)
2) கீழ்காய் நெல்லிக் குடிநீர்
3) சிலாசத்து பஷ்பம்
4) காளமேக நாராயண செந்தூரம்
5) சாந்த சந்திரோதய மாத்திரை
6) தலைக்கு வெளிப்பூச்சாக வைப்பதற்கு கீழ்காய் நெல்லி தைலம்

பெரும் குடிநீர் :

1) கடுக்காய்த் தோல்
2) சின்னச் சீரகம்
3) நன்னாரி
4) சிறுநெருஞ்சில்
5) நீர்முள்ளி
6) சந்தனம்
7) கோரை
8) சாத்தாவாரி
9) தேற்றாங்கொட்டை

இக் குடிநீரானது செங்கமாரி நோய் அதிகரித்த நிலையில் மேற்கூறிய சரங்குகளை வகைக்கு சம பங்காக எடுத்து அவிப்பதன் மூலம் குடி நீராக்கி சக்கரை சேர்த்து கொடுக்கப்படும்.

பதிவியல்

மெய்ஞ்ஞானி

வடமராட்சி தெற்கு / மேற்கு பிரதேச சபை

உள்ளூராட்சி வாரப் போட்டி-2004

சான்றிதழ்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் நடாத்தப்பட்ட

திருநந்த சனசமூக நிலையத்தை தெரிவு செய்தல் நிகழ்ச்சியில்

பாரதிதாசன்

முன்பள்ளியை/வெதுப்பகத்திற்கு/ தேனீர்ச் சாலைக்கு / சனசமூக நிலையத்திற்கு/குளிரகத்திற்கு சேர்ந்த

திரு/திருமதி/செல்வன்/செல்வி .....என்பவர்

முதலாம்

இடத்தினைப் பெற்றுக் கொண்டமைக்காக இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

க.இராசையா
பிரா/உ.உ.ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

பாரதிதாசன் சனசமூக நிலைய நிர்வாகம்

போஷகர்	:	திரு. த. இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்)
தலைவர்	:	திரு. கி. நடராஜா
உபதலைவர்	:	திரு. நா. சந்திரசேகரம் திரு. ந. தேவராஜா
செயலாளர்	:	திரு. ம. கனகரத்தினம்
உப செயலாளர்	:	திரு. சி. சிறிகாந்தன்
பொருளாளர்	:	திரு. ஆ. குலநாதன்
நிர்வாகசபை உறுப்பினர்கள்	:	திரு. க. சிவபாதசுந்தரம் திரு. க. புவனேந்திரன் திரு. க. புலேந்திரன் திரு. கி. சுதேஷ் திரு. ச. நவரத்தினசாமி திரு. க. கபிலன் திரு. சி. தினேஷ் திரு. சி. சுகந்தன் திருமதி ஞா. சந்திரபாகு

பாரதிதாசன் இளைஞர் விளையாட்டுக் கழக நிர்வாகம்

தலைவர்	:	திரு. க. கபிலன்
உப தலைவர்	:	திரு. கு. லக்ஸ்மன்
செயலாளர்	:	திரு. கி. சுதேஷ்
உபசெயலாளர்	:	திரு. ச. தயாபரன்
பொருளாளர்	:	திரு. பு சுஜீவன்
நிர்வாக உறுப்பினர்கள்	:	திரு. ச. தயானந்தன் திரு. ப. ஜெயராம் திரு. செ. செந்தூராஜன் திரு. கு. கண்ணதாசன் திரு. ப. துஸ்யந்தன்

பாரதிதாசன் நூலக திறப்புவிழாவின் போது ஆலோசனை சபையினர்

1வது ஆண்டு பாரதிதாசன் நூலக நினைவு விழாவின்போது பிரதம விருந்தினர் அழைத்து வரப்பட்ட காட்சி

நூலக நிகழ்வின்போது சமூகமளித்த அங்கத்தவர்கள்

குடாநாட்டின் வெவ்வேறு பகுதியிலிருந்து நூலகத்தை பார்வையிட வந்தோர்

சனசமூக நிலைய பத்திரிகை, தொலைக்காட்சி சேவை

பாரதிதாசன் பாலர் பாடசாலை விளையாட்டு விழா

அல்வையூர் கனடாவாழ் மக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு

பாரதிதாசன் நூலக உட்புறத் தோற்றம்

விளம்பரவியல்

'புதியதோர் உலகம் செய்வோம்' எனப் புறப்பட்ட
புரட்சிக் கவிஞன் பெயருடன் புகழ்பூத்து மிளிரும்
சனசமூக நிலையம் தனது பொன்விழாவினை
வெற்றிகரமாகக் கொண்டாடி மகிழ வாழ்த்துக்கள்!

Compliments in memory of Mahesuran

-his son M. Logeshwaran

பொன்விழாவைத் தொட்டு நிற்கும்
பாரதிதாசன் சனசமூக நிலையத்தின்
சேவைகள் பல்லாண்டு காலம் தொடர
வாழ்த்துகிறேன்!

மயில்வாகனம் ரவி
416-265-1288

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன்விழா சிறப்புற எமது மனம் கனிந்த வாழ்த்துக்கள்!

சிவானந்தம் குடும்பம்

பொன்விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

ஆனந் கேபிள் TV

வடமராட்சி மக்களின் அபிமானத்தை பெற்று சிறந்த முறையில்
கேபிள் TV இணைப்புக்களை வழங்கிவரும்
ஆனந் கேபிள் TV வலையமைப்பில் அனைத்து வகையான
சினிமா, அறிவியல், விளையாட்டுக்கள், சமயம் மற்றும்
பல்சுவை அம்சங்களையும் உள்ளடக்கிய அனைத்து
சனல்களையும் கண்டு மகிழ்வதற்கு நாடவேண்டியது

ஆனந் கேபிள் TV

தொலைபேசி இல. : 0776560589

உனது 50வது ஆண்டு நிறைவைக் கண்டு புளகாங்கிதமடைகிறது

சுபகணநாதன் கோழிப்பண்ணை

தரமான சிக்கின் இறைச்சியை
பெற்றுக் கொள்வதற்கு நாடவேண்டிய
ஒரே இடம்

சுபகணநாதன் கோழிப்பண்ணை

அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தினமும் காலை 7 மணி முதல் மாலை 7 மணிவரை
சுத்தம் செய்து தரப்படும்.

நாடவேண்டிய தொலைபேசி இலக்கம் : 0776280153

அகவை ஐம்பது கண்ட எம் அறிவாலயமே
அவனியில் அறிவு மிகு மாந்தரை
உருவாக்கும் பணியில் உழைக்கும் நீ
பல்லாண்டு காலம் பணி செய்திடுவாய்.

பள்ளிப் பாலகர்க்கும் பலதரப்பட்ட அறிஞர்க்கும்
பல்கலை மாணவர்க்கும் பல் அறிவு தேடுவோர்க்கும்
பலகாலம் சேவை செய்து
நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அம்மன் கோவிலடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

பெரியதம்பி மற்றும்
அப்பா, அம்மா
சகோதர சகோதரிகள்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் வ.து

அங்கத்தவர் சேவையில் எமது பணிகள்

- நுகர்ச்சி சேவைகள்
- கூட்டுறவு நகர் சேவைகள் : மாதாந்தம் நுகர்வோருக்கு ஊக்குவிப்பு வழங்கல்
- எரிபொருள் நிரப்பு நிலையம் : 24 மணிநேர இரவு பகல் சேவை
- கிராமிய வங்கி : வைப்புக்களுக்கு உயர்ந்த வட்டி வீதம்
  அங்கத்தவர்களுக்கான கடன் வசதிகள்
- வாகன சேவை : ஆட்டோ, லொறி, லாண்ட்மாஸ்ரர்
- வாடகை சேவை : பந்தல், கதிரை, உபசரிப்பு பாத்திரங்கள்
- புத்தக நிலையம்
- புடவை நிலையம்
- கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்
- நூல் நிலையம்
- புலமையரிசில் வழங்கல்

மாதிரிகளின் சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழா மலர் சிறப்பாக வெளிவருவதற்கு எமது வாழ்த்துக்கள்.

பாரதிதாசன் சனசமூக நிலையம்

பொன்விழா

அல்வையூரின் அறிஞர் பெருமக்களால்
ஐம்பது ஆண்டுகளுக்கு முன் - எம்
இளையோரின் அறிவுத் தேடலுக்காய்
ஆக்கியளித்த அறிவு பொக்கிஷமே

ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
அவனி நிறை மாந்தருக்கு
அறிவூட்டும் அறிவாலயமே

வாழி வாழி என்றென்றும் வாழி....

வே. பரராஜசிங்கம் குடும்பம்
விளாப்புக்கூடல்,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.